

# நேசம்

லா.ச.ராமாமிர்தம்

வானதி பதிப்பகம்

# நேசம்

லா. ச. ராமாமிர்தம்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : டிசம்பர் 1989

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ. 17-00

நேரு அச்சகம் 43 அம்மையப்பன் தெரு சென்னை-600014

# பதிப்புரை

தமிழகத்தின் மிகச் சிறந்த எழுத்தாளரான திரு. லா. ச. ராமாமிருதத்தின் சிறுகதைத் தொகுதியை வானதி பதிப்பகத்தில் வெளியிடுவதைப் பெருமையாகக் கருதுகிறோம். இந்நூல் அச்சாகிக் கொண்டிருக்கும் சமயம் இவருடைய "சிந்தா நதி" எனும் நூலுக்கு இவ்வாண்டு சாகித்ய அகாதமி பரிசு கிடைத்திருக்கும் செய்தி மகிழ்ச்சியைத் தருகிறது.

எழுத்துலகில் ஜாம்பவனாகத் திகழும் திரு. லா. ச. ராமாமிருதம் அவர்களுக்கு இன்னும் எத்தனையோ பரிசுகள் காத்திருக்கின்றன

ஆசிரியரின் எழுத்துக்கள் இலக்கியத்தில் இடம் பெறத்தக்க எழுத்துக்கள்.

வாசகர்களின் ஆதரவு இலக்கியம் வளர உதவும்.

அன்புள்ள

**ஏ. திருநாவுக்கரசு**

வானதி பதிப்பகம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மேனகை | 1 |
| 2. | அப்பாவின் ஆசை | 13 |
| 3. | தோடு | 25 |
| 4. | நேசம் | 43 |
| 5. | கறந்த பால் | 53 |
| 6. | ராம தர்மம் | 68 |
| 7. | ஈ ஜகமுலோ திக்கெவரம்மா | 79 |
| 8. | வேள்வி | 105 |
| 9. | ராஜா ராணி | 119 |
| 10. | அன்புள்ள ஸ்நேகிதிக்கு | 137 |
| 11. | பாலா | 151 |

# மேனகை

விசாலமான ஹால் பூரா பாளம் பாளமாக வாழை யிலைகள் போட்டிருக்கின்றன. ஹாலின் தென் மூலையில் பெரிய பெரிய கங்காளங்கள். மேல் மூடிய தாம்பாளங்களை ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்தால், சாம்பாரில் மட்டும் எண்ணி ஒன்பது வகைகள்—ரஸமும் ஒன்பது; மிச்சம் புளிக் கூட்டு வகையறாக்கள். சாதம், இதர பதார்த்தங்கள் இல்லை. வாயில் ஊறிய எச்சில், ஒரு கங்காளத்துள் சொட்டிவிட்டது. அவசரமாக மூடிவிட்டுச் சுற்றும்முற்றும் பார்த்தார். நல்ல வேளை, யாருமில்லை. வயிற்றில் கோட்டையடுப்பு வெட்டி, கொள்ளிக்கட்டைகளினின்று திடீர்திடீர் பசிக்கொழுந்துகள் கிளம்பின. விழிகள் திறந்துகொண்டன. கண்மேல் துணிக் கட்டின்கீழ். இது கனவா, விழித்தபடியே இமையுள் தோற்றமா? நிச்சயம் பண்ணமுடியவில்லை.

"உங்களால் முடியாத காரியத்தை யார் ஏத்துக்கச் சொன்னது? யாருக்குப் புண்ணியம் தேடறேள்?"

அடுத்தாற்போல் இன்னொரு தோற்றம். செங்கல் சிவப்பில் பட்டுப்படுதா மடிகளுக்கிடையே தங்க ஜரிகைக் கட்டுகளினூடே மாறிக்கொண்டேயிருக்கும் பச்சை, வெள்ளை, ஊதா, ஒளி ஓட்டம்; இன்று பூரா பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

கெலிடாஸ்கோப் மாறிற்று.

வெள்ளிக் கவசமிட்ட இரு பாத கமலங்களின் மேலும் சிதறி, அடரச் சிந்திய அர்ச்சனைக் குங்குமம்—

விழிகள் துளும்பின.

''ஏன் அழறேள்? உடம்பை என்ன பண்ணறது? வாயைத் திறந்து சொல்லுங்களேன்! சொன்னால்தானே தெரியும்! ஆனால் பேசமாட்டேள், மௌனவிரதம் வேறே!''

எதிர் நாயனம் பிள்ளையாண்டான் குரல்: ''குடும்பத்தில் இருந்துகொண்டே, பழக்கப்படாத வயசில், உப்பில்லாப் பட்டினி மௌன விரதம், இதெல்லாம் என்ன ஊர் மெச்சவா? இப்படியெல்லாம் பண்ணினால், பாதை வகுத்து விடுமா? ராஜாங்கம் நடத்திக்கொண்டே ரிஷிவேஷம்! ராஜரிஷி!''

அவன் தாயின் சிரிப்பு 'அவுட்' வெடித்தது.

''நீ சொல்றது வாஸ்தவந்தாண்டா? நவராத்திரி சமயம், இந்தப் பக்கம் இசைகேடா நாலு மாமிகள் வந்தால், உன் ஆத்துக்காரருக்கு என்ன உடம்பு என்று கேட்கும்படிதானே இருக்கு. பாரேன், வேஷத்தை! கண்ணுக்குக் கட்டு, காதில் பஞ்சு! தாடி வேறே...''

''அதெல்லாம் புலனடக்கம் அம்மா, புலனடக்கம். மஹாத்மா காந்தி எப்பவும் தன்னெதிரே மூன்று குரங்குப் பொம்மைகள் வைத்திருந்தாராம் 'நல்லதல்லது பார்க்க மாட்டோம்,' 'நல்லதல்லது பேசமாட்டோம், 'நல்லது அல்லது கேட்கமாட்டோம்,' அப்பாவிடம் மூன்றும் ஒருமுக ஆவாஹனம்.''

''உத்தியோகம் பண்ணற மனுஷன் நாலுபேர் தன்னை வெறுங்கையோடு இல்லாமல், பண்டத்தோடு வந்து பார்க்கிற நாளில் மெனக்கெட்டு லீவைப் போட்டுவிட்டு, வீட்டில் இதுமாதிரிக் கூத்தடிக்கிறது இவருக்குத்தான் பொருந்தும்.''

ஏற்கெனவே படும் அவஸ்தை போதாதென்று இந்தச் சித்திரவதை வேறே. பாம்புக்கு மணிக்கட்டைக் காட்டிச் சீண்டுவதுபோல, தினமும் ஒருவேளை இந்தக் கூப்பாட்டைச் சடங்காக நடத்துகிறார்கள். இத்தனைக்கும்தான் தன் இருப்பிடம் மாடி அறையை விட்டு அத்தியாவசத்துக்குத் தவிர அசைவதில்லை. நல்லவேளை, கடைக்குட்டி கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கிறான். காலைக்கடன், குளியல், சிறுநீர் உபாதை (இதற்கெல்லாம் தனித்தனி அடையாள சமிக்ஞைகள். அவனுடன் முன்னாலேயே ஏற்பாடு பண்ணிக்கொண்டாகிவிட்டது)—கையைப் பிடித்துக்கொண்டுபோய் கொண்டு வந்துவிடுகிறான். காலைக் காப்பியும் அனந்துதான் கொணர்கிறான். மாடியேறி வருவதற்குள் சூடு கொஞ்சம் ஆறித்தான் போகிறது. இருந்தாலும் குழந்தே கொண்டு வருகிறானே!

குழந்தைக்கு அடுத்த பிறந்த நாள் பதினான்கு.

பத்து மணி சுமாருக்கு மூணு சப்பாத்தி. கோமதி எதிரே டீப்பாயில் தட்டை ணங்கென்று வைக்கிறாள்.

"வாய்க்கும், கைக்கும் வழி தெரியுமோன்னோ? இல்லை, ஊட்டி விடணுமா? ஏன் இப்படி என்னை மாடிக்கு அலைக்கழித்துத் திணற அடிக்கிறதுலே உங்களுக்கு அலாதி சந்தோஷமோ?"

பிற்பகல் ஒரு கோப்பை டீ.

இரவு இரண்டு பச்சை வாழைப்பழம்.

இடையில், மதியம் ஒரு மணி சுமாருக்கு மூச்சிறைப்பிலிருந்தே அவள்தான் வருகிறாள் என்பது தெரிகிறது. பாவம் தான், உடல் பருத்துவிட்டது. ஆனால் அந்த உடல்வாகுக்காரர்கள் கொஞ்சம் உஷாராய்த்தானிருக்க வேண்டும். வாரத்துக்கு நாலுவேளை உருளைக்கிழங்கை வெட்டக் கூடாது. சர்க்கரைப் பண்டங்களின்மேல் ஆசை வைக்கக் கூடாது. பகல் தூக்கத்தை மட்டுப்படுத்த வேணும். ஆனால் நான் சொல்லி அவள் கேட்டு, அவள் சொல்வதை நான் கேட்டு அதெல்லாம் எப்பவோ மலையேறிப் போச்சு.

"இதோ பாருங்கோ, மொச்சைக் கொட்டை சுண்டல், உங்களுக்குப் பிடிச்ச மாதிரியே, உப்பு மினுக்க, மசாலா அரைச்சுத் தடவி சுண்டியிருக்கேன். வெங்காயம் போட்டால் அமர்க்களமாயிருக்கும். ஆனால் மாளைய பட்சத்திலிருந்தே வெங்காயம் முருங்கைக்காய் இல்லாமல் வயிற்றில் அடிச்சாச்சு. அதுவும் இந்த சீஸனுக்கு முருங்கைக்காய்ப் பேயாத்தான் காய்க்கறது. மார்க்கெட்டில் போராய்த்தான் வெச்சு விக்கிறான். இதோ பாருங்க, சின்ன ப்ளேட்டில்தான் கொண்டு வந்திருக்கேன். குட்டி ஸ்பூன், இதுவும் அம்பாள் பிரஸாதம் தான். தோஷம் இல்லை. நான் யார்கிட்டே சொல்லப் போறேன்? எனக்காக—நானே வாயில் போடட்டுமா?"

அடி நாக்குச் சுரப்பு தாளமுடியவில்லை. "போ! போ இங்கே விட்டுப் போய்விடு" என்கிற ஜாடையில் கைகளை உதறினார்.

"வேண்டாம்னா போயிடறேன். எனக்குத்தான் மனசு கேக்கல்லே. அதுக்காக அடிச்சுத் துரத்தணுமா, நாய் கெட்ட கேடா?"

துக்கம் தொண்டையை அடைக்கப் போகிறாள். இந்த நிமிஷத்தில் இறங்கு முன்னரே, எத்தனையோ புத்தியாகவும் எச்சரிக்கையாகவும் சொல்லியாச்சு. ஆனால் சுபாவத்தை மாற்ற முடியாது.

நெற்றி கொப்புளித்தது. சுருட்டி வைத்த படுக்கைமேல் சாய்ந்தார். நியாயமாகத் தலையணை, படுக்கையெல்லாம் கூடாது, அதுவும் பகல் வேளையில். ஆனால் முடியவில்லை. அம்பாளை அதற்கு மன்னிப்பும் அனுமதியும் ஏற்கனவே கேட்டாச்சு.

இதுசாக்கில் சந்தியாவந்தனம்; புஸ்தகத்தைப் பார்த்துத் தான். அதிலும் நிம்மதி கொஞ்சம் தெரியத்தான் செய்கிறது. ஆனால் 108 காயத்ரி முடிப்பதற்குள் இடுப்பு தெறித்து விடுகிறது. இயல்பாகவே இடுப்பொடிந்த மாடு. இந்த நாலு

நாளிலேயே இத்தனை சோர்வு. அப்படி கொலைப்பட்டினி யும் இல்லை. இன்னும் ஆறு நாட்கள். ஆறு நாட்களா? அம்மா, நீதான் மானம் போகாமல் காப்பாத்தணும்.

இப்போ ஊரில் கோவிலில் நவராத்திரி அமர்க்களப்படும். கடைத்தெருவில் நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் அத்தனைபேரும், ஒன்பது நாளைக்கும் நீ, நான் என்று உபயத்துக்குப் போட்டி. கோவிலுக்குப் பிள்ளையில்லா சொத்துக்கள் வேறே ஏராளமா எழுதி வெச்சிருக்கு. உதய பூஜையிலிருந்து அர்த்தஜாமம் வரை, ஒருவேளைக்குப் பத்துப் பன்னிரண்டு ஸஹஸ்ரநாம அர்ச்சனை, ஏற்றபடி அபிஷேகம், அலங்காரம் நைவேத்தியம், ஊதா, பச்சை, மஞ்சள், சிவப்பு, வெண் புதுப் பட்டுப்புடவைகளில் கர்ப்பக் கிரஹத்தின் இருளிலிருந்து அம்பாள் பிதுங்குவாள், அந்த மூக்குத்தியும், மணிக்கிரீடமும், தாடகமும், திண்டு மாலை யும், இதோ கண்ணெதிரே நிற்கிறாள். அம்மா, மயிர்க்கூச் செறிகிறது. சிவராஜ குருக்கள் என்றாலே சிரத்தைக்கு மறு பெயர் அம்பாளுக்கு அவர் கட்டிவிடும் கொசுவத்துக்குப் பெண்கள் வெட்கணும்.

ஒரு சமயம், அலங்காரம் முடிந்து குருக்குள் தலை நிமிர்ந்த அந்தக் கணமே பக்கத்தில் உதவிக்கு நின்ற அவர் தம்பி, கையை மார்மேல் கட்டியவண்ணம், கணீரென்ற சாரீரத்தில் அபிராமி அந்தாதியை அடி எடுத்தவுடன், அந்த திடுதிப்பு அப்படியே காலை வாரிவிட்டது இன்னும் மறக்கவில்லை. பாத்திரத்தின் விளிம்பிலிருந்த ஈ தேனுள் விழுந்து தத்தளிக்கும் தவிப்பு.

அம்மா, உன்னை அந்த மாதிரி தரிசனம் காண, என்ன பட்டினியிருந்தாலும் தகும். இந்த உயிரே போய்விட்டால் தான் என்ன? போகிற வயசுதானே! இருந்து கண்டது என்ன? ஒன்று தெரிகிறது. எல்லாம் சமயத்தைப் பொறுத்தது. சமயந்தான் தெய்வம், சமயம்தான் தரிசனம். கண்மூடி கண் திறப்பதற்குள் அது நேர்ந்துவிடுகிறது.

ஆனால் நேரத்துக்குப் பொட்டு வைக்கும் அந்த வேளை அதுமட்டும் நமக்குப் பங்கு கிடையாது. அதுமட்டும் அவளுக்குத்தான் சொந்தம். நேர்வதை நாம் பார்க்க முடியாது. ஆனால் நேர்ந்தபின் உணரலாம். கொடுப்பனை அதற்கும் இருந்தால்.

இருந்தாற்போலிருந்து அகில், மட்டிப்பால், கற்பூரம், சந்தனம், பவழமல்லி மணம் சூழ்ந்துகொண்டது. உள்ளங்கையை முகர்ந்துகொண்டார். தாழம்பூ கமகம......உடலிலிருந்தா? பயமாயிருந்தது

கண்ணுக்குக் கட்டுப் போட்டதால மட்டும் முழு இருள் கிட்டிவிடவில்லை. அற்ப சத்தங்களுக்கும் இமை திறந்து கொள்ளும் பழக்கத்தை கண்கட்டுக்குள் கட்டுப்படுத்தலாம்.

செவிக்குப் பஞ்சடைத்ததனால் மட்டும், கேட்காமல் இல்லே. வம்புப் பேச்சை ஒட்டுக் கேட்பதில் இருந்து அவ்வப் போது முடிந்தவரை செவியை மீட்டுக்கொள்ளலாம். அவ்வளவுதான். பிள்ளையாண்டான் ஏசிக் காட்டினாற் போல், இதெல்லாம் புலனடக்கம் ஆகிவிடுமா? என்னவோ இருளில், தடவித் தடவித் தேடுகிறோம், இருளையே தானோ? என்னால் முடிந்தது இவ்வளவுதான். ஜன்மங்கள் தான் இருக்கின்றனவே, இதற்குத்தானா இருக்கின்றன!

"கலியுகத்தில் முழுஆர்வத்துடன் மூணு நாள் தேடினால் போதும். பகவான் தரிசனமாகக் காத்துக் கொண்டிருக்கிறார்" என்று பரமஹம்சர் உத்தரவாதம் சொல்கிறார்.

"நான் யார்?' இந்தக் கேள்விக்குப் பதில் கிடைத்தவுடனே விடிவு கண்டுவிட்டாய்" என்று ரமண பகவான் சொல்கிறார்.

அவர்கள் மஹான்கள். சாத்தியமாகாததை அவர்கள் செய்யச் சொல்லவில்லை. அவர்களால் செய்ய முடிந்ததை, அவர்களுடைய எல்லையற்ற கிருபையால் அருள்கிறார்கள்

ஆனால் புலியைப் பார்த்து பூனை சூடிட்டுக்கொண்ட கதைதான். இதென்ன விளக்கு அணைந்ததும் 70 எம்.எம்.ஆ? லாட்டரி சீட்டா? ஏ மடையா, நீ உன் விமோசனத்தைத் தேடுகிறாய், ஞாபகமிருக்கட்டும்.

அரை மயக்கம். ஆள்மேலே வந்தது தெரியவில்லை. நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டதுதான் தெரிந்தது.

''நான்தாம்பா. கங்கிராஜுலேஷன்ஸ். கிட்டிக்கிட்டி நாளைக்கு சரஸ்வதி பூஜையும் வந்தாச்சு. விஜயதசமி அன்றைக்கு, கிராண்ட்மௌத் ஓடனிங் டு ஸ்பீச் செர்மனீ யாக்கும்! வாதமோ, வீம்போ நடந்தவரைக்கும் பெரிசுதான். கொஞ்சநேரம் உங்களோடு பேசணும். பேசத்தான் வந்திருக் கேன். சமயம்தான் தனியாக இதுவரை அமையவில்லை.

அப்பா, மனம்விட்டுப் பேச நீங்கள் சுயேச்சை கொடுத் திருக்கிறீர்கள். நீங்கள் கொஞ்சம் அட்வான்ஸ்ட் டைப்தான். அப்பா, நீங்கள் கொடுத்திருக்கும் சலுகையை நான் மீறியிருக் கலாம், மீறியிருக்கிறேன், எனக்கே தெரியும்.

ஆனால் ப்ராய்ட் சொல்றான், இல்லை சொல்றானாம், அது ப்ராய்டா? ஜங் ஆ, ஹேவ்லக் எல்லிஸ் ஆ? எனக்குத் தெரியாது. எல்லாம் பெயர்கள். ஆனால் இந்தப் பெயர் களைச் சொல்லிக்கொள்ளாவிட்டால் என்னைப் படித்தவ னோடு சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். இப்படியெல்லாம் உங்களுக்குத் தோணறதே. இதெல்லாமும் செக்ஸ் தூண்டுதல் தானாம். விந்துவின் தத்தளிப்பு என்ன செய்து என்ன, இன்ஸ்பிரிட், மேன் இஸ் ஏ டெரிபில் லோன்லி க்ரீச்சர், உமன் இஸ் நாட்.

இதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும் அப்பா. நான் ஒரு சின்னத் தப்புக் காரியம் பண்ணிட்டேன். உங்கள் செக் ரூ 200—க்கு என் கணக்கில் கட்டிண்டிருக்கேன். இன்னிக்கு

நாளைக்கு, மறுநாள் பாங்க் விடுமுறை. அதற்கு அடுத்த நான்தான் செக் க்ளியரிங்கில் வரும். வந்தால் உங்களை நிச்சயம் காண்டாக்ட் பண்ணுவாள்.''

என்ன சொல்கிறான்? புரியவில்லையே!

''அப்பா, உங்கள் கையெழுத்தில் 'டி'க்கு நீங்கள் கிராஸிங் கொடுப்பேள், டி இல் விழுந்து வளைந்து உங்கள் கையெழுத்தை அடியில் கிண்ணம் மாதிரி ஏந்தும் ஹைலி இண்டுவிஜுவல் ஸ்டிரோக் அது. எனக்கு முழுக்க அமைய வில்லை அப்பா!''

மைகாட்! பிடரி விரைந்து கைகள் முஷ்டித்தன.

'அப்பா, உங்களுக்கு எப்படியிருக்கும் என்று எனக்குப் புரியாமல் இல்லே. ஆனால் இந்த மாஸம் டிமாண்டு ஜாஸ்தி.'

இவன் சம்பாதிக்க ஆரம்பித்து ஆறு மாசம் ஆகிறது. சம்பளத்தில் கால்காசு இன்னும் கண்ணில் காட்டவில்லை அதற்குள்—'மைகாட்'

''நான் நேரிலே உங்களைக் கேட்டிருக்கலாம். ஆனால் எனக்கு 'தில்' இல்லை. நான் செய்வது சரியென்று சொல்ல வில்லை. ஆனால் நீங்கள்தான் கவர் பண்ணணும். மனுநீதி கண்ட சோழனின் மறுபிறவி நான் என்று ஏதேனும் ஏடா கோடம் பண்ணினேலோ, வந்தது உலை என் வேலைக்கு. கம்பிகூட எண்ணுவேனோ என்னவோ? அப்புறம் உங்கள் அந்தஸ்து என்ன ஆகிறது? நம் குடும்ப கௌரவம் என்ன ஆகிறது? எனக்கு வேறே வரன் வந்துண்டிருக்கு. சிந்தித்துப் பார்க்க வேண்டியவர் இனி நீங்கள்தான்.

படபடவென்று சொல்லிக்கொண்டே கீழ் இறங்கிப் போய்விட்டான்.

மைகாட்! மைகாட்!

கீழே திமிலோகப்படுகிறது. இன்று கடைசி நாள். கோமதி மாமி சுண்டல் வழங்கு நாள். ஒரு பக்கம் காஸட்டில் லலிதா ஸஹஸ்ரநாமம் அலறுகிறது. பாடுகிறவர்கள் பாடிக் கொண்டிருக்கிறார்கள். பேசுகிறவர்கள் பேசிக்கொண்டிருக் கிறார்கள். நல்ல கூட்டம்தான் போலும்.

ஆனால் இந்த இரைச்சல் இன்று அவ்வளவாகத் தாக்க வில்லை. உடல் கட்டிலில் கிடக்க தான் தனியாக மிதப்பது போலிருந்தது. ஒரு சுகமான லேக, குரு கிடைத்து, வழி காட்டினால் எவ்வளவு பாக்கியம்.

அடுத்த நவராத்திரி இங்கு இல்லை. முன்பின் தெரியா குக்கிராமத்தில் அறையெடுத்துக் கொண்டு ஒருவேளை சாப்பாட்டுக்கு யாரேனும் பாட்டியம்மாளிடம் ஏற்பாடு— இது ஏதோ ஆற்றில் ஒருகால், சேற்றில் ஒருகால், கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசையென்று...ஒரு நல்ல காரியத்துக்கு அடையாளமே அதற்கேற்படும் தடங்கல்கள்தான்.

மாடியேறி வரும் பேச்சு சத்தம் கேட்கிறது! இவர்களுக்கு இங்கு என்ன வேலை? அலுப்பாயிருக்கிறது. விளக்கைப் போட்டதும், கண்கட்டுக்கடியில் இமைகளில் செந்திட்டு—

"இவள் என் ஸ்நேகிதி, நீங்கள் இதுமாதிரி உபவாஸம் இருக்கேள்னு சொன்னதும் உங்களைப் பார்க்க ஆவல் பட்டாள். அவளைவிட அவள் நாட்டுப் பெண் இன்னும் ஆவல். அமெரிக்காவிலிருந்து வந்திருக்காள்."

"ஹலோ!"

ஆள் நெருங்கி வரும் உணர்வு லேசாக ரோஜா ஸெண்ட்.

"ஹௌடுயுடு? ஹௌடுயு ஃபீல்?"

"நீங்கள் சாப்பிடாமல் இருக்கிறதைக் கூட நான் அவ் வளவு பெரிசா நினைக்கல்லே. வி கேன் மானேஜ் வித் எனர்ஜி பில்ஸ் யு நோ. திஸ் மௌன விரத்..."

'அட ராமா, ஒரு பாவத்தையும் அறியேனே என்னென்னவோ சொல்கிறாளே!'

''ஸோ, இந்த ஒன்பது நாளும். நாட் ஒன்வேர்ட், நாட் ஒன் சௌண்ட்ஃபிரம் யுவர் லிப்ஸ்?

எங்களுக்கு ஒரு பத்து நிமிஷம் பேசாட்டா பயமாயிருக்கும். ஸ்டிரோக் ஏதேனும் ஆச்சோன்னு.

எனிதிங்கேன் ஹேப்பன் யு நோ. யூ ஆர்கொய்ட் ஹேன்ஸம் யு நோ.''

கோமதி கைகொட்டிச் சிரித்தாள்.

''அவருக்கு அறுபது நடக்கிறது. இன்னும் மூன்று மாதத்தில் ரிடையர் ஆகப்போகிறார்.''

''எங்களுக்கு அறுபது ஒரு வயசே இல்லை. அப்போது வாழ்க்கைக்கு ஒரு புது வேகம். எங்கள் கணிப்புகள்படி மாமா ஒரு ஹேன்ஸம்மேன் முகத்தில் அந்த போன் ஸ்ட்ரக்சர்.'' 'வாஸந்தி நாம் போகலாம் வா, மாமாவை இன்னமும் டிஸ்டர்ப் பண்ணவேண்டாம்' இது அவள் மாமியார் போலும்.

''யெஸ்யெஸ், திஸ் ஈஸ் இண்டியா தட் ஈஸ் அமெரிக்கா''

போயிட்டு வரோம் டேக் குட் கேர் ஆஃப் யு...ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்காதீங்கோ.''

கீழே இறங்கிப் போகிறார்கள். கோமதிக்குப் பரம திருப்தி. என்னைக் குரங்காட்டி காட்டியாச்சு. கதவை சரியாக மூடிக்கொண்டு போகமாட்டாள். மறதிக்கரசி. விளக்கை அணைத்ததே பெரிசு.

ஆனால் இப்போது கண்கட்டுக்குள் இமையுள் இருளில் மை கூடியிருக்கிறது. இது சுகம்தான். கர்ப்ப இருளைச் சிசு தான் அறியும். ஆனால் அது சொல்ல முடியுமோ? 'புத்ர'

வில் ஒரு அத்தியாயம் கர்ப்பத்துள் இருந்தே குழந்தை பேசுகிற மாதிரி குழந்தையாகவா பேசுகிறது? நூற்றுக் கிழவனாக பேசறது! கற்பனையைக் கண்டதாகக் கொள்ள முடியுமா? அப்படி அல்ல என்றும் சொல்ல முடியுமோ? ஜீவனின் வேட்கையே கர்ப்பத்துக்கு மீள்வதுதான். அந்த வேட்கை வேகத்தின் நாளடைவான விளைவுதான் சாவு என்று ஒரு கட்சி. இந்த இருள், அந்த இருளில் ஒரு பங்கு மேலும் இருக்குமெனில் யமன், தர்மராஜன்தான்—

தலைமயிரை ஒரு அசுரப்பிடி இறுகப்பற்றி அப்படி இப்படி அசைய வொட்டாமல் தலையணையில் இருத்தியது. அந்த அதிர்ச்சி தெளியுமுன் கூச்சலுக்கு வழியில்லாமல் வாய் மேல் இரு அதரங்கள் பதிந்தன. மூச்சு திணறிற்று. எவ்வளவோ திமிற முயன்றும் வாயைக் கவ்வல் விடவில்லை. மேலும் மேலும் இறுகத் தழுவலில் மார்மேல் மார்பு அழுந்திற்று. எலும்பையே உருக்கிட உடலைத் திப்பியாக்கி உயிரையே உறிஞ்சும், உறிஞ்சிக்கொண்டிருக்கும், உறிஞ்சிக் கொண்டேயிருக்கும்—

ஸ்மரணையே தப்பிவிடும் நிலையில் ஆலிங்கனம்—சட்டென விட்டது! அறையினின்று ஓடி மாடியிறங்கும் திடுதிடு தாழ்ந்து அடங்கிய சிரிப்பு—

கண் கட்டைப் பிய்த்து எறிந்தார். இருள் தவிர வேறு தெரியவில்லை. யார்? என்ன? எங்கே? சூலம் மார்பில் விண்விண் உள்ளே ஏற்கனவே இற்றுப் போய்க்கொண்டிருந்த ஏதோ ஒன்று பொட்டென அறுந்தது. கீழே இறங்கி ஓடினார்.

கூடத்து வெளிச்சம் கண்ணை மின்னலாகப் பறித்தது. கூட்டம் அவர்களிடையில் மறித்துத் தள்ளிக்கொண்டு நேரே சமையலறைக்கு ஓடினார்.

அங்கிருந்து அவர் வெளிப்பட்டபோது, அவர் கையில் உப்பு ஜாடி.

"என்னன்னா?" கூட்டத்தினின்று பிரிந்து கோமதி அவரை நோக்கி ஓடிவந்தாள். அவள் விழிகள் திகிலில் சுழன்றன.

"திருப்திதானே? திருப்திதானே?" அள்ளி அள்ளி வாயில் போட்டுக்கொண்டார்.

எல்லோரும் வாயடைத்து நின்றனர்.

காதில் பஞ்சு. எண்ணெய் காணாத பரட்டை வரட்டு மயிர், தாடி மீசை. கழுத்தில் மாலை தொங்கிய அந்தக் கண் கட்டும் துணியும். இளைத்துப் போன அந்த உடல், பஞ்சடைந்த கண்களில் தனி வெறி, பைத்யம் போல்—

அவரைப் பார்க்க பயமாயிருந்தது.

# அப்பாவின் மீசை

மணியடித்துப் பள்ளிக்கூடம் விட்டானபோதிலும், அறுத்துவிட்ட கன்றுக்குட்டி மாதிரி வீட்டுக்கு ஓட, அன்று அவனுக்கு மனமில்லை. புத்தகப் பையைத் தோளில் தொங்க விட்டுக்கொண்டு, கொஞ்சம் யோசனையாகவேதான் நடந்தான்.

காலையில் வீட்டைவிட்டு வரும்போது, அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை. எப்படி ஆரம்பித்ததென்றே சரி யாய்த் தெரியவில்லை.

அவனாகத் தனியே உட்கார்ந்துகொண்டு, காகிதத்தில் கத்திக் கப்பல் செய்துகொண்டிருந்தான்—இல்லை, செய்ய முயன்றுகொண்டிருந்தான்.

மத்துப் போட்டுக் கடையும்போது மோர் சுழல்வது போல், கொஞ்சநேரமாகவே அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இடையில் ஏதோ பொருமிக்கொண்டிருந்தது. இன்னதுதான் என்று சரியாய்த் தெரியாமல் வார்த்தை தடித்துக்கொண்டே போயிற்று. அப்பாவின் குரல் சற்று உரத்திருந்தது; அம்மா வின் குரலோ, அறுத்தது தெரியாமல் ரத்தம் துளிக்கும் கத்தி யின் கூர்மைபோல், நயத்திருந்தது.

திடீரென்று நாற்காலியை முரட்டுத்தனமாய்ப் பின்புறம் தள்ளிக்கொண்டு எழுந்து, தோள் கடையில் குறுகிய கழுத்துடன், அம்மாவை நோக்கி அப்பா வீச்சுநடை போட்டுக் கொண்டு வந்தபோதுதான், கனவு கண்டு விழித்தவன்போல், அவனுக்குச் சுற்றுப்புற விவகாரங்களின் நினைவு வந்தது.

அம்மா ஏதோ துணியின்மேல் தலையைக் கவிழ்ந்து கொண்டு தைத்த வண்ணம், பாணங்களை விட்டுக்கொண்டிருந்தாள்: அப்பா தன்னை நோக்கி வருவதைப் பார்க்கையிலேதான், அவளுடைய கண்கள் பெரிதும் பெரிசாயின; பயத்தினால் விழிவெள்ளைகள் கிறுகிறுவென்று சுழன்றன. ''எல்லையை மீறி ஏதோ வார்த்தையைக் கொட்டிவிட்டோம்'' என்று, அவளுக்கே அப்போதுதான் புலனாயிற்று. அப்பாவின் கோபத்தைப் பார்த்ததும், அவள் உடலெல்லாம் வெலவெலத்துத் துணி மாதிரியாகிவிட்டது. முன் மயிர் நெற்றியில் சரிய, கடற்கரையோரத்தில் வளர்ந்த சவுக்குப் புதர்போல் அடர்ந்த புருவத்தினடியில் இயற்கையிலேயே மஞ்சள் பூத்த மேட்டுவிழிகள் பளபளக்க, மூக்குநுனியும் அதனடியில் புது மீசையும் துடிதுடிக்க, அப்பா பல்லைக் கடித்துக்கொண்டு, நேரே பட்டாளத்து லாரி மாதிரி அம்மாவை நோக்கி வந்தாள்.

''இல்லை, வேண்டாம்! வேண்டாம்! ஐயோ!...'' என்று கத்தக்கூட நேரமில்லை; குரல் தொண்டையில் உறைந்து போயிற்று.

அப்பா நேரே வந்து அம்மாவின் முதுகில் ஓங்கி ஓர் அறை அறைந்தார்.

'கிறீச்!' என்று ஓர் அலறல் போட்டு, அம்மா சுவர் ஓரமாய்க் குப்புற விழுந்தாள்.

''அம்மா...அம்மா!'' என்று கூக்குரலிட்டுக்கொண்டு, இவன் போய் அவள்மேல் விழுந்தான். அப்பா ஒருமுறை இவர்கள் இருவரையும் வெறித்துப் பார்த்துவிட்டு, வழியில்

கிடந்த தையல் சட்டத்தையும், ஒன்றிரண்டு பாத்திரங்களை யும் உதைத்துத் தள்ளிவிட்டு, வாசற் கதவைப் படாரென்று சாத்திக்கொண்டு, வெளியே போய்விட்டார்.

அம்மா மெல்ல எழுந்திருந்தாள்.

அம்மாவைப் பார்க்கச் சகிக்கவில்லை. தலை மயிரும் துணியும் அலங்கோலமாய்ப் போயிருந்தன. வலது கையில் ஒரு வளையல் உடைந்து, இசைகேடாய் மணிக்கட்டில் கீறி, ரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. அம்மா வாயைத் திறந்து அழவேயில்லை. 'பொய்'க் கன்றுக்குட்டியை மடியில் முட்ட விட்டுத் தெருவில் பால் கறக்கும் பால்காரனின் பசுவைப் போல், அம்மாவின் கண்களில் கண்ணீர் தாரை தரையாய் வடிந்துகொண்டிருந்தது. அவள் இரண்டொரு தடவை முன்றானையால் கண்களைத் துடைத்துக்கொண்டாள். ஆனால், கண்ணீர் நிற்கவில்லை. அது துளித்துக்கொண்டே யிருந்தது; கணகணவென்று நெருப்பு மாதிரி கொதித்தது அந்தக் கண்ணீர். அம்மா அப்புறம் அதைத் துடைப்பதையும் நிறுத்திவிட்டாள்; தன்னிச்சையாய் அது வழிந்துகொண்டே யிருந்தது. அதோடு அவள் எழுந்திருந்து, வளையல் துணுக்கையெல்லாம் சீராய்ப் பொறுக்கி வாசலில் எறிந்து விட்டு, இவனுக்குத் தலையை வாரி, பொட்டிட்டு, சொக் காயும் நிஜாரும் போட்டுவிட்டு, புத்தகப் பையைத் தோளில் மாட்டிவிட்டு, இவனைப் பள்ளிக்கூடம் போகத் தயார் செய்துவிட்டு, அவள் மாத்திரம் சமையல் உள்ளுக்குள் போய் முன்றானையை விரித்துக் குப்புறப் படுத்துவிட்டாள்.

சமையல் உள் வாசல்படிக்கு அந்தப் பக்கம் ஒரு காலும் இந்தப் பக்கம் ஒரு காலுமாய், இவன் தயங்கித் தயங்கி நின்றான். அவளைத் தேற்ற ஆயிரம் யோசனைகள், இவனது உள்ளத்தில் எழுந்தன. ஆனால், வெட்கமும் வார்த்தைகளும் வந்து தொண்டையை அடைத்தன. அம்மாவை இப்படி விட்டுப் போக, அவனுக்கு மனம் வரவில்லை.

"போடா! பள்ளிக்கூடத்துக்கு நேரமாயிடுத்து..."

லஜ்ஜையினால் முகம் சிவக்க, குனிந்த தலையுடன், அவன் பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பினான்.

இப்போது வீட்டுக்குத் திரும்பவேண்டும்.

அவன் வீட்டில் சண்டை நடக்கிறதே என்ற கவலை கொஞ்சங்கூட இல்லாமல், தெருவில் ஜனநடமாட்டம் வழக்கம்போல் நிறைந்துதான் இருந்தது. தெருவிலே, பெரியவர்களும் ஆண்களும் வாலிபப் பெண்களும், பேசிக்கொண்டும் சிரித்து இடித்துக்கொண்டும் சென்றார்கள். மோட்டாரும் வண்டிகளும் பறந்தன. ஒரு ஜட்கா வண்டிக்காரன், தன் வண்டி ஓடிக்கொண்டேயிருக்கையில், சாட்டைக் கழியைச் சக்கரத்தின் பட்டைகளுக்கிடையில் கொடுத்து, 'கடகட' என்று சத்தம் உண்டுபண்ணி, குதிரையை ஜோராய் விரட்டினான். அவனுங்கூடத் தமாஷாய்த்தான் இருந்தான்.

பெரிய கூடைபோல் ஒரு முண்டாசு கட்டி, கிறுதா மீசையை ஷோக்காய் முறுக்கிவிட்டிருந்தான் அந்த ஜட்கா வண்டிக்காரன்.

ஜட்கா வண்டிக்காரனின் மீசையைப் பார்த்ததும், இவனுக்கு அப்பாவின் மீசை நினைவு வந்தது; உடனே சண்டையின் ஞாபகமும் கூடவே வந்தது; முகம் மறுபடியும் தொங்க ஆரம்பித்துவிட்டது. ஏனென்றால், வீட்டில் சண்டை வந்ததே அப்பாவின் மீசையால்தான். நடந்ததெல்லாம் இப்போதுதான் இவனுக்குச் சரியாய் ஞாபகம் வந்தது. இவன் காகிதக் கப்பல் செய்வதில் முனைந்திருந்த போதிலும், அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையில் நடந்த தர்க்கத்தை, இவனது உள்நினைவின் ஒருபாகம், இவன் மனதிலே பதிவு செய்து கொண்டிருந்திருக்கிறது.

ஆம், இப்போதுதான் எல்லாம் ஞாபகம் வருகிறது.

அப்பா சலூனுக்குப் போய் மயிர் வெட்டிக்கொண்டு, புதிதாய் மீசை வைத்துக்கொண்டு வந்தார். மெல்லியதாய், பென்சிலால் கோடு கிழித்தாற்போல், ஒரு துளிர் மீசை. அப்பா கண்ணாடிக்கெதிரில் உட்கார்ந்துகொண்டு, அதைத் தொட்டுத் தொட்டு, நுனியை முள்ளாய் முறுக்கிவிட்டுக் கொண்டிருந்தார். அப்பா படும் சிரமத்தைப் பார்க்க, இவனுக்கே வேடிக்கையாயிருந்தது. இவன் பெரியவனாய்ப் போனால், இவனுக்குக்கூட மீசை வைத்துக்கொள்ளத்தான் இஷ்டம். இப்போதேகூட வைத்துக்கொள்ள இஷ்டம்தான்; ஆனால், ரோமம் முளைக்கமாட்டேனென்கிறதே!

என்றாலும், அம்மாவுக்கு அது வேடிக்கையாயில்லை ஏனோ தெரியவில்லை. என்னவோ மொணமொண என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

"பால்காரச் சின்னான் மாதிரி—விறகுவெட்டி வேலன் மாதிரி. பிராம்மணாளாய் லட்சணமாய் இருக்கப்படாதோ —போயும் போயும் புத்தி இப்படியா போகணும்! முகத்திலே கொடூரம் வழியறது." என்று அம்மா என்னென்னவோ சொல்லிக்கொண்டிருந்தாள்.

அப்பா சிரித்துக்கொண்டு, இதையெல்லாம் விளையாட்டாய் எடுத்துக்கொண்டு, மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டேயிருந்தார். ஆனால், அம்மா படிப்படியாய்த் தைரியமாய் மீறிக்கொண்டே வந்து, அப்புறம் "கள்ளப் பார்ட்டு மாதிரியிருக்கு; இந்த ராட்சஸ முழிக்கும் மீசைக்கும் சகிக்கவில்லை—பட்டாணித் துலுக்கன் மாதிரியிருக்கு." என்று புதுப்புது 'மாதிரி'களையெல்லாம் அடுக்க ஆரம்பித்ததும், அப்பாவுக்குச் சிரிப்பு எல்லாம் பறந்துபோய், கண்களில் சிவப்பு நரம்புகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. அப்புறம் என்ன? அவ்வளவுதான்—அம்மாவின் முதுகிலே 'பளீர்' என்று அறைதான்!

"அரே தம்பி—இவ்வளவு பெரிய பிளாட்பாரம் கட்டி விட்டிருக்காங்களே—அது போதல்லையா உனக்கு? ஏன்? மோட்டாரில் விழுந்து சாவணும்னு இஷ்டமா? மாட்டிக் கொண்டால், ஆள் 'அட்ரெஸ்' இல்லாமல் போயிடுவையே! பொறுக்கறத்துக்கு எலும்புகூட அகப்படாதே—ஏண்டா தம்பி, உன் உடம்பிலே எலும்பு இருக்குதா? பம்பிளீஸ் நார்த்தம் பழம் மாதிரியிருக்கையே!—"

இவ்வாறு, கோபிப்பதுபோல் அபிநயித்துக் கொண்டு, இவனை ஒரு போலீஸ்காரன் அலக்காய்த் தூக்கி, பிளாட்பாரத்தில் ஏற்றிவிட்டு, கன்னத்தைச் சலுகையாய் நிமிண்டி அனுப்பினான்.

ஆமாம், இனிமேல் 'அட்ரெஸ்' ஒன்றை ஒரு சீட்டில் எழுதி ஜேபிக்குள் போட்டுக்கொள்ள வேண்டும். அது துண்டுக் காகிதமாயிருந்தால், கீழே விழுந்தாலும் விழுந்து விடும். ஒரு குண்டூசியைக் கொண்டு மெடல் மாதிரி அதைச் சொருகிக்கொள்ள வேண்டும். வாத்தியாரைக் கேட்டால், கொடுப்பார். கொடுப்பாரா? "ஏன்? என்னத்துக்கு?" என்று தான் கேட்பார்.

"நான் செத்துப் போனால், என்னை வீட்டில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டாமா? அதற்குத்தான்" என்று சொல்ல வேண்டும்.

சாவைப் பற்றிய எண்ணம் அவனது சிந்தனைத் தொடரில் புகுந்ததும், யோசனைகள் இன்னமும் ரொம்பச் சுவாரஸ்யமாகி விட்டன. சாவதானமாய்ச் சிந்தனையில் மூழ்கிய வண்ணம், குனிந்த தலையும் தளர்ந்த நடையுமாய் நடக்கலானான். நடையின் தழதழப்பில், கொழுகொழுப்பான அவனுடைய கன்னத்துச் சதை அதிர்ந்தது.

என்னவோ செத்துப்போவது, என்று கேள்விப்பட்டிருந்தானேயொழிய, செத்துப்போனவர்களைப் பார்த்த ஞாபகமில்லை. செத்துப்போனால் பேச்சு மூச்சு இருக்காது. செத்துப்போனவர்கள் திரும்பவும் எழுந்திருக்கமாட்டார்கள் என்று கேள்வி.

ஆனால், இப்போது சட்டென்று, பல நாளைக்கு முன் ஒன்று நடந்ததே, அது ஞாபகம் வந்தது.

இது மாதிரிதான், பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான். வரும் வழியில், கோயில் குளம்—சுற்றி இரும்புக் கிராதி போட்டிருந்தது; அதுகூட இதோ வந்து விட்டது—அதன் ஒரு துறையின் படிக்கட்டில் ஏகப்பட்ட பேர் ஒன்றாய்க் கூடி நின்றுகொண்டு, நீரைச் சுட்டிச் சுட்டிக் காண்பித்துக்கொண்டு, வார்த்தை புரியாமல் இறைச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

என்ன கப்பலா? திமிங்கிலமா?

அந்தக் கூட்டத்திலே இவனும் இடித்துப் புகுந்து கொண்டு, ஒருவனுடைய முழங்கையடியில் அரைக்கண நேரம் தெரிந்த சந்து வழியாய், திணறிக்கொண்டு ஒற்றைக் கண்ணைச் சாய்த்த வண்ணம், உள்ளே என்ன நடக்கிறது என்று பார்க்க முயன்றான்.

பாசிப்பச்சையேறிய தண்ணீரில் ஒரு வெள்ளை வேஷ்டிக் கொப்புளம் (உள்ளே காற்றுப் புகுந்துகொண்டதால் உண்டான கொப்புளம்) மிதந்து கொண்டிருந்தது. பூ! இவ்வளவுதானா? இதுக்கா இத்தனை அமக்களம்! இதை விடப் பெரிய கொப்புளம் இவனால்கூடப் பண்ணமுடியுமே! இன்னும் கொஞ்சம் கழுத்திலே சுளுக்கேற, தலையை நீட்டிப் பார்த்தான். வேஷ்டிக் கொப்புளத்தை ஒட்டினாற்போல் ஒரு கைமுஷ்டியும் தென்பட்டது. நெருக்கிக்கொண்டு பார்த்தான். கனத்த மயிர் தெரிந்தது.

இன்னமும் சரியாய்ப் பார்ப்பதற்குள், இடுப்பு மரத்து விட்டது.

''அட பாவமே! சின்னப் பையன் மாதிரியிருக்குதே!...''

''படி சறுக்கியிருக்குமப்பா!...''

''படிதான் சறுக்கித்தோ...வீட்டிலே கோவம் பண்ணிக் இட்டு வந்து விழுந்துட்டானோ?...''

''இந்தக் காலத்துப் பசங்களை என்னன்னு சொல்றது! பிறக்கிறபோதே, சாவுக்குக்கூடப் பயப்படமாட்டேன்றாங்க ...நெஞ்சு அவ்வளவு துணிஞ்சுபோச்சு...''

''ஐயையோ...''

அந்த வீறல் அங்கே இருந்த அத்தனைபேர் உள்ளத்தையும் உடலையும் ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது. ஏன் உலுக்காது? பெற்ற பிள்ளையை இரண்டு நாள் இரவும் பகலுமாய்த் தேடித் தேடி அலைந்து ஏற்கெனவே உள்ளம் நைந்திருக்கும் தாய், இப்போது திடீரென்று அவனைப் பிரேதமாய்க் காணுகையில், படீரென்று உடையும் அவளுடைய இதயத்தின் விரிசலினின்று வெளிப்படும் வீறலல்லவா அது? தாயுள்ளத்தின் பிரளயமல்லவா அது!

அந்த வீறலைக் கேட்டுப் பயந்து அங்கேயிருந்து வீட்டுக்கு ஓடிவந்த ஓட்டத்தில் இவனுக்கு ஏற்பட்ட படபடப்பு அடங்கவே, அரைமணி நேரமாயிற்று. சாவைப் பற்றி அவனுக்கு அவ்வளவுதான் தெரியும்.

திடீரென்று ஒரு பயங்கரமான எண்ணம் அவன் மனதில் பிறந்தது. பிடரி சில்லிட்டது. நடையையும் மறந்து, சற்று நேரம் அப்படியே நின்றான்.

அம்மா அப்படிக் கவிழ்ந்து படுத்துக்கொண்டிருந்தாளே, அப்படியே செத்துப்போயிருந்தால்...?

ஜனங்கள் எப்படி எப்படியோ செத்துப்போகிறார்களே! அம்மா அப்படிக் கவிழ்ந்துபடுத்தே செத்துப்போயிருந் தால்...!

மறுபடியும் நடக்க ஆரம்பித்தான். இப்போது கொஞ்சம் வேகமாகவே நடந்தான்; கொஞ்சம் பீதியோடு தான்.

இவன் உள்ளே போவான். பின்னாலேயே இவனுடைய அப்பா, ஆபிஸிலிருந்து வந்து நுழைவார். இவன் காப்பி குடிப்பதற்காக, நேரே சமையல் கட்டிலே புகுவான். தான் பள்ளிக்கூடத்துக்குக் கிளம்புகையில், அம்மா எப்படிப் படுத்துக்கொண்டிருந்தாளோ அப்படியே இப்போதும் கிடப்பாள்; இரு கைகளுக்கும் இடையில் கவிழ்ந்த முகத் துடன்தான் கிடப்பாள்.

''அம்மா! அம்மா!''

இவன் 'அம்மா—அம்மா' என்று கூப்பிட்டுக்கொண்டே, அம்மாவை மெல்லப் புரட்டி நிமிர்த்துவான்.

புரட்டி என்ன பிரயோசனம்? வெறுமையே உடல்தான் துவளும்; அன்று ஒருநாள் ஓட்டலிலிருந்து அப்பா வாங்கிக் கொண்டு வந்தாரே அல்வாத்துண்டு, அந்த மாதிரி தளதள என்று துவளும்.

அம்மாவின் உடம்பு ரொம்பவும் மிருது; இது அவனுக்குத் தெரியும். அன்றைக்கு ஒரு தடவை இவனுக்கு வாயில் நுழை யாத பெயருடன் உயர்ந்த ரகமான ஒரு காய்ச்சல் அடித்ததே, அப்போது இவனை மார்மேலும் தோள் மேலும் மடிமேலும் போட்டுக்கொண்டு, சீராட்டினவர் யார்? அம்மாதானே? இனிமேல் சீராட்ட ஒருவரும் கிடையாது.

அப்பா உள்ளே வருவார்.

"'என்னடா?...'"

அவன் கண்களிலிருந்து சிந்தும் அலட்சியம் வெறுப்பு இந்த இரண்டும் சேர்ந்த தீயிலே, அப்பா ஏன் இன்னமும் எரிந்து போகவில்லை? இனிமேல் இவனுக்கு அம்மா இல்லை; அம்மாவைக் கொன்றதால், அப்பாவும் இல்லை.

இவன் நிர்க்கதியான குழந்தையாகிவிடுவான். அப்படியே எழுந்து முகத்தைத் திருப்பிக்கொண்டு, வீட்டுக்கு வெளியே போய்விடுவான்.

எங்கே? அதுதான் தெரியவில்லை. எங்கே? எங்கேயாவது போகிறது. தாயும் தகப்பனுமில்லாத குழந்தைக்குச் சாதம் போட, எத்தனைபேர் காத்திருக்கமாட்டார்கள்?

ஆனால், அவன் உலகத்தை வெறுத்துவிடுவான். 'அப்படியென்றால் என்ன?' என்று மனதுக்குள்ளே ஒரு குட்டிக் குரங்கு கேட்டது. அது என்னவோ! ஆனால், அவன் உலகத்தை வெறுத்துவிடுவான். அம்மா சொன்னாளே துருவன் கதை, அதுமாதிரி—பிரகலாதன் கதைகூட, அம்மா சொல்லியிருக்கிறாள்: 'இரணியாய நமஹ...' துருவனாகி விடலாமா? பிரகலாதனாகலாமா? துருவனாவதுதான் மேல். துருவனானால் நட்சத்திரமாகிவிடலாம்; மேலே போய் "மினுக்கு மினுக்" கென்று மினுக்கலாம்.

ஆனால், அவன் வீட்டுக்குள் நுழைந்ததும், எல்லாம் பெரிய ஏமாற்றமாயிருந்தது. அம்மா சமையலறையில் செத்துக்கிடக்கவில்லை; கூடத்தில் பீரோக் கண்ணாடியெதிரில் நாற்காலி போட்டு உட்கார்ந்துகொண்டு தலை வாரிக் கொண்டிருந்தாள். அம்மாதான் ஏகமாய் 'மினுக்' இக் கொண்டிருந்தாள்.

சோப்புப் போட்டுக் கழுவி வெளேரென்றிருந்த முகத்தில் லேசாய்ப் பவுடர் பூசி, நெற்றியில் பச்சைக் கலர் குங்குமப் பொட்டு வைத்திருந்தாள்.

இதுவரையில் அவன் பார்த்திராத அவ்வளவு எண்ணெய்ப் பளபளப்பு வடியும் வெண்பட்டும் ஜாக்கெட்டும் அவள் அணிந்திருந்தாள். மார்பிலே புடவைமீது ஒரு 'புரூச்'—புத்தப் புதிசு; கல்லிழைத்தது; ஒளிவீசும் தங்க 'புரூச்'—அணிந்திருந்தாள். அப்பா புதிசாய் வாங்கிக் கொண்டுவந்து தந்திருப்பார். பக்கத்து அறையிலிருந்து அப்பா கூடத்துக்கு வந்தார். அப்பாகூட "ஜோராய் டிரஸ்" பண்ணிக்கொண்டிருந்தார்.

"நேரமாயிடுத்து—இவனுக்குச் சாதத்தைப் போட்டுத் தூங்கப் பண்ணு."

"கூடக் கூட்டிக்கொண்டு போவோமே!" என்று, சிரித்துக்கொண்டே அம்மா சொன்னாள். அவளிடம் கோபத்தையே காணோம்.

"ஆமாம், கூட ஒரு நாய்க்குட்டியிருந்தால் அதையும் கூட்டிண்டுவா... இது அங்கே போனால், தூங்கி வழியும்—திரும்பி வருகிறபோது, எவ்வளவு நாழியாகிறதோ என்னவோ! ...பஸ் அகப்படுகிறதோ இல்லையோ! நடந்து வருகிறோமோ என்னமோ! சுருக்கத் தூங்கப்பண்ணு."

அம்மா இவனுக்குச் சாதம் போட்டாள்.

"சமத்தாப் படுத்துண்டு தூங்குடா, கண்ணு. முனியம்மாளைத் துணைக்கு வந்து படுத்துக்கச் சொல்றேன்...நாங்களெல்லாம் பத்து மணிக்கு வந்துடுவோம்..."

இவன் வாயைத் திறந்து, ஒரு வார்த்தை பேசவில்லை. கட்டிலில் போய்க் குப்புறப் படுத்துக்கொண்டான். அவனுக்குப் பயங்கரமான ஆத்திரமும் அருவையும் உண்டாயின.

அந்த உள்ள எழுச்சியில் வயிற்றைக் குமட்டி வாந்திகூட எடுத்துவிடுவானோ என்று தோன்றியது. பல்லைக் கடித்துக் கொண்டு, கண்ணை இறுக மூடிக்கொண்டான். இப்போது தனக்கு அப்பாமேல் அதிகக் கரிப்பா, அல்லது அம்மாவின் மேல்தான் அதிகக் கரிப்பா என்று அவனுக்கே புரியவில்லை.

அம்மாவும் அப்பாவும் புறப்பட்டுவிட்டார்கள். "போய் வறோம். சமத்தாயிரு" என்று மறுபடியும் ஒரு தடவை விடைபெற்றாள் அம்மா. இவன் கவிழ்ந்து படுத்தபடியே, "உம்" என்று முனகி, கடைக்கண்ணால் பார்த்தான். அம்மா முன்னே, அப்பா பின்னே நடந்தார்கள். அப்பா மீண்டும் ஒருமுறை இவனைத் திரும்பிப் பார்த்தார். அடேடே! இத்தனை நேரமும் இவன் கவனிக்கவேயில்லை. அப்பாவின் முகத்திலே புதிதாய் முளைத்திருந்ததே அந்தத் துளிர் மீசை, அது...அதை இப்போது காணோம்!

# தோடு

புவனா, அபிதா, முரளி—மூவரும் வீட்டு வாசலுக்கெதிரே சின்ன குறட்டுக்கல்லில் அப்பா-அம்மா விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

அபிதா, தான்தான் அப்பாவாயிருப்பேனென்று சண்டி பண்ணினாள். மூவரில் அவள்தான் வயதில் சிறியவள்.

"அப்போ பாப்பா யார்?' என்று புவனா கேட்டாள். மூவரில் அவள்தான் மூத்தவள்.

"நீ"

"நான்?"—முரளி, தன் மார்பை சுட்டிக் காட்டிக் கொண்டான்.

"நீ—அம்மா"

"ஏது, எல்லாம் தலைகீழ்ப் பாடமாயிருக்கே!"

குரல் கேட்டு மூவரும் திரும்பினர். ஒரு கிழவர் பின்னால் நின்று கொண்டிருந்தார். நீண்ட மயிரை நெற்றியிலிருந்து பின்னுக்குக் கோதிவிட்டிருந்தார். கறுகறுவென்று தாடி.

"என்ன, வீடு பூட்டியிருக்கு?"

"அம்மா, ஆபிஸ் போயிருக்கா?"

"ஓ! குட்டி உன் பேர் என்ன?

"அபிதா"

"அம்மா ஆபிசிலிருந்து வரவரைக்கும்?"

"நான், இவள் மாமா பெண். என் பேர் புவனா"—புவனா பேச்சை எடுத்துக்கொண்டாள்.

' இவன் முரளி, என் தம்பி. நாங்கள் அடுத்த தெருவிலிருக்கோம். அத்தை இப்போ ஆபிசிலிருந்து வர நேரமாச்சு. அதான் வந்திருக்கோம்."

"அபிதா அப்பா?"

"அப்பாவுக்கு ஊரிலே ஆபிஸ். இன்னிக்கு ஊரிலிருந்து வவ்வா. எனக்கு ஜாங்கிலி வாங்கிண்டு வவ்வாளே!"

"முரளிக்கும் வாங்கிண்டு வருவாளே!"—முரளி தன்னைச் சுட்டி காட்டிக்கொண்டான். அவனுக்குக் கடைவாயில் எச்சில் வழிந்தது.

'போடா, நோக்குக் கிடையாது. எங்கப்பா எனக்குத்தான் வாங்கிண்டு வவ்வா...'—அபிதா புருவங்கள் நெரிந்தன. அவனை அடிக்கப் போய்விட்டாள். சித்திரம் கசங்கினாற் போல், அவள் முகம் சட்டென மாறிவிட்டது.

"குழந்தைகளா, சண்டை போடாதேங்கோ. இந்தாங்கோ, அப்பா வரவரைக்கும் ஆளுக்கொரு சாக்லேட்"

புவனா வாங்கிக்கொண்டாள்.

முரளிக்கு அவசரம் தாங்கவில்லை; வாங்கினதும் வாங்காததுமாக, மேல் ஜிகினாவைப் பிரித்து வாயில் திணித்துக்கொண்டு, சுவாதீனமாக அவர்மேல் உராய்ந்தான்.

அபிதா, கையை நீட்டிவிட்டு, பிறகு தயக்கத்துடன் பின் வாங்கிக்கொண்டாள்.

"என்ன யோசனை?"

"அம்மா வாங்கிக்கக் கூடாதுன்னா சொல்லியிருக்கா. கோவிச்சுப்பா."

பெரியவர் புன்முறுவல் பூத்தார்.

"தோ, அம்மா வந்தூட்டாளே!"—அபிதா ஓடிப்போய் அம்மா காலைக் கட்டிக்கொண்டாள்.

நடுக்கோடை. அஸ்தமன நேரம். ஆனால் அஸ்தமனம் இன்னும் நேரவில்லை. ராஜராஜேஸ்வரி கோயிலில் சாயங்கால தீபாராதனை ஆலயமணி தீர்க்கமாக ஒலிக்கத் தொடங்கிற்று. கிரிஜாவின் கைகள் கூப்பின. பிறகும் அவளுக்குத் தெரியவில்லை, அவள் வணங்கியது மணியோசையையா, அவரையா? ஏனெனில், இரண்டுமே அவளுக்குப் பழக்கமில்லை.

"அம்மா, நான் தாத்தாவிடம் சாக்கலேட் வாங்கிட்டுமா?"

"முரளிக்கும் வேணும்"—முரளி, தன்னைச் சுட்டிக் காட்டிக்கொண்டான்.

அபிதா கையை ஓங்கினாள். "போடா, நோக்குக் கிடையாது. நீ தான் உன் பங்கைத் தின்னாச்சே!"

"முரளிக்கு நுன்னுன் நொன்னூணு வேணும்!"

"என்ன சர்ச்சை?" எல்லோரும் திரும்பினர், பெரியவரைத் தவிர.

"அப்பா! அப்பா!"—அபிதா, அப்பாமேல் தாவினாள். "நேக்கு ஜாங்லி வாங்கிண்டு வந்திக்கையா?"

அந்தி மங்கல் வந்துவிட்டது. எப்படி இப்படிச் சட்டென வந்தது? கணவனும், மனைவியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். இருவரும் பெரியவரைப் பார்த்தனர். அந்த க்ஷணமே ஆலயமணி, கண கண கண கண கண" வென அடுக்காய் ஒலித்தது. ஜாலரின் அறையல் கொப்புளித்தது. அடுக்கு தீபாரதனை போலும்.

"வழிப்போக்கன். தாகத்துக்கு ஜலம் கேட்கலாமென்று இந்த வீட்டுக்கெதிரே நின்றேன். வீடு பூட்டிக் கிடக்கு. அதற்குள் குழந்தைகள் விளையாட்டில் கவனம் மாறி விட்டது."

Oh, that is alright. G, கதவைத் திறவேன்!"

எல்லோரும் ஊர்வலமாக நுழைந்தனர், பெரியவரைத் தவிர. அவர் வாசற்படிக்கட்டை ஒட்டி எழுப்பிய மேடை ஒன்றில் அமர்ந்துவிட்டார்.

"ஏன், உள்ளே வாங்கோளேன்!"

"இல்லே, இங்கே காற்று ஜிலுஜிலுன்னு இருக்கு"

உடையைக் கழற்றி எறிந்துவிட்டு, லுங்கி உடுத்துக் கொண்டு, வெளியே வந்து எதிர் மேடையில் அமர்ந்தான். உடம்பு, ஆவி கக்கிற்று.

"உஸ், கிரி, காப்பிக்கு வழி இருக்குமா?" என்று கூவினான்.

உள்ளேயிருந்தபடி, கையைச் சிலம்பம் ஆட்டினாள், இல்லையென்று.

"நல்ல வீடய்யா இது. வரது வாரத்துக்கு ஒருநாள். அங்கே, நாயர் கடை டீயை விட்டால் வேறு கதியில்லை. ஊர் ஊராய் ஓடிப்போய் சம்பாதிச்சாலும், நம் வீட்டில் நமக்கு ஒரு முழுங்கு காப்பிக்கு, வாய், முகம் எல்லாம் தீப மங்கல ஜோதி ஆயிடறது"

"புவனா ஆத்துக்குப் போய்ப் பாட்டியைக் கேட்டுப் பால் வாங்கிண்டு வா. கூடவே முரளியை அழைச்சுண்டு போ. ஜே, உங்களுக்கு வேற்றாள் எதிரே நம் அழுக்கை அலசறத்துலே தனிக் குஷி! இல்லையா?"

"பின்னே என்ன, நீ மட்டும் உத்யோகத்துக்குப் போகவில்லை. நானும்தான் வேலை பார்க்கிறேன்—"

தெருவில் ஒன்றும் இரண்டுமாக, வாழைத்தண்டு விளக்குகள் எட்ட எட்ட ஏற்றிக்கொண்டன.

"மல்லி! மல்லி!"—தெருவில் ஒருவன் கையில் மூங்கில் தட்டுடன் அறைகூவிக்கொண்டு போனான்.

கோபுர விளக்கு, பெரிய குங்குமப் பொட்டுப்போல் பிரகாசித்தது.

கிரிஜா, கூஜாவையும் தம்ளரையும் இருவருக்கும் நடுவில் வைத்துவிட்டுப் போனாள். நல்ல தேய்ப்பு. பாத்திரங்கள் பளிச்சிட்டன.

கிழவர், அடுத்தடுத்து இரண்டு தம்ளர் குடித்தார்.

"ஜலம் கடுக்குமே!"—அவனுக்கு வாய் கடுத்தது. 'இந்த வட்டாரத்திலேயே தண்ணீர் சுகமில்லை."

"அவள் கொடுத்தது"

"அவளா? எவள்?"

கிழவர் பதில் பேசவில்லை. அவர் சிரம் லேசாய் கோபுர விளக்கை நோக்கிச் சாய்ந்தது. சொல்லிவைத்தாற்போல் மணிஓசை ஒருமுறை வீச்சிட்டது.

"ஓ!" தன் அசடை மறைக்க எழுந்து வாசல் விளக்கைப் போட்டான்.

அரையில் ஒற்றை வேட்டி. மேலே ஒரு ஒற்றை வேட்டி. வேறு உடமைகள், கைப் பை இருப்பதாகத் தெரியவில்லை.

புவனா, சொம்புடன் உள்ளே சென்றாள்.

ரயில் நிலையத்திலிருந்து மின்சார வண்டி கிளம்புகிறது; அதன் தாளம் வெகுதூரம் கேட்டு எட்டஎட்ட ஓயுமுன் எதிர் வண்டியின் சப்தம் நெருங்குகிறது.

அபிதா, உள்ளிருந்து வாய்க்கும் கைக்கும் ஜாங்கிரியுடன் வருகிறாள். சுவாதீனமாகப் பெரியவர் மடியில் உட்கார்ந்து

கொண்டு, சட்டென்று திரும்பி, அவர் வாயில் ஒரு ஜாங்கிரிக் கொம்பை—சின்னதுதான்—திணிக்கிறாள். அவர் கூட எதிர் பார்த்திருக்கமாட்டார்.

அவள் தகப்பனார் அவளை வியப்புடன் நோக்குகிறான். அபிதா அப்படி சட்டென ஒட்டிக்கொள்ளும் பேர்வழி அல்ல. அவளே கொஞ்சம் லேடி.

''தாத்தா நான் ஜாங்கிரி தந்தேனோன்னோ, நீ சாக்க லேட் தா!''

''உம், என்ன சொல்லணும்? பெரியவாளை நீ என் கிறதா?''—அவள் அப்பன் பல்லைக் கடிக்கிறான்.

''இருக்கட்டும். நாம் எல்லோரும் அவள் குழந்தைகள்''

புவனா உள்ளிருந்து இரண்டு தம்ளர்களுடன் வருகிறாள் பெரியவர் பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

ஒரு முழங்கு உள்ளே போன பிறகுதான் அவனுக்கு உலகம் ரமித்தது.

''ஜீ, ரொம்ப தாங்க்ஸ்''

''அதிலே ஒண்ணும் குறைச்சலில்லே.''

''ஸார், பழக்கமில்லாதவர்கள்—கொடுத்து வைத்தவர் கள். எனக்கு மண்டையிடி பிராணன் போயிடுத்து''

''நானும் ஒரு காலத்தில் முடாக்குடியனாக இருந்தேன்''

''அப்போ ஏன் வேண்டாம் என்கிறீர்கள்?''

''வழிப்போக்கனுக்கு பழக்கங்கள் கட்டுப்படியாகாது. ஒருநாளைக்கு ஒன்று கிடைக்கும்; ஒருநாள் கிடைக்காது. ஒருநாள் வசதியிருக்கும்; ஒருநாள் இருக்காது. வழிப் போக்கன், பழக்கங்களுக்கு லாயக்கில்லை.''

''வழிப்போக்கன் என்றால் என்ன அர்த்தத்தில் சொல் கிறீர்கள்? சன்னியாசியா?''

"நான் சன்னியாசி இல்லை. வழிப்போக்கன் என்றால் வழிப்போக்கின் கால்போன வழி, போய்க்கொண்டிருப்பவன். கால்நடையாக நம்நாடு பார்க்க ஆயுசு போதாது."

"தேசாந்தரியா?"

"அப்படியும் கொள்ளலாம்... அடேடே!"

"என்ன?"

"குழந்தை, மடியை நனைத்துவிட்டாள்"

அவர் சொன்னது உறைக்க அரைக்கணம் சென்றது. உறைத்ததும் அவனுக்குச் சீற்றம் பொங்கிற்று. அடிக்கக் கை ஓங்கிவிட்டான்.

"அவளைத் தொட வேண்டாம்"—குரல் என்னவோ மெத்துத்தான். ஆனால், அதில் ஒரு எஃகை அவன் இப்போது உணர்ந்தான். அவன், அவளைத் தொடமாட்டான். அதையும் உணர்ந்தான்.

"அவள் இதுபோல் இருந்ததில்லை."

"அப்போ இது அவள் விளையாட்டு."

"எவள்?"

"எனக்கு ஒரு அவள்தான் உண்டு. அவளேதான் எல்லாம். நம் அவலத்தை நமக்குச் சுட்டிக்காட்டுகிறாள்."

"என்ன அவலம்?"

"குழந்தையின் ஸர்வ சகஜமான செயலில், சொந்தத்தில் ஏதோ அவமானம் நேர்ந்துவிட்டதாகப் படுத்தாகிறது அல்லவா? தன்மடியில் ஸகஜம், அதுவே பிறர்மடியில் அவமானம். அதுதானே?"

அவனுக்கு நா எழவில்லை. தெருவில் வாழைத்தண்டு விளக்கு ஒன்று சொட்டசொட்டத்தது. ஏதோ கோளாறு. நாக்குத் திரும்பியதும், "வேட்டியை அவிழ்த்துப் போடுங்கள். உடுத்திக்க வேறு தரேன். அவளை அலசச் சொல்றேன்."

""நானே அலசிக்கிறேன். கிணற்றடியைக் காண்பித்தால் போதும்.""

அவரைப் புழைக்கடையில் கொண்டுபோய் விட்டுவிட்டு, சமையலறையுள் நுழைந்தான். அடுப்பில், ரசம் காய்ந்து கமாளித்துக்கொண்டிருந்தது. அவள் ஏதோ யோசனையில் ரஸம் தளைப்பதைப் பார்த்தவண்ணம் நின்றாள்.

அவன், அவள் முதுகைத் தடவினான். ""என்னதான் சொல்லு, உனக்குக் கை வாஸனை இருக்கு—""

சண்டைபாட்டுக்குச் சண்டை; சமாதானம்பாட்டுக்குச் சமாதானம். குடும்பமே வரவர, வயிறு அலம்ப ஒரு கூட்டு ஏற்பாடாப் போச்சு. பால் கணக்கு, அரிசி விலை, எண்ணெய்ச் செலவு உங்களது. மார்க்கெட், சோப்பு, சீப்பு, ஸ்நோ, பவுடர் என்னது. இந்த மாதம் நெய் கிடையாது. நெய் நேத்திரவாயு. குடும்பமா இது? ஆயினும், ஏதேனும் பொய் உற்சாகங்களை மூட்டிக்கொண்டு இன்று போச்சா? நாளை வருகிறதா?

""விருந்தாளிக்கு என்ன பண்ணிப் போடறே?""

""விருந்தாளியா? அவர் சாப்பிடப் போறாரா என்ன?""

""ஏன், அவரை வாசலில் உட்கார வைத்துவிட்டு, என்னைக் கூடத்தில் சாப்பிடச் சொல்கிறாயா?""

""ஏன், அவர் இன்னும் போகவில்லை?""

""உன் பெண்தான் அவரைப் போகவொட்டாமல், அவர் மடியில் காரியம் பண்ணிவிட்டாளே!""

""அதுவே திகைச்சு முழிக்கறது; 'அடக்கமுடியல்லே; எப்ப வந்தது தெரியல்லே'ம்மா என்கிறது""

""அதைவிடு, என் கேள்விக்கு என்ன பதில்?""

""தெரியல்லியே, ஏதோ மத்தியானம் மிச்சம் மீதாரியை வெச்சிண்டு ராப்பொழுதை ஓட்டிடலாம்னு பார்த்தேன்""

"வாஸ்தவம். அவர் வழிப்போக்கன். நான் ராப்பிச்சை. எனக்கு மூலைப் பழையதைப் பிழிந்து வெச்சுடலாம். சமயத்தில் நானே உனக்கு மிச்சப் பண்டம்தான். முடிந்தால், வாழைப் பூ மடலில் குப்பையோடு குப்பையாய் வாரி விடுவாய்—"

"துணியை எங்கே உலர்த்தலாம்?"

கூடத்தில் அவர் குரல் கேட்டு, அவசரமாக வெளியே வந்தான். கூடத்து வெளிச்சத்தில் அவரைக் கண்டதும் பிரமித்து நின்றான்.

துணியைத் தோய்த்த கையுடன் அவரும் குளித்து விட்டிருந்தார். யாக குண்டத்திலிருந்து வெளிப்பட்டாற் போல் மேனி செந்தழலடித்தது. விழியோரம் செவந்திருந்தது. குளித்ததனாலோ! விற்புருவங்களினடியிலிருந்து விழிக்கதிர் அவன் நெஞ்சைத் துருவிற்று. அவன் மார்புள் ஏதோ கணப்பு பரவுவதை உணர்ந்தான். அவன் கைகள் கூப்பின.

வழிப்போக்கன்?

சன்னியாசி?

தேசாந்தரி?

ரிஷி?

அந்த வயதுக்கு உடம்பில் ஒரு துளிச் சதைப் பிசிர்கூட இல்லை. அவருக்கு என்ன வயதிருக்கும்? நிர்ணயிக்க முடிய வில்லை. அவர் கையில் பிடித்திருந்த வேட்டியின் கொசுவத் தின் துல்லியம் அவன் நெஞ்சில் புலுபுலுத்தது. உலர்த்தணும் போல் ஆசையாயிருந்தது.

"இப்படிக் கொடுங்கள், நான் உலர்த்தறேன்."

அவர் பார்வை கூடத்தைச் சுற்றி அலைந்தது.

"பரவாயில்லை, கொடுங்கள். நான் உலர்த்தறேன். என் தகப்பனார் இருந்தால் அவருக்குச் செய்யமாட்டேனா?"

"தகப்பனார் மேல் சபலத்துக்கு வயது தாண்டிப் போச்சுன்னு நினைக்கிறேன். பிள்ளை கை சிசுருஷையை வாங்கிக்க ரெண்டு பேருமே பாக்கியம் பண்ணியிருக்கணும்."

பேசிக்கொண்டே தேடும் அவர் நாட்டம். வாசல் தாண்டியதும் குறுகிய ரேழியில் கட்டியிருக்கும் நைலான் கயிறு மேல் விழுந்துவிட்டது. நிமிஷமாக உலர்த்தி, புட்சமாக வேட்டியை ஒருமுறை தட்டிவிட்டு மீண்டும் படிக்கட்டு மேடையில் அமர்ந்துவிட்டார். இடுப்பு வேட்டி ஈரம். ஆனால் அது இடுப்பிலேயே காய வேண்டியதுதான். அவன் நின்றபடி தன்னை ஒருமுறை பார்த்துக்கொண்டான். எங்கேயோ ரோசமாயிருந்தது. நெஞ்சில் எங்கோ சிலாம்பு உறுத்திற்று.

"ஏன், 43 வயதில் எனக்குத் தகப்பனார் இருக்கப் படாதா?" தனக்குத்தான் முனகிக்கொண்டான். ஆனால், வந்தவர் துடித்து எழுந்தார்.

"அபவாதம்! அபவாதம்! நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. என் தகப்பனார் ஐம்பதுகூட நெருங்க வில்லை. எனக்கு இருபத்திமூணாவது வயதில் காலமாகி விட்டார். என்னுடைய முதல் சம்பளத்தை அவர் கையில் கொடுத்து நமஸ்கரிக்க எனக்குக் கொடுத்துவைக்கவில்லையே என்கிற ஓயாத அரிப்பு, இத்தனை நாள் கழித்தும் என்னை அறியாமல் என்னை ஏதோ ஊறப் பண்ணிவிட்டது. நான் என்ன அர்த்தத்தில் சொல்லியிருந்தாலும் தப்பு தப்புத்தான்! தாயே என்னைப் பொறுத்துக்கோ."

அவருடைய வேதனையைக் கண்டு, அவன் மிரண்டு போனான், "நீங்கள் இந்த அளவுக்குப் பாராட்டும்படி ஒண்ணும் சொல்லிவிடவில்லை."

"இல்லை, அது அப்படியில்லை. இந்த வயசிலும் வாயை அலம்பற நிலையிலிருந்தால் இந்த வயசு இருந்ததற்கு என்ன அர்த்தம்? உசிரோடு எல்லாரும்தான் இருக்கோம். உசிர்

போற வரைக்கும். வாழ்வு என்பது தனி. அதில் வாக்கு லேசுப்பட்டதல்ல. நாக்கு, அம்பாளின் பீடம். நாக்கு நுனியில் அவள் ஆக்ஞாசக்கரத்தில் புவனமே சுத்தறது''

'பூம்' கோவிலில் நகார் முழங்கிற்று. அவனுக்கு உடல் ஜில் விட்டது. நேரங்கள், அவருடைய சொல்பட்டு வேளை களாக மாறிக்கொண்டிருந்தன. இதுவே அவனுக்குப் புது அனுபவம்.

எதிர் மேடையில் உட்கார்ந்துகொண்டான்.

''நீங்கள் ஒன்றும் தவறு சொல்லவில்லை. எனக்கு அப்பா இல்லை'' என்றான்.

அவருக்குக் கேட்டதோ இல்லையோ? சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

''எனக்கு அப்பா இருக்காரோ இல்லையோ? எனக்குப் பத்து வயசிருக்கும், ஊமைக் கனவாயிருக்கு. அப்பா—அம்மா சண்டை. வீட்டை விட்டுப் போய்விட்டார்.''

கிழவர், சிலையடித்த மாதிரியிருந்தார். ஏதேனும் ஜபத்தில் ஆழ்ந்துவிட்டாரோ? அவர் கண்கள் மூடியிருந்தன.

ஆமாம், இதையெல்லாம் இவரிடம் ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறேன்? சொல்லி என்ன ஆகணும்? சொன்னால் என்ன? சொல்லிக்கணும்போல் இருக்கு. கோவிலுக்குப்போய் நாம் முறையிட்டுக் கொள்ளவில்லை? அங்கேயும் கல்தானே! இவராவது உயிருள்ள மனுஷன்.

அப்பா—அம்மா சண்டை எங்கு இல்லை? ஆனால், எங்கள் அம்மா கொஞ்சம் ஸ்பெஷல். நியாயம் உண்மையாக அவள் அறியாள். வாக்குவாதத்தில் வெற்றி எவ்வழியேனும். அது ஒன்றுதான் அவள் குறிக்கோள். அவள் இழைத்த தவறுகள் அவள் அகராதியில் கிடையாது. அத்தனையும் பிறருடையதே—பிள்ளையாகட்டும் புருஷனாகட்டும் அடுத்த வீட்டாராகட்டும் விதியாகட்டும் அது கடவுளே ஆகட்டும்.

சண்டையென்னவோ உப்பு—புளியில்லாத விஷயம்தான். உண்மையில், உப்பு—புளியில்தான் ஆரம்பித்தது. ரஸத்திலோ, குழம்பிலோ இப்போ ஞாபகமில்லை, மறதியாக உப்பை இருமுறை போட்டுவிட்டதோடல்லாமல், தவறு நேர்ந்துவிட்டதையும் ஒப்புக்கொள்ளாமல், அப்பாவுக்குத் தான் நாக்குக் கோளாறு என்று வம்பு செய்தாள். தர்க்கம் முற்றி வம்சாவளியில் பாய்ந்ததும், "உங்கள் அம்மா கையில் இதைவிட உப்பு நீங்கள் தின்று இந்தக் கண்ணாரக் கண்டிருக்கேன்" இதுமாதிரி ஏதோ பேத்தினதும்—

—அவ்வளவுதான் கூடத்தில் நிமிஷம் வெடித்தது. அப்பா, கையை உதறிக்கொண்டு கலத்தைவிட்டு எழுந்தார் —நாங்கள் உட்கார்ந்த இடத்தில், பயத்தில் அப்படியே உறைந்துபோனோம்—கையை அலம்பிக்கொண்டு, பூஜையறையில் காத்ரெஜைத் திறந்து, தனக்கு வேணதை எடுத்துக்கொண்டு—தன் குழந்தைகளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை—சொக்காய்கூடப் போட்டுக்கொள்ளவில்லை, மேல் துண்டோடு வாசற்படியிறங்கினவர்தான். இன்னும் பார்க்கப் போகிறோம்.

எல்லாம் சாயந்திரம் திரும்பி வந்துடுவான்னு நெனைச்சோம். எனக்கு நன்னா இதுமட்டும் நினைப்பிருக்கு. அவருக்குப் பிரியமான வெங்காயத்தூள் பஜ்ஜி போட்டு அம்மா வெச்சிருந்தாள்.

சிங்கம் மாதிரி உத்யோகம். கொள்ளை வசதிகள். இத்தனையும் விட்டு மனுஷன் எங்கே போனான்? எப்படிப் போகத் துணிஞ்சுது? முடிஞ்சுது? கம்பெனி, பத்திரிகையில் விளம்பரம் செய்தது. சல்லடை போட்டுச் சலிச்சுப் பார்த்தாச்சு. பூமி விழுங்கிவிட்டது.

அப்பவும் அம்மாவுக்குத் தன் வாழ்வுக்கு உலை வந்தது பெரிசாகப் படவில்லை. அவளுடைய தோடைக் காணோம் என்று மூணு நாளைக்கு விடாமே அலர்த்தினாளே பாக்கணும்!

இத்தனைக்கும் அவளுடைய தோடு இல்லை. பாட்டியினுடையது. அப்படியே அப்பா எடுத்துச் சென்றிருந்தாலும், அவருடைய தாயாரின் தோடுக்கு, அவருக்கு இல்லாத உரிமை வேறு யாருக்கும் கிடையாது. மற்றப்படி, அம்மா சொந்தம் கொண்டாடும் நகைகள், பண்டங்கள் எல்லாம் அப்படி அப்படியே காத்ரெஜில் இருந்தன. அவைகூட அவர் வாங்கினவைதான்; அவர் பண்ணிப் போட்டவைதான். அம்மா பிறந்த வீட்டிலிருந்து கொட்டிக் குவித்துக்கொண்டு வந்துவிடவில்லை. இதை நாங்களே பொறுமையிழந்து என்றேனும் இடித்துக் காட்ட நேர்ந்தால்...

"ஆமாம் பொண்ணைத்தான் கொடுப்பா. இன்னும் வேறு என்னத்தைக் கொடுப்பா?"

எதற்கும் ஒரு பதிலில் அம்மா கில்லேடி.

திடுதிப்புனு அப்பா போயிட்டாரே ஒழிய யாரையும் நடுத்தெருவில் நிறுத்திவிட்டுப் போகவில்லை. உயிலே எழுதிவிட்டுப் போயிருந்தார். அவர் வழியில், ஆயுசுகட்டை எனும் முன்யோசனையோ என்னவோ? என் தாய்வழியில் ஆயிரம் பிறை பார்த்தவர்கள் இன்னும் இரண்டு மூன்றுபேர்கள் இன்றும் பல்கெட்டியாக இருக்கிறார்கள். ஆகையால், என் அம்மாவுக்கு ஜீன்ஸ் ப்ரகாரம் ஆயுசு கெட்டிதான்.

அப்பா எதையுமே திட்டம் போட்டுச் செய்வார். அது அவருக்குப் பிடிக்கும். அவருடைய சுபாவம். ஆபிசிலும் அவர் மேஜை சுத்தம். ஆபிஸ் சாவிகள், ஆபிசுக்கு ரிஜிஸ்தர் தபாலில் அவர் காணாமல் போன அன்றே வந்து சேர்ந்ததாகப் பின்னால் அறிந்தோம்.

அப்படி ஒன்றும் குறைகூறும்படியும் வைத்துவிட்டுப் போகவில்லை. அப்பா, கைராசிக்காரர், பொன்னன். அப்பவே கணிசமாகச் சேர்த்து வைத்திருந்தார்.

அப்பா, அப்படி ஒன்றும் முன்கோபியுமல்ல. யாருடனும் அதிகம் பேசமாட்டார். அம்மா நேர் எதிர். பேசிப் பேசியே அரித்து எடுத்துவிடுவாள். அவளை அப்பா எப்படி அது வரையே சகித்துக்கொண்டிருந்தார் என்பது நாளாக ஆகப் பெருகிக்கொண்டேயிருக்கும் கேள்விக்குறி. எட்டத்துப் பார்வையில்தான் விளிம்புக்கோடுகள் வெளிப்படுகின்றன. நாளாக ஆக அப்பாவைப் பற்றி நினைக்கையில். அதுவும் ஏனோ தெரியவில்லை ஒரு வாரமா அடிக்கடி நினைப்பில் வருகிறார்; ஏதோ மலைத்தொடரைப் பார்க்கிற மாதிரி யிருக்கிறது. மலைத்தொடர் வளர்ந்துகொண்டே போகிறது. தொடரின் முடிவு எங்கே? தொடரின் மறுபக்கம் என்ன இருக்கும்? நீங்கள் எனக்குச் சொல்வீர்களா?

அவன் குரலில் தவிப்பு தெரிந்தது. லேசாக ஒரு தேம்பல் கூட வெளிப்பட்டதோ?

''சொல்வதற்கு நாம் யார்? நமக்கென்ன தெரியும்? அவள் விளிக்கும் விதம், சமயம், வழி எல்லாமே அவளு டையது. எதுவுமே நம்முடையதல்ல. நாமே நமக்கல்ல என்பதை உணர்வதுகூட அவள் கருணையால்தான் முடியும். அதுகூட நம்மில் இல்லை.''

அபிதா, தூக்கக் கலக்கமாக வெளியே வந்து பெரியவர் மேல் சாய்ந்தாள்.

''சேப்புத் தாத்தா!''—குழந்தையின் அதரங்கள் அவர் மார்க்குலையில் முத்தத்தில் ஒற்றின.

கிழவருக்கு உடல் பூரா அதிர்ந்தது. அப்படியே சொகு ஸாகச் சரிந்து, அவர் மடியில் படுத்துக் காலை நீட்டி, க்ஷணத்தில் உறங்கியும் போய்விட்டாள்.

நேர்ந்த நேரம், அதைச் சொல்லும் நேரம் இல்லை.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த அவனுக்கு மேலும் புழுங்கிற்று.

"எனக்கு ஒரே குழப்பமாயிருக்கு. இத்தனை உரிமையா, என்னவோ பிறந்ததிலிருந்து உங்கள் மடியில் தவழ்ந்து விளையாடின மாதிரி—இது அபிதாதானா? எனக்கு அதிசய மாயிருக்கு. விட்டுச்சொல்றேனே, உங்களைப் பார்த்தால் இப்போ பொறாமையாயிருக்கு."

"பூம் ரொய்ஞ்ஞ்...

மீனம்பாக்கத்திலிருந்து கிளம்பினதோ அல்லது நோக்கி வருகிறதோ—ஆகாய விமான ரீங்காரம் இடத்தை நிறைத்தது. அதன் முன்னணியிலிருந்து குரல் அவனை எட்டிற்று. தணலில் வைத்த கனகன—

"அவள் நம்மை வாத்யமாக வாசிக்கிறாள். அவள் ஸங்கீதேசுவரி—நம் உடம்பின் கணக்கற்ற நரம்புகள், தந்திகள்—நமக்குத்தான் கணக்கற்றவை, ஒவ்வொன்றின் வேர்ச் சுழிகூட—அவள் அறியாவிட்டால், அது அங்கு இல்லை—அவைகளின் ஸ்வரனுஸ்வரஸ் தானங்கள் அவளுடைய மீட்டலில் அதனதன் ஸாயுஜ்யத்துக்குக் காத்துக்கொண்டிருக்கின்றன. அதனதன் தனித்தனித் தாளப்ரமாணங்கள், லயப்ரமாணங்கள் அவளுக்குத்தான் தெரியும். அதனதன் பரமாணிக்கங்களும் அவளுக்குத்தான் சொந்தம். அவள் பண்ணிக்காட்டும் ஸ்ருதிபேதங்கள் நமக்கு அப்பாற்பட்டவை. ஆனால், அவள் ஸ்ருதிஸுத்தமானவள். பிந்து மாலினி. ஸுநாத விநோதினி. அமிர்தவர்ஷணி: லீலா கான லோலி.

நாமங்கள் கம்பீர சாட்டை. அவனுக்குத் தொண்டை வெளியே குதித்துவிடத் தவித்தது.

நாமங்கள், தாம் இறங்க இடம் தெரிந்து தைக்கும் ஏவு கணைகள்.

தகதிமி திமிதக—நெஞ்சை ஏதோ நடனம் மண்ணாய் மிதித்தது.

ஸமகஸஸமகரி நிமகஸ—

அந்தரத் தந்தியில் மந்திரத் தும்புரு.

தந்திர ப்ருகடை

தந்தினத்தனதான.

ஏமேமோ பழக்கமிலா வார்த்தைகள், ஓசைகள். காலம் கடந்த நித்திரை கலந்து அவன் நரம்புகளில் விழித்தெழுந்த மாதிரியிருந்தது.

இவர் என்னை என்ன பண்ணிக்கொண்டிருக்கிறார்? இந்த இன்ப பயங்கரம், இந்த நிலை இன்னும் சற்று நீடித்தால் நானே எனக்கில்லாமல் போய்விடுவேனோ? எனக்கு நான் வேணுமே! என் வீடு, என் கிரிஜா, என் அபிதா என் அம்மா, இந்த மொஸாய்க் தரை, கொல்லைப்புறத்தில் துளசிமாடம், வாழைக்கன்று, தென்னங்கன்று, செம்பருத்தி, மல்லி, வேலிதாண்டி அதை மேயும் ஆடு எல்லாமுந்தான்— நான் சர்வ சாதாரணமானவன். பாமரங்கள்தான் என் படுகை. துறவு எனக்கு வேண்டாம், வேணவே வேண்டாம்—

தன்னைக் கவியும் அழுத்தத்தை, அசுரப்ரயத்னம் தந்த அரக்கபலத்தில் குஹை வாயை மூடிய பாறாங்கல்லைத் தள்ளுவதுபோல் உதறினான். தன்னை அடித்துச்செல்லும் வெள்ளத்தில் கைநழுவும், பாமரங்களின் நினைவுக் கிளையை, கரைப்புல்லை, உயிர்ப்பிடியை மீண்டும் பற்றும் முயற்சியில், பேச்சை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான்.

"ஆச்சு, நாங்களும் வயதுக்கு வந்து அவா அவா அச்சில் விழுந்தாச்சு. தம்பி, பிலாயில் இருக்கிறான். தங்கையைக் கோயமுத்தூரில் கொடுத்திருக்கிறது. அவளுக்கு பிரசவம் பண்ண அம்மா போயிருக்கா. சீடை, முறுக்கு, பருப்புப் பொடி, திரட்டுப்பால்...இல்லையா, இத்யாதிகளுடன்.

அம்மா ஒரு கவலையில்லா மனுஷி! அப்பாவைப்பற்றி அவள் கிணுங்கவேயில்லையே!

"செத்தவா பின்னாலேயே நாமும் போயிடறோமா? உடன்கட்டையேர்ற காலத்திலிருக்கறதா உங்கப்பா நினைச் சுண்டிருக்கா. ஏதோ திமிர்பிடிச்சுத் தன் பொறுப்பெல்லாம்

விட்டுட்டு ஓடிப்போனால் அதுக்கு நான் ஆளா? திரும்பி வராத வரை, அப்பிடி இப்படி ஒண்ணும் தெரியாதவரை என் மஞ்சளுக்கும் பூவுக்கும் பங்கமில்லாமல் போயிடறேன்—

ஸர்வமங்கள மாங்கல்யே
சிவே ஸர்வார்த்த ஸாதகே

அவளுக்குத் தெரிந்த தோத்திரம் அது ஒண்ணுதான். ஒருநாள் தவறாமல் சொல்லிக்கொண்டு குத்துவிளக்கை நமஸ்கரிப்பாள். 'இப்படியும் ஒரு பிறவி உண்டா?' என்று அதிசயிப்பேன். ஆனால், அவளை என்ன செய்யமுடியும்?

"அவளுடைய நாமங்கள், அஸ்திரங்கள் நட்ட வேலி. அதன் பாதுகாப்பை அவளால்கூடத் தாண்டமுடியாது."

பெருமூச்செறிந்தான்.

"எங்களைத்தான் பார்க்கிறீர்கள். நான், இவள், அபிதா. எங்களுக்கு 'லேட் மாரியேஜ்' காரணம்? ஜாதகத்தில் கேட்டை மூட்டை செவ்வாய்க்கிழமை. தோஷத்துக்குத் தோஷப்பொருத்தம் ஒருவரையொருவர் அடைய அப்படித் தேடி அலைஞ்சிருக்கோம். அ—ஹ்—ஹா"—வாய்விட்டுச் சிரித்தான். "நாளாகித்தான் அபிதாவும் பிறந்தாள். அதற்கே எத்தனை தவம், அரசமரம், ராமேசரம். பிள்ளை எதிர்பார்த்தாள்; கிடைத்தது அபிதா. அதுவும் ஏதோ இணங்காத கருவிலிருந்து பிடுங்கியெடுத்த மாதிரி, சிரம ப்ரசவம் அதனால்தான் எனக்கு 43, அபிதா 3, அவளுக்கு முப்பத்திஅஞ்சு—அஹம்—ஆறு—"

"கணக்கெல்லாம் ஒப்பிச்சாச்சா? இனி சாப்பிட வரலாமா?"

"ஓஹோ, ஒட்டுக் கேக்கறையா? உன்னை மறந்தே போச்சு. நல்லவேளை, ஞாபகப்படுத்தினே. வயிற்றில் குழி விழுந்த மாதிரி ஒரே பசி. ஸார் எழுந்திருக்கிறேளா?"

"ராச்சாப்பாடு எனக்குக் கிடையாது."

"என்ன ஸார், என் வீட்டில் கை நனைக்கக்கூடாதுன்னு கங்கணமா?"

அவளுக்குக்கூட என்னவோ மாதிரியிருந்தது. புதுசா கத்திரிக்காய்ப் பொரிச்ச குழம்பு பண்ணியிருக்கேன். எழுந் திருங்கோ—இல்லை, ஒரு கிண்ணத்தில் ஸ்பூன் போட்டு—

கிழவர் புன்னகை புரிந்தார். வேறு பதில் பேசவில்லை. அவளுக்கு எரிச்சலாக வந்தது. வெடுக்கென்று அவர் மடியி லிருந்து பிடுங்குவதுபோல் குழந்தையைத் தூக்கித் தோளில் சாய்த்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

இன்று ராத் தங்க ஒழுங்கையில் இடம் கொடுத்தால் போதும். பாய், படுக்கை எதுவும் வேண்டாம். பழக்க மில்லை. வாசற்கதவைப் பூட்ட வேண்டாம் ஓரிருமுறை இரவில் எழுந்திருக்க நேரிடலாம்.

ஆனால், ஜல உபாதைக்கு இருமுறை அவன்தான் எழுந் தான். முதல் தடவை அவர் மல்லாந்து நன்கு உறங்கிக் கொண்டிருந்தார்.

இரண்டாம் முறை, அவன் வாசலுக்கு வந்தபோது அவர் இல்லை.

வீல் என்று அலறல் கேட்டு, கிரிஜா அலறிப்புடைத் தாள். மூவரும் கூடத்தில்தான் மின்விசிறி அடியில் படுக்கை. நன்கு விடிந்திருந்தது.

வாசலைப் பார்த்த கூடத்து ஜன்னலை அவன் சுட்டிக் காண்பித்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு வாய் ஏதோ குழறிற்று. அவன் விழிவட்டங் கள் போன வழி அவள் பார்வை சென்றது.

ஜன்னல் சுவர்க்கட்டையில் ஒரு சாக்கலேட்.

ஒரு ஜோடி சிவப்புக்கல் தோடுகள் சிரித்துக்கொண்டு இருந்தன.

# நேசம்

தொடையில் புல்லாங்குழலைத் தட்டியபடி, பையன், உள்ளே நுழைந்தான்.

அப்பா பேப்பர் படித்துக்கொண்டிருந்தார்.

அம்மா தையல் மெஷினை ஆட்டிக்கொண்டிருந்தாள். 'கொடக் கொடக்'—

தாத்தா, ஜன்னலுக்கு வெளியே, செடியில், பெருமையாக ஆடிக்கொண்டிருந்த ஒற்றைச் செம்பருத்திப் பூவைச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

"நான் இன்னிக்கு ஒரு பாம்பு பார்த்தேனே!" பையன் பொதுவாகக் கூடத்தில் தாயம் உருட்டிவிட்டான். ஆனால் யாரும் எடுக்கவில்லை.

"நான் இன்னிக்கு ஒரு பாம்பு பார்த்தேனே!" என்றான் மறுபடியும். மாலை மஞ்சள் வெயில், அவன் தலையைத் தங்க ப்ரபையாக்கிற்று. குரலில் இளநீர் விதிர்விதிர்த்தது. பேச்சிலேயே ஒரு மழலைக் கொழகொழப்பு.

"ஆ!" என்றார் அப்பா. அவர் கைகளிடையே, பொறுமையிழந்து, பேப்பர் மொடமொடத்தது. இந்த ஃபாக்லண்ட்ஸ் விவகாரம்—பசங்க சண்டை போடறான்களா? கோலாட்டம் போடறான்களா?

தாத்தா அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்.

''தாத்தா, நான் ஒரு பாம்பு பாத்தேனே!'' ஓடத்தின் உள்வளைவு போல் குரல் தோய்ந்து மேல் ஏறிற்று.

அம்மா, அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தாள்: ''என்னடா சொல்றே, பாம்பா? ஐயோ, கடிச்சுடுத்தா? சொல்லேண்டா!''

''அடாடா, என்ன நடிப்பு! என்ன நடிப்பு! சந்திரமதி தோத்தாள் போ!'' பேப்பர் பின்னிருந்து.

''உங்களுக்கென்ன இந்த சுடுகாட்டில் வெச்சுட்டு ஆபீசுக்குப் போயிடறேள்! அடிச்சுப் போட்டால் கூட கேட்க ஆள் கிடையாது! கரையான், தவளை, நண்டு, தேள்—பாம்பு ஒண்ணுதான் குறைச்சலா இருந்தது.

''ஆரம்பிச்சாச்சா?''

''நான் சொல்றேன், பேசாமே இங்கேயே ஒரு மரத்தடியில் என்னை உசிரோடே பொசுக்கிடுங்கோ.'' குரல் பலப்பம்போல் கிறீச்சிட்டுக்கொண்டே போய் உச்சத்தில் 'பட்'டென்று உடைந்தது.

ஹிஸ்டீரியா கேஸ். பேச்சைக் கொடுத்தால் மாட்டின்டேன். பேப்பர் தன்னை இன்னும் உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டது. தெரிஞ்சு பேசறாளா? தெரியாமல் பேசறாளா? ஸிட்டிக்குள்ளே ஒரு ரூமும் தாழ்வாரமும், அதனுள்ளேயே இதர வாணவேடிக்கை—300 ரூபாய் கேக்கறான். தவிர அட்வான்ஸ் மூணு கழியிலே மூணு. எங்கே போறது? அதுக்கே ஊசிகுத்த இடமில்லை.

இவா நாய்ச்சண்டைக்கு சாட்சி வைக்கத்தான் ஊரிலிருந்து என்னை வரவழைச்சானா? ஒரு பிள்ளைன்னா சொன்னபடி ஆடியாகனுமா? நம் மரியாதையை நாம் காப்பாத்திக்கணும்னா, நாம் தூரத்துப் பச்சையா இருந்துடணும். வளரும் பச்சைக்கு நல்ல சூழ்நிலையப்பா இது!

''இங்கே வாடா பையா, என்கிட்டே சொல்லு!''

பையன் உற்சாகத்துடன் வந்தான். அவன் பேச்சு இங்கே எடுக்கும்.

''என் மடியிலே உக்காந்துக்கோ. ஏலே, லேசா! நல்ல கெட்டிதாண்டா நீ! பார்த்தால் சித்துளியாட்டம் இருக்கே!''

வேகமாகச் சாய்ந்துகொண்டிருந்த சூரிய தூலத்தை இலேசகேடாக வாங்கிக்கொண்ட கோணத்தில் அவன் விழிகளில் ஒரு தகதகப்பு வீசிற்று. லேசாகக் கொடுக்கு தூக்கின மூக்கு நுனி, முக்கோணத்தில் மடித்த பீடாப் போல், அந்த மோவாய்க் கூர், கன்னத்தில் இன்னும் கொஞ்சம் சதை பிடிச்சால் அவளேதான் அச்சு. பருப்பும் நெய்யும் இன்னும் ரெண்டு பிடி கூடப் பிசைஞ்சாகணும். ஆனால் இவா என்ன செய்வா? இவா பாடே தினம் குழம்பத் தானாயிருக்கு! நமக்கேன் பாடு? ''எங்கே பார்த்தே?''

''தாத்தா! தாத்தா!'' மடியில் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டான். ''இங்கேருந்து இப்டீ நடந்து நேரே போனோமா? ரொம்ப தூரம் போனா, அங்கே ஒரு பெரிய இடம் இருக்கும். நானே கண்டுபிடிச்சேன் தாத்தா! இர்ருமாதிரி இன்னும் ரெண்டு மூணு கண்டுபிடிச்சு வெச்சிருக்கேன்! நேக்கு மட்டும்தான் தெரியும். இந்த இடம் போய் முனை கூரிச்சுக்கும். நெண்டு ஸைடும் ஒரு பக்கம் பள்ளம், ஒரு பக்கம் பாறாங்கல் பெரிஸ்ஸூம் சின்னதுமா நிறையக் கிடக்கு.''

''ஆ!''

''அங்கே நடந்தால், காலுக்கடியில் சரக் சரக், ரொம்ப தமாஷ்! நிறைய பிள்ளையார் கண் வாரி இறைஞ்சு கிடக்கு. ஒரே கண்மணியா கொட்டிக்கிடக்கு! அங்கே மானம் மிதக்கிறது, கைக்கு எட்டற மாதிரி.''

''தொட்டையா?''

"எட்டமாட்டேன்கறது தாத்தா! தொட்டனால், ஒரு கதவு திறந்தால், பாட்டி வாசற்படியிலே நிற்கமாட்டா? என்ன தாத்தா முழிக்கிறே கோவமா? நீங்கதானே சொன்னேள், பாட்டி மானத்துக்குப் போயிட்டான்னு!"

தாத்தா மூக்கைப் பலமாக உறிஞ்சிக்கொண்டார். "கோவமில்லே சொல்லிண்டு போ" அவர் முகம் திடீரென மிக்கச் செவேல், கழுத்து, பிடரி வரை.

"அங்கே ஒரு முள்ளு மரம் ஒத்தையா நிக்கும். அதன் கீழே உக்காந்துண்டுதான் நான் வாசிப்பேன்."

"பாடமா?"

"அட போ தாத்தா! புல்லாங்குழல்!" அவர் முகத் தெதிரே அதை ஆட்டினான்.

"ஏது இது?"

"தொல்ல மறந்துத்தேனே! பத்து நாளைக்கு முன்னாலே அதே மரத்தடியிலே கிடந்தது."

"உனக்கு முன்னாலேயே வாசிக்கத் தெரியுமா? யார் கத்துக் கொடுத்தா?"

"நானேதான்."

"ஒஹ்ஹோ! மாலி!" பேப்பர் பின்னாலிருந்து.

"மொதல்லே வயித்தை உப்பி 'தம்' புடிச்சி ஊதி ஊதி முடியல்லே. சத்தமேவல்லே. அப்புறம் அலுத்துப்போய் ஒரு பெருமூச்சு அதுலேபட்டு உள்ளேருந்து கொஞ்சிண்டு ஒரு குரல் வந்தது. பாருங்கோ ஓ! அப்படியா சமாச்சாரம்னு தெரிஞ்சுடுத்து. உப்பி உப்பி ஊதக்கூடாது. ஸன்னமா ஊதனும். குட்டி குட்டியா குருவி குருவியா சத்தம் தாத்தா. தாத்தா, சத்தம் இந்த எட்டு ஓட்டைக்குள்ளும் கூடு கட்டி யிருக்குமா? அப்பப்போ இரைதேடப் பறந்துபோயிடுமா?

அப்பப்போ திரும்பி வருமா? இதனுள்ளே அதனிஷ்டத்துக்கு இருக்கும்போல் இருக்கு. ஒரு குருவியே உள்ளே ஓடி ஓடி விளையாடறதா? தனித்தனியா எட்டு குருவியா?''

இவன் இங்கே ஏன் தப்பிப் பிறந்தான்?

''விரலாலே தடவிக்கொடுத்தால் முதுகை நெளிஞ்சு கொடுக்கறது தாத்தா! பிரியமாயிருக்கு தாத்தா? ஆனால் கண்ணுக்கு ஏன் தெரியமாட்டேன்கறது? பட்சியிலே இப்படி ஒரு ஜாதியா தாத்தா?''

தாத்தா பாட ஆரம்பித்துவிட்டார்.

''வானத்தில் ஒரு மயிலாடக் கண்டேன்.
மயிலும் குயிலாச்சுதடி''

சாரீரத்தின் வெண்கல நாதத்தில், கூடத்துள் திரண்டு இறங்கிக்கொண்டிருக்கும் மாலையிருள். திரை மடிகள் அசைந்தன. சுவர் மூலைகளில், கட்டிலுக்கடியில், சுவருக்கும் சுவாமி படங்களுக்கும் இடைவெளியில் கூரையின் விட்டங் களில்... இருள் அலைகள் சுருண்டு வந்து பந்தாக...

'குக்கடா கடகடா கக்கடா.''

இந்த நேரத்துக்கே காத்திருந்தாற்போல் இதென்ன சத்தம்? பட்சியா, பூச்சியா, வேறேதேனும் ஜந்துவா?

வானமாதேவி தன் கூந்தலை அவிழ்த்துவிட்டாற்போல, கறுக்கலில் ஒரு பளபளப்பு, மெருகு ஏற ஆரம்பித்துவிட்டது. அவிழ்ந்த கூந்தலில் பூக்களென மீன்கள் கொத்தாயும் தனி யாகவும் சுடர்விட்டன. நேரத்தில் ஒரு நறுமணம் அமானுஷ்யம், இன்ப அபாயம், ரகஸ்யத்தின் மலர்ச்சி—

பையனுடைய விரல் நுனிகளடியில் புல்லாங்குழலி லிருந்து குருவி மூக்குகள் செல்லமாகக் கொத்தின.

''வாசிச்சுண்டிருந்தேனா? அப்போ தாத்தா, பாறாங்கல் பின்னாலிருந்து தலை எட்டிப் பார்த்தது. நீண்டுண்டே வந்தது. நன்னா நீளமாயிடுத்து. தெருவிலே வேடிக்கை

காட்டறாளே முதுகுலே படார் படார்னு தன்னையே அடிச்சுண்டு அந்த ஜாட்டியாட்டாம், தடியா நீளமா, அது வெள்ளை, இது அட்டக்கரி.''

''உனக்குப் பயமில்லையா?''

''வாசிச்சுண்டேயிருந்தேன் தாத்தா நாக்கு சுளுக்கிண்ட மாதிரி வலிச்சது. ஆனால் நிறுத்திட்டேன்னா என்னமாணும் பண்ணுமோன்னுதானிருந்தது. கேக்க வந்திருக்கே! அதோ அம்மா இருக்காளே, அந்த தூரத்துலே அது இருந்தது: நின்னுடுத்து. ஒண்ணும் பண்ணல்லே. நாங்க பேசிண்டோமே தாத்தா!''

'பேசிண்டீர்களா, என்ன பேசினீர்கள்?' என்று கேட்கப் பயமாயிருந்தது. பையன் தொட்டிருக்கும் கட்டம் அப்படி.

அவன் சொல்லில் அவனுக்கு எள்ளளவுகூட சந்தேகமற்ற நேரம்.

காண்பதெல்லாம் அதன் சத்யத்தை வெளிப்படுத்தும் நேரம்.

இதயம் அதன் கமலம் விரியும் சமயம்.

முத்துச்சிப்பி, காத்திருந்த மழைத்துளியை, வயிற்றுள் வாங்கிக்கொண்டு வாய்மூடும் தருணம்.

யட்சதேவன் புஷ்பத்துள் புகுந்துகொண்டதும், பூவின் இதழ்கள் குமிழும் நேரம்.

ஸர்வே ஜனோஸுகினோ பவந்து: ஸர்வம் ப்ரேம மயம்; ப்ரம்மம், த்யானம் கலைந்து.

புவனத்துக்கு ஆசியில் அபயஹஸ்த முகூர்த்தம்.

''என்ன பேசிண்டேளோ?'' அவருக்குக் கேட்கத் தைரியமில்லை. கேள்வி மூச்சாகத்தான் வந்தது.

''சொல்லத் தெரியல்லே தாத்தா!'' செடியினின்று காம்பு கழன்றுகொண்டிருக்கும் பூப்போல் அவன் கரம் துவித்தது.

ஆனால் எங்களுக்குள் ஒரு நேசம்—என்ன தாத்தா உங்களுக்குத் தூக்கிப் போடறது?''

''என்ன சொன்னே?''

''நேசம்—சினேகம், ஃப்ரண்ட்ஸ்—பாடப் புஸ்தகத்தில் வந்திருக்கு தாத்தா!''

''சரி, அப்புறம்.''

''அப்புறம் ஒண்ணும் இல்லை. கொஞ்சநேரம்தான். தானாவே வந்தவழியே போயிடுத்து. நாக்கை நீட்டி நீட்டி... அதுக்கு ஏன் நாக்கு கிழிஞ்சிருக்கு?''

தாத்தா ஏதும் பதில் பேசவில்லை. 'தாத்தா! தாத்தா!' இல்லை. அவர் பதில் பேசமாட்டார் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. அவன், அவர் மடியிலிருந்து இறங்கினான். நேரம் அதன் பிறகு கலைந்துவிட்டது.

தள்ளாடித் தள்ளாடி மாடிப்படி ஏறினான், சின்னப் பசங்க ஸ்டைல். மாடியில், ஒரு ஒதுக்கம் இருந்தது. அறையு மில்லை தடுப்புமில்லை. மொட்டை மாடிக்கு வாசற்படி தாண்டுமுன் ஒரு அகல, பெரிய வாசற்படி என்று சொல்ல லாம். நவராத்திரி கொலுப்பெட்டி, வேண்டாத கண்டான் முண்டான், காதறுத்தானுக்கு இடம் ஆனால் அது அவன் இடம். தனியிடம் யாரும் வரமாட்டார்கள்.

பெரியவருக்குத் தூக்கம் வரவில்லை. வெகுநேரம் படுக்கையில் புரண்டு பார்த்துவிட்டு, எழுந்து, கூடத்தில் உலவினார். மீண்டும் படுக்கையில் உட்கார்ந்தார். இருப்பு கொள்ளவில்லை.

''அடியே நேசம், மோசம் பண்ணியேடி!''

ஸ்பரிசம் உறுதுணை. அதற்கு வயது கிடையாது. அம்மா தாலியைத் தொட்டுக் கொண்டு பால் குடிக்கும் குழவியி லிருந்து ஆண்டவன் அப்படி ஒரு வேடிக்கை காட்டுகிறான்!

அதுவும் இந்த வயசில் எங்களைச் சதையாகப் பார்க்கும் கண்களில்தான் காமம். எல்லாத்துக்கும் அதனதன் வயசு, காலம் இல்லையா? பெத்ததும் குறைச்சல் இல்லை. ஆனால் மிச்சம் ஒண்ணுதான்! அதுவும் சுவாரஸ்யமில்லை. வெளிக்குக் காட்டிக்கொள்ள முடியாவிட்டாலும் நம்மை நாம் ஏமாற்றிக் கொள்ளமுடியுமா?

ஆக மொத்தம் எல்லாம் வந்து, போய் நிகரமிச்சம் மாட்டுக்கொட்டாயில் மாடுகூட இல்லை. கொல்லையோரம் ரெண்டு தென்னை, அதில் ஒண்ணு மலடு. இன்னொண்ணுக்கு மூக்கில் வேர்த்து, முகம் தெரியாப் பங்காளி வந்துடறான். ராத்ரி பங்காளி.

கிணற்றில் கற்கண்டு மாதிரி ஜலம். தாகத்துக்கு அக்ர ஹாரமே இங்கேதான் மொள்ளறது. வேலியோரம் அரச மரத்தடியில் பாம்புப் புத்து: பாம்பை யாரும் பார்த்த தில்லை. ஆனால் புற்றுக்குப் 'பால் ஊத்தறவாளும் பிள்ளை வரம் வேண்டிக்கறவாளும் குறைச்சலில்லை. மிஞ்சினது இதுதான். இதில் 'நீ எனக்கு, உனக்கு நான்' தவிர நமக்கு என்ன இருக்கு? ஆனால் அதிலும் வேளை கண்ணைப் போட்டுடுத்தேடி!

துளசி மாடத்துக்கு விளக்கு வைக்கப் போனவள், 'காலில் சுருக்குன்னுது, கல்லா முள்ளா?' கேள்வியிலேயே உனக்கு வாய் குழறிடுத்து. எனக்கு ஜாடை காட்டி என் மடியில் தலைவெச்சுப் படுத்து, கண்ணை மூடி காலை நீட்டினவள் அப்படியே நீளமாகவும் ஆயிட்டே. அடிநேசம், பாவி என்னை நாசமாக்கிட்டையேடி!

அடக்க முயன்ற அழுகை, விக்கல்களாக மாறி உடலைப் பூகம்பமாக உலுக்கிற்று.

அடி நேசம், உன் ஆவி இறக்கையடிச்சுண்டு, நேரே ஸர்வேசுவரனிடமே போயிடுத்தோ என்னவோ, அதனால்

உனக்குத் தெரியாதோ என்னவோ, கொள்ளி நான்தான் போட்டேண்டி! ஸன்னதித் தெருவில் கோவிலுக்கு மூணாவது வீடு நம்மது. பிள்ளை ஊரிலிருந்து வரவரை சுவாமி இன்னும் எத்தனை வேளை பட்டினி போட முடியும்? புழுங்கிப் புழுங்கிச் சாகாமல் சாகறேண்டி, பாவி!

இங்கே நான் வரதுக்கு உண்மைக் காரணம் வேறு. முள்ளாம், கல்லாம், உன்னை என்னிடமிருந்து எது பிடுங் கிண்டுப் போச்சுங்கறதுக்கு மை போட்டுப் பார்க்கணுமா? ஒருநாள், ராத்ரி பூரா உன்னை நெனச்சு நெனச்சு விடிகாலை வெறிபிடிச்சவனாயிட்டேன். கடப்பாறையை எடுத்துண்டு ஓடிப்போயி புற்றை இடிச்சுத் தள்ளினேன். உள்ளே ஒண்ணும் இல்லை. இடம் மாறிடுத்தோ, இல்லை எப்பவுமே இல்லைதானோ?

காரியம் முடிஞ்சதும் எனக்குத் 'திக்பக்கு' ஆயிடுத்து. ஊருக்குப் பதில் சொல்லியாகணும். தற்செயலாக அன்னி மத்தியானம் இவனிடமிருந்து எழுத்து வந்ததும் ராத்ரியே வண்டி ஏறிவிட்டேன். நேற்று உனக்கு நாலாவது மாஸியமடி—

திடீரெனத் தாழம்பூ மணம் கிளம்பிற்று. ஜன்னல் வழி எட்டிப்பார்த்தார். நிலா பட்டை வீறிட்டுக் கொண்டிருந்தது செம்பருத்தம் செடியடியில் சலசல—தான் தனியாக இல்லை என்னும் உணர்வு. அதன் நடமாட்டம் இருந்தால்தான் இது மாதிரிக்கு பீர் வாஸம்—பழி வாங்கணும்னா எங்கிருந்தாலும் வந்துடுமாமே! அதோ அதோ, சீறல் சத்தம் ஏதேனும் கேட்டுதோ? பிடரி குடைக்கம்பிபோல் விறைத்தது. நேசம் நேசம், என்னடி நடக்கிறது. சொல்லேண்டி!

அவள் முகத்தை நிலாவிடம் தேடி அவர் முகம் பதிலுக்குத் தவித்தது. சந்திரன் வெற்றிகரமாக மேகங்களை சவாரி செய்துகொண்டிருந்தது.

மறுநாள் காலை, தகப்பனும் பிள்ளையும் சந்தித்ததுமே அவர்: ''இன்னி ராத்ரி நான் ஊருக்குப் புறப்படறேன், புறப்பட்டாகணும்''

பிள்ளை வியப்புடன் அவரை நோக்கினான். 'என்னப்பா வந்து இன்னும் ஒருவாரம் முழுசா ஆகல்லே. அதுக்குள்ளே...

'இல்லை எனக்குப் பிராயச்சித்தம் அங்கேதான் இருக்கு'

அவன் திகைப்பு அதிகரித்தது. ''என்ன பிராயச்சித்தம், எதுக்குப் பிராயச்சித்தம்? எனக்கு ஒண்ணுமே புரியல்லியே!''

அவர் குரல் அமைதியாகவும், பதில் தீர்க்கமாகவும் வந்தன.

''உனக்குப் புரியாது.''

# கறந்த பால்

அண்ணா சதுக்கம் வந்ததும் எனக்குக் கால்கெஞ்சல் தாங்கமுடியவில்லை. ஸான்தோமிலிருந்து நடக்கிறோம்.

''ஸ்ரீகாந்த், இங்கே உள்ளே போய் மணலில் உட்காருவோம்.''

புன்னகை புரிந்தான். ''கோட்டை வரை போவதாக அல்லவா நம் ப்ளான்?''

''இப்போ என்னால் முடியல்லே. என்ன சொல்றே?'' எனக்கு எரிச்சலாக வந்தது. ''நான் கிழவனில்லை. நீ வயசுப் பிள்ளை. குவாயிட்டுக்கே நடந்து போயிடுவே.''

அவன் முகம் லேசாகக் கறுத்தது.

''நான் மட்டும் நடந்துட்டு வரேன். நீங்கள் இங்கேயே இருங்கோ.''

''நோ. நீயும் என்னோடு வா.'' வயதானவர்களுக்கு இளைஞர்களைத் துன்புறுத்துவதில் ஒரு மகிழ்ச்சி என்று அந்தக் கூட்டம் வாதிக்கும். சரி, அது எங்கள் வயதின் நியாயம்.

மூச்சைப் பிடித்துக்கொண்டு சென்று கரையோரம் ஒரு மடகின் அடியில் துண்டை விரித்துப் படுத்துவிட்டேன்.

எல்லாம் மௌனாதான். ஆனால் இங்கு ஜன நட மாட்டம் சற்று மட்டுத்தான். காற்றின் தன்மை இமைகளின் மேல் திண்ணமாய்த் தெரிந்தது. விழிகள் களைப்பின் சுகத்தில் செருகின. வானீலமும், அலைகளுக்கப்பால் கடல் விளிம்பும் அமைதியில் இழைந்தன. என் அரைக்கண்ணில் ஸ்ரீகாந்த் என் அருகே உட்கார்ந்தபடி மணலை அளைந்து கொண்டிருந்தான். அவரவர் சிந்தனையில் அவரவர். ஸ்ரீகாந்துக்குக் கொஞ்சம் மந்த முகம் என்று என் அபிப் பிராயம்.

அவன் அம்மை அவனைக் கறந்த பால் என்கிறான். அவ்வளவு வெள்ளை மனசாம். பிள்ளைகள் ஒவ்வொருத் தனையும் அப்படித்தான் சொல்லிக்கொண்டிருந்தாள். ஒரு அண்ணன் டாட்டாவில் வேலை பார்க்கிறான். மற்றவன் எச்.எம்.டி. இரண்டு பேரும் நல்ல சம்பளம் வாங்குகிறார் கள். ஆனால் இரண்டு பேருக்கும் போதவில்லை. இல்லைப் பாட்டு மன்னர்கள் அவனவனுக்கு அவனவன் குடும்பம். அந்தத் தத்தளிப்பில் தகப்பனாவது, தாயாவது. தம்பி யாவது? பாவம், அவள்தான் அங்கலாய்ப்பாள் சில சமயங் களில். ஆனால் வேர்கள் விட்டுப் போய்விடுகின்றனவே!''

''மாமா! முறுக்கு வாங்கிக்கறேளா?''

எனக்குச் சிந்தனை கலைந்தது. அரை நினைவு சுகம் கலைந்தது. எரிச்சலாக வந்தது. ஆனால் என் நெற்றிக் கண்ணெதிரே நின்ற தோற்றத்தைக் கண்டதும் அடைந்த வியப்பில் எழுந்து உட்கார்ந்தேன். ஒரு தகர டப்பாவை இடுப்பில் இடுக்கிக்கொண்டு நின்றாள். ஒரு அலுமினியத் தூக்கு. ஒரு பெரியவர் அவள் அருகே நின்றார். என் வயதிருக்கும். முகத்தில் லேசான ஒரு அசட்டுச் சிரிப்பு. உறைந்துபோன சிரிப்பு.

முந்தாநேற்று ஒரு கலியாணப் பரிசு வாங்க மவுண்ட் ரோடு போயிருந்தேன். என்னென்னவோ கடையில் வைத் திருக்கிறான். என்னால் முடியுமா? ஏதேதோ கண்டான்

முண்டான்களுடன் சுண்டு விரல் நீளத்துக்கு ஒரு லக்ஷ்மி விக்ரஹம் அலட்சியமாகக் கிடந்தது. அதில் தொங்கும் Tag-ஐக் கவனிக்காமலே எடுத்து என்ன விலை என்று கேட்டேன்.

ரூ.1825. எஸ்.டி.தனி.

இப்போதெல்லாம் எங்குமே, யார் முகத்திலும் ஒரு கேலி நகை மிளிர்கிறது. ரெண்டு கன்னத்திலும் அறைகிற அறையில் அதை எடுத்துவிட்டால், வாழ்க்கையில் பாதி விடிவு உலகத்துக்கே கிடைத்துவிடும்.

—ஆனால் இந்த விக்ரஹம் ஏன் முறுக்கு விற்கிறது?

''மாமா, ஆத்திலேயே பண்ணினது. கைமுறுக்கு. நாலு சுத்து.''

ஆளுக்கு ரெண்டு வாங்கினேன். பரவாயில்லை. டால்டா வாசனை லேசா.

''மாமா, ஆத்துக்கு ஒரு பொட்டலம்? கட்டட்டுமா? எத்தனை?''

ஆள் கில்லேடிதான்.

''ஒரு நாலஞ்சு கட்டேன். இங்கே இன்னும் ரெண்டு கொடு.''

அவளுக்கு உற்சாகம் வந்துவிட்டது. டின்னைக் கீழே இறக்கினாள். முகம் இன்னும் அழகிட்டது. இவள் பேசாமல் சினிமாவில் சேர்ந்தால் நடுப்பகலில் இவள் தனியாக ரோடில் நடக்க லாயக்கில்லை. ரெண்டு ரௌடிகள் திடும் என வந்து ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் அள்ளிப்போட்டுக் கொண்டு... அப்புறம் நாலு நாளோ, ஒரு வாரமோ கழித்து கோயமுத்தூரிலோ, ஜப்பல்பூரிலோ...நாளிருக்கும் கொடுமையை நினைக்கவே பயமாயிருக்கிறது.

''ஸார், ரெண்டு பொட்டலம் சுண்டல் வாங்கிக்கறேளா? சூடாயிருக்கு.''

இப்போதுதான் அவர் முகத்தை ஊன்றிக் கவனித்தேன். குரல் எங்கோ கேட்ட மாதிரி, மண்டையோட்டுக்குள் தேன் கூட்டுள் லட்சோப லட்ச அறைகளுள் எதோ ஒரு அறையில் மணி அடித்தது. என்னையும் அறியாது நெற்றிப்பொட்டைத் தேய்த்துக் கொண்டேன்.

"நீங்கள்—நீங்கள்—தீர்த்தராமன் இல்லையோ?"

அவர் முகம் மிரண்டு—உள்வாங்கிற்று.

"ஸார் யார்?"

"என்னைத் தெரியல்லியா? மீர்சாப்பேட்டை—பெசன்ட் ரோடு. உங்கள் வீட்டு எண் 13. நான் எதிர் வீடு—87. நான் யக்ஞராமன். நீங்கள் தீர்த்தராமன். அதுவே நம் குடும்பங்களுக்கிடையே வேடிக்கைப் பேச்சில்லையா? அப்போ இவள் பங்கஜம் இல்லையா?"

ஏன் மனுஷன் முகத்தில் அடையாளத்தின் சந்தோஷம் இல்லை? சந்தோஷம் போகட்டும்; ஏன் அடையாளம்கூட இல்லை?

அவள் ஏற்கெனவே கோதுமையின் பொன்னிறம். முகம் இப்போ தகதகத்தது.

என் திகைப்புக்குச் சமாதானமாக, "அப்பாவுக்குக் கண் தெரியாது. ஒரு கண் ஆபரேஷன் பண்ணி ரெண்டு கண்ணும் போயிடுத்து" என்றாள்.

இப்போ புரிந்தது அந்த உறைந்த புன்னகை. உறைவின் அசடு. ஆம்; அப்பவே கூழாங்கல் கண்ணாடி.

"சரி பங்கஜம், போவோமா?"

எனக்கு 'சுருக்'கென்றது. "தீர்த்தராமன், நம் சந்திப்பு உங்களுக்குப் பிடிக்கவில்லை."

"சரிஞ்சபின் தெரிஞ்சவா கண்ணில்பட கஷ்டமாத் தானிருக்கு."

"நீங்கள் சொல்றது எனக்குப் புரியறது. ஆனால் என்னைப்பற்றி நீங்கள் அப்படி நினைக்கக்கூடாதுன்னு நான் கேட்டுக்கத்தான் முடியும். நம் குடும்பங்கள் அப்படியா இருந்தோம்? உங்களைப் பார்த்தேன் என்று இன்றுபோய் வீட்டில் சொன்னால் அவள் அப்படி சந்தோஷப்படுவாள். ஏன் விலாசம் விசாரிக்கலேன்னு கோவிப்பாள். மங்களம் எப்படியிருக்காள்?"

"சாமி எழுந்திருங்க."

—நாலு மீனவர்கள்—திடும் என—நாங்கள் நகரும் வரை கூடக் காத்திருக்கமாட்டார்கள் போல இருக்க...அப்போது தான் மீண்டுகொண்டிருக்கும் ஒரு அலைமேல் நாலுபேரும் படகை வாகாய்த் தள்ளி, அலைபாய்ந்து, அலைதாண்டி, ஏறி உட்கார்ந்துகொண்டு நிமிஷமா தூரமாப் போயும் விட்டான்கள். ராப்பூரா மீன் பிடிப்பார்கள். விடியற்காலை யிலோ அல்லது எப்போது மீள்கிறார்களோ—மீண்டால்தான் மீட்சி.

என்னை அறியாமலே என் பிள்ளைமேல் என் பார்வை சென்றது. இன்னும் ஒரு வாரமோ, பத்து நாளோ குவாயிட் போக இருக்கிறான். இங்கே வேலை வாய்ப்பு இல்லை. குறைந்தது அஞ்சு வருட ஒப்பந்தத்தில் போனால், திரும்பி வரும்போது வயது 33 ஆகிவிடும். எப்படி வருவானோ? அஞ்சு வருடங்களில் என்ன வேண்டுமானாலும் நேரலாம். சிறகு முளைத்தவுடனேயே கூட்டைப் பிரிக்கும் பட்சி வாழ்க் கைதான். But such is life.

"மங்களம் எப்படியிருக்கிறாள்?" தடைபட்டுப்போன கேள்வியை மீண்டும் கேட்டேன்.

"அம்மா செத்துப்போயிட்டா. பத்து வருஷமாச்சு." அவள் முகத்தில் குங்குமம் கொதித்தது.

அவர் விழிகள் துளும்பின.

இன்று எனக்கு ராசியில்லை, கேள்வி என் வயப்பட்டு அசடாக வெளிப்படுகிறது.

"அப்படிச் சொன்னால் போதுமா? மங்களம் மனசு உடைஞ்சு செத்தாள்." தொனிப்பில் லேசாக வசமிழந்த லேசான வெறி! அவள் அவரைக் கவலையோடு நோக்கினாள்.

"பழசெல்லாம் என்னத்துக்கு இப்போ அப்பா? உங்களுக்கு உடம்புக்காகாது."

"இல்லை பங்கஜம். எங்கள் குடும்பங்கள் எவ்வளவு ஒற்றுமையாய் இருந்தது என்று உனக்குத் தெரியாது. நீ அப்போ குழந்தை. என்ன யக்ஞராமன், நாம் பிரிஞ்சு 15, 18 வருடங்கள் ஆகியிருக்குமா?"

"தாராளமா. நாம் பழகினதென்னவோ ரெண்டு வருடங்களுக்கும் குறைச்சல்தான். அப்புறம் என்னை வடக்கே எங்கோ அத்துவானத்தில் தள்ளிப்பிட்டான். ஏதோ நாலஞ்சு கடிதங்கள் பரிமாறிக்கொண்டிருப்போமா?..அப்புறம் அதுவும் விட்டுப் போச்சு."

"அதுதான் வாழ்க்கை. யாரும் யாரையும் குற்றம் சொல்வதற்கு இல்லை."

ஆனால் இருந்தவரை எவ்வளவு நன்றாக இருந்தது! மொட்டை மாடியில் எத்தனை நிலாச் சாப்பாடு...சறுக்கி விழுந்தால் விருந்து. பிக்னிக், கச்சேரி, டிராமா—எல்லாமே சேர்ந்திருக்க ஒரு சாக்குத்தானே! Ah, that was a beautiful life. அழகான வாழ்க்கை எனும் நேர்த் தமிழ் நேர் அர்த்தத்தைக் கொண்டு வரவில்லை.

"நம் ஆபீசுகள்கூட லிங்கிச்செட்டித் தெருவில் எதிரும் புதிருமாக வாய்க்கணுமா? நான் பாங்க், நீங்கள் இன்ஷூரன்ஸ்."

எல்.ஐ.சி. அணைத்த இரு உள்ளங்கைகளுக்கிடையே சுடர். அழகான சின்னம். ஆயிரம் காத்தும் ஏமாந்துவிடு வோமோ? ஆதங்கப்படுகிறோம். ஆனால் பட்டுக்கொண் டால், சுட்டுக்கொள்ள வேண்டியதுதான். சுடரே, சுடரே, நீ மட்டும் காக்கிற கையைக் கடிக்கலாமோ?

''ஒரே பால்காரன்'' என்று தொடர்ந்தார்.

''ஆனால் எங்களுக்கு மட்டும் அவன் பால் பச்சைத் தண்ணி.''

புன்னகை புரிந்தார். ''பால்காரனில் தண்ணிவிடாதவன் கூட உண்டா?''

''இல்லை. அவன் வீட்டில்தானே நீங்கள் குடியிருந் தீர்கள்! அதுக்காவது இடதுகண் வலதுகண்...''

கண்ணுப் பிள்ளையை மனசில் வரவழைத்துப் பார்க் கிறேன்.

கையில் குவளை, தோள்மேல் அணை கயிறு. மாலை வேளையில் தெருவில் மாட்டை ஓட்டிக்கொண்டு போகிறான். அந்த முறமுஞ்சிக்கும் குத்து மீசைக்கும் பீப்பா வயிறுக்கும் அசல் மாயா பஜார் ராட்சஸன்தான்.

''அவனால்தான் என் குடும்பத்துக்கே உலை வந்தது.''

நான் பதில் பேசவில்லை. பேச என்ன இருக்கிறது. கடலைப் பார்க்கிறேன். அலைகள் உருவெடுக்கின்றன. கரைநோக்கிச் சீறி வருகின்றன; கரைமீது அறைகின்றன; படம் விரிகின்றன; கோபம் குலைகின்றன; பெருமூச்செறி கின்றன; மீள்கின்றன. கரைமேல் நுரைகள் நலுங்குகின்றன. பிரிகின்றன, காற்றில் கலைந்து அலைந்து பூ நுரைகள் எங்கெங்கோ மிதந்து சென்று எட்ட எட்ட மறைகின்றன.

அடிவானத்தில் முகில்கள் திரள்கின்றன; குமைகின்றன.

ராக் மால்கவுன்ஸ்; மல்ஹார்.

அவர் முகத்தில் ஜ்வரம்; அங்கே "தீபக்."

"—நீங்கள் மாற்றிப் போன பிறகுகூட ரொம்ப நாள் அதே வீட்டில்தான் குடியிருந்தோம். நீங்கள் இருந்த இடத்தில் யார் யார் வந்தார்கள்; இருந்தார்கள்; போனார்கள். நாங்கள் அதிகம் சகவாசம் வெச்சுக்கல்லே. இந்தப் பிடிப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை.

நீங்கள் போய் சுமார் இரண்டு வருஷமாகியிருக்கும். ஒரு நகை வாங்கினேன். அதிலிருந்துதான் ஆரம்பம் எனக்குச் சனி. அவளுக்கு யமன்.

கண் அவிஞ்ச பிறகு, வழக்கப்பிரகாரம் எல்லாம் தெரிஞ்சவா, தங்கள் தெரிஞ்சதனத்தைக் காட்டிண்டா.

அதுபோல நகையெல்லாம், மலிவா வரதேன்னு, முன் பின் விசாரிக்காமல் வாங்கக்கூடாது. அந்தப் பையனை எனக்குத் தெரியும். உதவாக்கரைதான். ஆனால் ஜமீன் வீட்டுப் பிள்ளை. லேசா ராஜ ரத்தம்கூட. அது மாதிரி பரம்பரை சொத்தில் குடும்ப சாபம் எங்கேனும் கலந்திருக்கும் ஆனால், அப்படி யாரேனும் வாங்கும்போது தடுத்திருந்தாலும் நான் கேட்டிருக்கமாட்டேன். மலிவா வந்தது. பாங்கில் வெச்சிருந்தான்—வீட்டில் இருந்து திருடியோ, அடித்துப் பிடுங்கியோ. சுருக்க மீட்டுவிடலாம்னு எண்ணியிருப்பான். ஆனால் மீறிப்போச்சு. வெச்சபின் மீட்பதாவது! ஏலத்துக்கு விட்டால் பேர் 'கொல்' ஆகிவிடும். அவனே விற்பதாக அவனிடம் எழுதி வாங்கிக்கொண்டு, பாங்க் நகையை விற்றுவிட்டது. அதற்கு அசலும் வட்டியும் செலவும் போக, மிஞ்சியது 200, 300 என்னிடமிருந்து அவனுக்குக் கைமாறியதும் அங்கிருந்தே கிண்டிக்கு டாக்ஸி பிடிச்சுட்டான். மைனர் அவசரமே தனிதான்.

எட்டு பவுன், ரெட்டைவடம் கோதுமைச் சங்கிலி. கலியாணமாகிப் பத்து வருஷத்துக்குப்பின், மங்களத்துக்கு நான் சொந்தமாக வாங்கும் முதல் பரிசு. அதுவரை எங்கே—சாண் ஏறினால்—பழமொழி பழசுதான். ஆனால் மாற்று

இன்னும் கண்டுபிடிக்கவில்லையே! அஞ்சு அக்கா தங்கை நடுவே நான் ஒரே பிள்ளை. சின்ன வயதிலேயே அப்பாவை இழந்துவிட்டேன். பூர்வீகமும் இல்லை. வேறு விளக்கம் தேவையில்லை. என் கடமையைச் செலுத்துவதற்குள் அவள் பூட்டிக்கொண்டு வந்ததே ஒண்ணு ரெண்டு குடும்பத்தில் பறிபோயிடுத்து. அவளுக்கும் சொல்லும்படியாக இல்லை. அப்படி நான் எடுத்துக்கொண்டதற்கும் அவள் எதிர் பேச வில்லை. அவள் மனசை சுருக்க அறியமுடியாது. அழுத்தப் பேர்வழி. சந்தோஷமோ கஷ்டமோ, வெளியே காட்டிக் கொள்ளமாட்டாள். எண்ணங்களைப் பதுக்கிவிடுவாள்.

மாலை வீடு திரும்பியதும், அவள் சமையலறையில் காப்பி கலந்துகொண்டிருக்கையில் பின்பக்கமாக நான் வந்து அவள் கழுத்தில் போட்டபோது அவள் சொன்னது என்ன தெரியுமா? சத்தியமா சொல்றேன். 'மாமா மாமி இங்கிருந்தால், இது தெரிஞ்சாலே எவ்வளவு சந்தோஷப்படுவா?'

ஆனால் என் பெண்டாட்டி நகைமேல் ஆசையுள்ள பொம்மனாட்டி என்றாலும், போட்டுக்கொண்டு புழங்க மனசு இல்லாதவள். தொட்டுத் தொட்டுப் பார்த்து, பத்திரம் பண்ணிவிடுவாள். நான் ஆரம்பத்தில் கேலி செய்தபோது, 'நானே பூட்டிண்டு தேய்ச்சுடணுமா? நமக்கு ஒரு பெண் இருக்கே என்றாள். அவளே ஒரு போக்கு. திடீரென்று ஒரு நாள் ஒரே அலங்குருதையாகக் காட்சி அளிப்பாள். அடுத்த வேளையே, ஒன்றுமேயில்லாமல், கையில் வளையல்கூட இல்லாமல், வெறும் ஒரு சுங்கடி, ஒரு வெள்ளை ரவிக்கை, வகிடுகூடக் கலைத்து மேலுக்கு அழுந்தக் கூந்தலை வாரிக் கொண்டையிட்டு—மொழு மொழு என்று இருப்பாள். அதுவும் அவளுக்கு அழகுதான்."

உள்ஒளியில் அவர் முகம் பொலிவுற்றது. அவர் வர்ணித்த மங்களத்தை நான் பங்கஜத்திடம் பார்த்துக் கொண்டிருந்தேன். அவரோ தன் கண்ணுள் மங்களத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"'திடீரென்று வீட்டில் பாலும் தயிரும் கொஞ்சம் கூடப் பெருக ஆரம்பித்தது; பால் கணக்கு ஏறாமலே! தரம் திடீரென்று திடமாயிற்று. காப்பி, தனி மணம் வீசிக்கொண்டு 'ஏ ஒன்.' என் காப்பிப் பைத்தியம் உங்களுக்கே தெரியும். நானே பார்த்தேன், மாட்டைக் கொணர்ந்து நேரே கறக்கா விட்டாலும், அவன் இரண்டு விரல்களால் நுரையைத் தடுத்துக்கொண்டு ஊற்றுகையில், குவளையிலிருந்து பால் சேறாய், மங்களம் ஏந்தும் ஏனத்தில் இறங்குவதை.

'என்ன கண்ணுப்பிள்ளே, உடம்பு கிடம்பு சரியா யிருக்கையா?'

அவனுக்குத் திக்கெனத் தூக்கிவாரிப் போட்டது. திறு திறுவென விழித்தான். 'ஏன் சாமி அப்பிடி கேக்கிறிங்க?'

'உன் பால் சாதாரவா நீலமாயிருக்கும், துணி அலசற மாதிரி. ஆனால் ஒரு மாதமா, 'பெஸலா' வெள்ளையா யிருக்கு, தடிப்பாயிருக்கு!'

சிரித்தான். லேசா தீர்த்தம் போட்டிருக்கான். அந்தப் பழக்கத்துக்கு வேளையா, பொழுதா?

'என்னவோன்னு பயந்துட்டேனுங்க. இப்போ வீட்டிலே மாடு ரெண்டுகூடக் கறக்குது. வீட்டுக் கன்னுக்குட்டிங் களை மாமியார் வீட்டிலே இத்தினி நாள் விட்டு வெச்சிருந் தேன். மச்சான் கலியாணத்துக்குப் போனேனில்ல, ஓட்டியாந் துட்டேன். அப்புறம், ஒரு சமயம் போலவே எப்பவும் இருக்க முடியுமா? இருக்கலாமா? அம்மாவை எங்கள் குலதெய்வமா நினைக்கிறேனுங்க. ஐயாவும், அம்மாவும், கொளந்தையும எப்பவும் நல்லா இருக்கணும், எல்லாம் நல்லபடியா நடந்தால் கொளந்தை கலியாணத்துக்குச் சீதனமா பசு ஒண்ணை ஓட்டப்போறேனுங்க!'

'மங்களம், நமக்கென்ன குறைச்சல் போ!'"

ஆனால் மங்களம் குறைந்துகொண்டிருந்தாள். திடுக்கென்று இன்னிக்கும் நாளைக்கும் தெரியறாப் போலில்லை. நாளுக்கு நாள் இம்மி இம்மியா, கண்ணுக்கெதிரே கண்ணுக்குத் தெரியாமல் ஒரு இளைப்பு. அவளே கொஞ்சம் அழுத்தம். வெளியில் காட்டிக்கொள்ளமாட்டாள். இப்போ பேச்சு இன்னும் குறைந்துபோய், முகத்தில் ஏதோ யோசனை. யோசனை நாளடைவில் கவலையாக மாறிற்றோ? எனக்குச் சொல்லத் தெரியவில்லை. கண்ணில் ஏதோ திகில் தெரிந்ததோ? எதையோ எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போல்! ஆனால் நானும் பெரிதாகப் பாவிக்கவில்லை. எனக்கு ஆபீசில் ஆயிரம் பிடுங்கல். கூடக் கண் உபத்திரவம். திடீரென்று பொருள்கள் விசுவரூபம் அடிக்கிறது. உடனே ஒரேயடியாகச் சிறுத்துவிடும். கண் டாக்டரிடம் போகப் பயம். எல்லாம் பைசாதான். அவன் என்னத்தையேனும் சொல்லிவிட்டு, இருக்கிறதெல்லாம் கொண்டுவா என்றால்?

ஆனால் ஒருநாள் காலை அவசரச் சாப்பாட்டில் அவள் பரிமாறுகையில் அவளுடைய ஒட்டிய கன்னமும் தூக்கிய தோள் எலும்பும் சட்டென்று கண் பட்டதும் நெஞ்சு பக்கென்றது.

'என்ன மங்களம் உடம்பு? டாக்டரிடம் போவோமா?'

'எனக்கு ஒரு கேடுமில்லை. டாக்டரிடம் எதுக்கு? நமக்குக் காசு கொழுத்துக் கிடக்கா? முதலில் உங்கள் கண்ணைப் பார்த்துக் கொள்ளுங்கள்.'

ஒருநாள் காலை பால் வரவில்லை. அந்த வேளைக்குக் காப்பி குடிக்காவிட்டால் மண்டையிடிதான். பால்காரன் வீடு பக்கத்துத் தெருதான். சொம்பைத் தூக்கிக்கொண்டு போனேன். வாசலில் பெரும் கூட்டம். உள்ளே ஒப்பாரி. உள்ளே போய்ப் பார்த்தால் நடுக்கூடத்தில் வெட்டிச் சாய்த்த மரம்போல் ஆள் மல்லாந்து கிடக்கான். அப்போதுதான் கால் மணி நேரத்துக்கு முன்னால் மாரடைப்பு. வாஸ்தவம். அவ்வளவு பெரிய சரீரத்துக்குக் கைக்குத்தளவு இதயம் எத்தனை நாள் எவ்வளவு பாய்ச்சல் தாங்கமுடியும்?

மங்களத்திடம் வந்து சொன்னதும், 'ஆ! என்ன?'—இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டாள்.

''மங்களம், அதிர்ச்சியாத்தான் இருக்கும்; வருத்தமாத் தானிருக்கும். இத்தனை நாள் பழகிவிட்டோமே! ஆனால் நாம் செய்யக்கூடியது என்ன இருக்கு? கஷ்டம். பெற்ற தாயார் வேறு இருக்காள். such is life.' நான் சொன்னது அவளுக்குச் சரியாகக் கேட்டதோ இல்லையோ, பாவம். ஆனால் எனக்குச் சிந்திக்க நேரம் இல்லை. அன்றிரவு நான் டில்லி பயணம், H.O.வில் மூணு வாரம் ட்ரெயினிங்.''

ஆனால் நான் டில்லி சேர்ந்து ஒரு வாரம் ஆகவில்லை. அவளிடமிருந்து கடிதமுமில்லை; தந்தி:

'Mangalam sinking. start.

Dr. Prabhakaran.

இதென்ன தலையா, காலா?

சென்னை வந்து சேர்ந்தால் வீடு பூட்டிக் கிடக்கு. அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்கள். என்னைக் கண்டதும் டாக்டர் பிரபாகரன் முகம் சுளித்தார்.

'உங்களுக்கிடையில் என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அந்த அம்மா உடம்பை என்னவோ மெஸ் பண்ணிண்டுட்டாங்க. நீங்களும் கவனிக்கல்லே. நாம் எல்லாம் படிச்சவங்க. உங்களுக்காக உசிரைப் பிடிச்சுட்டு இருக்காங்க. ஸாரி, மிஸ்டர், 24 அவர்ஸ் தாண்டணும்.''

அவர்கள் தீர்ப்பு விதிக்கும் விதமே அப்படித்தான். மிஸ்டர் யக்ஞராமன், கதை எப்படியிருக்கு பார்த்தேளா?

கட்டிலில், மங்களமா அது? கட்டில் கொள்ளவில்லை. எக்கண்டமா ஊதியிருந்தாள். கண்கள் கீறிய கோடு. பின்னால் தெரியவந்தது. ஊதுகாமாலையாம். சட்டென்று

ரத்தம் பூரா ஒரே அடியா முறிந்துவிட்டதாம். ஆனால் இத்தனை சுருக்காவா? குழந்தை கட்டிலண்டை பேயறைஞ்ச மாதிரி நிக்கிறாள். அவளுக்குத் தாங்கற வயசா? புரிஞ்சுக்கற வயசா? இப்படியெல்லாம் பாக்கற வயசா?

'வாங்கோ, உட்காருங்கோ, இதோ—இங்கே—கிட்டக்க.' குரலில் அசாத்திய தீர்க்கம். என் கையைப் பிடித்துக்கொண்டாள். 'உஷ்—நேரம் அதிகமில்லே. நீங்கள் மன்னிச்சாலும், மன்னிக்காவிட்டாலும் நான் சொல்றதைச் சொல்லியாகணும். நான் உங்களுக்குத் துரோகம் இழைச்சுட்டேன்.'

எனக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. 'என்னடி மங்களம், பெரிய வார்த்தையா பேசறே?'

'ஆமாம் அப்பிடித்தான். நீங்கள் எனக்குச் சங்கிலி வாங்கினேள் பாருங்கோ. ரெண்டு மாசத்துக்கு முன்னால் நம் பால்காரன் கண்ணுப்பிள்ளை, தன் மச்சினன் கலியாணத்துக்கு பெண்டாட்டி கழுத்தில் போட்டுண்டு போக, என்னிடம் ஒரு வாரத்துக்குக் கடன் வாங்கிண்டு போனவன் அப்புறம் திருப்பியே தரல்லே. ஒரு வாரம்தானேன்னு உங்கள் காதில் போட அவசியம் தோணல்லே. இதோ இப்போ தரேன், அதோ அப்போன்னு வாரம் வாரமா தள்ளிண்டு போகவும், உங்களிடம் சொல்ல பயம் வந்துடுத்து. ஆனால் எப்படியும் கொடுத்துடுவான்னு நம்பிண்டிருந்தேன். அவனும் செத்துப்போயிடவே, அப்புறம்தான் நான் செய்த துரோகம் எனக்கு முழுசாத் தெரிஞ்சது.'

'அடி அசடே. நகை போச்சேன்னு உன் தலையைச் சீவிடுவேன்னு நீ என்னைப்பத்தி எப்படி நினைக்கலாம்? நகை போனால்—மசுர் போச்சு. நீ எழுந்து உட்காரணும்.'

சிரிக்க முயன்றாள். 'நீங்கள் சொல்வது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனால் எனக்கு இருக்கப் பிடிக்கல்லே. என் நெஞ்சு என்னை அறுக்கறதே! இத்தனையும் நேர்ந்திருக்க வேண்டாம்னு இப்போ தெரிஞ்சு என்ன பண்றது? கண்ணைக் கவனிச்சுக்கோங்கோ—'

கண் மூடினாள். கண் மூடியவள்தான்.

எனக்கு நெற்றிப்பொட்டில் ஏதோ நரம்பு அறுந்த மாதிரியிருந்தது. கண்ணை இருட்டிற்று. மடேரென்று விழுந்துவிட்டேன்.

மூணு மாதம் கழித்து வேறு எங்கேயோ விழித்தேன். விழிப்பாவது! பார்வை அத்தூரதையாப் போயிடுத்து. அவன் களும் மாத்தி மாத்தி ஆபரேஷன் செய்து பார்த்துக் கடைசி யில் கைவிரிச்சுட்டான்கள்.

கண் போச்சு. வேலையும் போச்சு.

நான் ஆஸ்பத்திரியில் கிடந்தபோதும், அப்புறமும் கொஞ்சகாலம் பங்கஜம் அவள் மாமன் வீட்டில் வளர்ந் தாள். அங்கேயும் வளம் இல்லை. பெண் போனபிறகு பிடிப்புக்கும் வழியில்லை.

அப்புறம் தெரிஞ்சது, கண்ணுப்பிள்ளை தர்பார் வெறும் காற்று அடைத்த பொட்டலம்னு. அவனுக்கே கொஞ்ச நாளா வியாபாரத்தில் நஷ்டமாம். கோமாரியில், ரெண்டு மூணு மாடு சேதம். கலியாணத்திலிருந்து திரும்பினதும் நகையை அவரே வாங்கிக்கிட்டாரு என்று அவன் பெண் டாட்டி அடித்துச் சொல்லிவிட்டாள். நிஜமோ, பொய்யோ? நகையைக் கண்டதும் அவனுக்குப் புத்தி எப்படி ஓடிற்றோ? அவசரத்துக்குச் சமாளிக்கலாம்னு நெனச்சிருப்பான். முழுசா அப்படியே முழுங்கிடலாம்னு அவனுக்குத் தோணி யிருக்கும்னு நான் நினைக்கல்லே. எந்த மார்வாடியிடம் அடகு வெச்சானோ? ஏற்கெனவே வாங்கினதுக்கு எந்த ஈட்டிக்காரனுக்கு ஈடுகொடுத்தானோ? இல்லே, வீட்டிலேயே அழுக்கிட்டான்களோ? குடும்பத்தில் பூசல். தாயார், பிள்ளை, பிள்ளைக்குப் பிள்ளை...வீடு மூணு அடுப்பா பிரிஞ்சாச்சு. இப்போ அந்த நகை இன்னும் நகையா இருந் தால், இருக்கிற இடத்தில் எந்தக் குடும்பத்தை அழிச் சிண்டிருக்கோ?

வேலையை விட்டு நிறுத்தும்போது பாங்கு கைக்குக் கொடுக்கும் பணம் எத்தனை நாள் நிற்கும்? எனக்கோ ராஜ வைத்தியம். உட்கார்ந்து தின்னால் குன்றும் குந்துமணி என் சர்வீஸுக்கு எனக்குக் குன்றாய்ச் சேரவில்லை. என்னிடம் இப்போ அந்தக் குந்துமணிகூட இல்லை. இந்த சுண்டலும் முறுக்கும் சீடையிலும்கூட முழுக்க வயிறு அலம்ப முடியுமா? விசேஷங்களுக்குப் பங்கஜம் சமைக்கப் போவாள். சூற்றுக் காரியங்கள் செய்வாள். மூன்றிரண்டு குழந்தைகளைப் பள்ளிக்குக் கொண்டுபோய் விடுகிறாள். சமயத்துக்கு ஏன் என்கிறாள். இப்பிடித்தான் பிழைப்பு—நடக்கிற வரைக்கும், நடக்கிறபடி. இப்போ என் ஊன்றுகோல், சுமைதாங்கி, கண் எல்லாமே அவள்தான். ஆனால் அதற்காக என் ஆயுசுக்கும் அவளை என்னோடே நிறுத்திக்கொள்ள முடியுமா? எனக்குப் பின்? ஆண்டவன் என்னமாதிரி கண் திறக்கப்போறானோ, இதுவரை தெரியல்லே! அவளுக்குப் படிப்பு ஏறல்லே. பங்கஜம், சொல்றேனேன்னு கோவமோ?''

சிரித்தாள்.

''என்னோடு குவாயிட்டுக்கு வரயா?''

நாங்கள் மூவரும் திடுக்கிட்டுத் திரும்பினோம். அவன் இருப்பதையே மறந்துவிட்டேன்.

அவன் விழிகள் அவள்மேல் பதிந்திருந்தன. அவளுக்கு மட்டுமே.

சிறீசுகள் என்கிறோம். ஒன்றும் தெரியாதவர்கள் என்கிறோம். கறந்த பால் என்கிறோம். ஆனால் அவர்கள் சிக்கறுக்கும் வழியே தனி. எனக்குப் பேச என்ன இருக்கிறது?

மேகங்களைப் பிளந்துகொண்டு திடீரென்று சந்திரன் வெளிப்பட்டான். பௌர்ணமி நிலா.

கடல், பாற்கடலாகிக்கொண்டிருந்தது.

# ராம தர்மம்

ஏதோ அந்த சமயத்தின் உள்ள நெகிழ்ச்சியில் அவளாக அளித்த வரத்தின் விளைவு, அந்தப் பிராமணர் இன்றுவரை கால்நடையாகவே பூதலத்தைச் சுற்றி வந்திருக்கும் தூரமும் நேரமும், தடவைகளும், அதனதன் லக்கம் தாண்டி, கணக்கும் தன்னில் மூழ்கிவிட்டது.

தற்சமயம்—ஏன், எச்சமயமும் அவர் அறிந்த பூமி, அவன் பாதம்பட்ட பூமி. அயோத்தியிலிருந்து தண்டகாரண்யம், தண்டகாரண்யத்திலிருந்து இலங்கை வரை ஜபித்து ஜபித்து ராமநாம நாமகோடி கோடி நாம கோடி கோடி ராமகோடி நாம கோடி நாமமும் மூச்சும் இரண்டறக் கலந்தபின், எது நாமம் எது ஸ்மரணை என தனக்கே தெரியாது, தனக்கே புரியாது, தன்னில் இருக்கும் தனி, நாமஸ்மரணையாகவே ஆகிவிட்ட நிலையில்,

இன்னமும் அலைந்து கொண்டிருக்கிறார்—ராம ராம ராம ராம ராம...!

அவர்தான் அனுமன். சிரஞ்சீவி வரத்தால் யுகங்களைத் தாண்டி சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார். பிரம்ம ஞானங்களை ராம நாமத்தினாலேயே தெரிந்துகொண்ட பிராம்மணனாக...வயதைக் கடந்த கிழவராக...

எதிர்ப்பட்ட ஒரு பாறாங்கல்மீது கிழவர் அமர்ந்தார். அசதிகூட சொல்லும்படி இல்லை. வாய்க்கால் வழி பாசன நீர்போல் பாயும் எண்ண ஓட்டத்தின் சுவாரஸ்யம். கங்கையிலிருந்து காவிரி, தாமிரபரணி—ஜீவநதிகளின் ஜலம் வாய்க்கால் வழி பயிர்களுக்குப் பாயும் கிளுகிளுப்பில், குளுகுளுவில், சலசலவில், ஜிலுஜிலுவில், தளதள நெளி நெளி—இத்தனையும் சேர்ந்த கொலுஸில்தானே, தேவியின் தண்டை யோசனையைக் காப்பாற்றித் தருகிறது!

அள்ளிச் சுற்றிப் போர்த்திக்கொண்ட சால்வைபோலும். வாடை கிளம்பி, சுழன்று வந்து, நெற்றியை ஒற்றிற்று. தந்தைக்கு மகன்மேல் பரிவு—வாயுவுக்கு புத்ரனான ஆஞ்சநேயன்மீது. "எனக்கு ஒதுக்கியிருக்கும் பணியால் எனக்கு வயதில்லை. உனக்கு வரத்தால் வயதில்லை. ஆனால் எவ்வளவு வயதாகிவிட்டாய்!"—பெருமூச்செறிந்தது.

எங்கோ செடியினின்று கழன்று, மாருதவாக்கில், அந்தரத்தில் அலைந்து, புல்லிலும் முள்ளிலும் கல்லிலும் தரையிலும் புரண்டு உருண்டு, மறுபடியும் காற்றின் ஏற்றலில் தத்தித் தத்தி அலைந்து வந்த ஒரு மலர், கிழவரின் கால் விரல்களுக்கிடையில் சிக்குண்டது.

நீலச் சங்கு புஷ்பம்...ராமன் நிறம்!

பிராட்டியின் பாத மலர்கள் செந்தாமரை, நினைவின் இவ்வளவு தூரத்திலும் ஒளி கண்ணைப் பறித்தது. பாதமே இப்படியெனில் முகம் எப்படி? தேவி முகம்தான் பார்த்ததில்லை என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் அது அசோகவனத்தில் கண்ட முகம், அழுதமுகம், ஆர்யபுத்ரனுக்கு ஏங்கி ஏங்கிச் சுண்டிய முகம். அதைச் சுயமுகம் என்று சொல்வதெங்கனம்? ஆகையால் தானும் ஸௌமித்ரி போலத்தான், நேரில் சுயமுகத்தை நிமிர்ந்து பார்க்க இஷ்டமுமில்லை. ஏன்?

"ராமா!"

கிழவர் திடுக்கிட்டு எழுந்து சுற்றுமுற்றும் நோக்கினார். நினைவின் எதிரொலிதான் என்று தெளிந்ததும் மீண்டும் அலர்ந்தார். அது அக்னி பகவானின் பழைய குரல்...

''ராமா, இவள் மாசற்றவள்...''

கோதண்டத்தின் மணி தானாகவே அலறிற்று. கபந்தங்கள் கூத்தாடும் அந்த யுத்த பயங்கரத்தில், உயிர்களைக் குடித்துக் குடித்து மாளாமல், காலதேவன் வயிறு திணறும் அந்த நாசகளத்தில், 'இன்றுபோய் நாளை வா' என்று சொல்லவல்ல அமைதி காக்கும் சாந்தபிரான் வலது புருவம் வியப்பில் உயர்ந்தது. கோதண்டத்துக்குப் பயமா? ஆம்! இது பயம்; வேறு பயம். அக்னி தேவன் தரும் ப்ரமாணிக்கம் அல்லவா?

''இவளுடைய கற்பின் தகிப்பு என்னால் தாளவில்லை''—ஏந்தமுடியாத தழலை எப்படியோ அவனிடம் சேர்த்து விட்டான்.

அவர் பார்வை, கண்ணுக்கெட்டியவரை நீலமலரைத் தொடர்ந்தது. அப்படிப்பட்டவளை, பாவம் ஓரிடம், பழி ஓரிடமாக மீண்டும் கானகம் அனுப்பியதற்குப் பிராயச்சித்தமாக, இதோ, இப்படி, அங்கப்ரதட்சணம் செய்துகொண்டிருக்கிறான்.

லீலா, அப்போது இழைத்த தவறுக்கு அப்போதே தண்டனை இல்லை; இழைக்கும் முன்னரே தவறும்—தீர்ப்பும் சேர்ந்து தாமே பதிவாகிவிடும் ரகசிய ஏடுகள். மேல்வரும் வரை அந்த நியதியை வகுத்த ஆண்டவனுக்கும் எட்டாமல், அவனும் தவறுக்கும்—தீர்ப்புக்கும் விலக்கு இல்லை என்பதால், அவனுக்கும் அப்பாற்பட்டு எந்தப் பேழையில் பூட்டிக் கொள்கின்றன? அந்தப் பேழையும் எங்கே? இதுதான் யாரையும் ஆளும் விதி.

—''அண்ணன் இல்லாத சமயத்தில் என்னைப் பெண்டாளப் பார்க்கிறாயா?''

அனுமன் செவிகளைப் பொத்திக் கொண்டார். உடல் குலுங்கிற்று.

இதற்கு அனுபவிக்கத்தான், வண்ணான் வண்ணாத்தி சாக்கில், வட்டியும் முதலும்போல் பிள்ளைத்தாச்சியாக பிராட்டி மீண்டும் கானகம்—

கொழுந்தனைச் சீறட்டும். அலுத்துக் கொள்ளட்டும். திட்டட்டும். ஆனால் இப்படி வக்ரமாக, இவ்வளவு ஈன பாஷை எப்படி ராஜரிஷி மகள் வாயில் வந்தது? அதுதான் விந்தை, திகைப்பு. வாயை எத்துணை முறையேனும் அலம்பல் வேண்டும்.

அன்றொரு நாள் மாலை—

வழக்கம்போல் கிஷ்கிந்தையிலிருந்து ராகவனைத் தரிசிக்க வந்திருந்தபோது,

நந்தவனத்தில் அமைத்திருந்த வேனில் பந்தலின் இதமான இருளில் இருவரும் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருக்கையில், எட்ட நந்தவனத்தின் மற்றொரு மூலையில், தேவி தோழிகளுடன் பந்து ஆடிக்கொண்டிருக்கையில், ராகவனுக்கு அன்று மனமிருந்தநிலை, ஏதோ பேச்சுவாக்கில்,

"ஆஞ்சநேயா, இவளைப்பற்றி நாம் ஏதறிவோம் உண்மையில், மண்ணிலே கிடைத்தாள் என்பதன்றி?"

வாய்விட்டு இவ்வாறு சொல்லவில்லை. பாஷையென்பது வாய்ச்சொல்லுக்கு அடங்கியதல்ல. கண்ணோக்கு, வேறு சைஂகைகளுக்கும் கட்டுப்பட்டதல்ல. பாஷையென்பது இவைகளே அல்ல. வாய் தாண்டி, கண் தாண்டி, சைகை தாண்டி, மனம் தாண்டி, மூலத்தின் தியானக்கடலில், அங்கும் அதற்குரிய தொடுவானம் விளிம்பைத் தொட்ட அமைதியில், கடலிலேயே எழுந்து, கடலிலேயே விழும் துள்ளு மீன்— எழுகையில் கேள்வி, விழுகையில் பதில்—பரஸ்பர நிலை, நெஞ்சோடு நெஞ்சு கிளத்தல் எனும் தாதுபாஷை இருக்கிறது; இதனினும் நுண்ணிய அடுத்த நிலை தெரியும் வரை.

அனுமனின் அதரங்கள் அவரையும் அறியாமல், புன்ன கையில் இளகிற்று.

யாவும் விதிக்கப்பட்டவை; ஆதலின், நிகழ்வதென்பது ஒருமுறை; ஒரே முறைதான். இன்னும் நெருக்கிச் சொல்லின் நிகழ்ந்தது நிகழ்ந்ததோடு சரி; மறுமுறை என்பது அதற் கில்லை. முதல்போலும் நிழல்கள், நீழல்கள், அவைகளின் ஆட்டம் உண்டேயன்றி, முதல் மீண்டும் வருவதில்லை. அது சன்னிதானமாகிவிட்டது. அதன் முகூர்த்தத்தினின்று இனி அது இறங்கி வராது. அல்லேல் மகிமையேது, மானமேது, சத்யமேது? நேர்ந்தது சரித்திரம்; மற்றவை கதை.

ஆகவே அவரவர் பக்குவத்துக்கேற்ப, தியானமும், பக்தியும், கற்பனையும், ஞானமும், சாமர்த்தியமும் சமத் காரமும் காட்டியவையை வடித்தவர்களேயல்லாது, காவியர் கள் ராமாயண ரகசியங்களைப் பூராவும் என்ன கண்டார்கள்? கண்டவர்கள் ராமசரிதத்தில் பங்கு கொண்ட நாங்கள். விண்டதையே விண்டுகொண்டிருப்பவர் இவர். இந்தச் சிதைவே, காவியங்கள் இழைக்கும் முதல் பாபம். இதைச் சுற்றி நெய்த பாஷ்யங்கள், அர்த்தங்கள், அனர்த்தங்கள் இத்தியாதி வடிகால்கள் மூலம் மறு பாவங்கள், பிற பாபங்கள் இழைக்கப்படுகின்றன. கர்மாவை யாராலும் தடுக்க முடியாது.

ஆகவே, அன்று ராகவனும் அனுமனும்—(இங்கு நான் என்று என்னை பாஷை பற்றாமையில் நேரும் பாபத்தில், தனிப்படக் குறிக்க அஞ்சுகிறேன்.) இருந்த அந்தரங்க நிலையை நூல்களில் காணமுடியாது. நூல் தாங்காத அத்துணை நுட்பம், இன்பம், சத்யம். தவிர எல்லாமே எல்லார்க்குமல்ல. இதுதான் தியானத்தின் முதல் உபதேசம்:

"வாயுபுத்ர, நான் விஷ்ணு, அவள் லக்ஷ்மி, ராவண சம்ஹார நிமித்தம் ராமாவதாரம், ஈதெல்லாம் சுயநலம்; சொக்கட்டானில் சோழி குலுக்கல் வேணும்போது அவ தாரம், மிச்சத்துக்கு நரன் எனப் பேசுவது நீசம். நேர்மை யற்ற தர்க்கம்.

"நான் கேட்கிறேன்—யார் அவதாரமில்லை? நீ யார் மாதிரி. என் பலத்தை நான் ராவணனிடம் நிரூபிக்கவில்லை. இவளிடம்தான் இன்னமும் நிரூபித்துக்கொண்டிருக்கிறேன். இதுவே என் பாடு."

ராகவன் குரலில் தொனித்தது கவலையா? விரக்தியா? அதையும் தாண்டிய விசனமா? பிறவியின் விசனம் பிறவி விசனம் பிறவியே விசனம்—ஸத் ஸரிக் கமக பமகா—

ஸங்கீத கூடத்தில் இசைக்கும் ஏதோ ஒரு யாழ், சிந்தனாஸ்வரத்தை எடுத்துக்கொள்கிறது.

"அவதாரமாம்! என்ன அவதாரம்? பலப்பரீட்சையில் தோளைத் தட்டிக்கொள்வதற்குத்தானா அவதாரம்? என் பிறவியின் எல்லைகள் என்னை அவ்வப்போது மட்டம் தட்டிதான் வைத்திருந்தன. 'ஆயிரம் ராமர்களும் உனக்கு ஈடாவரோ?' என்று குஹன் பரதனைச் சிலாகித்தபோதே நான் மட்டுப்பட்டுவிட்டேன். பெண்புத்தி பின்புத்தியில் மயங்கி மானைத் தொடர்ந்து ஏமாந்தேன். அதன் விளை வாக எத்தனையோபேர் வினைகளுக்கு இடம் கொடுத்தேன்.

"வாலியை நான் மறைந்து கொன்ற பழி, நான் மறைந்த பின்னரும் என்னைக் கருவறுத்துக் கொண்டிருக்கப்போகிறது. இவ்வுலகம் உள்ளளவும் அதில் தெய்வ நம்பிக்கைகளும் இதிஹாஸ புராணங்கள் பேசப்படும் வரையிலும், துஷ்ட நிக்ரஹம் சிஷ்ட பரிபாலனம் என்று என் அவதார மஹிமைக் குள், வாதங்கள் என்னை ஒளித்து வைத்தாலும், மனிதப் பிறவியின் சுயநலம், அதனால் செய்த கொலை அது இல்லை யென்று சொல்ல முடியுமா? ஸீதை மயக்கம் அப்பா, ஸீதை மயக்கம்!"

ஸ்ரீராமன் தற்கேலியில் சிரித்தான்.

"மற்றும், வாலி அரசைப் பிடுங்கி சுக்ரீவனுக்குக் கொடுக்க நான் யார்? அதேபோல், ராவணன் இருக்கையி லேயே 'இந்தா விபீஷணா லங்காபுரி ராஜ்யம்' என்று வாரி

வழங்கிவிட்டேன். இதுதான் கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தல். இதில் இன்னொரு வேடிக்கை பார். என் அரசே எனக்கில்லை. இன்னும்தான் அது எனக்குச் சொந்தமில்லை. என்ன விழிக்கிறாய்? இது பரத ராஜ்யம்தான். ராமராஜ்யமில்லை. 'என் மகன் நாடாளணும், ராமன் காட்டுக்குப் போக வேண்டும்' என்று என் மாற்றாந்தாய் என்று எண்ணினாயா? நீ ஸாக்ஷாத் பரமேசுவரனின் அவதாரம். முன், பின், நடுவற்று, ஏற்கெனவே அழிவற்ற உனக்கு அவள் வழங்கியிருக்கும் சிரஞ்சீவி வரம் இந்த ஜன்மாவை நீ அலங்கரித்துக் கொண்டிருப்பதற்கு உன் காதில் தொங்கும் குண்டலம் ஒன்று தவிர அதற்குத் தனிப் பலிதம் இல்லை என்றே சொல்வேன். நிமித்தமாகப் பிறந்தோ, அல்ல பிறந்த பின் நிமித்தத்தைத் தேடியோ முனைவதில் ஈடுபடும் எந்தப் பிறவியும் அவதாரமே.

''அசுரர்களை ஏமாற்றி, அவர்களும் சேர்ந்து கடைந்தெடுத்த அமிர்தத்தைக் குடித்துவிட்டு, மந்தர்களாகிய தேவர்களைக் காட்டிலும், சுயமுயற்சியில், விடாமுயற்சியில் பிறவியின் அர்த்தத்தைத் தேடும் மனித ஜன்மம் மாண்புடைத்து. நரனை நிரூபிக்கவே நான் வந்தேன்.

''என் பிறவியின் நிமித்தம் ராவணஸம்ஹாரம் அல்ல' அது இடை வந்தது. அதற்கென்றே, அவன் குலத்தை வேருடன் அறுக்கவே அவள் தோன்றினாள். சீதை பிறக்க, லங்கை அழிய''—நந்தவனத்தின் மற்றோரத்தினின்று சிரிப்புக் கொத்துக்களிடையே, அந்தரத்தில் எழும்பி அங்கு நேரத்துக்குமேல் சோம்பினாற்போல் நொடியிலும் நொடி கூட நின்ற பந்தின்மேல் ராகவனின் நாட்டம் லேசாய்ச் சாய்ந்தது.

ராமன் முகத்தில் சட்டென்று புன்னகை தவழ்ந்தது.

''இதுபோல், கன்னி மாடத்தில் இவள் பந்தாடுகையில் சிவதனுசடியில் ஓடிவிட்ட பந்தையெடுக்க, வில்லை ஒரு கையால் தூக்கியதைத் தற்செயலாகப் பார்த்துவிட்ட என்

மாமனார், எப்படி அரண்டுபோயிருப்பார் என்பதை நினைத்துக்கொண்டேன். 'கலப்பையில் தட்டுப்பட்ட பெட்டியில் நான் கண்டெடுத்தது பேயா, ராக்ஷஸியா? இவளிடமிருந்து முன்னால் நம்மைக் கழற்றிக்கொள்ள வேண்டும்' என்கிற தீவிர பயம் அப்போதுதான் அவருக்குத் தோன்றியிருக்கும். ஆனால் இவளைச் சமாளிக்கத் தக்கனாய் ஆண் இருக்க வேணும் என்பதற்காகத்தான் வில்லை முறிக்கும் நிபந்தனையைக் கொணர்ந்தார். உண்மையில் அது சுயம்வரமா? நிபந்தனை வரம். ஒரு தினுசில் கட்டாய வரம். விதி வரம்.''

''மாருதி, இவள் மண். யாவும் விளைவதும் இவளில்தான். வளம் பெறுவதும் இவளில்தான். ஆனால் அத்தனையையும் விழுங்குபவளும் இவள்தான். இவள் பயங்கரி. நான் கருவில் வளர்ந்து ஜனித்தேன். இவள் கர்ப்பவாஸமே அற்றவள். காலவரையே அற்ற வயதைக் கடந்து இப்பிறவியில் எனக்கு தாரம் சீதையென்று உருக்கொண்டிருக்கிறாள். இவள் என்னிலும் மிக, மிக மூத்தவள். இவள் உறவை என்னென்று நிர்ணயிப்பது? நெருப்புக் குளியல் இவளுக்கு நிலாக் குளியல். கேட்ட இரு வரங்களில் வனவாச வரம் நிஜமானால் மற்ற வரம் பொய்யாகிவிடுமா? என் தம்பி நல்லவன். எனக்கு நாட்டைக் கொடுத்துவிட்டான் என்பதால், நாடு எனக்குச் சொந்தமாகிவிடுமா? அப்போது எனக்காக அவன் பாதுகாத்தான். இப்போது அவன் தருமத்தில் நான் அவன் சிம்மாசனத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கிறேன்.

''ராஜதர்மத்தில் 'உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று என் தந்தையே முன்வந்து கேட்ட அன்றே வரங்கள் கொடுக்கப்பட்டுவிட்டன. விவரங்கள் அப்போதே தெரிவிக்கப்படவில்லை; அவ்வளவுதான். உண்மையில் அவை பிறகு வரங்களேயில்லை, என் தாய், என் தந்தையிடம் விட்டு வைத்திருந்த கடன்.

"சேதுபந்தனத்துக்கு அனுமதிக்கு மூன்று நாள் தவம் கிடந்தேனே, ஸமுத்ர ராஜன் மதித்தானா? வில்லைக் காட்டின பின்னர்தானே வழிக்கு வந்தான்!

"ராவணஸம்ஹாரம் என்று பிரும்ம ஹத்தி இழைத்தேன். ராமேசுவரத்தில் லிங்கத்துக்குப் பூஜை செய்து விட்டால் தோஷம் போய்விடாது. பச்சாத்தாபத்துக்குப் பூஜை ஒரு வடிகால், அவ்வளவே. இந்த ராவண ஸம்ஹாரம், சுந்தர, நீயல்லால் சாத்தியமா?"

'அது காரணம் ராகவதரிசனம் எங்கள் பாக்கியம்'— கைகள் ராமனின் பாதங்களைத் தேடின.

இரண்டு மைனாக்கள், ஒன்றையொன்று துரத்தி விளையாடும் வெறியில் பந்தலுள் நுழைந்து அவர்கள் தலை மீது வட்டமிட்டுவிட்டு மீண்டும் வெளியே பறந்துபோயின.

"கிர்ச் கிர்ச் கிர்ச் கிர்ச்..."

'இந்த ராவண ஸம்ஹாரத்துக்கு அணிலிலிருந்து ஆஞ்சனேயன் வரை போதாதென, எதிரியின் மர்மங்களை வெளியிட எதிரியின் பாசறையிலிருந்து அவன் தம்பி...என்ன பெருமை வேண்டியிருக்கிறது. செத்த பாம்பை அடித்து, வாகை சூடுவதில்? ராமா ராவணனை அழித்தது பெரிதல்ல. அதைவிட இந்திரஜித்தின் ஸம்ஹாரம்தான் மகத்தானது" இது என் வார்த்தையல்ல. அஹஸ்திய முனிவரின் வார்த்தைகள்.

"ஆம்; அவர் சரியாகத்தான் சொன்னார். இந்த ராவணன் ஏற்கெனவே பல இடங்களில் அடிபட்டவன் தானே? அங்கதன் தொட்டிலில் பொம்மையாகத் தொங்கியவன்தானே? நினைத்தால் வாலி அவனை அப்பவே நசுக்கியிருக்க முடியாதா? ஸீதை இவனை ஒரு பார்வையாலேயே எரித்திருக்க முடியாதா? என், உன் முன் அவன் எம்மாத்திரம் வாயுபுத்ர, உன் பெருந்தன்மையில், ராமாயணத்துக்காக அவனை விட்டுவைத்தாய். இப்போது உன்னை நான் வணங்குகிறேன்."

''ராமா...ராமா!''—கிழவர் செவிகளைப் பொத்திக் கொண்டார்.

மனிதப் பிறவியின் சுமை என்னென்று கண்டாயா? வெளியில் காட்டிக்கொள்ள முடியாத புழுக்கங்கள். இவ களைத் தாங்கிக்கொள்ளத் தன்னைக்காட்டிலும் பெரும் பாரத்தை ஒண்டியாக இழுக்கும் எறும்பின் பலம் வேண்டி யிருக்கிறது.

அனுமன் ஆறுதலாக அவர் பாதங்களைத் தொட்டு வருடினான். அது இல்லாமல் அவனால் முடியாது.

''ரகு வீரா, ஒன்று கேட்கிறேன். ராவண ஸம்ஹாரம் இல்லையெனில், உங்கள் பிறவியின் நிமித்தம்தான் என்ன?''

''பிதுர்வாக்ய பரிபாலனம்''—வார்த்தைகள் அமைதி யாகத்தான் வந்தன. ஆனால் அக்ஷரத்துக்கு அக்ஷரம் ஒரு முழுமை, உருண்டை வடிவம் பெற்று, என்ன அழுத்தம், தீர்மானம், கம்பீரம்!

''அப்பா!''

அனுமனுக்கு ரோமங்கள் குத்திட்டன.

தென்றலா? தசரதனின் ஆசிமூச்சா?

ததாஸ்து.

தரிசனம் என்று தனியாக இல்லை. நித்யத்துவத்தினின்று சொட்டென ஒரு தருணம் உதிர்ந்து தொட்டுவிட்டு நகர் கின்றதே அதுதான் தரிசனம். ததாஸ்து.

அந்தக் காலப்ரமாணம் ஸீதையையும் கவ்விற்று. பந்தாட்டத்தின் நடுவில் திடீரென்று பந்தைத் தேடிக் கொண்டு தோழிகள் அனைவரும் மூலைக்கொருவராய்ப்

போய்விட தான் தனித்து நிற்பதை உணர்ந்தாள். இது பழக்கமான தனிமையில்லை. அவள் தனிமையாகயில்லை. வயிற்றில் திடீரென ஒரு முத்துப் பொறி வைத்தாற் போன்ற உணர்ச்சி.

"ஓ!"

மனம் சட்டென ஆர்யபுத்திரனை நாடிற்று. தனக்குத் திடீரெனப் புரிந்ததைக் கணவனிடம் சொல்லிக்கொள்ள ஓடிவந்தாள்.

பந்தலுள் தம்மை மறந்த இரண்டு சிலைகளைக் கண்டாள்.

# ஈ ஜகமுலோ திக்கெவரம்மா!

“ஈ ஜகமூலோ திக் கெவரம்மா...”

சபை ‘கும்’. இன்று வகையான கூட்டம்.

அவர்களிடையே ஒரு பழக்கம். இன்ன ராகம் ஆலாபனை, அதையொட்டி, இன்ன உருப்படி என்கிற முன் உடன்பாடோ, ஒத்திகையோ கிடையா. மேலும், ஆலாபனை செய்தவன்தான் கீர்த்தனையை எடுப்பது என்பதும் இல்லை. இருவருள், யாரும் எடுத்த பின் இருவரும் ஒருமித்து விடுவார்கள். ஆலந்தூர் சகோதரர்களுக்குப் பின், விஷய ஞானத்துடன் ஜனரஞ்சகத்துக்கு இவர்கள் பேர்தான் சமீபத்தில் அடிபட ஆரம்பித்திருக்கிறது. ‘மண்டைக்கனம் நடுவில் ஏறாமல் இருந்தால், பரம்பரையாகக் காப்பாற்றி வருகிற ஸங்கீதந்தான்’. ஜாம்பவான்களின் சிரக்கம்பம்.

அன்று, ரீதிகௌளையை ஆலாபனைக்கு எடுத்துக் கொண்டதென்னவோ சபேசன்தான். சாமா வழக்கமாக ஆங்காங்கே ஒட்டிக்கொண்டான், பிரிந்தான், தொட்டுக் கொண்டான்; ஒட்டக் கலந்தான்.

சமயங்களில், ஆலாபனையோ, உருப்படியோ சேர்ந்து பாடாமல், துண்டாகத் தனித்து இயங்குவதும் உண்டு. அதிலும் ஒரு ‘சமாளி’ இருக்கிறதே! சவால் அல்ல. மணிக் கட்டில் கிளியை ஏந்தி, அதன் பேச்சைக் கேட்பதுபோல.

ரீதிகௌளையின் விவரமான விஸ்தரிப்பு, இன்று சபேசனின் எண்ணத்தில் இல்லே. 'ராகரத்ன மாலிக ஜே'—லேசாகத் தட்டிவிட்டதும், ஷண்முகப்ரியாவுள் புகுந்து ஆலாபனையையும் பாட்டையும்—'மரிவேறே திக்கவரய்ய ராமா' அதுதான் சற்றுத் துரிதம்— 'சிக்'கென முடித்துக் கொண்டு, ஸ்வரங்களை அள்ளி வீசி, மிருதங்கத்தின்மேல் சரக் கூடு கட்டிவிட வேண்டும் என்று திட்டம். அதையும் முன்கூட்டிச் சாமாவோடு பங்கிட்டுக் கொள்ளவில்லை. அப்படிக் கலந்துகொண்டிருந்தாலும் சாமாவுக்கு ஆட்சேபம் இருக்காது. மைலம் வாசுவை பொக்கை வைக்கவேண்டியது தான்.

மூணு நாலு தடவையாக, அவனைத்தான் சபாக்காரர் கள், சபேசன் சகோதரர்களுக்குப் போட்டு வருகிறார்கள். முழுச் சொரூபத்தை அவர்களிடம் அவன் இன்னும் காட்ட ஆரம்பிக்கவில்லையென்றாலும், போன தடவையே, ஆட்டுக்கு வால், லேசாக ஆட ஆரம்பித்துவிட்டது.

இந்தச் சங்கீத களம் இருக்கிறதே, இதில் உழைப்பில் தானே முன்னுக்கு வருவது என்பது ஒன்று; வேறு காரணங் களாக அக்கறை கொண்டவர் வேண்டியப்பட்டவரைப் பின்னாலிருந்துத் தள்ளி முன்னுக்குக் கொண்டுவருவது மற்றொன்று. முன்னது குதிரைக் கொம்பு. பின்னதன் குரல் வளைப்பிடியில், சுயத்தகுதி திணறிற்று. இந்த நிலைமை எங்கும்தான் உளது எனினும், இங்கே பூசாரிகளின் கொடுமை கூட. இப்பவே, நம் மேடை வயசுக்கு, மேடையில் நம்மை முழு டிக்கெட்டுகளாக, பாட்டிலும் 'ரேட்டிலும்' ஏற்றுக்கொண்டிருக்கிறார்களே, இது நிஜந்தானா? அப்பப் போ, மேடையிலேயே கண்ணைக் கசக்கிப் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் 'இந்தப் பக்கவாத்தியக்காரன் எனக்கு வேண்டாம்'—என்று

சொல்வது நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. என் குழியை நானே தோண்டிக்கொண்ட மாதிரிதான்—சூத்ரதாரி கள் அவ்வளவு நுட்பமாகப் பலகையைத் தட்டிவிடுவார்கள்.

ஆயினும், இந்த மைலம் வாசு, போகப் போக வம்பு தருவான் போலத்தான் தோன்றிற்று. அவனும் மேடை ஏறி நாளாகவில்லை. ஆனால் இசை வட்டாரத்தில் காலியென்று பேர் வாங்கிவிட்டான். ஒரு பெரிய அரசியல் புள்ளியின் பிள்ளை. "அப்பன் வழியில் போகாமல், இசை மேடைக்கு இவன் ஏன் வந்தான்? ஃபீல்டில் இருக்கிற கஷ்டம் போதா தென்று இவன் சோதனையும் வேணுமா?" என்று பிழைப்புக் காரர்கள் தலையிலடித்துக் கொண்டார்கள். ஆனால் வாய் திறந்து சொல்ல முடியுமா? ஆனால் இவர்கள் புலம்பலிலும், சத்து, செத்தை பிரிப்பது கடினம். எப்படி இருந்தால் என்ன, இப்போ வாசுக்குக் கொடியேற்றம். ஆளும், கடோத்கஜன் மாதிரி.

மேடையை, சர்க்கஸ் கூண்டாக ஆக்க முயன்றான். வித்வத்தினால் அல்ல. கோமாளித்தனத்தால். சமயமில்லாத இடத்தில், அநாவசியமாக ஒரு தட்டு. பாட்டில் நூலேணி ஏறிவரும் கட்டத்தில் வித்வானின் நளினத்தை நசுக்கும் முறையில், 'படார்' 'படார்'—அடுத்தடுத்துப் பொளியும் 'சாப்பா'க்கள்.

சபையோர் சிரிப்பு அடங்கினதும், அதற்கு முத்தாய்ப் பாக ஒரு 'பிங்ங்ங்'...மறுபடியும் பீறிடும் 'கொல்'லுக்கு ஒத்தான்ஸாய்த் தான் உடல் குலுங்கல். வித்வான் சிவப்பாய் இருந்தால் முகம் குங்குமப் பிழம்பு. நிறம் மட்டாயிருந்தால் கறுங்குழம்பு. வேதனை பார்ப்பதில்தான் என்ன களிப்போ!

ஆச்சு, இன்னும் கொஞ்சநாள் போனால், 'நான் நடுவில் உட்கார்ரேன். அவர் என்னிடத்தில் உட்கார்ந்து பாடட்டும்' என்று கேட்டால், கேட்பதற்கு ஆள் இருந்தார் கள். "அப்படி ஒரு புரட்சியின் பெருமை என்னுடையதாக

இருக்கட்டுமே!'' என்று ஆசைப்படலாம். அவனா பாடு கிறான்? சாய்கால் பலம் பாட வைக்கிறது. 'சல்பேட்டா' இப்போ புகாத இடம் எது? ஆகையால் இசை திசை மாறக் கேட்பானேன்?

'நமக்கு என்ன எவன் எப்படியானும் போகட்டும்' என்று கட்டின பசுவாகயிருந்தால், திரும்பத் திரும்ப இவனையே தான் கழுத்தில் கட்டிக்கொண்டிருப்பார்கள். இப்பவே கழற்றிக்கொள்ள வழி தேடாவிடில் இந்தக் காம்பினேஷ னுக்குக் காறை பூசியாகிவிடும். இந்தத் துறையில் பகை ஆகாது. ஒருத்தர் விரோதம் நமக்கு என்ன? நாசூக்காகச் செய்யவேண்டிய வேலை; வேலைப்பாடு.

மதுரை மணி ஐயர் ஒரு சமயம் வாத்தியத்தின் துடுக்கு அடங்கினதைப் பார்த்தது நினைப்புக்கு வந்தது. என்ன நேர்ந்தது, எப்படி எந்த லகுவில், எந்த இடத்தில் என்ன பொடி, யாருக்கும் வெளிப்படையாகத் தெரியாது. நடு வாசிப்பில், மிருதங்கக்காரன், சரணாகதியில் இரு கரங் களையும் தூக்கிச் கூப்பினதுதான் தெரியும். அப்பா! அந்தச் சமயத்தில் அந்த முகத்தில் தோன்றிய இளஞ்சிரிப்பின் கருணை, அடேப்பா!—இனம் கண்டுகொள்ளச் செய்வதில் தான் இருக்கிறது! சந்தியில் மொக்கு மோறையை உடைப் பதில் என்ன இருக்கிறது? அதுபோல...

இன்று மைலம் வாசுதேவப் பிள்ளையை, பதினெட்டாம் புள்ளியில் புலியைக் கட்டுவதுபோல் ஸ்வர வலையில் மாட்டி விட்டு...கொஞ்சநேரம் நெளியட்டும், புத்தி வரும் வரை.

இன்றைய ஷண்முகப்பிரியாவின் 'ப்ளான்' இதுதான். அந்தக் குறியில்தான் போய்க்கொண்டிருக்கையில், சர்மா, 'ஜனனி நினுவினா'வை எடுத்ததும், சபேசன் வியப்புடன் சாமாவை நோக்கினான். சாமா முகம் குனிந்திருந்தது.

அதுவும் எடுக்கிற இடத்தைப் பார்!

"ஈ ஜகமுலோ திக்கெவரம்மா?"

அக்ஷரத்துக்கு அக்ஷரம் இடையில் கமகம் அலை தழைந்து இழைந்து, "திக்கெவரம்மா"வில், தேம்பல் நாபி வேரைக் கொத்தாகப் பிடுங்கிக்கொண்டு எழும்பினதும், ஹாலில் விளக்குகள் 'பொட்'டென அணைந்தன. மேடையில், பின்னால் ஆள் உயரம் ராஜராஜேஸ்வரி (ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஸங்கீத ஸபா) படத்துக்கெதிரே பஞ்சமுகக் குத்து விளக்குச் சுடர் மட்டும் இடத்துக்கு ஸந்நிதிக் களை வந்து விட்டது.

"ஈ ஜகமுலோ திக் கெவரம்மா
அம்...பா (முங்கி மொண்டு எழுந்து)
ஜனனி நினு வினா"

குரல்கள் சிறகு விரித்த எழுச்சியில், ஜோடி சேர்ந்தது இருவருக்குமே தெரியாது. ஒரு தனிச்சக்தி இரு குரலையும் வாங்கிக்கொண்டது.

நிகழ்ந்துகொண்டிருக்கும் ரஸாயனம், வேளையின் திரிபுக்குக் காரணம் சாமாவா? சபேசனா? சபையோரின் பாத்திர நிலையா? அதோ குத்துவிளக்கு தரும் பெரு நிழல் சிறு ஒளியில். படத்தினின்று தனி ஒளிவீசும் அந்தப் புன்னகைக்குள்தான் ரகஸ்யம் ஒளிந்துகொண்டிருக்கிறது. இந்த வேளையின் ஜாதுவும் ஐவ்வாதும் அவளுடையதுதானே!

பக்கவாத்தியங்களைப் பற்றிச் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. அடியைத் தள்ளியெடுத்ததால், தள்ளிப்போன தாளத்தில் ஏமாந்து ஒருகணத் திக்ப்ரமையில் செயல் மறந்து போனார்கள்.

என்றுமே இருவரும் ஓங்கித் தொடை தட்டியோ, கையோடு கை அறைந்தோ அட்டகாசம் பண்ணுவதில்லை. அங்க சேஷ்டையை அறவே விலக்கி—

"ராகதேவதைக்கு முகத்தில் இடம் கொடு. ராகத்தை இடவசதியாய்ப் புழங்கவிடு. டூத் பேஸ்டாய் பிதுக்காதே." சபேசனுக்குக் குருவின் போதனை.

"சங்கதிகள் என்னவோ லக்கக் கணக்குத்தான், ஆனால் முன்னாலேயே விடைதெரிந்த கணக்கல்ல. கடைசிவரை விடை காட்டாமலே வட்டத்துள் மறைந்த கணக்காயிருத்தல் வேண்டும். வழி தப்பிப்போய், நீ முழிக்கும் கணக்காக ஆகிவிட்டது."

இதுவும் அவர்தான்.

உதவுபடியில் சபேசன் சாரீரம் சிம்மத்தை நினைவூட்டியது. அடிக்கார்வைகளில் உன்னதமான உணர்ச்சிகளைக் காட்டவல்லது. விரக்தியான தீரம், அற்பங்களுக்கு இரங்கா பவுருஷம். மிருக ராஜ கம்பீரம்.

எவ்வளவுக் கெவ்வளவு சபேசனுக்கு மந்தரம் பலமோ, அத்தனைக்கும் பஞ்சமத்தில் சாமாவின் குரல் ஈடு கொடுத்தது. இனிமைகூட மந்தரத்திலிருந்து பஞ்சமத்துக்குப் பிசிர் இல்லாமல் ஒரே மூர்ச்சத்தில் கமான் வளைத்தது. அந்தரத்தைக் கிழித்துக்கொண்டு மேலே செல்கையில், இரு பக்கங்களிலும் கற்கண்டுச் சிதர்கள், சில்கள் திரைவிரித்து, திவலைகள் உதிர்ந்தன. விளம்ப காலத்தில், அடிமேல் அடி எடுத்து வைக்கையில், சிற்பக் கதவுகளின் திறப்பில் வெள்ளி மணிகள் கிணி கிணி...ஆனால் இந்தப் பாட்டில் பிர்க்கா வித்தைகளுக்கோ, ஸ்வர சமத்காரங்களுக்கோ இடம் இல்லை.

அலைகள், அலைகள். தவழும் அலைகள்; ஆடி வேர் விட்ட அலைகள். பகுள பஞ்சமி நிலாவைக் கட்டிய நக்ஷத்திரக் கூட்டங்களுக்கடியில் நடுக்கடலின் மூச்சு மிதப்பின் மேல் கவிழ்ந்த ஓடத்தின் அசைவுகள். தொண்டை துக்கத்தின் சிறகடிப்பு.

ஸாயங்காலே மலையடிவாரத்தில் மானஸ ஏரியில் அன்னக் கூட்டத்தின் பவனி.

பழுத்த சுமங்கலி அணிந்த கனத்த தோடுகளில் சிவப்புக் கல்லின் அடக்கமான நீரோட்டம்.

''ஈ ஜகமுலோ
திக்கெவரம்மா''

சபேசனின் சாரீர கனமும், சாமாவின் சாரீர நளினமும் ஸர்ப்பதண்டம்போல் ஒன்றோடொன்று பின்னிப் பிணை கையில்,

திக்குத்தெரியாக் காட்டில்
திக் திக் திக்—
திக்குத் தப்பிய இரு குழந்தைகள்
ஒன்றையொன்று அணைப்பில்
ஒன்றில் ஒன்று துணைதேடி,

''திக்கெவரம்மா
திக்கெவரம்மா
திக்கெவரம்மா''

அலறி அலறி ஒடுங்கி ஓய்ந்து, விசும்பலாகி அந்தரத் தோடு மூச்சாய்க் கலந்ததும் தருணம் களையவிழ்ந்தது.

தவிக்கும் தன் குழந்தைகளைத் திரும்ப வாங்கிக் கொள்ள, தாய் வயிறு திறந்தாற்போல், ஒரு பெரும் கேவல் அத்தனை தொண்டைகளிலிருந்து புறப்பட்டது சொல்லி வைத்தாற்போல் விளக்குகள ஏற்றிக்கொண்டன. வேளை கலைந்தது.

சபேசன் முகம் ஒளி வீசிற்று. சாமாவின் கன்னத்தை வருடினான். உடனேயே சாமா, சபேசனின் பாதங்களில் இரு கைகளாலும் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

கோஷம் கூரையைப் பிளந்தது.

கவிதா நேரங்கள் எப்படி நேர்கின்றன? அவளாலும் சொல்லமுடியாது.

ஷண்முகப்ரியாவின் திட்டம் சபேசனுக்கு அடியோடு மறந்து போயிற்று.

திக்கெவரு

கண்ணீரை மறைக்கக் கௌரி தலைகுனிந்தாள். "திக்கெவரம்மா அடிக்குச் சாமா பூரண ஆஹுதி ஆகிவிட்ட தன் பின்னணி நோக்கி அவள் நினைவு, வருடங்களை—ஏழெட்டு இருக்குமா? ஒன்பது. பத்து—கடந்துகொண்டிருந்தது.

அம்பத்தூரில் அவர்கள் வசிக்கும் இடத்தில் அப்போ ஐந்தாறு வீடுகள்—இப்போ பரவாயில்லை—தெளித்தாற் போல் ஆங்காங்கே எட்ட எட்ட; அதிலும் அவர்கள் வீடு கீழ்க்கோடி. ஆனால் சபேசனுக்குச், சாதகம் பண்ண அமைதியான சூழ்நிலை. மேலே வானம், கீழே பூமி. மார்கழி தையில் ஜமக்காளம் விரித்தாற்போல் பூமி பச்சைப் பசேல், பட்சி ஜாலம், முகில் கூட்டங்களின் கம்பீர மேய்ச்சல். தந்திக் கம்பங்களின் மோன சாட்சி. பகலிலே பாம்பு தாராளமாகப் புழங்கும். திருடன் பகல் இரவு பார்க்க வேண்டாம் கண்ணெதிரே வெந்நீர்த் தவலையைத் தூக்கிக்கொண்டே, 'அட போம்மா, உன் தொலையாத சொத்துக்குப் போடற கூச்சலைப் பாரு! நல்லாப் போடு' என்று அலுத்துக் கொள்ளலாம்.

நடுப்பகல். ஒருவாறு காரியங்களை முடித்துக்கொண்டு, கௌரி அப்போதான் கலத்தில் சாதத்தை வைத்துக்கொண்டிருந்தாள். நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வெளியே ஓடினாள். வாசல் கேட்டுக்கருகே பூவரச மரத்துக்கும் முன்னறையின் ஜன்னல் கம்பிக்கும் இடையே கட்டியிருந்த கொடியில் காய்ந்துகொண்டிருந்த துணிகளின் நடுவிலிருந்து ஓர் இளைஞன், மஜந்தாக் கலர் புடைவையை உருவிக்

கொண்டிருந்தான். அவளைக் கண்டதும், புடைவையைச் சுருட்டிக்கொண்டு ஓடினான். 'கேட்டுக்' கதவு வெறும் மூங்கில் தட்டி, கௌரியின் வாய்க்குழறலில், முன்னறையில் சபேசன் உண்ட மயக்கத்தின் கண்ணயர்வு கலைந்து, எழுந்து துரத்திட, திருடனைப் பிடிக்கவும் பிடித்துவிட்டான்.

பையனிடம் எதிர்ப்பு இல்லை. மணிக்கட்டைப் பற்றி இழுத்துக்கொண்டு கூடத்துள் வந்து, பையனை எதிரே நிறுத்தி ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டான்.

"ஏன் எடுத்தே?"

என்ன அசட்டுக் கேள்வி! அவனுக்கே தெரிந்தது.

ஆனால் இதுமாதிரி விசாரணைக்காகவே—கன்னத்தில் நாலு அறை, வயிற்றில் குடல் வெளிவந்துவிடும் போல் இரண்டு குத்து—ஆள் கீழே விழுந்ததும், புரட்டிப் புரட்டிக் காலால் உதை—கண் வீங்குவதை, உதடு கிழிந்து ரத்தம் பீறிடுவதைப் பார்த்துக் களிக்கவே—துடிப்பவர்களும் இருக்கிறார்கள். திருடனைப் பிடித்தும் ஆயிற்று. சும்மா விட்டு விடவும் முடியாது. வேண்டியே இல்லை. இதுபோன்ற அசம்பாவிதங்களால் இடத்தின் சுருதியே குலைந்து விடுகிறது.

கௌரி ஜன்னல் ஓரமாக நின்றாள். அவளுக்குப் பயமாயிருந்தது.

"ஏன் எடுத்தே?"

பையன் மார்லே கை கட்டிக்கொண்டு நின்றான். நல்ல சிவப்பு. முகம் கிரேக்க வார்ப்பு. Achilles Apollo, Alexander—தலை மயிர் மோதிரக் குவியல். முகத்தில் பயத்தைக் காட்டிலும் குழந்தையின்பால் ஏக்கம்போல் ஏதோ திகைப்பு.

"வாயைத் திறக்கப்போறையா இல்லையா?" சபேசன் கையை ஓங்கினான்.

"அம்மாவுக்கு இதே மாதிரி புடைவை இருக்கு."

ஓஹோ, உன்னை ஜோடி தேடிண்டு வரச்சொன்னாளா?

பையனுக்கு முகம் ஆரத்தி கொட்டின மாதிரி ஆகி விட்டது.

"அம்மா செத்துப்போயிட்டா."

சபேசன் கட்டடம் விட்டுப்போயிற்று. கௌரி ஓடிவந்து பையனை அணைத்துக் கொண்டாள்.

சமையலறைக்குக் கூட்டிக்கொண்டுபோய், உட்கார வைத்துத் தன் கலத்தை அவனிடம் அப்படியே நகர்த்தி, சாதத்தின் மேல் குழம்பை ஊற்றி, அதன்மேல் நெய்யையும்—சுண்டின கீரை. பையன் சாப்பிட்டு மூனு நாளாயிற்று.

பிறகு தேம்பல்கள், விசும்பல்கள், விக்கல்கள். விசிப்புகளுக்கிடையே, கண்ணீரில் நனைந்து உதிர்ந்த வார்த்தைகளை, புதிருக்கு விடை தேடுவதுபோல், அடுக்கிச் சேர்த்துப் பார்த்ததில் சாமாவின் கதை மூகடு நிழல் தெரிந்தது.

பையன் P.U.C. படித்து முடித்திருந்தான். ஒரே பிள்ளை; அம்மா பிள்ளே. அம்மாவுக்குப் புற்றுநோய். செத்து மூன்று வாரம் முடியவில்லை. கடைசிக் காலத்தில் அவள் பட்ட வேதனையிலும் அவனுக்காகத் தன் சிரிப்பைக் காப்பாற்ற முயன்ற வேதனை—பிரிவின் நிச்சயம் தெரிந்து போனதும் ஏற்பட்டுவிடும் அதிக ஒட்டுதல், உடனே பிரிவு. கடைசி நிமிஷம் வரை நினைவு...விவரங்கள் அவிழ அவிழ, கௌரி அழ ஆரம்பித்துவிட்டாள்.

அம்மா காரியம் முடிவதற்குள் அப்பா மறு விவாகத்துக்கு ஏற்பாடு பண்ணிக் கொண்டிருப்பது எப்படியோ புரைசல் ஆகிவிட்டது. அம்மா போவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னாலிருந்தே சதி நடந்துகொண்டிருக்கிறது. சாமாவுக்கு உள்ளே நரம்பு ஏதோ அறுந்தது. வீட்டை விட்டு ஓடிவிட்டான்.

சாமா, தன் அப்பாவைப் பற்றிப் பேசியது அன்றோடு சரி. அன்று தங்கியவன்தான். அவனைப் போவென்று சொல்லவே தோன்றவில்லை. ஸரிமாகரி ஸரிகரிஸா—குழந்தைக்கு ஆரம்ப சிக்ஷை மலகரி வர்ணம்போல் விஷயம். அவ்வளவு சுலபமாக, எளிமையாக, இயற்கையாகத் தன் வழியில் தானே புரிவு கண்டுவிட்டது. (அல்லது கண்டு கொண்டதாக)

பிறகு ஒருநாள், கிணற்றடியில் சொக்காய்க்குச் சோப்பு போட்டுக்கொண்டே, சாமா ஏதோ பாட்டு முனகுவதைக் கேட்டுச், சபேசன் அவனை அழைத்து எதிரே உட்கார வைத்துத் 'தாஜா' பண்ணி வாய்விட்டுப் பாடச் சொல்லிக் கேட்டதும், பிரமித்துப் போனான். குரலா அது? கிட்டப்பா அம்சம். அஞ்சு கட்டையில் நீர்வீழ்ச்சி கொட்டிற்று. இடையிடையே மின்னல்கள், ஏதேதோ கலர்கள்...

புதையல் கண்ணில் பட்ட பிறகும், வீணாய்ப் போகக் காண்பது பாடத்தில் சேர்ந்தது என்று சபேசனுக்குத் தோன்றிவிட்டது. அன்று மாலையே குருநாதர் படத்தை இருவர் நடுவே வைத்துக்கொண்டு பாடம் ஆரம்பமாயிற்று. கரையில் கிடந்த மீனை அலையில் சேர்த்துவிட்ட மாதிரி பையன் வெள்ளத்தில் நீந்தினான்.

அம்மா பாடுவாளாம். வீணை வாசிப்பாளாம்!

அன்றைய சிட்சை முடிந்ததும், சபேசன், "சரி சாமா, நாளையிலிருந்து நீ என் வேஷ்டியையும், மன்னி புடைவையும் தோய்த்துப் போட வேண்டியதுதான். குடவை வாங்கித் தாரேன். எங்கிருந்தாலும் பூப்பறிச்சுண்டுவரணும், தெரிஞ்சுதா? நான் பூஜை பண்ணாவிட்டாலும், அவளுக்குக் கொண்டைக்காச்சு."

சாமா முகத்தில் குங்குமம் பீரிட்டது. கை கூப்பிக் கொண்டான். நாத் தழுதழுக்க: 'அண்ணா உங்களுக்கும்

மன்னிக்கும் நான் என்னதான் செய்யக்கூடாது? செய்யக் கூடாததை மட்டும் சொல்லிக்கொடுங்கள். தெரியாத்தன மாகச் செய்துவிடப் போகிறேன்.'' அதரங்கள் நடுங்கின.

சபேசன் குரல் தாழ்ந்து, ''சாமா, நீ உன் அம்மா பாச்சி ரொம்பக் குடிச்சுட்டிருக்கே.''

''நான் இங்கே இருக்கேன். கெக்கே பிக்கே சித்தே நிதானமாக இருக்கட்டும்.''

இருவரும் திரும்பினர். கௌரி குத்துவிளக்கின் சுடரைத் தூண்டிக்கொண்டிருந்தாள்.

'அம்மா தாயே நீ இருக்கையா?'

இருவரும் கைக் கூப்பினர். ஒருவன் கேலியாக, மறுவன் உண்மையில்.

விளக்கைத் தூண்டும் கௌரி.

என்னை இருளிலிருந்து மீட்ட கௌரி.

என் அம்மா பேரைத் தாங்கும் கௌரி.

அவளும் அவள் தாயை இழந்து இன்னும் ஆறுமாத மாகாத கௌரி.

அம்மாவின் இஷ்டக் கலர் என்று அன்று நான் கொடியி லிருந்து உருவிய புடைவையை இன்று உடுத்துக்கொண் டிருக்கும் கௌரி.

ஆனால் மூட்டங்களிலிருந்து சாமாவால் முற்றும் விடுபட முடியவில்லை. சமயங்களில் மாலை வேளைகளில் தூரத்து விளிம்பை வளைக்கும் ரெயில் பாதையைச் சிந்தித்த படி, பின்னால் கை கோத்த வண்ணம், தன்னையிழந்து அவன் நிற்கையில், அந்தக் கண்களுள், பின்னால், பின் னுக்கும் அப்பால். வெகு வெகு அப்பாலில், கடல் வீக்கத்தின் மேல் ஒரு காகிதக் கப்பல் தத்தளிப்பது, பார்க்கத் தெரிந்தவர்

களுக்கு, பார்க்க மனமும் இருப்பவர்களுக்குத் தெரியும். அதன் கிழிந்த பாய்மரத்தில், நக்ஷத்திரங்களில், மூன்று எழுத்துக்கள் பொறித்திருந்தன.

அம்மா!

சாமாவுக்கு உத்தியோகமும் சீக்கிரமே கூடிவிட்டது. அதெல்லாம் ஒரு முகராசி. சபேசன் சிபாரிசு. சபேசன் வேலை பார்க்குமிடத்திலேயே. பின்னே என்ன, இந்த நாளில், சங்கீதத்தையே வயிற்றுப் பிழைப்புக்கு முழுக்க நம்ப முடியுமா? அதுவும் இந்த நாளில்...சங்கீதார்ப்பணம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. சபேசனின் பல புழுக்கங்களில் இதுவும் ஒன்று. இப்போது நாடு பூரா நடந்துகொண்டிருப்பது வயிற்றுப் பிழைப்பா, வயிற்றெரிச்சலா?

ஒரு ஞாயிற்றுக்கிழமை சபேசன் ஸலூனுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்தான்; தலைவெட்டிக் கொள்ளாமலே, 'படா' வெறுப்பில் இருந்தான்.

''டே, சாமா எங்கேருக்கே? வா இங்கே. ஒரு கத்திரிக்கோல், சீப்பு, கண்ணாடி, ஒரு நியூஸ் பேப்பரும் கொண்டு வா, இன்னிக்கு நீ எனக்கு வெட்டணும், பிறகு நான் உனக்கு வெட்டுவேன். இதிலே சங்கதிகள் வக்கிரம் ஏதும் வேண்டாம். பிடரியையும் காதோரத்தையும் கொஞ்சம் கவனி போதும். இதுக்கு அவனுக்கு அஞ்சு ரூபாய் வேணுமாம். இதுக்கு எனக்கு முன்னால் பத்துபேர் 'க்யூவி'லே காத்திண்டிருக்கா. ஊம், ஊம், ஆகட்டும்.''

கௌரி அடித்துக்கொள்கிறாள். 'சுவாமி படம், குலாசாரம், கிருத்திகை—யார் அவளைக் காதில் போட்டுக் கொள்கிறார்கள்?

சபேசனுக்குப் பட்டாபிஷேகம் ஆனதும் அவன் சாமாவுக்குப் பண்ணினான். சாமாவுக்குத் தேவைகூட இல்லே. ஆனால் சபேசனுக்கு ஆத்திரம் அவ்வளவு.

இரண்டுபேரும் கிணற்றடியில் வந்து நின்றார்கள். திட்டு ஓயாமலே கௌரி சாமாவை முதலில் உட்காரச் சொன்னாள்.

"ஏன், இங்கேயும் நான் க்யூவா?"

ஆம்படையான் தலையில் ஆம்படையாள் கொட்டலாகாது! "சாமா உங்களுக்கு ஸ்நானம் பண்ணிவைக்கட்டும். எது இந்த நாளில் மலிவு? தலையைச் சுத்தி அவன் கேட்டதை எரிஞ்சுடறதுதானே? இருக்கும் விலைவாசி அவனுக்கு இல்லையா? ஏதோ இந்தமட்டுக்கும் மிச்சம் பிடிச்சுட்டேளே?"

"ஆமாம். நான் இப்படியெல்லாம் மிச்சம் பிடிக்கறதை ஈடு பண்ணத்தான் ஒருநாள் விட்டு ஒருநாள் எண்ணெய்க் கடாயை அடுப்பில் ஏத்தி ஆறதே! பஜ்ஜி, பக்கோடா மசால் வடை, ஓமப்பொடி, அடை, சிப்ஸ், எல்லாம் வதக்கல்தான். வேகவைச்சுப் பண்றதுன்னு ஒண்ணு இருக்கு என்பதே உனக்கு மறந்துபோச்சு என்று நினைக்கிறேன்."

"ஆமாம், அத்தனையும் என் ஒண்டி வயிற்றுக்குக் கொட்டிக்க. நாக்கைக் கொட்டிண்டு திங்கறதில் குறைச்சல் இல்லை. கடைசியில் அரைச்சவளுக்கு ஆட்டுக்கல். வார்த்தவளுக்குத் தோசைக்கல்."

"அட, நல்லாயிருக்கே கதை? பண்ணினால், திங்கறோம்! தொட்டி முற்றத்தில் தூக்கி எறியச் சொல்கிறையா?"

"சரி, அப்படித்தான் போங்கோ. காய்கறிகள் இந்த நாள் ருசிதான் மாறிச்போச்சு. கண்ணாலேயாவது பள பளன்னு பார்க்கப்படாதா? ஆத்துக்காரரும் தம்பியும் சம்பாதிச்சுக்கொண்டுவந்து போடறப்போ இந்த உரிமைகூட இத்தனை நாள் கழிச்சு எனக்கு இருக்கக் கூடாதா?"

"தம்பியா? அது யாருடா, தம்பி?"

"இதோ இவன்தான்!" சாமா தலையில் 'ணக்'கென்று குட்டினாள். வேறு பிறந்தாத்து உறவு எனக்கென்ன தட்டுக் கெட்டுப் போறது?

''ஓஹோ அப்படிப் போறதா விவகாரம்?''

''அண்ணா, உங்களை நான் அண்ணா என்கிறேன், அப்போ அக்கா எனக்கு மன்னியா? அக்கா, உங்களை அக்கா என்கிறேன. அப்போ அண்ணா எனக்கு அத்திம்பேரா?'' சாமா முகத்தில் உண்மையாகவே குழப்பம் தெரிந்தது. அதில் எப்பவுமே ஒரு மதலைத் திகைப்பு. ஜாடையாகத் தான். ஆனால் அதைவிட்டு அவன் வளரவே முடியாத மதலை.

''அதோ அந்தப் பாட்டியைக் கேளு.''

''அதன் பேருதான் முறை தெரியாக் கதை!'' என்று பதில் அளித்துக்கொண்டே கௌரி வாளித் தண்ணீரைத் திடு திப்பெனத் தலையில் ஊற்றினாள்.

இதுபோல் சமயங்களை மறக்க முடியுமா?

அந்தச் சமய மலர்ச்சியில் நாம் ஆயிரம் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், சமயங்கள் மறக்கத்தான் இருக் கின்றன. அப்பப்போ, அப்பப்போ—அதுதான் சமயம். சமயம் நின்றவிடத்தில் நின்றுவிட்டால் உலகம் எப்படி நகரும்? இரவு பகலாவது எப்போ? பிறப்பு, வளர்ப்பு, சாவு, நல்லது, பொல்லாது, கலியாணம், கார்த்தி மறுபடியும் குழந்தைகள்...பழையன கழிதலும் புதியன புகுதலும்... நினைவும் மறதியும் ஒன்றுக்கொன்று மாற்று. நினைவு மறதி யின் அடிவயிறு.

''மருமகளே, மருமகளே வா வா!'' கௌரி, உற்சாக மாக, பரவசத்தில் பாடினாள். ''வலது காலை முன் எடுத்து வாழ்விக்க உள்ளே வா—'' உள்ளே வந்ததும் மணப் பெண்ணை இறுக அணைத்துக்கொண்டாள். அவளுக்குக் கண் கலங்கிற்று.

''ராஜி, தெரியுமோன்னோ? நான் உனக்கு மாமியார் இல்லே; ஓர்ப்படிதான்.''

''ஓஹோ, இப்படி ஒரு சங்கதியா?'' சபேசன் குரலில் ஏளனம் ஒலித்தது.

''அப்போ மன்னி, நீங்கள் இவளுக்கு ஓர்ப்படி. ஆனால் எனக்கு அக்கா இல்லையா?''

சாமாவின் குரலில் மெய்யாகவே ஒரு குழப்பம் தெரிந்தது. கௌரிக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

''அக்கா, அவர் என்ன சொல்கிறார்?''

''ரெண்டு பேரும் சேர்ந்து கூத்துலே கோமாளி பண்ணறா—சங்கீதக்காரர் வேறே. அதிலும் சபேசன் சகோதரர்கள் வேறே. கொஞ்சம் ஒருமாதிரியாத்தான் இருப்பா. பயப்படாதே.''

''அப்போ எங்களுடைய ராச்சாப்பாடு ராத் தங்கல் இன்னிலேருந்து ரூட் 20பி யா?

''சரி, சரி போதும் உள்ளே வாங்கோ'' கௌரி சற்றுச் சிடுசிடுப்பாகத்தான் இருந்தாள். ''அவள் ஏற்கெனவே மிரண்டிருக்கா. உங்கள் பேச்சு நடை புரிய இன்னும் கொஞ்ச நாளாகணும். திஸ்ரம், கண்ட ஜாதி திரிபுடை—''

அம்மா!

பழைய நினைவுகளின் சுழல் அவளை மெதுவாய் உள்ளிழுக்கையிலேயே, கௌரி பக்கத்தில் ராஜி முகத்தை ஓரக்கண்ணால் கவனித்தாள். ராஜி அசாத்திய அழகில் பொலிந்தாள். அவளுடைய சுபாவமே அவள் உள்ளுக்கு முறுக முறுக முகம் மெருகிட்டது. இது கௌரி கண் கண்ட அநுபவம். ஆனால் அவள் வெதும்பலுக்கு காரணந்தான் சரியாகப் பிடிபடவில்லை. பாவம், சாமா. நாளுக்கு நாள் பாவம், பாவம் சாமா! கௌரி உதட்டில் புன்னகை. ஆனால் கண்களில் சங்கடம் முற்றும் மறைக்க முடியவில்லை.

அன்றிரவு, கௌரியின் கவலை வீண்போகாமல், ராஜி வெடித்தாள்.

""உங்களுக்குச் சொந்தமாக ஆன அந்த ஒரு நிமிஷத்தையும் அவர் காலில் காணிக்கையாகச் சேர்த்துட்டேன். உங்களுக்குத் தனியாகப் பிரகாசிக்கணும் என்கிற ஆசையே கிடையாதா?""

""என்ன சொல்றே ராஜி, எனக்குப் புரியல்லையே!""

""உங்களுக்கு ஒண்ணுமே புரியாது. உங்களுக்குச் சொந்தம்னு எதுவுமே கிடையாதான்னு கேட்கிறேன். "இடுப்பு வேஷ்டி ஏது?"" ""அண்ணா கொடுத்தார்." இந்தச் சொக்காயை இதுவரை நான் பார்க்கல்லியே?' ""அண்ணாவோடது. தனக்குச் சின்னதாப் போயிடுத்துன்னு கொடுத்தார்."" ""கச்சேரி சன்மானத்தில் உங்க ரெண்டு பேருக்கும் சம பங்கா?" 'எனக்கென்ன தெரியும்? அண்ணா கொடுத்தது. அவர் என்ன கொடுத்தால் என்ன?" கேட்டுக் கேட்டுக் காது புளிச்சுப்போச்சு. நீங்கள் புதுசா வேட்டி வாங்கினாலும் அவர் கட்டி அவிழ்த்துப் போட்டதைக் கட்டிண்டால்தான் உங்களுக்குக் கட்டிண்ட மாதிரி இருக்கு? இல்லையா?""

சாமா புன்னகை புரிந்தான். ""ராஜி உனக்கும் புரியாது. ஆனால் புரியாமலே உண்மையை இவ்வளவு தெளிவாகச் சொல்ல எப்படி முடிகிறது?""

""எனக்குப் புரிஞ்சவரைக்கும் போதும். நாம்தாம் தனியா வந்துட்டோமே. ஆனால் உங்கள் வாசம் பூரா ஏன் அங்கே? காலையில் சாதகம்னு போயிட்டு வந்து அவசர அவசரமா அள்ளிப் போட்டுண்டு ஆபிசுக்கு ஓடறது. சாயந்திரம் ஆபிசிலிருந்து நேரே அங்கேதான் ஆஜர். ராத்ரி பத்துமணிக்கு வந்து கதவைத் தட்டறது. இங்கே நான் மெனக்கெட்டு ஸ்பெஷல் சமையல் பண்ணி வெச்சுண்டு காத்திருந்தால், சாப்பிட்டுட்டு வந்துட்டேன்கறது. அந்தப் புளிச்ச பழையதும் சுண்டக்குழம்பும் உங்களுக்கு மணக்கறது; அங்கே என்ன பூனைக்குட்டி மாதிரி சதா சர்வமும் அவர்,

காலையே சுத்திண்டு? எனக்குப் பிடிக்கல்லே. ஆமாம், கொஞ்சம்கூடப் பிடிக்கல்லே!" முறுக்கேற்றத்தில் அவள் குரல் கிறீச்சிட்டது.

சாமா தோளைக் குலுக்கிக்கொண்டு வாளாயிருந்து விட்டான். இவளுக்கு என்ன பதில் சொல்ல முடியும்? இவளுக்கு என்ன புரியும்? அவனுக்கே புரியவில்லை. இன்று அவன் நாக்கில் அந்தப் பாட்டு காத்திருப்பானேன். ரீதி கௌளையில் வேறு உருப்படிகள்தானா இல்லை?—த்வைதமு ஸுகமா, தத்வமறியதாமா, நனுவிடசி, பாதலீகதீரா—இதே 'ஜனனி நினுவினா' மறுபடியும் இதே மாதிரி அமையுமோ? இல்லை, இன்றைக்கு அதில் விதி கலந்திருந்தது.

தாரமும் குருவும் தலைவிதி.

அண்ணா என் குரு பாக்யம்.

ராஜி—ஹூம்! அண்ணா அப்பவே ஜாதகப் பொருத்தம் போறல்லேன்னா, ஆனால் நான் ஆசைப்பட்டேன். நான் ஆசைப்பட்டேன்னு தெரிஞ்சதும் என் ஆசைக்குக் குறுக்கே நிக்கலே. படறேன். படவேண்டியதுதான். பாரேன், ஈரம் பட்ட மின்சாரக் கம்பி மாதிரி ஏன் இப்படிச் சொட சொடக் கறாள். எரியறாள்? அப்போ கண்டது ரூபம். இப்போ காணறது சொரூபம், காணக் காண இனி சொரூபந்தான்.

சாமாவுக்குச் சிரிப்பு வந்தது.

என்ன சிரிக்கறேள்?

சாமாவுக்குச் சிரிப்பு பீறிட்டுக்கொண்டு வந்தது.

* * *

The trough of low pressure on the bay...''

கௌரி எரிச்சலுடன் வானொலி வாயை அடைத்தாள். 'ட்ரஃப்' ஆம்! எந்த மாட்டுக்குக் கழநீர் கலக்கி வைக்கிற ட்ரஃப்! நேற்று மாலை வரை சோடையே தெரியவில்லை. ஆனால் இன்னிக்கிக் காலை பிடிச்சது இன்னும் விடவில்லை.

அதுவும் ஞாயிறு காலை பிடித்தால் வாரம் பூரா விடாதாமே! வீடு விடிஞ்சாப்போலத்தான்! சொட்டலுக்கு அங்கங்கு தானே வைத்திருக்கும் ஏனங்களை ஓரக் கண் கண்டு கௌரி அதைரியமுற்றாள். சொட்டலா? அப்படி அப்படியே ஊத்தறது. சமையலறையில் மேலண்டைச் சுவர் கண்ணீர் வடிக்கிறது. Gas அடுப்புப் பாழ்தான், தரை தெப்பல், சொந்த வீட்டுக்கு அவர் பட்ட ஆசையைக் கண்டுகொண்டு தரகன் பண்ணினது துரோகம்; தலையில் கட்டிவிட்டான். சும்மா, அங்கங்கே ஓட்டுப் போடக் கை வெச்சால் ரூவா மூணு எகிறும். எங்கே போறது?

கௌரி எழுந்துபோய்க் காற்றிலடித்துக் கொள்ளும் ஜன்னலை மூட முயன்றாள். சட்டத்துக்கும் சுவருக்கும் விட்டுக்கொண்டதால் கதவு மக்கர் பண்ணிற்று. மின்சாரம் 'கோவிந்தா'. இங்கேயே மூணுக்குன்னாலே விளக்குக்கு மங்களம். குத்துவிளக்கை ஏற்றிக் கூடத்தில் வைத்துவிட்டு ஊஞ்சலில் உட்கார்ந்தாள். ஊஞ்சல் முனகிற்று.

லோகம் துரோக மயம். அவர் நேற்று இரவுதான் தஞ்சாவூருக்கு வண்டியேறினார். அங்கு நிலக் குத்தகைக் காரன் துரோகம். மூணு போகமா ஏமாத்தறான். அப்போத் தானே ஐயர்வாள் நிலத்தை அவன் சொன்ன விலைக்கு அவனுக்கு விற்றுவிடுவார்! விற்றேயாகணும். இப்படியே அவன் ஓட்டி ஓட்டிப் பெரிய பூமியாலே வளைச்சுப் போட்டாச்சு. இந்தத் தடவை விற்றுத் தொலைத்துவிடத்தான் சபேசன் போயிருக்கிறான். காலமே துரியோதனன் காலத்தி லிருந்தே துரோகத்துக்குத்தான். "ஊசிமுனை குத்தளவுக்குக் கூட மண் தரமாட்டேன்." நம்மைப்போல வாயில்லாப் பூச்சிகளுக்குக் கையாலாகாத கப்பிகளுக்கு, குத்துவிளக்குத் தான் துணை. சுவாமி அலமாரியில் சம்புடத்திலிருந்து உதிரி விபூதியெடுத்து நெற்றிக் குங்குமத்தின் கீழ், நாசிப் பள்ளத் தில் இட்டுக்கொண்டாள்.

மழையின் போக்கைப் பார்த்தால் இது வெறும் அம்பத்தூர் ஸ்பெஷலாகத் தோன்றவில்லை. அப்படி ஒன்று உண்டு: அவர்கள் வீட்டைச் சுற்றி மட்டும் சேறாக்க.

கணக்கிட்டால், மழைக் காலத்தில் மழையென்னவோ மிஞ்சி மிஞ்சிப் பத்து நாட்களுக்கு மேல் இல்லை. ஆனால் சேறு காய ரெண்டு மாதம். வெளியே போகையிலும் உள்ளே வருகையிலும் சேறு பூட்ஸ் போட்டுக்கொள்கையில் அந்த இரண்டு மாதங்களில் உலகமே "சீ..."

நேற்று வரை வெயில் தாளமுடியவில்லை. இந்தக் கோடையே கொடுமைதான்.

அவள் அப்பா பள்ளிக்கூட வாத்தியார். அவர் பாடம் சொல்கையில் அவள் கேட்டிருக்கிறாள்.

"கலிமுற்றி, கடைசியாக ப்ரளயம் ஏற்படும். மழை கொட்டுக் கொட்டெனக் கொட்டும். மூணு நாள் கொட்டி உலகமே அழியும். ஆனால் மழை வருவதற்கு முன்னால், நாற்பது நாட்கள் வெயில் அப்படிக் காயுமாம் பதினெட்டுக் சூரியர்கள் கண்ணுக்கே தெரியுமாம். "டேய் குசவா"— வகுப்பில் ஓர் உடையார் பையன்—"சூளைக்கு நல்லதாச் சுன்னு நீ பாட்டுக்குப் பானையை அடுக்கிடாதே. தண்ணிடா அத்தனையும் தண்ணி." மழை அப்படித்தான் பெய்கிறது.

அவர் ஊருக்குப் போய் அங்கே மாட்டிண்டிருக்கார். நான் இங்கே. சாமா அவன் வீட்டில். சாமா பலவிதங்களில் மாட்டிக் கொண்டிருக்கிறான்.

ராஜி படி மிதித்து உள்ளேவந்து அவர்கள் சேர்ந்திருந்த அந்தப் பதினைந்து நாட்களுக்குள், கௌரி ராஜியைப் புரிந்து கொண்டுவிட்டாள். ஆனால் வெளிக் காட்டிக்கொள்ள வில்லை. சபேசனிடம்கூட. சத்தம் பண்ணாமல், தானே தேடி அலைந்து, மூன்று தெருக்கள் தாண்டி, சாமாவுக்கு இடமும் பார்த்துவிட்டாள். சாமாவின் உரத்த ஆட்சேபங்களுக்கு அவளுடைய பதில் இதுதான்:

‘‘இதோ பார் சாமா, நீங்கள் சிறிசுகள். அவள் புதுசு. நம்முடைய குண்டுகளை அவள் எடை தாங்கமாட்டாள். அவளுக்குகந்த எடை மயிலிறகு, தங்க ரேக்கு, பாசிமணி, குங்குமப்பூ பச்சைக் கற்பூரம், பட்டுநூல், இதுபோல நுட்பமான பண்டங்கள். இப்போ நீங்கள் தனித்துச் சந்தோஷமாயிருக்க வேண்டிய நாட்கள். தேனிலவு நாட்கள். அவளை அழைச்சுண்டு குற்றாலம்போ, கன்னியாகுமரியில் சூரியோதயம், அஸ்தமனம் பாருங்க. கோவளம் காட்டு, பிழைப்புப் பிரச்னைதான் எப்பவும் இருக்கு, அப்புறம் அவசியம் இருந்தால் இப்போ உன் மாதிரியே அவளுக்கும் மனசு அப்புறமும் இருந்தால், தேவி சித்தமும் இடம் கொடுத்தால்—’’

ஆல் ஆல் ஆல்...ஆல்களுக்குக் கணக்கேது?

சபேசனே கேட்டுவிட்டான். ‘‘என்ன கௌரி ஒரே பிடிவாதமா அவாளை விரட்டி விட்டே?’’ கௌரி, மெஷினைச் சற்று முரட்டுத்தனமாகவே ஓட்டினாள். தையலின் மேல் அவள் முகம் கூடவே குனிந்தது.

‘‘நமக்குக் கலியாணமாகி நாலு வருடங்கள் சந்தோஷமாக இருந்தோம். அப்புறம் சாமா வந்தான் அந்த ஏழெட்டு வருஷங்கள் அசல் கனவுபோலவே, மூவரும் நம்பமுடியாத சொர்க்கத்தில் வாழ்ந்தோம். ஆனால் கனவு கலையத்தான் இருக்கு. கலையறப்போ, என்று, எப்படிக் கலையுமோ என்கிற திகில் எனக்கு எப்பவுமே உண்டு. கலையற வேளையும் வந்துடுத்து, கலைஞ்சுதானே ஆகணும்? கலைஞ்சது நமக்கு அதிர்ச்சியா இருக்கப்படாது. இந்தச் சமயத்துக்கு நமக்கு முக்கியம் அமைதி. அவாளுக்கும் அவாள் வாழ்க்கைன்னு வேண்டாமா?’’

லேசாக மூச்சு திணறிற்றோ? ‘‘உண்மையிலேயே அவாளிடம் நமக்கு என்ன உரிமையிருக்கு, நீங்களே சொல்லுங்கோ, சாமா, என்ன ரத்த சம்பந்தமா?’’

"அத்தனையும் கெளரி மகாத்மியம். நமக்கென்ன புரியறது? நான் பாட்டுத்தான் கத்துண்டேன். காலக்ஷேபம் கத்துக்கல்லே."

கேலி பண்ணினால் பண்ணிக்கட்டும். புருஷாளுக்கென்ன? கொட்டிப்போனால் இவாளா அள்ளப்போறா? அப்பவும் நம்மேல்தான் சீறி விழுவா. அது அது எவ்வளவு கொடுப்பனையோ அத்தோடு சரி என்கறதை இவா ஏன் புரிஞ்சுக்க மாட்டேன்கறா?

வாசற் கதவைத் திறந்து கெளரி எட்டிப் பார்த்தாள். மின்னல் வெளிச்சத்தில் அவள் கண்ட காட்சி...வாசற் படிக்கட்டில் மூணு முழுகியாச்சு. இன்னும் இரண்டு தாண்டினால் வெள்ளம் உள்ளே; இத்தனைக்கும் அவர்கள் கட்டடம் நல்ல உயரம். வெள்ளத்தில் அலை ஒரு மாதிரியாக, குதிரைப் பிடரிபோல், ஒரு தனி எக்களிப்புடன் துள்ளி விழுந்தது. ஏரி உடைப்பெடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அடிவயிறு சில்லிட்டது.

வாசலில் ஆசையுடன் வைத்திருந்தக் கல் வாழைக் கன்று, குரோட்டன்ஸ் எல்லாம் மானம் குலைந்த அலங்கோலம். அவள் கையாலேயே கட்டிய பிள்ளையார் கோவில் மூழ்கியாச்சு உள்ளே சுவாமி ஜல நித்திரை.

பூமியே, பிரம்மாண்டமான ரஸகுண்டு வெடித்தது மாதிரி.

கதவை மூடினாள்.

குத்துவிளக்கில் எண்ணெயை ஊற்றினாள். சுடர் கண்ணைக் கசக்கிக் கொண்டாற்போல் இருமுறை ஆடி, சமாளித்துக்கொண்டு நிலைத்தது.

ஒரு பெரிய இடி மாடிமேல் நொறுங்கிக் காலடியில் தரை அதிர்ந்தது.

"அர்ச்சுனப் பல்குன க்ரீடி நரசவ்யசாசி."

கதவு படபட— 'யாராவது தட்டறாளா என்ன?'

இல்லை, காற்று.

—இல்லே யாரோ தட்டற மாதிரிதானிருக்கு. இந்த மழையில் யார்?

நிச்சயமாத் தட்டல்தான்.

"யார்—யாரது?"

"நான்தான்."

ஒரு உருவம் உள்ளே வந்து நாய்போல் உதறிக் கொண்டது; அவள்மேல் ஜலம் தெளித்தது.

"சாமாவா? சாமா, சாமா!"

கௌரியின் குரலில் அழுகையோடு சிரிப்பு கலந்து உடைந்தது.

"மன்னி, நீங்கள் சரியா இருக்கேளா?"

சாமாவுக்கு உடல் வெட வெடன உதறிற்று.

"சாமா தெப்பமா நெனைஞ்சிருக்கையே! உடனே அவர் அறைக்குப் போய்த் துணி மாத்திக்கோ. இந்த மழையில் எப்படிடா வந்தே?"

"உங்கள் நினைப்பெடுத்தது வந்துட்டேன். எப்படி வந்தேன்? எனக்கெப்படித் தெரியும்?"

"சாமா, அவளைத் தனியா விட்டுட்டு ஏண்டா வந்தே?"

"நீங்கள் தனியாயில்லையா? அதுக்காக வந்தேன். எப்படியிருக்கேள்?"

"என்னடா, எனக்குத் தனியாயிருந்து பழக்கந்தானே! அவளை விட்டுட்டு வரலாமா? சிறிசு ஸ்னானம் வேறு பண்ணல்லே."

"அவள் கிடக்காள். நீங்கள் எப்படியிருக்கேள்?" அவன் கண்கள் சுற்றும் முற்றும் ஓடின. "வீடு ரொம்ப மோசமாப் போயிட்டாப் போலிருக்கே!"

"இந்த மழைக்குக் குபேரக் கோட்டைகூடத் தங்காது. சாமா, அவளை விட்டுட்டு நீ வந்திருக்கப்படாதுடா."

"மன்னி, நீங்கள் அவளைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவளைப்பற்றி யாருமே கவலைப்பட வேண்டாம்."

"என்னடா உளர்றே?"

"இல்லை மன்னி. அவளைப்போல மனுஷாள் எங்கிருந்தாலும், எப்படியாகிலும், தங்கள் சௌகரியத்தையோ பத்திரத்தையோ குறைச்சுக்கமாட்டா. எதுக்கும் துணிஞ்சவா. பெண் சிலந்தி."

கௌரிக்கு அடிவயிற்றில் பகீரென்றது. "என்னடா சாமா சொல்றே? கொஞ்சம் புரியும்படியா சொல்லேண்டா?"

"புரியறதுக்கு என்ன மன்னி இருக்கு?"

"அவள் உடம்பு விச்சாயிருக்கோளோன்னோ? ஏதேனும் அவளுக்கு நேர்ந்துடுத்தா?"

"அவளுக்கென்ன? அவளுக்கொன்றும் நோவில்லை. குத்துக்கல்லாட்டம் இருக்காள், தனக்கு நிகர் யாருமில்லேன்னு, கடபாறைக் கஷாயம். நேர்ந்தவர்கள் எல்லாம் நாம் தாம்."

"சாமா, நீ திரும்பிப் போயிடு. இந்த மழை இப்போதைக்கு விடறதாக இல்லை. அவள் தனியாக இருக்கப் படாது."

"போயிடறேன். எனக்கே தெரியும். ஆனால் மன்னி, உங்களை ஒண்ணு கேட்கத்தான் வந்தேன்."

அவள் கண்களில் வினாத் துளித்தது.

''மன்னி நீங்கள் எனக்கு மன்னியா? அக்காவா?''

''கேள்வி கேட்க வந்த சமயத்தைப் பார்! இதென்ன உனக்குப் புதுக் கேள்வியா? நான் உனக்கு மன்னியா இருந்தா என்ன, அக்காவா இருந்தா என்ன? ரெண்டும் ஒண்ணு தானே! ஆ! இப்போ புரிஞ்சுடுத்து—'' கெளரியின் விழிகள் திடீரென்று மூட்ட விலக்கத்தில் விரிந்தன. கண்ணகி விழிகள். ''நீ இப்போ ஏன் வந்தேன்னு. ஆனால் நம்மைப் பத்தி அவள் அப்படி நினைக்கல்லே இல்லையா? கிராதகி!''

குத்துவிளக்கில் சுடர் சொட சொடத்தது.

''இல்லை, நீங்கள் எனக்கு அம்மாவேவா?'' சாமாவுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது.

அவ்வார்த்தைகள் உள் இறங்கி அவள் மார்பில் பூரித்துக் கொண்டதும், கெளரி தன் வசமிழந்தாள். உடல் கிடுகிடென ஆடிற்று. பெற்றால்தான் தாயா? பெண்ணாய்ப் பிறந்தாலே யுகாந்த காலமாகக் கூடவே பிறந்த தாய்மை எங்கே போகும்? கெளரி தன்னை அழுத்திப் பிடித்துக்கொண்டாள். தள்ளாடித் தள்ளாடிப் போய் ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டாள்.

''எப்படியிருந்தாலும் சரி, சாமா நீ திரும்பிப் போயிடு. அவள் தனியா இருக்கப்படாது.''

அவள் தலை நிமிர்ந்து பார்க்கையில் சாமா அங்கு இல்லை. சாமா எப்பவோ போயாச்சு.

**கா**ல் போன வழி சாமா சென்றான். வெள்ளம் காலில் கல்லைக் கட்டி இழுத்தது. ஓரிரு முறை சிறுசிறு குழியில் கால் வைத்து சறுக்கி விழ இருந்ததைச் சமாளித்துக்கொண்டு

மேலும் நடந்தான். மனம்போன போக்கு இல்லை. கால் போன போக்கு. ஒவ்வொரு தூறலும் வாழைத்தண்டு தடுமன் கனத்தில் இறங்கிற்று. ஒன்றிரண்டு மின்சாரக் கம்பங்கள் குறுக்கே விழுந்து கிடந்தன. அந்த ஆபத்துகளை யெல்லாம் விலக்கிக்கொண்டு, கால்கள் ஜாக்கிரதையாகக் கொண்டு சென்றன. அதென்ன பாலமா? கைப்பிடிச் சுவரின் மேல் அமர்ந்தான். அடியில் வெள்ளத்தின் இரைச்சல்.

இந்த மழை இறைவனின் துயரந்தான். உயிரை லீலையில் படைத்துவிட்டு அதுகளின் கண்ணீரைத் துடைக்க வகையறியாமல்தான் இப்போ கண்ணீராய்ப் பெருக்கு கிறான். பிரயோசனம்?

ஆ, அது என்ன? குனிந்து நோக்கினான்.

மின்னலில் ஒரு சோம்பல் தெரிந்தது. தோன்றிய சூட்டில் மறையவில்லை. தங்கித் தயங்கிற்று. பாலத்தின் கவானடியில் பாம்பு வாலைச் சுழட்டுவது போல் புரளும் வெள்ளத்தின் வீக்கத்தில், ஒரு காகிதக் கப்பல் தத்தளித்து அடித்துக் கொண்டு போயிற்று. அதன் பாய் மரத்தில் நக்ஷத்திரங்களில் மூன்று எழுத்துக்கள் பொறித்த்......

"அம்மா!"

அந்த அலறலை அப்போதுதான் பாய்மரம்போல் விரிந்து இறங்கிய ஒரு சாரல் திரை அடித்துக்கொண்டு போய் விட்டது.

# வேள்வி

கால், அரை, முக்கால்கண்—கோழித் தூக்கத்தின் செருகலிலிருந்து வெடுக்கென்று விழிப்பு வந்தது. பக்கத்தில் அவரைக் காணோம். கதவு ஒருக்களித்திருந்தது. கடியாரம் "கர்ர்"—தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு, ஒன்று அடித்தது. உபாதையோ என அதற்குரிய வேளை தாண்டியும் ஆசாமி தென்படாதிருக்கவே, அவளைப் பீதி பிடித்துக் கொண்டது. வீடு சற்று ஒதுக்கம். அதில் அவர்கள் தனி. இதற்குத்தான் பயப்படுவது என்று இன்னும் நிர்ணயமாகாத புதுசு.

எழுந்து வெளியே எட்டிப்பார்த்தாள். ஆபிஸ் அறையில் வெளிச்சம். இந்த நேரத்தில்—'பக்'. ஆனால் அவள் சுபாவத்திலேயே கொஞ்சம் துணிச்சல்காரி. தவிர, வயதாகிக் கலியாணத்தின் விளைவு, சில பயங்கள் அறவே தெளிந்து விடுமோ? திட்டத்தை வரவழைத்துக்கொண்டு சுவரோரம் ஒட்டியவண்ணமே நகர்ந்து நகர்ந்து வெளிச்சத்தை நெருங்கி எட்டிப் பார்த்தாள்.

அவள் கணவன், மேஜை விளக்கொளியில் காகிதக் கட்டுகளில் ஆழ்ந்திருந்தார்.

"யாரோ, ஏதோன்னு பயந்துட்டேன். உங்கள் உத்யோகத்துக்கு வேளை கிடையாதா?"

குரல் கேட்டு நிமிர்ந்து, யாரென்று கண்டதும் எழுந்து நின்றார்.

''வக்கீல், டாக்டர், சமையல்காரன் இவாளுக்கு வேளை போது ஏது?'' புன்முறுவல். ''நாளைக்கு ஒரு முக்கியமான கேஸ், கிரிமினல் கேஸ். ரெண்டொரு பாயிண்டுகளைச் சரி பார்த்துக்கறேன்.''

அவள் உள்ளே வரவில்லை. வாசற்படியிலேயே நின்றாள். தொடர்ந்து, அவளை மன்னிப்பு கேட்டுக்கொள்வதுபோல்:

''நான் பிரதிவாதி கட்சி.''

''நீங்கள்தான் கெட்டிக்காரராமே! தோற்கப் பொறுக்க மாட்டேளாமே!'' அந்த த்வனியை அவர் கண்டுகொள்ளாமல், பொறுமையாக, ''என்னதான் இருந்தாலும் பிரதிவாதி என்றாலே சளைச்ச கட்சிதானே! பலவீனத்தைப் பலமாக மாற்றிக்கொள்ளணும். எதிர்க்கட்சி வக்கீல் ஏற்கெனவே அடாவடிக்காரன். என் கட்சி பக்கமும் நியாயம் கொஞ்சம், வீக்.''

''நியாயத்தில் அப்போ கொஞ்சம், நிறையன்னு இருக்கற நியாயமும் இருக்காக்கும். உண்டு இல்லேதான் எங்களுக்குத் தெரியும்.''

அவருக்கு முகம் சட்டென்று மாறிற்று.

''வக்கீலுக்கு நியாயம் பெரிசா? சட்டம் பெரிசா?''

''ஐ ஆம் ஸாரி...'' இன்னும் நின்றுகொண்டுதானிருந்தாள்.

இப்போது அவள் புன்னகை புரிந்தாள். ''இந்த இங்கிலீஷ் இருக்கே, 'ஐ ஆம் ஸாரி' தாங்க் யூ' ரெண்டையும் வெச்சுண்டு எனக்கு நிகரில்லேன்னு உலகத்தையே திக்விஜயம் பண்ணிடலாம், எத்தனையோ நியாயங்களை அமுக்கிவிடலாம்.''

அவருக்கு முகம் இன்னமும் சுண்டிற்று.

''ஐ ஆம் ஸாரி—''

''அப்போ உங்கள் 'ஸாரி'க்கு நான் 'தாங்க் யூ' சொல்லணும் இல்லையா?''

''ஐ ஆம் ஸாரி—''

அவள் வாய்விட்டுச் சிரித்துவிட்டாள். ''ஆர்மோனியம் ரிப்பேர். சரி போகட்டும். மணி என்ன தெரியுமோன்னோ? தூக்கம், ஒய்வுன்னு கிடையாதா? மிச்சத்தை நாளைக்கு.''

மனுஷனின் முகம் வேதனையில் தவித்தது. ''இல்லை நான் இங்கேயே இருக்கேனே—''

அவர்களிடையே மௌனம் இறங்கிற்று. தேங்கிற்று. அவருடைய பின்னணியில், ஜன்னலுக்கு வெளியே, பாதி நிலவு கண்ணின் உறுத்தல் சிவப்புடன் உதயமாகிக் கொண்டிருந்தது. சுற்றி மேகங்கள், பாறைகள், விரிசல்கள், உடைசல்கள் சிதறிக்கிடந்தன.

காால், அரைக் கண் செருகலிலிருந்து வெடுக்கென்று விழிப்பு.

பக்கத்தில் அவர் இல்லை. ஆனால் அவள் கை அவரைத் தேடவில்லை. கடியாரம் 'கர்ர்'ரென்று கரைந்து நாலு அடித்தது.

பூக்களில் சில நள்ளிரவில் பூக்கின்றன. சில, விடிவேளை. மற்றும் சில, மதியம். மேலும் சில மாலை நேரம்...

எதன் மணம் அவளை எழுப்பியிருக்கும்?

விழிப்பு வந்ததும் வராதுமாய், இத்தனை வருடங்கள் கழித்து, அந்த முதலிரவு நினைப்பு வருவானேன்? வியப்பாயிருந்தது. நினைப்பைத் தொடக் காரணம் ஜன்னலுக்கு வெளியே நிலவின் தேசலாயிருக்குமா?

அவர் இப்போ ஆபீஸ் அறையில் இருக்கலாம்.

அல்லது தனி அறையில் தூங்கிக்கொண்டு இருக்கலாம்.

அல்ல-கேஸ் நிமித்தம் வெளியூர் போயிருக்கலாம்.

வருவார், போவார். ''எங்கே? என்ன? எப்போ திரும்புவேள்?'' போகப் போக அந்த ஆவல், கவலையெல்லாம் தணிந்து, எழாமலும் போய்விடுமோ என்னவோ? எனக்கு மாத்திரமா, எல்லாருக்குமே அப்படித்தானா? பெருமூச் செறிந்தாள்.

பூக்களில் சில நள்ளிரவில் பூக்கின்றன. சில விடிவேளை.

நிலவின் தேசல் போல், புன்னகையின் தேசல் ஒளி தோன்றிய மிரட்சி, ஒளிந்துகொள்ள, கன்னங்களில் இடம் தேடிற்று.

ஆர்மோனியம் பழுதல்ல. மாறாத ஏக்கத்தின் நோக் காடில் இதயத்தின் மோனத் தந்திகளின் அதிர்வு.

முகில்கள் பாறைகளின் பின் ஒதுங்குகின்றன. அல்லது படலங்கள் பாறைகளின் மீது கவிகின்றன. சில தவழ்கின்றன. சில தேங்குகின்றன. அது போலும், இந்த பூத்த மணங்கள் எங்கு தங்குகின்றன? பதுங்குகின்றன? நிர்ணயமாகச் சொல்ல முடியுமோ?

மேகங்கள் புரியும் கவிதையை அவள் கன்யாகுமரியில் கண்டிருக்கிறாள்.

பழகப் பழகத்தானே தெரிகிறது. மனுஷன் அப்பட்டத் தங்கம். புண்ணியம், சுவாமி தரிசனம் என்கிற பேரில் யாரும் தேடும் இடமாற்றம், இடமாற்றத்தால் மனமாற்றம், மன மாற்றத்தில் பொழுது போக்குக்குத் தடையோ, குறையோ. செலவுகளுக்குக் கட்டுப்பாடு, பணத்துக்குத் தட்டுப்பாடு. 'ஏன், எப்படி, எதற்கு?' கணக்குகள் அசதி மறதியாகக்கூட கேட்கணுமே! கிடையாது. கூடவரணுமா, சரி. தனியா போறயா சரி. எப்பவும் வாசம் நிறைந்த சம்பாஷணை. நல்ல எடுப்பான தோற்றம். வாசலில் இருவரும் சேர்ந்துபோனால், எல்லாரும் திரும்பிப் பார்க்கும் ஜோடிதான், ஆயினும்...

எங்கேயோ, எப்பவோ கண்டு, கடல் கொந்தளித்து. ஓய்ந்துபோன புயலின் மிச்சம், பெருமூச்சு.

எழுந்து, பல் விளக்கியதும், தோட்டத்தை ஒருமுறை சுற்றிவரும் இந்தச் சடங்கு அலுத்ததேயில்லை. காப்பிகூட பின்னர்தான்.

"குழந்தைகளா! உங்கள் இரவு எப்படிக் கழிந்தது?" என்று விசாரிக்கிற மாதிரி.

அல்லது,

பெரிய எழுத்து விக்ரமாதித்தன் கதை:

'அகோவாரும் பிள்ளாய் மதியூக மந்திரியே, மாதம் மும்மாரி பெய்கிறதா? மக்கள் ஆறில் ஒருபங்கு கப்பம் கட்டு கிறார்களா?' என்கிற மாதிரி; என்று சொல்லலாமா?

ஆனால், இங்கு கேஸ் உல்ட்டா. கப்பம் கட்டுவதெல் லாம் அரசுதான்.

இதைத் தோட்டமாகப் பார்ப்பதற்கே ஒரு சின்ன ஆஸ்தியே செலவாச்சு என்பதை இப்போ நினைக்கையிலேயே 'சுருக்'கென்றது. பிறந்த இடத்தின் இல்லாக் குறையின் பிசிர், எவ்வளவு தேய்த்தாலும் பாத்திரத்தில் ஒட்டிக்கொண் டிருக்கும் பூண்டு நாற்றம்போல் எப்பவுமே முற்றிலுமே கழலாதாக்கும்!

வந்தபோது பொட்டல்தான்.

வந்த முதல் வருடம் ஒரே காய்ச்சல்.

அடுத்து இரண்டு வருடங்கள் மழை. அது என்ன மாய மழையோ? ஒரு வாரம் ஒரே வெள்ளக் காடு. ஆசையோடு போட்டதெல்லாம் ஒன்று வெள்ளம் அடித்துக்கொண்டு போயிற்று. அல்லது அழுகி...பட்ட சிரமமெல்லாம் கடன்.

அந்த வெறுப்பில், போன வருடம் ஒன்றுமே போட வில்லை.

அப்புறம் பொழுதும் போகாமல், அந்த நெஞ்சுப் புழுக்கத்தின் அனுபவ பயங்கரத்துக்கு, பயிர் செய்து பாழாய்ப் போனாலும் பரவாயில்லை என்று ஆகிவிட்டது.

இந்தத் தடவை எட்டு லாரி மண் அடித்து, நிலமட்டத் தையே உசத்தி, விவசாய இலாகா வெளியீடுகள், நர்ஸரி விளம்பரங்கள், வானொலியில் பாடங்கள், வருவார் போவார் யோசனைகள் எல்லாவற்றையும் கலந்து விசேஷ எருக்கள், விதைகள் வரவழைத்து—அதோ ஆபீஸ் அறை ஜன்னலடியில் விறைத்து நிற்கும் இரண்டு க்ரோட்டன்ஸ் அக்கரைச் சரக்கு என்கிறான் நர்ஸரிக்காரன். வேண்டாம் வேண்டாம் என்க அவரும் கிணற்றுக்கு ஒரு ¼ எச். பி. மோட் டாரும் வெச்சுட்டார். இப்போது தோட்டம் அவள் நெஞ்சு மலர்ச்சியாக விளங்குகிறது. எல்லாத்துக்கும் மனசுதான் காரணம்னு பெரியவா சும்மாவாச் சொன்னா?

வரும்போதே—கண்கள் பனித்தன—ஆம், இதுகள்தான் என் குழந்தைகள், அவளை வரவேற்றன. இது ப்ரமையே அல்ல. நாளடைவில் உடலில் ஊறிப்போன உண்மை. வேளா வேளைக்கு அவள் கையாலேயே மொண்ட ஜலத்தை அவள் கையாலேயே வாங்கி அம்மாவை அடையாளம் கண்டு கொண்டன. வேறு ப்ராணி வாலையாட்டும். முகரும், நிறுவிய இடத்திலேயே அசைவதும் சிலிர்ப்பதுமன்றி இவை களால் வேறு என் இயலும்? பார் அந்த வெண்டையை, தான் அதன் பக்கமாய் வருகையில், அதன் சக்திமீறி, எட்டித் தன்மேல் உராய்வதை!

அடுக்கு தீபம்போல், அருநெல்லியின் நடுத்தண்டிலிருந்து விசிறும் கதிர்களும் கதிர்களில் தொடுத்த சரங்களாய்த் தொங்கும் இலைகளும் இன்று பூரா பார்த்துக்கொண்டே இருக்கலாம்—

—ஆனால் இந்தக் கறிவேப்பிலைக் கன்றை உருப்படி யாகப் பார்ப்பதற்குள் உன்பாடு என்பாடு ஆயிடுத்து கறிவேப் பிலையோ குழந்தையோ, குறைப் ப்ரசவம்போல் அஞ்சாறு

தோற்றபின், மடிப்பிச்சை ஒருகன்று பக்கத்துப் பங்களாவில் வாங்கி வந்து பூந்தொட்டியில் பயிர் பண்ணி—அதென்ன நின்னால் குத்தம் உட்கார்ந்தால் அபராதம் திரும்பினால் தண்டனை? இங்க்யுபேட்டர் சிசு தோற்றது. உனக்காச்சு எனக்காச்சுன்னு ஒரு வீம்பு, இப்போத்தான் தொட்டியி லிருந்து வேரோடு பறித்து, பூமியில் ப்ரதிஷ்டை பண்ணி மூணு நாளாறது. மண் மாற்றம் எப்படிப் பிடிக்கறதுன்னு போகப் போகத்தான் தெரியணும். டாக்டர் கிறிஸ்டியன் பர்னார்டுக்கு எழுதிக் கேட்கலாமா? யார் கண்ணிலும் எதன் கண்ணிலும் படாமல்—ஒரு மஞ்சள் கனகாம்பரத்துக்கும் கத்திரி நாத்துக்குமிடையில், அவரைப் பந்தல் அடியில்... கூட்டில் இப்போத்தான் பொரித்த குஞ்சுபோல் சோனிக் குழந்தை அசிங்கமா ஆனால் வெகு அருமையா—

என்ன பாடுபட்டு என்ன? இந்த மண்வளம் இவ்வளவு தான். இங்கு குற்றம் மண்மேலா, விதையிலா?

ஸர்க்யூட் வாழையண்டை முடிந்தது. ஒரு கூட்டமாக ஐந்து ஆறு; ஒண்ணுகூட தார் போடவில்லை. அப்படியும் இலையை அடிக்கடி நறுக்குவதில்லை. ஆனால் அப்படி முழுக்கவும் சாதிக்க முடியாது. வேளையில்லா வேளையில், கட்சிக்காரன் விருந்தாளியாகத் தங்கிவிட்டால், நறுக்காமல் இருக்க முடிகிறதா? அப்புறம் அமாவாசை, ஒரு திவசம் திங்கள் எல்லாம் அப்பிடியும் இப்பிடியும்தான். அதனால் அதற்காக ஒண்ணு கூடவா பூவைக்காது?

'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில்,'

ஊன்றி ஆறு ஏழு மாதங்கள் ஆனதும் கன்றுகள் பக்கத்தில் முளைத்துவிடும். வெட்டித்தள்ளாவிடில் தலை மரத்தின் பலத்தை அதுகள் வாங்கிக் கொண்டுவிடும் என்று தெரிந்தவர் கள் சொன்னால், வெட்ட மனம் வல்லையே!

வீட்டைச் சுற்றி முள்வேலி, வாசலுக்கு இரும்புக் கதவு பேருக்குத்தான். லொட்டை. வீட்டுக்காரனுக்கு அதுபற்றி

என்ன அக்கறை? அவள் தோட்டம், பயிர் பற்றி அவனுக்கு என்ன கவலை? காலி பண்ண நேர்ந்தால், இத்தினியும் அளிச் சுட்டா போப்போறாங்க!

கேட்டின் ஒருபக்கம் பூவரசு. மறுபக்கம் பொதிய மரம். அரசம் பூவின் மஞ்சள், காலை வெய்யிலில் பற்றிப் பளிச் சிட்டது. ஆட்டுக்காரக் கிழவன், துரடுபோட்டு இழுத்து இலைகளைக் கொத்துக் கொத்தாய்ப் பறித்துக் கீழே தள்ள, ஆடுகள், பத்துப் பதினைந்திருக்கும், அவசரமாக மேய்ந்து கொண்டிருந்தன.

அவனைப் பார்க்கும் ஒவ்வொரு தடவையும் அவளுக்கு எரிச்சலாய் வந்தது. ஆனால் அவன் சட்டை செய்தால் தானே! அவன் பேத்தி அவளிடம் பத்துப் பாத்திரம் தேய்க் கிறாளாம். கூடவே அவனுக்கு மரத்தின்மேல் ஸ்வாதீனம் வந்துவிட்டது. மனுஷனுக்கு மனுஷன் துரோகம், ஆக்ரமிப்பு இல்லாமல், வாழ்க்கையே நடக்காதா?

சின்னக்குட்டி. அவளுக்கு அஞ்சு வயசிலேயே, அவளு டைய தாய், குழந்தையை விட்டுவிட்டு யாருடனோ ஓடிவிட் டாளாம். நிஜம், பொய், யார் கண்டது? கிழவனுக்குப் பொய், தண்ணிபட்ட பாடு. அவனும், அவன் சடைத்த தலையும், சிக்குத் தாடியும், கந்தல் ஆடையும்...அவனுடைய ஆடுகள் குளித்தாலும் அவன் மாட்டான் போலும். எப்பவும் முகத்தில் ஒரு கபடு.

இன்று அவன் செல்வங்களிலிருந்து ஒரு புது வாடை கிளம்பி, வயிற்றைக் குமட்டிற்று. அவைகளினிடையே ஒரு புதுமுகம் கண்டாள். அதன் தனி வாட்டசாட்டமும், தோரணையும் அதைத் தனிப்பாய் எடுத்துக் காட்டிற்று.

அவள் கவனம் போன வழி கண்டு, கிழவன், "கடா வாங்கினேன். வாங்கிட்டு முளிக்கிறேன்." அவள் கண்களின் வினாவலுக்குத் தொடர்ந்து, "ரொம்ப முரடு. இன்னிக்

காலை என்னை முட்டித் தள்ளிடிச்சு, மல்லார விளுந்துட்டேன். மறுபடியும் காலைத் தூக்கிட்டுப் பாய வந்தது. அப்பிடியே உருண்டு எளுந்து ஓடினேனோ புளைச்சேன். இல்லே சொல்லாத இடத்துலே முட்டி, இந்த நேரத்துக்குக் குடிசை வாசல்லே தப்பட்டை காச்சிட்டிருப்பானுங்க.''

கண்ணைச் சிமிட்டினான்.

அது அவளைப் பார்வையாகப் பார்த்தது. அந்த ஆண் அலட்சியம் அவளுக்கு அடிவயிறு பகீர் என்றது. தீர்த்துக் கொள்ளமுடியாத சீற்றத்தின் உரு. முறுக்கேறிய கொம்புகள் பிச்சுவாப்போல் வளைந்து நுனி கூர்ந்து நீண்டன. கண் தழல், கங்குகள் திடீர் திடீர் சிந்திற்று. பூவரசுக் கிளையைத் தானே எட்ட ஒருமுறை முன்னங்கால்களைத் தூக்கிக் கொண்டு பின்னங்கால்களில் நின்றதும், உயரம் கிழவன் காதுக்குமேல் வந்தது. ஏதோ நுண்ணிய வாத்யம் வாசிப்பது போல் உதடுகள் நாஸுக்காக அசைந்தன.

கீழேயிறங்கி ஒருமுறை கனைத்தது. அவள் அடிவயிறில் இடி உருண்டது. இது இந்தப் பக்கத்து ஜாதியில்லே. ஆளப் பிறந்ததுதான்.

''எனக்கு ஆடு குறைஞ்சிட்டு வருது. வயித்துக் கொடுமை—ரெண்டு வித்தேன். ரெண்டு காணாமே போச்சு. ஒண்ணு ஆக்கித் தின்னுட்டேன். அப்புறம் என்ன செய்ய நீயே சொல்லு''—மரியாதைகூட கிடையாது. பொலியா வாங்கிட்டேன். மறுபடியும் அந்த ஆபாசமான கண் சிமிட்டல். 'ஒரு அம்பது ரூவா முன் பணம் கொடேன். இதுமேலே பாக்கி நிக்கிது. சம்பளத்துலே மாதம் புடிச்சுக்கோ.'

அவனை அறையலாமா என்று வந்தது. தொட்டால் கையில் கலம் பிசுக்கு ஒட்டிக்கும். பதிலே பேசாமல் திரும்பி விசுக்கென உள்ளே நடந்தாள்.

"இதென்னடாப்பா இம்மா கோவம் வருதே!" அவன் குரலின் ஏளனம் அவளை இரக்கமற்றுத் துரத்திற்று. "ஒன் புள்ளையே என்ன கிணத்துலே தூக்கிப் போட்டுட்டேனா?"

குருக்கள் மலர்களைப் பறித்துக்கொண்டிருக்கிறார். லிங்கத்தின் மண்டைபோலவே விழித்துக்கொண்டு எழுந்த நெற்றியில் பட்டை பட்டையா விபூதி, செம்பருத்தி, நந்தியா வட்டை, காசித்தும்பை, பொன்னரளி, கதிர்ப்பச்சை... தணிந்த மூட்டத்தில் அணையப்போட்ட பால், படிப்படியாக, மெதுவாகப் பொங்கியெழுவதுபோல், குடலை படிப் படியாக நிரம்பிக்கொண்டே வந்தது.

அவளைக் கண்டதும் அவர் முகம் மலர்ந்தது. குடலையிலிருந்து சட்டென எதையோ எடுத்து அவளிடம் கொடுத்தார்.

"கொடியிலேயே பழுத்து, தானே விழுந்திருக்கு. ரொம்ப விசேஷம்தான்."

பாகற்காய்.

"ஏன் குருக்களே, கோவிலுக்குத்தானேன்னு பறிச்சுக்க இடம்கொடுத்தால் இப்படித்தான் மொட்டையடிக்கிறதா? குடலை இன்னும் பெரிசா கிடைக்கல்லே?"

கேட்டுக்கொண்டே விடுவிடென நடந்து, குறுக்கே பப்பளபளவென வேலைக்காரி தேய்த்து வைத்திருந்த பாத்திரங்களை ஒரு உதைவிட்டுத் தள்ளி உள்ளே சென்று தடாலென்று கட்டிலில் குப்புற விழுந்தாள். பிறகு நேரம் போனதே தெரியவில்லை.

உள்ளங்கையில் ஈரக் கசகசப்பு உணர்ந்து திறந்து பார்த்தால் பாகற்காய் சதையுரிந்து, நக்ஷத்ர மீனாய் நசுங்கிக் கிடந்தது. சதையின் உள்பக்கம் ஜெவ ஜெவவென்று ஒரே ரத்தச் சிவப்பு. அதில் ஒட்டிக்கொண்டிருந்த ஐந்தாறு விதைகள், பவழங்கள் உறங்கிக்கொண்டிருந்தன. அவை விழித்தெழுந்தால்...விழித்தெழுந்தால்...என்னவாகும்?

அலைகள் மெதுவாக அடங்க ஆரம்பித்தன. அவர்மேல் எனக்கு இவ்வளவு கோபம் வருவானேன்? மலர்கள் பறிக்கத் தானே இருக்கின்றன? இல்லை, செடியிலேயே பூத்து, வாடி, வதங்கி, கருகி, விருதாவா கன்னி காக்கவா?

மாலை, கையில் கம்பும் தும்புமாய், கிழவன் வந்தான். அவளுடன் பேசிக்கொண்டே அவன் கண்கள் சுற்றும் முற்றும் அலைந்தன.

"...திமிறிட்டு ஓடிட்டுது. இந்தப் பக்கம் வந்துதா? நஷ்டத்துக்கானும் வித்துத் தொலைச்சுட வேண்டியதுதான். இதை நம்மால் சமாளிக்க ஆவாது."

தன்னுள் ஒரு கரும் மகிழ்ச்சி பொங்குவதை உணர்ந்தாள். உடலே பூரித்தது.

தேடிக்கொண்டே, தனக்குள் பேசிக்கொண்டே, கிழவன் தொடுவானத்தை நோக்கிச் சென்றான்.

வேணும் ராஸ்கல். அவனைக் கண்டாலே ஆகல்லே.

இரவு வெகுநேரம் தூக்கம் பிடிக்கவில்லை.

அவர், கேஸ் நிமித்தம், மாலைதான், வெளியூர் புறப்பட்டுப் போனார்.

இந்த ஒதுக்கான வீட்டில் இரவில், தனியாக இருந்தும் பழகிப்போச்சு.

அவளுக்கே சுபாவத்தில் துணிச்சல் கொஞ்சம் கூடத்தான்.

பேருக்குத் துணை, வேலைக்காரக் குட்டி; அறை வாசலில், அவளுக்குக் கொடுத்திருக்கும் பாயில், பூனைக் குட்டிபோல் சுருண்டு உறங்குகிறது. குழந்தைதானே!

கண்கள் எரிந்தன. அப்புறம் எப்போ கண் தானா அயர்ந்தபோது, அசட்டு பிசட்டு என்று ஏதோ கனா.

ஒரு பிரம்மாண்டமான பாகற்காய் சுளை பிரிந்து சூர்யோதயமாக விரிந்தது. பவழங்கள் பொல பொலவென சூர்யனிலிருந்து உதிர்ந்து, விதை விழுந்த இடங்களில், வாழைக்கன்றுகள் முளைத்தன. இமை நேரத்தில் மரங்களாகி, இலைகளுக்குப் பதில், நடுத்தண்டிலிருந்து, முறுக்கேறிய பிச்சுவாக்கள், நீண்டு கூர்ந்த நுனிகள்—முளைத்தன. அவைகளிடையே தள்ளிய குலையில் தார் தாராக ஆட்டுத் தலைகள். அவளைப் பார்த்து, தனித்தனியாக, சேர்ந்து, கக்கடகடவெனச் சிரித்தன, கனைத்தன. அந்த சத்தத்தில் வெடுக்கென விழித்துக்கொண்டாள். 'கும்'மிருட்டு.

மலர்களில் சில நள்ளிரவில் பூக்...

இல்லை, இல்லை; இந்தச் சமயம் அந்தப் பல்லவி இல்லை. குடலைக் குமட்டும் ஒரு வாடை. ஜன்னலிலிருந்து அலை மோதிற்று. மயக்கமே வந்துவிடும்போல் இருந்தது. செடிகளிடையே, அதுவும் அந்தக் கறிவேப்பிலைக் கன்று பக்கம் ஒரு சலசலப்பு. வாசல் கேட் பாப்ராஸ்.

பயம் தோன்றவில்லை. விறுவிறுவென உடல் பூரா ஒரு பயங்கர மகிழ்ச்சி, ஸகிக்க முடியாத மகிழ்ச்சி. இப்போ என்ன செய்யலாம்? சுற்று முற்றும் பார்த்தாள். ஆ, நினைவு வந்துவிட்டது.

நேரே ஆபீஸ் அறைக்குச் சென்று, மூலையில் சார்த்தியிருந்த தடியை எடுத்துக்கொண்டாள்.

கொண்டைப் பிடி. தடி நுனியில் இரும்புப் பூண். யமகனம். யாரோ கட்சிக்காரன் விட்டுவிட்டுப் போய் விட்டான். "என்ன செட்டியார்வாள், சமத்தியாயிருக்கே!" என்று பேச்சுவாக்கில் வேடிக்கையாகச் சொல்லப்போக, சொல்லச் சொல்ல வேண்டாப் பொருளை மூலையில் சார்த்திவிட்டுப் போய்விட்டான். அன்றிலிருந்து, சார்த்திய

இடத்தில் சார்த்தியபடியே இருக்கிறது. எப்படியேனும் கேஸை ஜெயித்துக் கொடுத்தால் சரி. நியாயமா ஜயிக்கிறது? மூணு கால் முயலுக்கல்லவா காலம்!

தோட்டத்தில் இறங்கினதும் சில்லென்று காற்று வீசிற்று. உடல் சிலிர்த்தது. குளிரால் அல்ல. கூடவே அந்த நெடி. உடம்பே, உடம்பைவிட்டுக் குதித்துவிடும்போல ஒரு புல்லரிப்புப் பரவசம். பாதங்கள் பூமியில் பரவவில்லை. இத்தனை நாளாய் இந்த நேரத்தின் ஸ்படிகத்துக்குக் காத்திருந்தாற் போன்ற ஒரு தவ உணர்ச்சி. அந்த நெடி ஸஹிக்க முடியவில்லை. அதுவே அந்த இருட்டில் பாதை வகுத்துத் தந்தது. இன்னும் நகர்ந்தால் மூர்ச்சை போட்டு விடும் அந்தத் திக்கில் தடியைத் தன் பலங்கொண்ட மட்டும் வீசியெறிந்தாள்.

ஒரு அலறல். அப்பா! அதுமாதிரி அவள் கேட்டதே யில்லை. மனிதக் குரல் தோற்றது. ஒரு பெரும் கனம் தரையில் விழும் சப்தம். மறுபடியும் அந்த அலறல். தோட்டமே அதிர்ந்தது. அவளுக்கு முழங்கால்களுக்குக் கீழ் விட்டன. அடி பலம் என்று அவள் நினைத்தே இருக்க மாட்டாள். அதுவும், இந்த மையிருட்டில் எப்பிடி குறி பிசகாமல்...? தன்னையுமறியாது, எதிர்க் குரல் கொடுத்துக் கொண்டு ஓடுகையில், தடி தடுக்கி விழுந்தாள். எட்டும் தூரத்தில், குடை சாய்ந்த மோட்டார் சைக்கிள் பெரிசு, ஒரு உருவக் கோடு தரையில் புதைத்துக் கொண்டிருந்தது. திரும்பத் திரும்ப எழுந்திருக்க முயலும் ஒவ்வொரு முறையும் அதைக் கீழே தள்ளிற்று. அலறல் அலறல்! அவளுக்கு அழுகை வந்துவிட்டது. நகர்ந்து, நகர்ந்து அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

''என் செல்லமே! என் கண்ணே! என் ராஜாவே!'' இன்னும் ஏதேதோ உளறல்கள், குழறல்கள், பிதற்றல்கள், தேம்பல்கள்.

அது அவளைத் திமிற முயன்றது. முடியவில்லை. சரியான அடி. இசைகேடான இடத்தில்.

''வேள்வியில் நான் ஏற்கெனவே ஆஹுதி, இப்போ நீ பலி!''

அந்த வாக்கியம் தன்னை வரிசை அடுக்கிக்கொண்டு உள் பரவியதும்—அதன் அமைப்பு சற்று செயற்கைதான் ஆனாலும், ஏதோ அந்த சமயத்துக்கு இத்தனை நாள் நெஞ்சக் குமுறலுக்கு, ஏதோ சற்று ஆறுதலாக இருந்து மாதிரி இருந்தது.

# ராஜா ராணி

ஒரே ஒரு ஊரில் ஒரு ராஜா—

அடேயப்பா, உஸ்!—ரொம்ப நாளாச்சு இதுமாதிரி ஆரம்பிச்சு. ஆ! அப்படி வாருங்கள் வழிக்கு! அத்தனை முகமும் இந்தப் பக்கம் திரும்பினீர்களா?

பெரியவர்களிலிருந்து சிறியவர்களிலிருந்து ராஜா ராணி கதை பிடிக்காதவர் யார்? குழந்தைகளைக்கூட நம்புவதற் கில்லை. ஆயிரம் கேள்வி கேட்கிறதுகள். "அது எப்படி அப்படி நடக்கும்? போ தாத்தா, காது குத்தறே!"ன்னு மரியாதைகூட அடகு போய்விடுகிறது.

ஆனால் இன்று நாட்டு நடப்பின் தினசரிச் சுழலினின்று தப்ப, சற்று நேரம் எதிலேனும் வழி கிடைத்தால் சரி என்று தேடுபவர்களுக்கு.

—ஒரு ஊரில் ஒரு ராஜா. ராஜாவுக்கு ஒரு ராணி. ஒரு ராணிதான்.

ராணி வருமுன், ராஜா ராஜகுமாரனாயிருக்கையிலேயே, மிகப் புத்திமான் என்று பேர் வாங்கிவிட்டான். யானை யேற்றம், குதிரையேற்றம், வில்லேற்றம், திக்விஜயம் செய்த விடமெல்லாம் அவன் கொடியேற்றம். ஏற்றங்களோடு ஏற்ற

மாக விலையேற்றம், வரியேற்றம் எனச் சொல்லும்படி யில்லை. நாளும் நாடும் வளமிக்கதோடன்றி, அகோ வாரும் பிள்ளாய் மதியூக மந்திரியே, மாதம் மும்மாரி பெய்கிறதா? மக்கள் ஆறில் ஒரு பங்கு வரி செலுத்துகின்றனரா? எனும் கேள்விக்குப் பதிலுடன் அரசு திருப்தி அடைந்துவிட்டது.

பிறகு ராணி வந்தாள். வந்தபோதும் ராஜகுமாரியாகத் தான் வந்தாள்—பின் எப்படி? ராஜகுமாரன் மனைவி ராஜ குமாரி.

ராஜாவுக்கு வயது எழுபது ஆனாலும் கழுந்து மாதிரி யிருந்தார். குத்தினால் கை எகிறிற்று. கல் சதை. கெட்டிப் பல். கட்டுப்பல் அல்ல.

இன்னும் இருபத்தி அஞ்சு வருட ஆட்சிக்குப் பஞ்ச மில்லை என்று பார்த்தவர் முகஸ்துதிக்குச் சொன்னாலும் சரி, எரிச்சலில் சொன்னாலும் சரி, உண்மை அதுதான்.

ஒருநாள் சபைக்கு ஒரு சாமியார் வந்தார், அவதூதர். தரை புரண்ட சடையும் தாடியும் முடிந்தவரை மானங் காத்தன. முடியாவிட்டாலும் அவருக்கு அக்கறை என்ன? உடல் குளிகண்டு எந்நாள் ஆச்சுதோ?

வந்தார். வந்து, அரசன் பக்கலில் வீற்றிருந்த அரசிளங் குமரனைப் பார்த்து, தன் ஆள்காட்டி விரலைக் கொக்கி வளைத்ததும் ராஜகுமாரன் தூண்டில் வாய் மீன்போல், அப்பவே, அப்படியே எழுந்து பின்தொடர்ந்து போய் விட்டான்.

யாரேனும் எழுந்து தடுக்க 'தில்'லைப் பின்னால் தேடலாம். அசைக்கக் கை கால் வேண்டாமா? அத்தனை பேரும் கல்.

போனவன் போனான்டீ! ஒரு பாட்டு இருக்கு அல்ல?

காணாமல் போய், ஏழு வருடங்கள் கழித்துத் திரும்பி வந்தான்.

பிரிவாற்றாமையில் படுத்துவிட்ட ராஜாவுக்கு, மகனைத் திரும்பக் கண்ட சந்தோஷத்தில் மார் வெடித்துவிட்டது.

ராஜகுமாரன் ராஜாவானான்.

ராஜகுமாரியும் ராணி ஆனாள். ஆகவேண்டியதுதானே! ராஜா மனைவி ராணி.

தன் ராஜா வரும் வரை ராஜகுமாரி, புக்ககத்தில்தான் இருந்தாள். பட்டம் மாமனார் படுக்கையில். ஆட்சி அவளுடையது. விலையேற்றம், வரியேற்றம், அவசரச் சட்டம். அவசரத் தீர்ப்பு, அப்பீலுக்கு நேரம் கொடுக்காமல் தண்டனையின் அவசர நிறைவேற்றம்—ப்ரஜைகள் முதன் முறையாக என்னவென்று உணர்ந்தார்கள். சுவை கனக்கு முன் ராஜா வந்துவிட்டாரே!

புருஷன் திரும்பி வந்ததால் சமுதாயத்தில் தன் அந்தஸ்தை மீண்டும் பெற்றதில் சந்தோஷம்தான். (வாழா வெட்டி, தாலியிறங்காக் கைம்பெண் பட்டம் யாருக்கு வேண்டியிருக்கும்?) ஆனாலும் ஆட்சியைக் கணவரிடம்—உரியவரே ஆனாலும்—ஒப்படைக்கச் சந்தோஷமாயிருந்ததோ? "அப்பாடா, வந்தேளா! எனக்கு ராஜ்ய பாரம் விட்டதென்று ஒப்புக்குச் சொல்லிக்கக்கூட நா எழவில்லை. ருசி கண்ட பூனையின் ஏக்கம் அவளைக் குடிகொண்டது. பூனை, வளர்த்தவனை மறந்துவிடும். குடிகொண்ட இடத்தை விடாது.

ராஜா ஆவதற்கென்றே திரும்பி வந்த ராஜகுமாரன். ராஜாவான பிறகு, ஏன், திரும்பி வந்ததிலிருந்தே பழையபடி இல்லை. ராஜ ரிஷியாக இருந்தார் என்றே சொல்ல வேண்டும். அதிலும் ராஜாவைக் காட்டிலும் ரிஷிகூட என்றால் மிகையாகாது.

நன்றாய்த்தான் பேசினார், சிரித்தார், பழகினார். மக்களுக்கு ஏழு ஆண்டுகளாகக் கழுத்தை அழுத்திக்கொண்டிருந்த நுகத்தடி இறங்கியதே ஒரு புது அனுபவமாக

இருந்தது. சன்னியாசி பின்னால் போனவன் சாதுவாய்த் திரும்பி வந்திருப்பான் என்று எண்ணி வாலை ஆட்டிய வெளிநாட்டு எதிரிகளும், உள்நாட்டுச் சதிகாரர்களும், ஆளின் விழிப்பும் வாளும் துளிகூடக் கூர்மங்கவில்லை என்று பட்டு, உணர்ந்து அடங்கினர்.

மனைவிக்குச் சேரவேண்டிய தேகதருமங்கள், மற்ற உரிமைகள் எதிலும் வஞ்சனையில்லை.

போகும்போது விட்ட குழந்தை ஏழு வருடங்களில் சிறுவனாக வளர்ந்துவிட்ட தன் மகனை முறையே அடையாளம் கண்டுகொண்டதிலும் குறைவில்லை. ஆனால் விரல் வைத்துப் பார்க்கமுடியாத ஏதோ ஒரு ஒதுக்கம் அவரிடம் இருந்தது. கடமைகள் தவறாமல் ஒழுங்காக நிறைவேற்றப் பட்டன. ஆனால் கடமைகள்,

ஆனால் கடமையின் தன்மை, நியாயம், வரைக் கோடுகள் என்றுமே தெளிவாய்த் தெரிந்ததில்லை. நாக்கைத் தொட்டுக்கொண்டு வரைந்த கோடுகள், ஒருவனுக்கு உண்டி மற்றவனுக்கு நஞ்சு. நண்டுக்குத் திண்டாட்டம், நரிக்குக் கொண்டாட்டம். ஓங்கின கை அடிக்க ஒருவன் இருந்தே ஆகவேண்டும். ஒருவனுக்குக் கடமை எதிராளிக்குக் கொடுமை. கடமையின் கொடுமை என்கிற தலைப்பில் பழைய மேற்கோள்களைக் காட்டியே இன்று ஒரு பி.எச்டி.க்கு வழியிருக்கிறது.

ஆகவே ராணி மனம் வெதும்பியதில் ஆச்சரியமில்லை. ''என் ஆட்சியைப் பிடுங்க இவன் யார்?'' என்று அவள் கேட்கவில்லை. தாலி கட்டிய புருஷன், கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன், காணாமல் புருஷன். கண்டெடுத்த புருஷன், பிரிந்திருந்த வரை அவள் நெஞ்சத்தின் கள்ளப் புருஷன்—எல்லாமே அவர்தானே! படுக்கை அறையின் அந்தரங்கத்தில், ''நீங்கள்தான் பைராகி பின்னால் ஓடிப் போனீர்கள். நாம் பிரிந்திருந்தவரை, நாதா!

நான் வேறு யாரையும் நினைத்ததுகூட இல்லை—'' என்றால், என்றிருந்தால், உண்மையே நவின்றாள். ஆனால் அப்படிச் சொன்னாளா, இல்லையா, படுக்கையறையில்— யார் கண்டது?

இருந்தாலும் ராணி நெஞ்சு முள்ளில் ஏதோ சிலாம்பு இடறிற்று. அதுதான் ருசி கண்ட பூனையின் ''மியாவ் மியாவ்'' பூனைப் பசி. திருட்டுப் பசி. பால் பசி. திருட்டுப் பால் பசி. ஓயாப் பசி.

கணவன் மேல் அவளுடைய அன்பு நேரங்கள் திடீரென அதிகரித்தன. அவைகளுக்கு அவருடைய ஈடுகொடலும் அவளுக்குக் குறையாமல் இருந்தது. ஆனால் அவைகளில், அவள் அவரிடம் தூண்டிவிட முயன்ற வெறி, அந்த வெறியில் அவள் நாடிய ஏமாந்த நேரங்கள் அவளுக்குக் கிடைக்க வில்லை. கைகேசி ஆயினும் ஏற்கெனவே தனக்குக் கடன் பட்டிருந்த வரங்களைத்தான் கேட்டாள். அதற்கும் வழி இங்கில்லையே!

ஆயினும் ஆசை விடுகிறதா? அதுபோன்ற ஸாஹஸ சமயங்களில் ஒரு சமயம் வாய் விட்டே கேட்டுவிட்டாள்:

''கிரீடம் உங்களுக்கு அழகாயிருக்கிறது. உங்கள் அப்பா வைக் காட்டிலும் உங்களுக்கே பொருத்தமாக இருக்கிறது. அதை நீங்கள் அணிந்துகொண்டேயிருக்க வேணும்.''

கட்டிலின் பக்கலில், சிற்ப வேலை மலிந்து நின்ற வட்ட மேஜை மேல், பெரிய வெள்ளிப் பேலாவில் புலுபுலு பொங்கி வழிந்த கறுப்புத் திராக்ஷைக் கொத்திலிருந்து இரண்டு பழங்கள் பறித்து ராஜா வாயில் போட்டுக்கொண்டார். அவர் விழிகள் திராக்ஷை போன்றே பளபளத்தன.

''நாதா—''

—இங்கே சற்று நேரம் ஆயக்கால் போட்டுக்கொள் கிறேன்.

ஸீதை ராமனை ''ஆர்ய'' என விளித்தாள்.

புத்தகங்களில், கல்யாணம் ஆனாலும் ஆகாவிட்டாலும் ''அத்தான்!'' என்று அழைக்கப் படிக்கிறோம்.

அந்தணக் குடும்பங்களில் 'ஏன்னா? உங்களைத்தானே!'

அந்தணரல்லாதார் ''தே, ஏ புள்ளே!''

பேரைச் சொல்லாமலே ''ஹல்லோ, ஹல்லோ என்னாங்க?'' இது ஒரு பாணி.

இன்னும் முன்னேறிவிட்ட இடங்களில் Mr. ஹரி நாம்!''

''Yes Lolita darling

இந்தக் கதை நடக்கும் காலம் எனக்குத் தெரியாது. எதற்கும் 'நாதா!' என்று போட்டு வைத்தேன். எதற்கும் பத்திரம் அதுதான். தவிர, மாயா விநோதக் கதை. சரித்ர நிரூபணை தேவையில்லை. இப்பவும் எங்கேனும் காலத்துக்கேற்ற ரூபத்தில் நடந்துகொண்டிருக்கும்.

''நாதா! செங்கோலை மட்டும் என்னிடம் கொடுத்துப் பாருங்களேன்! எனக்குப் பொழுதே போகமாட்டேன்கிறது!''

ராஜா பதிலே பேசவில்லை. புன்னகை பூத்தார். மேல் வரிசையில் முன் பற்கள் இரண்டு மட்டும் லேசாகத் தெரிந்தன. அவளுடைய ப்ரமையா? நிஜம்தானா? எல்லோரையும்போல் சதுரமாக இருப்பதற்குப் பதிலாக அம்புத் தலைபோல் நுனி கூரிட்டிருந்தன. அந்தப் புன் சிரிப்பில் ஒரு பதில் மட்டுமல்ல. சொல்லாத பதில்கள்தான் எப்பவுமே கூட. அச்சம் தரும் பதில்கள். அத்துடன் அவர் ஒருமுறை மேல் உதட்டை நக்கிக்கொண்டதும் வேறு எதுவோ ஞாபகம் வந்தது. வந்ததை மறக்க முயன்றாள்.

உள்ளங்கையுள் அடங்குகிற மாதிரி ஒரு புத்தகம். அதன் பக்கங்களுள் அடையாளத்துக்கு நொழுந்திய ஒரு விரல் அந்த ஒரு புத்தகம். ஒரே புத்தகம்தான். அதே புத்தகம்தான்.

விழித்திருக்கையில் கையுள். இரவு வேளை தலையணை கீழ். அப்படி அடைகாக்க அதில் என்ன? அவளுக்கு எரிச்சலாய்க் கூட வந்தது. ஒரு இரவு அவர் உபாதைக்கு வெளியே சென்ற சமயம் தலையணை கீழிருந்து அவசரமாகப் புரட்டிப் பார்த்தாள். அத்தனையும் வெற்றுப் பக்கங்கள். ஒருமுறை கண்ணைக் கசக்கிக் கொண்டாள். பக்கங்கள் வெறிச்சோதான். ஒன்றுமே புரியவில்லை. திரும்பி வரும் அரவம் கேட்டு, எடுத்த இடத்துக்கு, எடுத்ததைத் திருப்பிவிட்டு, திரும்பிப் படுத்துக்கொண்டாள். நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளக் கெளரவமா? பயமா? ஒன்றுமே புரியவில்லை.

பிறகு ஒருநாள் நந்தவனத்தில், கதை சம்பிரதாயம் கோணாமல் பூப்பறித்துக் கொண்டிருந்தபோது ஒரு காக்கையுடன் அவர் பேசிக்கொண்டிருக்கக் கண்டாள். அண்டங்காக்கை. பூவரசங் கிளைமேல் அமர்ந்த வண்ணம் "கா—கா—கர் கர்" என்றது. இவர் பக்தியுடன் கைகட்டிக் கீழே நின்றபடி 'கர்ர்'ருக்கும் 'கா'வுக்கும் ஆமாம்; இல்லை; சரி; அப்படியே என்கிற முறையில் தலையை ஆட்டிக்கொண்டிருக்கிறது. என்ன நடக்கிறது? நிச்சயம் சம்பாஷணைதான்.

அவர்கள் அல்ல அவைகளா?—தன்னைப் பார்க்குமுன்னர் பின்னுக்கு வாங்கினாள்.

அன்றிலிருந்தே அவள் அவருக்குப் பின்வாங்கல்தான். அவசியமான பேச்சோடு சரி.

நாளா வட்டத்தில் தன் படுக்கையை வேறு அறைக்கு மாற்றிக்கொண்டாள். இனி அவளுக்கு ஆ ன் பிள்ளைதான் துணை.

அதற்கும் அவர் ஏன் என்று கேட்டுக்கொள்ளவில்லை.

'ஆம்' என மாட்டான். 'உம்' என மாட்டான். 'ஊ—ஹூ¯ம்' எனவும் மாட்டான். ஆனால் ஆளப்பிறந்தவன். தனிப் பாதை மனிதன். அவள் ஆசைகள், குறிக்கோள், எல்லாம் மகன்மேல் திரும்பின. முயற்சி பூராவும் அப்பன் மகனை, அம்மா பிள்ளையாக மாற்றுவதில் முடிந்தன.

எறும்பு ஊரக் கற்குழியும்.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

கொட்டிக் கொட்டிக் குளவியும் தேளாச்சு.

பழமொழி வாழ்க! பழமொழியைவிடவா நான் கதை சொல்லிவிடப் போகிறேன்?

நமக்கு ஒரு வருடம் தேவர்க்கொரு நாள்.

எந்தச் செயலிலும் உடல்பாடைக் குறைத்துக்கொள்ள வழிகளைத் தேடித் தேடிச் சாதிக்கச் சாதிக்க, அதன் விளைவால் மிஞ்சிப்போகும் வேளையும் சுலபமாகிவிட்ட இந் நாட்களில், நாளுக்குச் சமகதி போய்விட்டது. ஒரு சமயம் ஒருநாள், இன்னொரு நாளைக் கட்டி இழுத்துச் செல்கிறது. இன்னொரு சமயம் ஒருநாள் இன்னொரு நாளை முதுகில் தள்ளி தான் முன்னிட அவசரப்படுகிறது. ஆனால் அந்த நாட்கள் அப்படியில்லை. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்த் தேவர் நாட்கள் பதினைந்து ஓடியே போய் விட்டன.

அந்த வயிற்றில் அந்த வித்துக்கு முளைத்தது சாதாவாகுமா? ஏற்கெனே ராஜ பரம்பரை.

துப்பாக்கி வயிற்றில் பீரங்கி.

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி.

அவரை போட்டால் துவரை முளைக்குமா?

—மகன்— (காலியிடங்கள் வாசகருக்கு. வாடகை—இஷ்டத்துக்கு நிரப்பிக்கொள்ள.)

பழமொழி வாழ்க ஆனால்...

பழமொழிகள் இருக்கின்றன. கூடவே, ஆனால் என்பதும் உண்டே! உண்டென்று உளனெனில் ஆனாலும் உண்டென்பது உள்ளளவும் உண்டு. (சபாஷ்! என் முதுகு—தட்டுவதுடன் இருக்கட்டும்.)

பெற்றோரின் உட்பகை பையனைப் பாதிக்காமல் இருக்குமா? குழந்தைப் பிராயத்தினில் தந்தையின் தோளிலும் மடியிலும் கன்னத்துடன் கன்னம் சேர்த்த கொஞ்சலிலும் ("அப்பா? தாடி சொர சொரங்கறதே!") தன் பங்கு தவறிப் போன தவிப்பு. வெந்நீருற்றுக் கரைமேல் செடிபோல் வெதும்பல். வெளித் தோற்றத்திலேயே வயதுக்கு மீறிய வாட்டம். உள் புகைச்சலில் விழியோரங்களில் நிரந்தரச் சிவப்பு நரம்புக் கொடி. வாயில் கடுப்பு. இந்த அடையாளங்களின்றி, அவனே தன்னை முகம் பார்க்கும் கண்ணாடியில் அடையாளம் கண்டுகொள்ள முடியாது.

அவன் தந்தையின் பாதை எங்கேயோ பிரிந்து போயாச்சு. மௌனம் அவரை மலைப் பாம்புபோல் தன் ஆலிங்கனத்தில் குழைத்து படிப்படியாக விழுங்கிக்கொண்டிருந்தது. நாள் கணக்கில் உணவைத் தொடர்ந்துத் துறந்தார். மாதக் கணக்கில் அவர் அறைக் கதவு அடைத்துக் கிடக்கும். எப்போது வெளியே புறப்பட்டார்? அரசு அலுவல்களை எப்படி எப்போது கவனித்தார்? பத்திரங்கள், அதிகாரங்கள் எப்போது ராஜமுத்திரையை வாங்கிக்கொண்டன? கேள்விகள் நம்முடையது. பதில் அவருடையது. அதுவும் ஒரே பதில். செயலே பதில். ஆட்சி, மாட்சி குறையின்றி நடைபெற்றன.

இந்தப் பதினைந்து வருடங்களில் ராணிக்கு நெற்றிப் பொட்டில் அடை நரை கண்டது. பாவம், அவள் கவலை அவளுக்கு. அவள் வதங்க வதங்க அவர் மேனியாகிக்கொண்டு வரும் மர்மமென்ன? இத்தனைக்கும் இத்தனை மெய் வருத்தல் நடுவில்! சில சமயங்களில் இன்னதென்று விரல் வைத்துச் சொல்ல இயலாத பரிமளங்கள் உடலினின்று வீசின. பூசிக்கொள்ளாமலே எப்படி வந்தன? எந்தக் கணப்பில் இந்தத் தகதகப்பு?

மாலை வேளையில, நந்தவனத்தில் சுற்றி வருகையில், சோலையழகுடன் வானத்தின் வர்ணஜாலங்களின் கலவியில்

நேர்ந்த மன மயக்கத்தில் ராணி நினைப்பாள்: 'என் அவசரத்தில் காயைக் கடித்த கசப்பில் கனியை ஏமாந்தேனோ?' ஆனால் இது ஒருகண நேர மயக்கம்தான். பச்சாதாபங்கள் அவள் இயல்பில் அல்ல. ஜலத்தின்மேல் லேசாகக் காற்றின் விதிர் விதிர்ப்பு. அவள் பிள்ளை மனதின் முழு நஞ்சாக்கம் தான் அவள் குறிக்கோள்.

ராஜகுமாரன், வேட்டைக்குப் போன இடத்தில் ஒரு வேட குமாரிமேல் காதல் கொண்டு அரச நியாயத்தில் கந்தர்வ மணம் கொண்டு கையோடு அரண்மனைக்கு அழைத்தும் வந்துவிட்டான்.

ராணி கூந்தலில் நரை ஆறாய் ஓடிற்று. என்றேனும் ஒருநாள் போட்டிக்கு ஒரு சிறுக்கி வரப்போகிறவள்தான். ஆசைப்பட்ட பொம்மையுடன் கொஞ்ச காலம் விளையாட வேண்டியதுதான். அது கை தவறிக் கீழே விழுந்து தானாக உடையாவிட்டால் பொட்டென்று கீழே போட்டு உடைக்கவும் வேண்டியதுதான்; அது அதுக்குக் காலக் கிரமம் என்று உண்டே. நியாயம் தெரியாதவரை ராணி? ஊர்ப் பிடாரியை ஒண்டவந்த பிடாரி விரட்டுவது நியாயமா? அப்படி அதுக்கு இடம் கொடுக்கலாமா?

அடே! இவள் இன்று வந்தவளடா!

நீ என் ரத்தத்தின் ரத்தமடா!

ராணி வெளியில் சொல்லவில்லை. வெளியில் சொன்னால் டயலாக்காக அத்தோடு பொரிந்து போச்சு. உள்ளேயே குமைந்தால் எரிமலை. தன் தனிமையில் ராணி நீலமானால், விஷ நீலம்.

தன்னறியாமை வேடகுமாரிக்கு ஒரு குழந்தைத்தனத்தைத் தந்தது. கூடவே புதுச் சூழ்நிலை அவளுக்கு அச்சத்தையும் தந்தது. அரசகுமாரனை இடுப்பில் அணைத்தபடி குதிரைமேல் அரண்மனையுள் நுழைகையிலேயே, மதிலின் கண் வைத்த வளைவுகள் அவள் கழுத்தை நெரிக்க முடங்கிய

விரல்கள் போல் தோன்றின. அகழியில் முதலைகள் பிளந்த வாயுடன் வரவேற்றன. வானமும் வையமும், தன்னிச்சையின் கால்வீச்சாகப் பழகிப்போனவளுக்குக் கல் கட்டிடம் சிறையெனப்பட்டது. காட்டில் ஒட்டினாற்போல் ஓங்கி வளர்ந்த ஒரு அரசு, ஒரு வேம்பின் கிளைகளின் நடுவில் கட்டிய ஓலைக் குடிசைத் திடீரென ஏக்கம் கொண்டாள். நள்ளிரவில், அடவியில், சிம்ம கர்ஜ்ஜனைக்கும், சிறுத்தையின் தும்மலுக்கும், யானைப் பிளிறலுக்கும், கழுதைப் புலியின் சிரிப்புக்கும் பழகிப்போன செவி, திரைமறைவிலிருந்து அவள் மனதை மயக்க, பத இழைவில் அரும் பாடுபட்ட யாழையும் தும்புருவையும் மறுத்தது. புலி நகமும் நரிப் பல்லும் பாசி மணியும் யானைத் தந்தமும் பன்றிக் கொம்புமே மதிக்கத்தக்க அணிகள். இந்தப் பொன்னும் கற்களும் யாருக்கு வேணும்?

தனியாக, நதியோரம், காலாற நடந்து அப்பவே பிடித்த மீனை, அப்பவே அடித்த முயலை, மரத்தடியில் தோண்டிய பள்ளத்தில் வைக்கோலால் மூடி, முட்டி, அவித்து, அங்கனே, கொழுப்பு தேனாய்க் கசியப் பிய்த்துத் தின்னும் ருசிக்கு, வெள்ளி ஏனங்களில் அரண்மனையின் உண்டிகள் ஈடாகுமா? இது காறும் காட்டில் இன்பமாய்க் கழித்த எந்நாட்கள் திரும்பி வருமா? தன்னையறியாமல் வெறுப்பில் நாக்கின் சூள்கொட்டலுக்கு நாலு பணிப்பெண்கள் நான்கு மூலைகளிலிருந்து எப்படியோ தோன்றினர். ஒரு கதவைகூடத் தானாகத் திறக்க வழியின்றி ஏவலாளிகளின் பணிவிடையே, இடைவிடாது தன்னைக் காணிக்கும் காவலாகக் கண்டாள். அவள் ஒரு வனவிலங்கு, கைவிலங்கினும் கொடுமை இந்தக் கண் விலங்கைத் திமிறினாள்.

வந்து பதினெட்டு நாட்கள்கூட ஆகவில்லை. வேடகுமாரி காணாமல் போய்விட்டாள். இத்தனை காவலின் விரலிடுக்கில் எப்படி மாயமாய் மறைந்தாள்? தேடாத இட

மில்லை. ஆனால் வேடுவ குலமாதலின் அவளும் போர் வழி களில் வல்லுநள். தப்ப வழிகள் தெரியாமலிருக்குமா? அவள் கழுத்தில் கறுப்பு மணி மாலையில் தொங்கிய குட்டிக் கொப்பி யைத் திறந்தாலே ஒரு படையையே வீழ்த்த வல்ல மயக்க மருந்து இருக்கலாம். ஏனெனில், அரண்மனையின் மேற்கு வாசலில் காவலர் இருவர் நினைவிழந்து கிடந்தனர். மூன் றாமவன் முதுகில் ஒரு கத்தி, பிடிவதை அழுந்தியிருந்தது. இன்னொருவனின் விலாசம் அடியோடு தெரியவில்லை.

அன்றைய ''ராக் அனைவருமே அரசகுமாரன் கட்டளை, சிரச்சேதமாயினர். அகப்பட்டவர்மேல் அதிகாரம் பழி தீர்த்துக்கொள்ளலாம். அத்துடன் சரி. தப்பிப் போகிற வளைப் பிடிக்க முடியவில்லை.

ராணி பெருமூச்சுவிட்டாள். கூந்தலில் நரைமயிர் ஒன் றிரண்டு கருமைக்கு மீண்டது. சாத்தியமா? கேட்காதீர்கள், இது மாயா வினோதக் கதை. இப்படி விழுந்துவிட்ட வரியைக் கலைக்காதீர்கள்.

இளவரசியின் நிலை கண்டு பயப்படுவதா? பரிதாபப் படுவதா?

மது, மாது, வேட்டை, கொடுமை மறதியே உன்னை அடைய வழி என்ன? மனமே உன் உலைக்கு மூடியே கிடை யாதா? அதற்கும் வழி உன்னையேதான் கேட்க வேண்டுமா? அனுபவிக்க அவமானங்கள் இன்னும் என்னென்ன?

—அரசனிடம் குமாரன் வந்தான். 'தந்தையே, நீங்களோ தவத்தில் இறங்கிவிட்டீர்கள். எனக்கும் வயதாகிக்கொண் டிருக்கிறது. பொழுதும் போகவில்லை. அரச நிர்வாகத்தை என்னிடம் ஒப்படையுங்களேன்! நானும் பழகவேண்டியவன் தானே.'

ராஜன், மகனைச் சிந்தித்தார். ஆஜானுபாகு, அழகன். கொடுத்துவிட வேண்டியதுதானே! நான் என்ன நித்தியமா? நானில்லாமல், மக்கள் என்ன ஆவர் என்ற நினைப்பே

அகந்தைதானே! எத்தனையோ சூரியர், சந்திரர், நேற்று முளைத்த சூரியனேதான் இன்றும் வந்தான் என்று என்ன நிச்சயம்? சூரியனே விட்டிற்பூச்சியெனில் நாம் யார்? நடப்பது நடந்தே தீரும். மகுடத்தைக் கழற்றி மகன் தலையில் வைத்தார். கிரீடம் நெற்றிக்கும் தாழச் சரிந்து பார்வையை மறைத்தது.

பிள்ளைக்குப் பின்னால் பிரியாவிடையாக நின்ற ராணி, "பரவாயில்லை, உங்களுக்குத் துணி தைத்தோ, கொடுத்தோ சரிபண்ணிக்கொள்ளலாம்" என அவசரமாக மறித்தாள். முடி பொருந்தவில்லை என்று மன்னன் மனம் மாறிவிட்டால்? என்று அவள் கவலை. அந்த நிமிடம், வருடங்கள் உதிர்ந்து, அரசி அழகில் பொலிந்தாள் என்றே கூறலாம்.

இடையில் முழங்கால்வரை துண்டுடன், ராஜா நாட்டை விட்டு அகன்று காட்டை அடைந்தார்.

ராஜ ரிஷி, இப்போ ரிஷிராஜ் ஆனார்.

உருவங்கள், உணர்ச்சிகள் தடவாளங்கள் தாண்டி
உண்டு, இல்லை நிலைகள், யூகங்கள் தாண்டி
நாமாக்களின் எல்லைகள் தாண்டி
இப்போது அவரை நிரம்பி வழிந்தது கருணா பாவம்
ஒன்றுதான்
ஏரியின் அமைதி மனதில் அதில் அவ்வப்போது மீன்களின்
துள்ளல்கள்
காற்றின் பெருமூச்சில் சிற்றலைகளின் விதிர் விதிப்பு
வானின்று கழன்று உதிர்ந்த ஒன்றிரண்டு நட்சத்திரங்
களின் சுழிப்பு
தவிர்க்க முடியாதவை
மனமே உன்னை முற்றிலும் வெல்வது இல்லை. மனமே
உனக்கு மரணம் இல்லை
முத்தியென்றும் கடவுள் என்றும் துறவு என்றும்
கனவுகள் கண்டு

கடைசியில் மனமே உனக்குத்தான் பலியாகிறோம்
எனும் இந்தத் தெளிவேதான்—ஓடத்தின் கவிழ்தல்தான்
ஞானத்தின் தரிசனமா?
எதை விடுகிறோம்? எங்கே போகிறோம்? எதற்காகக்
காத்திருக்கிறோம்
ஆனால் காத்திருக்கிறோம். உயிரே காத்திருக்கும்
நேரம்தான்.
உயிரே, தன்னையே தின்றுகொண்டிருக்கும் பசி வேளை
தான்.

கற்களைத் தட்டிப் பொறியெழுப்பி, சருகு மூட்டி, தீயைப் பெரிதாக்கி, குண்டத்தில் குதித்து விளையாடும் தீ நாக்குகளைச் சிந்திப்பதில் ரிஷிக்கு அலுப்பே இல்லை. மஞ்சள், சிவப்பு, மஞ்சள் கலந்த சிவப்பு, நீலம், கறுப்பு, கரு நீலம், எத்தனை சேர்க்கைகள், எத்தனை அசைவுகள், அசைவுகளும் வர்ணங்களும் தெரிவிக்கும் சேதிகள்!

ஒரு சிறு பொறி காட்டையே எரிக்கும் தீ.
தன்னையும் எரித்துக்கொண்டும் தன்னில் கொடுக்கும்
பண்டங்களின் அழுக்கையும் எரித்துக்கொண்டு,
அவிப்பாக தேவதைகளைத் தன்னில் வரவழைக்கும் தீ.
அக்கினியே சாட்சி. அக்கினியே பிராணன். அக்கினியே
தெய்வம். சிதையே மஹாயக்ஞம்.
சூர்யன் அக்னி. தவம் அக்னி. ஞானம் அக்னி—

—குளம்போசை கேட்டுக் கவனம் கலைந்தது. தலை நிமிர்ந்தால் அவர் குமாரன் குதிரைமேல் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தான். குதிரைக்கு மூச்சு இறைத்தது. ராஜனுக் குத் தள்ளாடிற்று. குடி மயக்கம். அவன் கண்களில் மூட்டம் சூழ்ந்தது.

'தந்தையே உங்களைத்தான் காணவந்தேன்—நீங்கள்
ஒன்று பாக்கி.'
அவர் கண்களில் கருணை வழிந்தது. ஆனால் தன்னிடம்
ஏதுமிலையே என்னும் முறையில் அவர் விழித்தார்.

"இல்லை. உங்களிடம் ஒரு புத்தகம் இருக்கிறதாம் அம்மா வாங்கி வரச் சொன்னாள்.

ரிஷி வலது கையைத் திறந்தார். உள்ளங்கையில் ஒரு புத்தகம் இருந்தது. குட்டிப் புத்தகம்.

"ஆம் ஆம் அதுதான்—முழுவதாக முக்கியமானதை அமுக்கிவிட்டு ஏமாற்றிவிட்டால் ஆகிவிட்டதா?"

அவர் முகத்தில் லேசாக விசனம் படலம் ஆடிற்றோ? இந்த ஓயாத அதிருப்தியேதான் மனிதகுலத்தின் முடிவா? இதனால்தான் பிறவிக்கு விடிவே கிடையாதா? புத்தகம் அவர் கையினின்று நழுவி ஓமத்துக்கு ஆஹுதி ஆயிற்று.

ராஜனுக்கு மூண்ட சீற்றம் தலைகால் தெரியவில்லை. கண் மண் தெரியா இந்த அரச கோபம் முட்டுக் கொடுக்கா விடின், மாயா வினோதக் கதைகள், சரித்திரக் கதைகள் பாதியிலேயே குப்புறக் கவிழ வேண்டியதுதான்.

சதக்! நின்றவிடத்திலிருந்து எறிந்த கத்தி விலாவில் இறங்கி முதுகுப் புறமாக வெளிவந்த ஆச்சரியமும் அதிர்ச்சியும்தான். முன் வலி பின்னால். வலி என்பது அவரவர் அனுபவம், மனநிலை, சஹிப்பைப் பொறுத்தபடி. ஆனால் அவர் கண்களில் தெரிந்தது மாபெரும் விசனம்தான். "ஆண்டவனே! என் மகன் தெரியாமல் செய்துவிட்டான் அவனை மன்னித்துவிடு!" என்கிற மாதிரி. ஆனால் வாய் திறந்து ஒரு வார்த்தைகூட வரவில்லை. வருடக்கணக்கில் தன் ஆலிங்கனத்தில் அவரைக் குழைத்து விழுங்கிக்கொண்டிருக்கும் மௌனத்தில் நாக்கு எந்நாளோ செயலிழந்து விட்டது.

ஆனால் அரசன் கண்கள் பயத்தில் சுழன்றன. அவன் கண்டது வேறு. அந்தப் பயத்தில் போதை சட்டென அவனை விட்டால் குதிரைமீது அப்படியே தாவி பின்னால் யாரோ அவனைத் துரத்துவதுபோல் அதை விரட்டு விரட்டென விரட்டி அரண்மனையில் அடைந்து படுக்கையில் மல்லாக்க விழுந்தான்.

"போன காரியம் என்ன? மகனே உனக்கென்ன வந்தது"

"அம்மா! அப்பா என்னெதிரே உருமாறுவதைக் கண்டேன்!"

"புரியும்படி சொல்லேன்!" திரை ஓட்டுவாரொட்டி. அதனாலேயே அவள் குரல் சற்றுப் பொறுமை இழந்தது.

அரசன் கண்ட காக்ஷி அவன் கண்முன் திரும்பவும் நின்றது. கண்களைப் பொத்திக்கொண்டான். மறையவில்லை.

"அப்பா, முகம், உடல் எல்லாம் நிமிஷத்தில் மாறிப் போச்சு. அறையில் கோவணம்கூட இல்லாமல் ஒரு ஆள். தாடியும் சடையும் பூமியில் புரண்டன. நகங்கள் கூரியக் கத்திகள். உடல் குளி கண்டு எந்த நாளோ? கண்களுள் நெருப்புச் சக்கரங்கள். தரையிலிருந்து ஒரு புல்லைப் பிடுங்கி இரண்டு துண்டுகளாகக் கிள்ளி என்மேல் எறிந்தான். இதுவரை நான் அறிந்திராத பயங்கண்டு ஓடிவந்து விட்டேன்.

ராணிக்கு முகம் வெளுத்தது "மகனே! அது ஒரு பாஷை" மகன் விவரித்த ஆளை அவளுக்குத் தெரியுமே! "மகனே, பெரிய இடத்துப் பகையைச் சம்பாதித்துக் கொண்டுவிட்டாய்!"

"என்னை ஏன் சொல்கிறீர்கள் நீங்கள்தானே என்னை அனுப்பினீர்கள்? உங்களால்தானே, நீங்கள் இப்பொழுது பயமுறுத்தும் நிலை."

"சரி, பெரிய இடத்துப் பகையைச் சம்பாதித்துக் கொண்டுவிட்டோம்" ராணிக்கு அலுப்பாயிருந்தது. இந்த வார்த்தைகளின் நுட்பத்தில் என்ன அக்குசோ? என்ன லாபம் அதனால் கண்டது?

"உன்னைச் சுற்றிக் காவலை இரட்டிப்பாக்கு. நீயும் எப்பவும் ஆயுதபாணியாகவே இரு. எச்சரிக்கை! எச்சரிக்கை! இதுவே இப்போதிலிருந்து உன் மூச்சின் ஜபமாக இருக்கட்டும்!"

படுக்கையறையைக் காவலாளிகள் எதிருக்கெதிர் ப்ரதட்சணத்தில் ஓயாமல் சுற்றினர். அறை உள்ளே, ஒரு மரத்தடுப்பின் பின்னால், உச்சந்தலையிலிருந்து உள்ளங் கால் வரை முகத்தையும் மூடியதோர் உருவம் மறைந்து கொண்டு ஊஞ்சலில் படுத்திருக்கும் அரசனையே கண்கூடக் கொட்டாமல் கவனித்துக்கொண்டிருந்தது. சமயத்துக்குக் காத்துக்கொண்டிருந்தது. அதன் பிரசன்னம் யாவரும் அறியார்.

பயம் ஒரு பக்கம், குடிபோதை இன்னொரு பக்கம், உடல் அசதி ஒரு பக்கம். கோழித் தூக்கத்தில் அரசன் ஏதோ முனகினான். அவன் புரளலில், ஊஞ்சல் ஆடி, முனகிற்று.

ஆ! அது என்ன, சங்கிலிமேல்? இத்தனை காவல் தாண்டி எப்படி வந்தது? ஆனால் அதனால்தான் வரமுடியும்.

கரும் பட்டில் தங்க நூலில் கட்டான்கள் நெய்தாற்போல் உடல் பளபளத்தது. கட்டுகள் பளபளத்தன. தங்கச் சிறகு கள் உடலினின்று விசிறித் தகதகத்தன.

பிளந்த நாக்கு அவ்வப்பொழுது எட்டி எட்டிப் பார்த்து அது என்ன ஓயாத தேடலோ? சங்கிலிமேல் ஊர்ந்து வரும் அதன் பாதையை, சாமணையின் நாஸுக்குடன், அவ்வளவு அவகாசமாய்த் தேர்ந்து எடுத்துக்கொண்டு சங்கிலியில் வழிந்து...

அரசனின் கால்மாட்டை அடைந்ததும், தலைதூக்கி ஒருமுறை தன்னைச் சுற்றிப் பார்த்தது. கொட்டாத விழி களில் முழு நீலம் கொதித்தது. அடிவானத்தில் திடீரென நட்சத்திரச் சிதர்போல், மண்டையிறக்கத்தில் தங்கப் பொட்டுக்கள் பளபளத்தன.

அபயகரம்போல் படம் விரிந்தது.

வாள் வீச்சின் வேகம் காற்றை 'விர்ர்ர்'ரென வெட்டிற்று. பாம்பு சங்கிலியினின்று தரையில் இரண்டு துண்டுகளாக விழுந்தது.

''ஏமாந்து போய்விட்டேனோ?'' பதறியபடி அங்கி போர்த்த உருவம் அரசன்மேல் குனிந்தது. அரசன் விழித்துக் கொண்டான். அப்படிச் சொல்வதைக் காட்டிலும், கோழித் துயில் கலைந்த திடுக்கில் ஒவ்வொரு அங்கமும் தனித்தனியே தன் தன் செயலின் முழுமையுடன் விழித்துக்கொண்டது என்பதே பொருந்தும். இந்த விழிப்பு சுய விழிப்பல்ல. ஏற்கெனவே எச்சரிக்கையில் கூர்கண்ட உணர்வுகளின் ஒரு பங்கைப் பல பங்கு மிகைப்படுத்திப் பார்க்கும் பூதக்கண்ணாடி விழிப்பு. தலையணை அடியிலிருந்து ஒரே குத்து.

பிடிவரை புதைந்த கத்தியைத் தன் மார்பிலிருந்து பிடுங்க, பிடியை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு தள்ளாடிக்கொண்டே பின்னடைந்துபோய்த் தரையில் தடாலென்று விழுந்ததும், முட்டாக்குக் கலைந்து முகம் வெளிப்பட்டது.

''அம்மா!'' மகன் அலறினான். அப்பவே ஊஞ்சலின் கால்மாடில், தரையில், தன் தந்தை இரு துண்டங்களாகக் கிடப்பதையும் கண்டான்.

ஊஹூம். கத்தியைப் பிடுங்கமுடியவில்லை. விழிகள் அவைகள் கண்ட கடைசிப் பிம்பத்தில் செருக ஆரம்பித்து விட்டன. கண்ணாடி கண்டுவிட்டது.

கடைசி மூச்சின் வார்த்தைகள் அரசன் குனிந்த செவிக்கு எட்டின.

''கணவனுக்கு மனைவி எமன்.

தாய்க்கு மகன் எமன்.''

# அன்புள்ள ஸ்நேகிதிக்கு...

அமலி, ஐ லவ் யு. உனக்குத் தெரியாது. ஐ ஹேவ் ஆல்வேஸ் லவ்ட் யு.

ஸுனோ இதை என் தோளில் பின்னாலிருந்து படிக்கிற தென்றால் படிக்கட்டும். ஐ டோன்ட் கேர். அவளும் ரகளை மாதிரி ஜுல் காட்டுவாளே ஒழிய, ஷி ஆல்ஸோ டஸின்ட் கேர். எனக்குத் தெரியும் வி டோன்ட் கேர். ஏதோ சின்டாக்ஸ் படிப்பதுபோல் தமாஷா இல்லை?

அன்புள்ள ஸ்நேகிதிக்கு, நீ எனக்கு வெறும் ஸ்நேகிதி தானா? ஆனால் வேறு எப்படி ஆரம்பிப்பது? 'மை டியர்லவ்' என்றே தொடங்கலாம். ஆனால் நம்மிடையில் சாரங்களை முழுக்கத்தட்டியாகவில்லை. தவிர இந்தத் தலைப்பில் கதிரில் ஒரு கதை படித்தேன். ஆகவே ஆரம்பம் சம்பிரதாயமாகவே இருக்கட்டும்.

அன்று ஆஸ்பத்திரியில் கண் ஆப்பரேஷன் ஆகியிருந்த என் சிநேகிதனைப் பார்க்கச் சென்ற இடத்தில் நர்ஸ் யூனிபாரத்தில் உன்னைக் கண்டபோது அதிர்ச்சி அடைந் தேன் என்று சொல்லவும் வேண்டுமா? உன் கருவிழியுள் சிறுவிழி சட்டென கண்ட சுருக்கத்தில், உன் கன்னங்களில்

ஏறிய முலாமில் நீயும் என்னை அடையாளம் கண்டுகொண்டாய் என்று கண்டேன். ஆனால் அதை நீ வெளியே காட்டிக் கொள்ள விருப்பப்படவில்லை.

'ஆ! ஸிஸ், ஹியர் ஈஸ் தி என்வலப் ஃபார் யு. என் சிநேகிதன் கப்போர்ட் மேல் கண்ணாடி தம்ளர் அடியில் சுட்டிக்காட்டினான்.

'ஓ. தேங்க் யு'. அதை எடுத்து உன் யூனிஃபாரம் பையில் திணித்துக்கொண்டு. விர்ரென்று போய்விட்டாய்.

'ஏய், இவள் க்ளீனா டிப்ஸ கேக்கறாடா! கொடுத்தால் நானாக அல்லவா கொடுக்க வேண்டும்?''

'ஹவ் ஸோ?'

நாளைக்கு மத்தியானம் 11 மணிக்கு உங்களை டிஸ்சார்ஜ் செய்துடுவாங்க. ஆனால் நைட் டியூட்டி முடிஞ்சு காலை 8 மணிக்கே நான் போயிடுவேன். 'தேங்க் யு.' அப்படின்ன வரிகளுக்கிடையே நான் படித்துக்கொள்ள வேண்டிய அர்த்தம் என்ன நீயே சொல்லு!

முட்டையை உடைப்பதுபோல் என் கையிலிருந்த டார்ச்-ஆல் அவன் மண்டையில் ரெண்டு மொத்தலாம் போல் ஆத்திரம் வந்தது. நீ வாழ்ந்த வாழ்வு என்ன? நீ வாயில் தங்க ஸ்பூனுடன் பிறந்தவள் என்பதை அந்த சோமாரி கண்டானா? ஆனால் கேட்க எனக்கு உரிமை என்ன இருக்கிறது? அவன் கொடுக்கிறான். பேசுகிறான். நீ வாங்கிக் கொள்கிறாய், குறுக்கே நான் யார் குமுறுவதோடு சரி.

அமலி, மூத்திர பாட்டிலும், பெட்பேனும் தூக்கும் கதி உனக்கு ஏன்? சமூகசேவை செய்கிறாயா? ராட்! காதில் பூ சுத்தாதே. சமூக சேவை செய்பவளுக்கு டிப்ஸ் ஏன்? எல்லாம் வயிற்றுப் பிழைப்புக்கு என்பதுதான் உண்மை. ஆனால் ஏன்? ஏன்?

குந்தித் தின்னால் குன்றும் குந்துமணி ஆகும் என்கிற பழமொழியா?

தாயோடு அறுசுவைபோம்

தந்தையோடு கல்விபோம்

மக்களோடு செல்வம்போம்

எனக்கு வயசாயிடுத்தோன்னோ? கொஞ்சம் பழமொழியில் பேசுவேன். உன் விஷயத்தில் மக்களுக்கு வழியில்லை. அன்லெஸ்—அன்லெஸ்...நோ. மனம் ஒரு சாக்கடை. எது எப்படி இருந்தாலும் அதைக் கேட்கவும் எனக்கு என்ன உரிமை. நல்லதையே நான் காணவேண்டும். பிகாஸ் ஐ லவ் யு உன் விஷயத்தில் தந்தையோடு செல்வம்போம் என்று கொள்கிறேன்.

நாலைந்து வருடங்களுக்கு முன்.

உன் தகப்பனார் காலமான செய்தி பேப்பரில் வந்தது. மெப்புக்கு உனக்காக இத்தனை நாள் வளைய வந்திருக்கிறார். ஆனால் அவர் மரணத்துக்குக் காரணம் நமக்கல்லவா தெரியும்! இதயவிரிசல்—

அம்மா முன்னாலேயே போனாளோ பிழைத்தாள் என்று நீயே பேச்சுவாக்கில் என்னிடம் சொல்லியிருக்கிறாய். அஸைலம் கேஸ். பாவம் ஒரே பெண். யாருக்குத்தான் தாங்கச் சக்தியிருக்கும்? என்னென்ன ஆசையெல்லாம் வைத்திருப்பாள்?

இருந்திருந்து ஒரே மகவு அதுவும் பெண். அதை மீனாக்ஷி கல்யாணம் பண்ணி—பட்டணமே திரண்டது. பெண்ணையும் பிள்ளையையும் அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்த அடுத்த மாசமே பெண் பாக் அண்ட் பாகேஜ். பீரோ கட்டில், பர்னிச்சர் உள்பட திரும்பிவிட்டால் எல்லோருக்குமே தாங்கற சக்தி இருக்குமா? காதோடு காது வைத்த மாதிரி திரும்பினாலும் 'புசுக்'கை எத்தனை நாள் அமுக்கி வைக்க முடியும்? அங்கு என்ன நடந்தது? தாய். தகப்பன்

தவிர மற்றவரெல்லாம் அவருக்குத் தோன்றியபடி வரிகளி டையே படித்துக்கொள்ள வேண்டியதுதான். இஷ்டப்படி தான் படித்துக்கொண்டார்கள். படித்துக் கொண்டோம். முதலில் தாய்க்கும் தகப்பனுக்குமே எந்த அளவுக்குத் தெரியப்படுத்தினாயோ? உனக்கு இங்கேயே கொஞ்சம் இஷ்டராஜாங்கி என்றுதான் பெயர். ஒரு மகவு அதுவும் பெண், செல்லப் பெண் அல்லவா? உன் அப்பா பெரிய டாக்டர். லயன்ஸ் கிளப் ரோடரி சேர்மன் எல்லாவிதங் களிலும் பிரமுகர். ஆனால் அவர் கதியே பிஸிஷியன் ஹீல் தைஸெல்ஃப் என்று ஆகிவிட்டதே!

உண்மை எப்பவுமே காயுள் விதை, மனிதனுள் விந்து போல் ஒளிந்து கொண்டுதான் இருக்கும். அதன் முழுத்தன்மை கண்டுபிடிக்கவே முடியாது. கண்டுபிடிப் பதற்கும் இல்லை அது.

ஃபர்னிச்சரை விற்பதாக பேப்பரில் விளம்பரம் கண்டு நான் உங்கள் வீட்டுக்கு வந்த சமயத்தில்தான் நேருக்கு நேர் முகம் பார்த்துக்கொண்டோம். அதை நான் மறக்கவே மாட்டேன். இதோபார் அமலி. நம்மிடையே நடந்த எதையுமே நான் மறக்கவில்லை. என் நினைப்பெல்வாம் ஒன்வே டிராபிக்தான். ஆனால் புதையல்போல அவைகளை நான் பூதம் காக்கிறேன். இது வெறும் கடிதம் அல்ல. இத்தனை வருடங்களில் என் நினைப்பின் முனைப்பு. நுனியில் பட்டாசுத் திரி பற்றிக் கொண்டுவிட்டது. எப்போ 'டுமீல்' எனக்கே பயம். நான் காலிங்பெல்லை அழுத்தி கதவு திறந்ததும் நான் பார்த்த முகம் அரைத்தூக்கம் கலைந்த முகமா? அழுத முகமா? அறியேன். நெற்றிப் பொட்டில் மயிர்பிரி பெரியதாக ஒன்று கலைந்து உள்ளே மின்விசிறிக் காற்றில் அலைந்தது. 'யெஸ்?'

''மிஸஸ்—?''

'நான் மிஸ்ஸுக்குத் திரும்பியாச்சு.'

மிஸ் அமிர்தவல்லி.

அமிர்தவல்லியின் குறுகல் அமலி அமளி என்றிருந்தால் இன்னும் பொருத்தமாயிருக்கும்.''

''——?''

''நெவர் மைண்ட்.''

''மிஸ் அமிர்தவல்லி.''

''கால் மி அமலி.''

''மிஸ் அமலி! உங்களிடம் கட்டில் விற்பனைக்கு இருப்ப தாக அறிகிறேன். அதை நான் பார்க்கலாமா.''

''ஓ. பார்க்கலாமே.''

''விலை?'' என்று இழுத்தேன்.

''ஓ டோன்ட் பாதர். ஏதேனும் குடுத்தால் போச்சு. விலை நாம் கேவாஸ். ஒரு பாட்டுக்கு உங்களுக்கு அது கிடைக்கும். உங்களுக்குப் பாட வராவிட்டால் ஒரு கழுதை யின் கத்தலுக்கே அது கிடைக்கும்.

இவள் என்ன பேசுகிறாள்?

''ஆனால் கட்டில் காத்திருக்கலாம்.''

''காத்திருப்பதா? எனக்கு இன்னும் ஒரு வாரத்தில் கல்யாணம்.'' என் கன்னங்களில் வெட்க ரத்தம் குறுகுறுத்தது.

''ஓ! கங்கிராட்ஸ். காத்திருக்கலாமென்றால் காப்பி குடிக்கும் நேரம் வரையில்.''

நம் இருவரின் சிரிப்பு ஒன்றோடொன்று கலந்தது.

''நீங்கள் பெல்லை அழுத்துகையில் நான் காப்பி தயார் பண்ணிக்கொண்டிருந்தேன். உள்ளே வாருங்கள்'' சொல்லிக் கொண்டே நீ மேலாக்கை சரிப்படுத்திக் கொண்டாய். தற்செயலா அல்லது அதில் நான் சைகை படிக்கவா? அதற் கெல்லாம் அப்போது நான் குருடு. ஏனெனில் நெஞ்சு வர்ணம் பூராஸு-னோ—ஸனிதா ஃபார்யு வியாபித்திருந்தாள்.

விரிந்தன. சட்டென உன் கைக்குட்டையைக் கிழித்து தரையில் மண்டியிட்டு நீ கட்டை விரலில் மேல் துணியைச் சுற்றிக் கொண்டிருந்தபோது—

சோபாவில் நான் உட்கார்ந்தேன்.

இச்சணிலிருந்து நீ வெளிவருகையில் உன் இருகைகளிலும் நீ ஏந்திய இரண்டு பீங்கான் கோப்பையை சாசர்களில் கம்மென்று ஆவி பறந்தது. என் கோப்பையை நான் எடுத்துக் கொள்கையில், சூடோ, இசைகேடோ கோப்பை தவறி தரையில் கீழே விழுந்து உடைந்த சுக்கல்களை பித்துக் கொள்ளி மாதிரி நான் பொறுக்க முயன்றபோது எப்படியோ என் கட்டைவிரல் ரேகையில் சிவப்பு புஷ்பித்து இதழ்கள்

அமலி காதல் பிறக்க நேரம், இடம், காரணம் என்றே கிடையாதா? என் பார்வைக்கு நேராக உன் முகம்கூட இல்லை. அது, காயத்தின் மீது குனிந்திருந்தது. விர்ரென்று நடுவகிடு தன் பாதையை வகுத்துக்கொண்டு உச்சி மண்டையின் அடரில் மறைந்த அழகில் நான் என்னை இழந்தேன். நீ என்ன தைலம் உபயோகிக்கிறாய் அமலி? காமினி ஹேர் ஆயிலா? அதன் மயக்கா? இல்லை இல்லை. உன் இளமையின் மணம். இல்லை அதுகூட இல்லை. உன் மணமே. அமலி முதலில் காதல் என்பதே என்ன? இந்த வார்த்தை இதிகாச காலத்தினின்று இன்று வரை காவியங்களிலும் கதைகளிலும், கவிதைகளிலும், வசனத்திலும், வாய் வார்த்தையிலும் வாங்கியிருக்கும் அடியும் பட்டிருக்கும் எச்சிலும் கொஞ்ச நஞ்சமல்ல. ஆயினும் அதற்கு இன்னும் ஏன் விவஸ்தை இல்லை?

"மிஸ்டர் இந்தக் கட்டிலை நான் உங்களுக்கு விற்கப் போவதில்லை."

"ஏன்?"

"எனக்கு இஷ்டமில்லை."

''ஏனாம்''

''சகுனம் சரியில்லை.''

''இதற்கெல்லாம் சகுனம் பார்க்கவேண்டியவன் நான் அல்லவா?''

''மிஸ்டர்''—இன்றுகூட உனக்கு என் பெயர் தெரியாது அல்லவா? ''நாலு காசு மலிவுக்கு ஆசைப்படாதீர்கள். சனியன் பிடித்த கட்டில் நான் ஏதேனும் ஆஸ்பத்ரிக்கு—''

''ஓ. ப்ளீஸ் ப்ளீஸ்.''

''தோ உங்களுக்கு கட்டில் கிடையாது.''

''ஓ. ப்ளீஸ்.''

''என் நேரத்தை வீணாக்காதீர்கள். குட்பை.''

வாசற்கதவை சாற்றக்கூட கவலைப்படாமல் விர்ரென்று மாடியேறிப் போய்விட்டாய்.

டீப்பாயில் இன்னொரு காபி ஏடு புடைக்க ஆரம்பித்து விட்டது.

காதல் என்பது சாம்பலா? அல்லது அதனுள் மறைந்து கொண்டிருக்கும் தணலா?

அறியாமல் சாம்பலை அள்ளிவிட்டு உள்ளங்கையில் சுறீல்!

அல்லது இரண்டுமேயா?

அல்லது பூமிக்குள் புதைத்து வைத்த ஸ்புடமா?

என் உள்ளேயே நீ புகுந்துவிட்டாய் என்று எனக்கு அப்போது நிச்சயமாய்த் தெரியாது.

தகி தகி தகி—

அடுத்தபடியாக நாம் சந்தித்தபோது ஏழெட்டு மாதங்கள் ஏன் ஒரு வருடமே ஆகியிருக்குமோ?

தாஸ பிரகாஷ் ஐஸ்கிரீம் பார் உள்ளே நுழைந்த நான் ஒரு மேஜையில் உட்கார்ந்து கொண்டேன். ஐஸ்ட் காஃபி என்கிறார்களே எப்படி இருக்கும்? அசடு வழியுமா? மரியாதையாக ஹாட் காஃபியே சாப்பிட்டு விடலாமா?

'ஓ கட்டில் வாங்கும் என் சிநேகிதரா?' என் யோசனை வெடுக்கென்று கலைந்து தலை நிமிர்ந்தால் நீ! என் அழைப்பிற்குக் காத்திராமலே எதிரேயும் உட்கார்ந்துவிட்டாய் உனக்கு முகத்தில் தனிச் சிவப்பு. 'கட்டில் வாங்கியாச்சா?'

'ஏன் உலகத்திலேயே உன் ஒரு கட்டில்தானா?'

'கொயட் ரைட், எத்தனை எத்தனையோ கட்டில்கள் ட்ரபிளும் அதுதான்.''

''இல்லை கீழே பாயில் படுத்தால் ஆகாதா?''

''உண்மை, உண்மை இதைக் கட்டில் வாங்கு முன்பே தெரிந்துகொண்டால் நீங்கள் அதிர்ஷ்டசாலி. வாங்கிய பின் உணர நேர்ந்தால் பரிதாபத்திற்குரியவர்.''

''டாம் யு!''

உனக்கு எப்படித் தெரிந்தது? எனக்குத் தொண்டையடியில் கசந்தது. ஏனெனில் அப்பொழுதுதான் எனக்கும் ஸுனோவுக்கும் இடையில் வேஷங்கள் ஒவ்வொன்றாய் படிப்படியாய்க் கலைந்து கொண்டிருந்தன.

எங்களுக்கு எத்தனை எத்தனை முகங்கள்! முகத்தினடியில் அதனடியில் இன்னொரு முகம்.

''என்ன சாப்பிடுகிறீர்கள்?''

''நீ வாங்கிக் கொடுத்து நான் சாப்பிடும் நிலை இன்னும் விரவில்லை. நீ என்ன சாப்பிடுகிறாய்?''

நான் எப்பொழுது நீக்கு நழுவினேன். நீ கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.

'அப்படியானால் வி வில் ஹேவ்...' நீ ஒரு பேர் சொன்னாய். சர்வர் உனக்கு தனிப்புன்னகை காட்டி ஸ்பெஷல் சலாம் போட்டு பரபரப்புடன் சென்றான்.

உன் விழிக்குறும்பில், லேசாக உன் முகம் என் பக்கம் சாய்ந்த குனிவில் குப்!

ஓ! விஷயம் இந்த அளவிற்கு முற்றிவிட்டதா? ஆந்திராவில் ஸ்த்ரீகள் சுருட்டுப் பிடிக்கக் கண்டிருக்கிறேன். இங்கேயே சில நாகரீக மணிகள் சிகரெட்! ஆனால் அமலி நீ...நீ...

நீ வெறுமன சாப்பிடவா வந்தாய். எனக்கு ஏதோ எதிர் சவால் விடுகிறாய். நானும் மாட்டிக்கொண்டு விட்டேன். என் பர்ஸில் அன்றைய பில் பொசுங்கின பொசுங்கலிலிருந்து தேற ஒரு மாதம் பிடித்தது.

''மிஸ்டர் கட்டில் துரோகம் என்று ஒன்று இருக்கிறது. முதலில் பிறவி எடுக்கிறோமே அம்மா வயிற்றிலிருந்து விழும் குழந்தை அது உயிருக்கு உலகம் இழைக்கும் துரோகம். அதிலிருந்து தேறிக்கொண்டே வந்தால் அடுத்து கட்டில் துரோகம். ஒவ்வொன்றாய் தெளியத் தெளிய ஞானம் என்கிறோம். ஆனால் ஞானம் ஐந்துபைசாவுக்குக்கூட பிரயோசனமில்லை.''

நீதான் பேசினாயா? உனக்கு இவ்வளவு புத்திசாலித்தனம் உண்டா?

உன்னில் புகுந்துகொண்டிருக்கும் ஏதோ ஒன்றா? நீ போய் பார்த்து வந்த அமெரிக்கவா? அல்லது தீர்த்தமா? சங்கு தீர்த்தம், சர்வ தீர்த்தம், பாட்டில் தீர்த்தம்—

இதுபோல இன்னும் எதையுமே விட்டுக்கொடுக்காமல் சின்னதும் பெரிதும் சம்பந்தமும் அற்றதுமாய் தத்துவங்கள், அழகுகள், பேத்தல்கள்—

ஒன்று சந்தேகமில்லை. நீ அசடு இல்லை. நாம் பாரில் இருந்து வெளிவந்த பொழுது இரவே வந்துவிட்டது. மூற்றிய இரவு.

பூந்தமல்லி ரோடில் கார்கள் பறந்தன.

வெளிச்சங்கள் பிறந்தன. சிரித்தன.

உன் வீடு அங்கே பக்கம்தான் வீட்டுக் கதவுப் பூட்டை சாவி போட்டுத் திறந்தாய். ஏன் வீட்டில் ஒருவருமில்லையா? நீ ஒண்டிதானா ராஜாங்கி. உள்ளே ஏற்கனவே விளக்கு எரிந்துகொண்டிருந்தது. நீ என் பக்கம் திரும்பினாய். உன் விழிகள் கருந் திராட்ஷைகளாய்ப் பளபளத்தன. என் தோள் மேல் கை வைத்தாய்.

தோள் குமிழியை உன் விரல்கள் பிசைந்தன.

"மாடிக்குப் போவோமா?" உன் குரல் மூச்சாய் அடங்கிய செவியில் மோதிற்று.

"கட்டிலைப் பார்க்கிறீர்களா?"

"நான்...நான்..."

மூச்சுத் திணறிற்று. "நான் இது வரை ஸுனோவிற்கு துரோகம் செய்ததில்லை" சிரித்தாய் "ஆஹா! ஸோ நோ கட்ஸ், உங்கள் ஸுனோவை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்." என் மார்மேல் கை வைத்து என்னை வெளியே தள்ளினாய். கதவு படீரென்று என்மேல் மூடிற்று.

காதல் என்பது புற்றுநோயா? புற்று மண்ணா? உள்ளே பாம்பு பழமை ஆக ஆக குழல் விட்டுக்கொண்டு படரும் உயரும் புற்று அல்லது பாம்பு அதைவிட்டுப் போன பின்னர் அதன் மேலிட்ட மஞ்சளிலும் குங்குமத்திலும் ஆளை மிரட்டிக்கொண்டிருக்கும் ஐதீகமா?

ஸுனோவிற்கும் எனக்கும் இடையே எங்கள் உண்மை ஒவ்வொரு தோலாய் உரிய உரிய உன் இடம் என்னிடம் வலுவாகிக்கொண்டே வந்துவிட்டது.

ஓரொரு சமயத்தில் நீ வீணை வாசிப்பதுபோலவும், ஒரு ரோஜாப் பூவினை முகர்ந்துகொண்டு என்னைப் பார்த்துச் சிரிப்பதுபோலவும் இதுபோல ஏதேதோ பாவனைகள் மனம் அதன் பேதமையில் ஜோடனை செய்து பார்த்து மகிழ்ந்து அல்லது வேதனையுறும் அலங்காரங்கள். ஆனால் உன்னை நான் பார்க்கும் ஃபேவரட் போஸ் இதுதான். எதுகுல காம் போதியில் முசிறி ரிக்கார்ட்.

கடைசியாக அதில் ஒரு அடி வருகிறது.

ராஜராஜ ராகவ பிரபோ
தியாகராஜ அச்சிதப் பிரபோ

இரு கைகளையும் சிரம்மேல் குவித்து உன்னை மறந்து ஒரு காலில் நிற்கிறாய்.

அம்பாள் தபஸ் இருக்கிறாள்.

ஹே. இதயக்கமலவாசா! கவுரவர் சபையில் துச்சாதனன் துகிலுரிய கண்ணை மூடிவிட்ட த்ரௌபதி!

சமுதாயத்தைச் சீறும் அபினக் காளி!

அமலி ஸரிமபநிஸா.

மறுபடி எப்போ அமலி? ஆ, இரண்டு மாதங்களுக்குப் பிறகு வுட்லாண்ட்ஸ் கார்டன் ரெஸ்டாரண்ட்.

நான் வெளியே வந்துகொண்டிருந்தேன். நீ உள்ளே நுழைந்துகொண்டிருந்தாய். இரண்டு வாலிபர்களிடையே அவர்கள் தோள்மேல் தொங்கிக்கொண்டு என்னவோ பேசிச் சிரித்துக்கொண்டு. நீ என்னைப் பார்க்கவில்லை. எனக்கு உன்மேல் நெஞ்சு குமுறவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. என்னென்ன விதமாய் அமெரிக்காவைப் பழி வாங்க முயன்றுகொண்டிருக்கிறாய் அமலி?

காதல் பாலூட்டி வளர்த்த பாம்பு. சமீபத்தில் 'காதல் எனும் துரோக நதி' என்று ஒரு சிறுகதையைப் படித்தேன். ரெட்ஸீ, ப்ளாக்ஸீ, டெட்ஸீ, நச்சுப்பொய்கை, தி கோல்டன் ரிவர் என்கிறார்போல் துரோக நதி. அசரீரி வாக்குப் போன்ற தலைப்பு. அப்படியும் இருக்குமோ அமலி?

நாளைக்கு, நாளைக்கு—நாளை போகாமல் இருப் பேனோ நான் அந்தத் தில்லை நடராஜனைக் காணாமல் இருப்பேனோ, கிட்டப்பா குரல் கணீர்!—

கட்டுக்கழி படர்ந்த கருமுகில் காட்டுக்குள்ளே உன்னை விட்டுப் பிரிந்தேனடி கிளியே—வேதனைதான் பொறுக்கு தில்லை. மறுபடியும் கிட்டப்பா.

எலும்பெல்லாம் மெழுகாகத் தளர்கிறது. நாளை நாளை என்று 25 30 வருடங்கள் இன்னும் கூடவோ என்னவோ!

வேலையில் எட்டு முறை இடம் மாற்றலாகிவிட்டது. இது தவிர 'கேம்ப்' இடம் இடமாய் சுற்றல்—இடையே

ஸ்ரீகண்ட்

ஸ்ரீதர்

ஸ்ரீபால்

வெறும் ஸ்ரீயில் ஒரு பாலா.

ஒன்றிரண்டு பிரசவங்களுக்கு நான் பக்கத்தில் கூட இல்லை. கேம்ப்.

விசுவாமித்திரர் மேனகை ரவிவிர்மா படமொன்று பார்த்திருக்கிறாயா? ரிஷி ஒரு கையால் முகத்தை மூடிக் கொண்டு மறுகையால் ஒதுக்குகிறார். மேனகை எதிரே குழந்தையை நீட்டியவண்ணம் கேலி சிரிக்கிறாள். வேலைப் பாட்டில் என் கதி அப்படியிருந்தால் ஸீனோவுக்குத்தான் எப்படி இருக்கும்? யாரையும் குற்றம் சொல்லிப் பயனில்லை. ஏற்கனவே எங்களுக்குள் இனம் இல்லை. எந்த மண வாழ்க்கையிலும் இதுதான் படிப்படியாகத் தெளியும் யதார்த்தம். இனம் இல்லை.

குழந்தைகளும் பெரிதாகிவிட்டன. எல்லோரும் அம்மா ஜாடை அம்மா கட்சி. தன் கட்சியில் சேர்த்துக்கொண்டு விட்டாள். ஸுஜனோவுக்குத் தெரியும். சப்பாத்தியில் எந்தப் பக்கம் நெய் தடவி இருக்கிறது என்று. பெண்கள் எப்பவுமே ஆண்களைவிட நாள் ஏற ஏற யதார்த்திகள்.

நான் நாயும் சீந்தாத காய்ந்த ரொட்டித் துண்டு. ஆனால் யார் மேலும் தப்பில்லை. பிறகு அன்று ஆஸ்பத்திரியில் உன்னைப் பார்த்ததுதான். அடுத்த முறை. ஆனால் இப்பொழுது குங்கிலியம் குபீரிட்டுவிட்டது. எரிகிறேன். நெஞ்சு மணக்கிறது. உடலெல்லாம் உள்ளே பரிமளம் புகைகிறது.

அமலி எங்கிருந்து எனக்குள் திடீரென்று இத்தனை ஈரம்? எண்ணெ? உண்மையில் நான் காயவில்லையா? ஆனால் ஒன்று. உடலுறவினால் நமக்கினிப் பயனில்லை. ரிஷிபஞ்சமி முழிக்காவிட்டாலும் நீ தாண்டியிருப்பாய். அன்று இழந்த சந்தர்ப்பத்தை இன்று மீட்க முடியும் என்று நம்பிக்கை என்னுள்ளே திரி வைத்துவிட்டது. இந்த நம்பிக்கையில் கட்டில் கிடையாது பாயும் கிடையாது. தரையில் விரிக்கத் துண்டும் கிடையாது. வெறும் தரை. கட்டாந் தரை. கீழே பூமி. மேலே ஆகாசம். வேறென்ன வேண்டும் இனி நமக்கு?

காதல் என்பது இதயத்தில் தானே ஏற்றிக்கொண்ட அகல் சுடரோ?

ஒரு முடிவுக்கு வந்துதான் இதை எழுதுகிறேன். இன்று என்ன கிழமை? இன்று எட்டாம் நாள் வருகிற வியாழன் மாலை ஐந்திலிருந்து பழவந்தாங்கல் ஸ்டேஷனில் தாம்பரம் திக்கில் உனக்காகக் காத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பேன். நீ ஒரு பெட்டிகூட எடுத்து வரவேண்டாம். உன் நர்ஸ் யூனிபாரம் போதும். சட்டென்று உன்னை அடையாளம் கண்டுபிடித்துக்கொள்ள.

'தோ பார் அமலி உன்னோடு வாழ்க்கையில் உடனே சொர்க்கத்தின் கதவுகள் திறந்து காத்திருக்கும் என்று நான் நினைக்கலில்லை. நினைக்கமாட்டேன். வேஷங்கள் இல்லாமல் உண்மையேனும் சற்று தலை தூக்குமல்லவா? தாம்பரம் போய் அங்கு ஏதேனும் ஒரு தூரப் பிரயாண வண்டியைப் பிடித்துவிடுவோம். எங்கேனும் ஒரு காட்டுப் பிரதேசத்தில் யாருக்கும் காணாமல் மறைந்துவிடுவோம். நம் இருவருக்கும் தவிர.

ஆம். உனக்கு நான் எனக்கு நீ துணை என்று கடைசியாகத் தெளியும் தோழமைதான் காதலின் உண்மை ஸ்வரூபமோ?

இந்தத் தப்பியோடும் பிஸினஸில் பைத்தியக்காரத்தனம் இருக்கிறது எனக்குத் தெரியும். ஆனால் கூடவே கொஞ்சம் ரொமான்சும் இருக்கிறது. இருந்தால் ஆகாதா?

நீ அப்படி பழவந்தாங்கல் ஸ்டேஷனில் இறங்காவிட்டால் வராவிட்டால் என் கடிதம் உன்னிடம் சேரவில்லை. மற்றொரு முறை நாளைக்கு இதே இடத்தில், என்றெல்லாம் என்னை ஏமாற்றிக்கொள்ள மாட்டேன். இதற்கெல்லாம் மறு சான்ஸ் கிடையாது. எனக்குத் தெரியும்.

காதல் மிக மிக ரோஷமுள்ளது. சிகரெட் துண்டை குதிகாலில் தேய்த்து நசுக்குவதுபோல் உன் நினைவை அறவே ஒழித்துவிட வேண்டியதுதான். இருக்கவே இருக்கிறாள். மீண்டும் ஸுனோ.

ஆனால் அப்படி முடியுமோ அமலி?

நான் காத்திருப்பேன்.

ஐ லவ் யு அமலி. உனக்குத் தெரியும் ஐ ஹேவ் ஆல்வேஸ் லவ்ட் யு.

# பாலா

ஹோலியின் சாயக் குழம்பில் தோய்ந்து, தோழிகள் தூவிய வர்ணப் பொடிகள் நெற்றி, கன்னம், மார்மேடுகளில் கறைபடிய, துரத்தும் சிரிப்புக்கு ஒளிந்து, தன் சிரிப்பு காட்டி, மார்வாரிப் பெண் களவு காட்டுகிறாள். அதுபோல், சட்டென்று கண்ணுக்குப்படாமல் விதைச் சூழ்ந்த பாக்கு, தென்னை நடுவே பதுங்கி, கூரை விளிம்பு காட்டும் ஒளிவு மறைவில் ஒளிச் சிரிப்பில், வீடு பார்வைக்கு எழுந்தது.

குடிசை மோஸ்தரில்—குடிசை அல்ல.

கூரை ஓடுகள்—ஓடுகள் அல்ல. ஓடுபோன்று கட்டான வர்ணம் தீட்டிச் சிமிட்டியில் செதுக்கல்கள், புகைப்போக்கி—புகைப்போக்கி அல்ல. ஸ்தூபி உச்சியில், தாமரை இதழ்கள் விரிந்து உயரம் காட்டுகின்றன.

மானேஜர் சற்று என் பின்னால் நின்ற இடத்தில் நின்ற வண்ணம், ஸ்தூபியின் உச்சிமேல் விரித்த இதழ்கள்மேல் பார்வை பதிந்தபடி சிந்திக்கிறார், வேதனை?

''கிருஷ்ணா!''

இருளில் கூட்டுக்கு வழி தேடிக்கொண்டு போகும் ஒரு பருந்து, போகும் வழிக்குத்துணை தன் குரலையே கொடுத்துக் கொள்கிறது.

அசரீரி கேட்டது தானோ என்னவோ, அவர் முகத்தில் சஞ்சலம் படிப்படியாக அடங்குகிறது. முகம் தெளிவடை வதைத் தெள்ளெனக் காணமுடிகிறது.

"அம்பி, நம்மைப் பயமுறுத்துவதே நம் நிழல்கள்தான்! நீ பயப்படாதே—" என் முதுகைத் தட்டுகிறார். என்னுள் எலும்பு கதகதப்பாக உருகுகிறது. அவர் முகத்தில் புன்னகை படர்கிறது. ஆனால் புன்னகையா அது? மார்பில் தழும்பை மூடிமறைக்கும் பதக்கம்போலும் புன்னகை—ஏதோ ஒரு நகை!

"சரி வா, உள்ளே போகலாம்."

வீட்டைச் சுற்றித் தாழ்வாரம் தாண்டி வாசல். வெளித் தாழ்வாரத்தில், சோபாக்கள் நாற்காலி வகைச் சாமான்கள் மண்டிக் கிடக்கின்றன. அவைகளின் செறிவு, வாசலுக்கு வாசல், ஜன்னலுக்கு ஜன்னல் திரைகள் சேர்ந்து வீட்டிலேயே எப்பவும் ஒரு இருட்டு, மிருது நிழல். இருட்டென்று சொல்ல மனமில்லை.

"பாலா!"

மாடியில், படிககட்டின திருப்பத்தில் ஒரு சிலை.

பாற்கடலில் லக்ஷ்மி எழுந்தாள்.

சிவன் விரித்த சடைமேல் ஆகாச கங்கை இறங்கினாள்.

யாக குண்டத்தினின்று கிருஷ்ணை எழுந்தாள்.

இவை கதைகள்.

இது நான் கண்டது.

நெற்றியில் ஜிகினாப் பொட்டு, மாடிச் சுவரும் அடங்கிய குளோப் வெளிச்சத்தில் சுடர் விட்டது. இப்போக்கூட உடல் பரபரக்கிறது. அந்தக் காட்சி நினைவில் எழுகையில்,

"நான் ஒரு நாத அதிர்வு."

இந்த பாஷை என்னுடையது அல்ல; ஆனால் இது என்னுள் எங்கே ஒளிந்துகொண்டிருந்தது?

ஆனால் இது என்ன?

"பாலா, இந்தப் பையன் இனி நம்மோடு இருக்கப் போகிறான்."

சிலை இறங்கி வந்தது. தாழம்பூ நிறம். நீலப்புடவை, நீல ரவிக்கை, நீல ஜிகினாப் பொட்டு, நீல வளையல்: நாயண பாஷையில், பாலாவுக்கு இன்றைய ராகம் நீலாம்பரி.

எனக்கு மூத்தவள்தான்.

முகத்தில் கடுப்பு இல்லையே அன்றி, அதில் புதுமுகம் கண்ட ஆர்வமோ, ஆர்வம் விடுத்து முகமனோ காண முடியவில்லை.

இன்று மட்டுமல்ல. நான் அங்கு இருந்தவரை, என்றுமே நுட்பமான முகபாவங்கள் அவளிடம் விளையாடவில்லை. உறைந்துபோன செதுக்கலில், எப்போதேனும் கன்னங்களில் லேசான இளக்கம் இல்லை. அதுவும் நான் நினைத்துக் கொண்டதுதானோ என்னவோ? அதுவும் உடனே மருள் கண்டு மறைந்துவிடும்.

[நாடகம் பண்ணுகிறேனா, பண்ணிவிட்டுப் போகிறேன். இல்லையென்று யாருக்கு என்னை ருசுப்படுத்திக்கொள்ள வேண்டும்!]

"அம்பி, உன் பெட்டி, படுக்கை பொருளென்று இருந்தால், கொண்டுவந்துவிடு. என்ன முழிக்கிறாய்? சரி, சரி பரவாயில்லை. நாளைக்கு... ஜவுளிக்கடையில் உனக்கு வேண்டியதை வாங்கித் தைக்கக் கொடு. என் பேரைச் சொல். பில்லை எனக்கு அனுப்பச் சொல்லிவிடு. பாலா, என் அறைக்குப் பக்கத்து அறையை இவனுக்குக் காண்பி—உஸ், அப்பாடா...!"

ஒரு சோபாவில் சாய்ந்து உடைகளைக் கழற்ற ஆரம்பிக்கிறார். பனியனுக்கடியில், பறங்கிக் கொட்டைபோல் இளந் தொந்தி.

மேஜை சாப்பாடு.

மானேஜருக்கு உள்ளங்கையளவுக்கு இரண்டு சிறிய சப்பாத்திகள். ஏதோ கூட்டு. எங்களுக்கு வற்றல் குழம்பு, பருப்புத் துவையல். சுடவைத்த மத்தியான்ன ரஸவண்டல்.

"அம்பி, என் சாப்பாட்டைப் பார்த்து, நீ வெட்கப் படாதே. அதற்கேற்றபடி உன் வயிற்றை நீ குறுக்கிக்கப் பார்க்காதே. வயசுப் பையன் நீ நல்லா சாப்பிடணும். இது என் தலையெழுத்து. சாப்பாட்டு ராமனாயிருந்துதான், பட்டினிச் சாவில் வந்து முடிஞ்சிருக்கு. எனக்கு இனி விமோசனமில்லை."

பாலா எதிரில் அமர்ந்திருக்கிறாள், மோன பீடத்தில் முகத்தில் லேசான புன்னகைகூட இல்லை. நான் இங்கிருந்த வரை அவள் பேசியதாகவே தெரியவில்லை. அல்லது அவள் குரலையேனும் எந்தவிதமாகவும் கேட்டதாகவும் தெரிய வில்லை.

அன்றிரவு தூக்கம் சரியாக இல்லை. புது இடமோ, இவ்வளவு திடீர் சுகங்களுக்குப் பழக்கம் உடையேன் அல்லன் என்றோ, இன்னும் வார்த்தைகள் அவை பயக்கும் ரேகைகள் இமையுள் தம்மை எழுதிக்கொண்டு மறைந்துகொண்டு, மறுபடியும் வரைந்து கொண்டு...

யூனிபாரம். உருப்படியா, உறுதியா, நிச்சயமா, பாங்க் செலவில் இரண்டு செட் வெள்ளை உடைகள், வலிக்கிறதா? மாலையில் அதைக் களைந்ததும், மறுபடியும் அம்பி. (எப்பவுமே அம்பிதான்!) மானேஜர் என்னிடம் காட்டும் தனி உறவின் விளைவாக! என்னைக் காப்பி வாங்கி வா, பொட்டலம் வாங்கிவா' —இதுபோன்ற காரியங்களை வாங்குவதற்குச் சிவராமன், விசு, காஷியருக்குத் துணிச்சல் இல்லை. யாரும் மணி அடித்து அழைக்கவில்லை. பேரைச் சொல்லியே அழைத்தார்கள். கேட்கப்போனால், அதிகம் அழைப்பதுகூட இல்லை. மானேஜர்கூட மணி தட்டுவ தில்லை.

நீங்கள் ஒருமுறை அழைத்தால் போதும், அனுமன் போலும் பதறி ஓடிவருவேனே. ஆனால் அந்த பாக்கியம் ஒருசமயம்கூட நீங்கள் எனக்குத் தரவில்லை ஸார், உங்களுடைய ''தோ! தோ!''வுக்கு நாய்க்குட்டியாக இருக்க எனக்கு என்ன ஆசை தெரியுமா சொன்னால் வெட்கம். இது மாதிரியும் ஒரு ஆசை, ஒரு நிலை உண்டா? எனக்கு வேலை மட்டும் நீங்கள் தரவில்லை; என் வேளையையே திருப்பி விட்ட ராமன். அகலிகைக்கடுத்து, உங்கள் கருணையில் கல்லினின்று உயிர் பெற்றவன். ஆனால் ராமசரிதையில் இந்த ஏடுமட்டும் என் நெஞ்சில் புரளும் சுவடி.

இரவு வேளைகளில் பாடப் புத்தகங்களைப் பரப்பிக் கொண்டு, விட்டுப்போன பரீக்ஷைக்குப் படிக்கிறேன்—இல்லை, டப்பா அடிக்கிறேன். அர்த்தம் கேட்டுத் தெரிந்து, புரிந்து, படிக்க நேரமேது? ஸாரே சொல்கிறார். 'மெய்யான படிப்பு முடிந்த பின் ஆரம்பமாகிறது. நம்முடைய படிப்பு முறை அப்படியிருக்கிறது. பரீக்ஷை தேறுவதுதான் நோக்கம்.

எப்படியும் இந்தப் பரீக்ஷையில் 'டக்' அடிக்காமல் தேற வேண்டும்.

''அம்பி படி, படி, இப்போ பூணூலுக்கே காலமில்லை, தெரியுமோன்னோ? அஸால்ட்டாயிருந்துட்டா ஆயுசு முழுக்க ப்யூனாகவே இருக்க தோணிடும்.''

எனக்குப் பயமாயிருக்கிறது—விழுந்து விழுந்து படித்தேன். இரவில்லை, பகலில்லை உடலை, என் சக்தியைப் பந்தயக் குதிரையாக விரட்டுகிறேன்.

ஒருசமயம் தூக்கம் அழுத்தி, மேசைமேல், விரித்த புத்தகத்தின்மேல் முகம் கவிழ்ந்துவிட்டேன். விழிப்பு வந்த போது, என்மேல் போர்த்தியிருந்தது.

ஸார், நீங்களா?

அல்லது நீயா?

யாரைக் கேட்பது? பதில் எங்கிருந்து வரும்? வருமா? கேள்வி ஒன்றுதான். ஆனால் அதற்கு முகங்கள் ஆயிரம். ஏ காவியமே, நீ எங்கெல்லாம் ஒளிந்துகொண்டு, எதிர்பாரா வேளைகளில், பிடிபடாத நிலையிலேயே, கடைசி வரை உன்னைக் காட்டிக்கொள்கிறாய்!

வெள்ளிக்கிழமை. அவர் சோபாவில், அமர்ந்தபடி, ஏதோ புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறார். நான் ஹாலில் நுழைகையிலேயே, என் கையணைப்பிலிருந்து நழுவிய ஒன்றிரண்டு பார்சல்களைத் தடுக்கப்போய், எல்லாப் பார்சல் களுமே அவர் காலடியில் விழுந்து—நானும் அவர் பாதத்தில் விழுகிறேன்.

"தீர்க்காயுஷ்மான்பவ: அடேடே என்னப்பா இதெல் லாம்? என்ன கைநிறைய காசு நோட்டு எல்லாம்?" அவர் கையில் திணித்து மறுபடியும் நமஸ்கரிக்கிறேன். 'இன்று சம்பளதினம். என் முதல் சம்பளம் ஸார்—"

"தீர்க்காயுஷ்மான்பவ: ஒழுங்காய் பாங்கில் ஒரு கணக்கு ஆரம்பித்து, அதில் போட்டு வைத்துக்கொள். நீ எனக்குச் சாப்பாட்டுக்கு ஒண்ணும் தனியாத் தரவேண்டாம்."

என் விழிகள் தளும்புகின்றன. "ஸார், எல்லாமே உங்களுடையதுதான். நீங்கள் போட்ட பிச்சைதான். நான் உங்கள் அடிமை மாதிரி. எனக்கு அப்பா அம்மா இல்லை"— தேம்பித் தேம்பி அழுகிறேன்.

"உஷ்" நிமிர்ந்து உட்காருகிறார். "வா இப்படி உட்கார்—பரவாயில்லே, ஆபீசில் அங்கே வேஷம் வேறே"— முதுகைத் தடவிக்கொடுக்கிறார்.

"இப்போ என்ன நேர்ந்துவிட்டது? நீ இப்போ சொன்ன தெல்லாம் பெருமையாயிருக்கிறது. இந்தக் காலத்தில் பெற்ற பிள்ளைகூட சொல்லமாட்டேன்கிறான். புஷ்பம், சந்தனம், ரவிக்கைத் துண்டு அமர்க்களமாயிருக்கே! ஓஹோஹோ நெய்

ஹல்வா—ஒரு துண்டு இப்படித் தள்ளு—பாலாவுக்குத் தெரிய வேண்டாம். தெரிந்தால் இரண்டு பேரையும் கிழித்து மாலையாகப் போட்டுக்கொண்டு விடுவாள்!''

என் பின்னால் நிழல் அரவம் கேட்டு (?) திரும்புகிறேன். என் பின்னால் மார்மேல் கை கட்டிக்கொண்டு நிற்கிறாள். அவள் புருவங்கள் மின்னல் கொடுக்குகள்போல் நெரிகின்றன. காளியாக மாறிவிடுவாளோ? முகம் தழல் வீசுகிறது.

எப்பவுமே அவளைக் கண்டால் ஒரு பயமாய் தானிருக்கிறது. ஏதோ ஒரு அணுகாத் தன்மை அவளைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. அல்லது ஆமை ஓடுபோல் அவள் அதைச் சுமந்துகொண்டிருக்கிறாளோ? ராவணன் தன் கூந்தலைத் தீண்டியதால், தன் கையே வாளாக மாறி அதை வெட்டியெறிந்து அக்னிப்ரவேசம் செய்த வேதவதி போல—

நல்லவேளை ஒன்றும் நேரவில்லை. படிப்படியாக நெற்றியில் மூட்டம் அடங்குகிறது.

உஸ்—எனக்கு நெற்றி கசகசத்திருக்கிறது.

நெஞ்சு முள்ளில் ஏதோ சொல் தாண்டி இடறுகிறது. இங்கு நான் வந்து எத்தனை நாளானாலும் சரி, இங்கு என்னவோ, எதுவோ எங்கோ சரியாயில்லை. விளக்கம் கேட்க எனக்கு தைரியம் இல்லையே! அது ஒரு விஷயத்தில் மட்டும் ஏதோ கதவடைப்பு உணர்கிறேன். பயமாயிருக்கிறது. என்ன பயம்? ஏதோ பயம்.

''தொந்தி என்று பார்க்கிறாயா அம்பி?'' மானேஜர் தடவிக்கொடுக்கிறார். 'இதனுள் வைத்தியனுக்குத் தெரியாததெல்லாம் இருக்கிறது. கண்ணாடித் துண்டு—நெருஞ்சி முள்—திரியெரிந்து கொண்டிருக்கும் பாம், என்றைக்கு வெடிக்கப் போகிறதோ?"''

மனிதன் சிரிக்கிறான், பயமாயிருக்கிறது.

பாலா:

என்னிலும் மூத்தவள்.

நிச்சயம் மூணு நாலு வயதேனும் மூத்தவள்.

மானேஜருடன் Godown Inspectionனுக்குப் போகிறேன்.

கிடங்கு சோதனை என்று அப்பட்ட மொழி பெயர்ப்பு ஆனாலும், இந்த அடைமொழியில் பொதுவாக வங்கியில் கடன் வாங்கியவர்களின் பலவிதமான அடமானங்களின், சரக்குகளை மானேஜர் மாதம் ஒருமுறையேனும் நேர்முகமாக கண்காணிப்பது அடங்கும். அடமான சரக்குகள் எல்லாமே வங்கியின் பூட்டுச் சாவியின் பத்திரத்துள் அடங்கா அடங்க இயலாது.

தவிர, விவசாயக் கடன், பயிர் செய்ய, கிணறு வெட்ட, ஏற்கனவே இருக்கும் கிணறு ஆழப்படுத்த, பம்பு செட்டுகள் வாங்க, காற்றில் ஆடிக்கொண்டு அறுவடைக்குக் காத்திருக்கும் நெற்கதிர்மேல், இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். பாடம் சொல்கையிலேயே பாடம் சொல்லிக்கொள்கிறேன்.

இதற்கெல்லாம் தனித் தனி இப்படி இப்படி என வங்கியில் விதிப் புத்தகம் இருக்கிறது. ஆனால் நடைமுறைக்கும் விதிக்கும் சம்பந்தமில்லை. எல்லாம் ஏட்டுச் சுரைக்காய்.

'கை சுத்தமாய் விரல் வழி வழியாமல், பார்த்துக்கொள். தலை நிமிர்ந்து நடக்கிற மாதிரி பார்த்துக்கொள். மிச்சம் முன்னே பின்னே இருந்தால் அக்கறை இல்லை' (மானேஜர்)

டாக்ஸி வங்கி வாசலில் நின்றது.

''அம்பி நீயும் ஏறு. வழியில் மண்டையைப் போட்டேனானால் தானாக விழுந்தோ, கடன்காரன் அடிச்சோ வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்க்க வேண்டாமா? இல்லை முதல் அடி விழுந்ததுமே டிரைவருடன் நீயும் சேர்ந்து கம்பி நீட்டி விடுவியா? என்ன முழிக்கிறாய்? நடக்காததைச் சொல்றேனா, நடக்கக்கூடாதா இதெல்லாம்? சரி சரி, அந்த வெற்றிலை செல்லத்தை மறக்காமல் காரில் எடுத்து வை.''

மானேஜர் ரொம்பவும் குதப்புகிறார். ரொம்பவும் புகையிலை போடுகிறார். தஞ்சாவூர் ஸைட் அப்பா! தாய் வழியில் மலையாளம் கலப்பு. கேட்கணுமா?

நல்ல சிமிட்டி ரோடு. டாக்ஸி வெண்ணெய் போல் வழுக்கிக்கொண்டு போகிறது. ரோடு வளைவில் ஒரு காத்து மேடு. பழுத்த பொற்கதிர்களைப் போர் அடித்தாகிறது. பிற்பகல் மூன்று மணி வெய்யிலில் ஒரு கறுப்பு மேகத்துக்குத் தங்கவிளிம்பு கட்டியிருக்கிறது. தலைக்குமேல் உயர தூக்கிய முறங்களினின்று நெல் ஒரே சீராக அலைசாய்ந்து, முறத்துக்கும் தரைக்குமிடையே, பிற்பகலில் வெய்யிலில் ஒரு பொன் திரை மின்னிப் படர்ந்து ஆடுகையில் நெஞ்சை என்னவோ பண்ணுகிறது.

அன்று அவள் கூந்தலை வாரி முடிக்கையில் அகஸ்மாத்தாகப் பார்க்க நேர்ந்தது. சீப்பு தலையின் நடு வகிடினின்று உழுதுகொண்டே கீழிறங்கும் ஒவ்வொரு தடவையும் அதற்கு ஒரு பிரயாணம். கை அலுத்துவிட்டாற்போல் கூந்தலைச் சட்டென முறுக்கிச் சுற்றி முடிந்து, நுனியை வெளி வாங்கியதும் பட்சி அவசரமாகத் தன் கூட்டுக்குள் நுழைந்தாற்போல் தோன்றிற்று.

பற்களிடையே கொண்டை ஊசி. கூந்தலை அள்ளிக் கொண்டையிட உயரத் தூக்கிய கைகள் அக்குளில் ரவிக்கைக்குமேல் வேர்வைத் திட்டு.

—அச்சமயம் நான் நேர்முகமாக இருந்திருப்பின் சிறப்பத்தின் சீற்றத்தில் என்னவாகியிருப்பேனோ? பஸ்மம்—

நாதமுனி நாயக்கர் தொந்தியில் துணி சரிய கூப்பிய கரங்கள் ஓடிவந்து, "ஐயா வாங்க." வண்டிக் கதவைத் திறக்கிறார். மானேஜர் மெதுவாக இறங்குகிறார். 'என்ன நாயக்கர்வாள்? சௌக்கியம் எப்படி?'

"ஐயா உருவத்தில் ஆண்டவன் கொடுக்கும்போது எனக்குக் குறை ஏது? ஐயா மகனுங்களா? படிப்பு முடிஞ்சு சின்னய்யா வந்திருக்காரா?"

மானேஜர் காதில் போட்டுக்கொண்டதாகத் தெரிய வில்லை. "அம்பி, இந்த மரத்தடியில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திண்டிருக்கேன். நீ நாயக்கரோடு போய் அவர் தோண்டின கிணறு இருக்கா பாரு. அவருக்கு யக்ஷிணி சக வாசம் உண்டு. கிணறு இடம் மாறிப்போயிடும். இல்லை, இல்லாமலே போயிடும்—

நாயக்கர் கைகூப்புகிறார். "ஐயா சொல்றதைப் பாரேன்—"

ஓய், நீர் ஒரு தடவை கிணற்றையே தாச்சி போத்தி அதிலிருந்து உம்மை மீட்க, என்னை மீட்டுக்கொள்ள, நான் பட்ட பாட்டில் என் ஆயுசில் அஞ்சு வயசு கிழம் எனக்குக் கூடிப்போச்சு."

பிரம்மாண்டமான கிணறு, மோட்டார் ஓடிக்கொண் டிருக்கிறது. குபுக் குபுக் குபுக் ஜலம். குழாயின் முகவாயி னின்று நுரை கக்கிக்கொண்டு, துள்ளிக்கொண்டு, சந்தோஷ மாக, ஆனந்தமாகக் கன்றுக்குட்டியாக, நாலு கால் பாவாமல் வாய்க்கால்கள் வழியே பெரும் விஸ்தீரணங்களுக்கு பாய்வதை இன்று முழுக்கப் பார்த்துக்கொண்டே இருக் கலாம்.

"அத்தினியும் பெரிய ஐயாவின் மனசு. பெரிய ஐயாவின் மனசு இதைவிட எவ்வளவோ பெரிசு. எனக்குத் தெரியும். என் பெரிய ஐயா ஒரு அம்சம்."

நாயக்கர் பக்தியுடன் இளநீர் சீவிக் கொடுக்கிறார். அப்பா! அந்த இளநீரின் லேசான வெண்மையையும் அற்புத மான இனிப்பையும் அடுத்தாற்போல் எடுத்துக்கொடுத்த வுடன் உள்ளங்கையில் சுருளும் அந்த வழுக்கையும்—

"அம்பி வீட்டில் இதைப் பற்றிப் பேச்சே எடுக்காதே. வயிற்று அல்சருக்குக் குடித்தேன் என்று என்னையே ஏமாற்றிக்கொள்கிறேன். ஆமாம், அல்சருக்கு நல்லது.

கூடவே டயபடிசுக்கு எமனாச்சே! அம்பி, என் வயிற்றில் நவக்ரஹங்கள் ஆராதனை பண்ணாமலே பூரண கும்பத்தில் ஆவாஹனம் ஆகியிருக்கின்றன. என்ன செய்வேன்?''

டாக்ஸி வீடு திரும்பும் வழியில் நாயக்கரின் வேண்டுதல், கெஞ்சுதலுக்கு இணங்கி அவர் வீட்டு வாசலில் நிற்கிறது. 'ஒரு நிமிசம் உள்ளே வந்து வாசலை மிதிச்சுட்டுப் போங்க! அடுத்த தடவை வரை எனக்குத் தாங்கட்டும்.''

கற்றுக்கொள்ளாமலே இவர்கள் எப்படிக் கவிதை பேசுகிறார்கள்?

''ஐயா, வாங்க வாங்க!''—ஒரு ஆட்டுக் கல் நடந்து வருகிறது. ''ஐயா குழந்தை. ஐயா வாங்க.''

ரவிக்கை இல்லை. அவள் பூட்டியிருக்கும் நகைகளைப் பார்த்தால், எனக்குக் கழுத்து கடுக்கிறது. தோடு தொங்கும் இழுப்பில் காது எப்போ அறுந்து விழுமோ?

கூடத்தில் கட்டிலில் குவிந்திருந்த துணிகளை அப்புறப் படுத்தி, நாயக்கர் அவசரமாக எங்களுக்கும் இடம் பண்ணுகிறார். என்னையறியாமலே எனக்கு மூக்குத் தண்டு சுருங்குகிறது. கூடம் பூரா அப்படி ஒரு 'கம்' நெய்யோடு சேர்ந்த தேங்காய் எண்ணெய்.

இரண்டு தட்டுக்களில் ஆளுக்கு இரண்டு மூன்று தேன் குழலுடன் நாயக்கரின் மனைவி சமையல் அறையிலிருந்து வருகிறாள். சிவக்க எடுத்திருக்கிறாள். என் பிடித்தம் இவளுக்கு எப்படித் தெரிந்தது? மானேஜர் ஊறும் ருசி நீரை உறிஞ்சி விழுங்குகிறார்.

''இதெல்லாம் எனக்கு ஆவாதம்மா. பையனுக்குக் கொடு?''

''வீட்டு விளைச்சலிலேயே சுட்டதுங்க. ஒண்ணும் செய்யாதுங்க. எண்ணெய்கூட நம்மாத்துக் காயில் ஆட்டினதுதான். நெய்யும் கொட்டில் மாடுதான். ஐயா மாரே சந்தோஷமா சாப்பிடுங்க. ஒண்ணும் செய்யாது.''

"அம்பி வீட்டில் வத்தி வைக்காதே. வாழ்க்கையிலே இப்படித்தான். விசுவாமித்திரன் தபஸ். அப்பப்போ வீண்."

நெஞ்சில் பாலாவின் காலடிச் சத்தம் கேட்கும் பயத்தில் அவசர அவசரமாக விண்டு வாயில் போட்டுக் கொள்கிறார்.

அப்புறம் வெற்றிலை, புகையிலை.

பாவம் மூன்று நாள் அவஸ்தைப்பட்டார்.

ஒருநாள் பாங்குக்குப் போகமுடியவில்லை. பாலாவின் கண்கள் என்மேல் சினம் கக்குகின்றன. நான் என்ன செய்ய? எல்லாரும் தப்பித்துக்கொள்ளும் நேரம் நான் என்ன செய்ய?

இந்த வீட்டில் பூஜை அறை இருக்கிறது. சுவரில் மூன்று புறமும் அடைத்த படங்கள். ரவிவர்மாவின் லட்சுமி, சரஸ்வதி, ராமர், பிறகு, லட்சுமணர், ஆஞ்சனேயர் குரூப். விரித்த சடை, இடுப்பில் கை. முறுக்கிய மீசை. ஆகாசத்திலிருந்து இறங்கிக்கொண்டிருக்கும் கங்கையைத் தாங்கிக் கொள்ளக் காத்திருக்கும் சிவன்.

கோப கங்கா, கங்கா பாலா?

தோளில் கிளியுடன் மீனாட்சி.

ராமகிருஷ்ணர். விழிகளில் உள்ளுக்கு வாங்கிப்போன பார்வை. லேசாக வாய் திறந்து இரண்டு பற்கள் தெரியும் புன்னகை.

ஆள் உயரம் வெண்கலக் குத்துவிளக்கு.
பூஜா பாத்திரங்கள். பூஜா திரவியங்கள்?
எப்பவும் தேங்கிய அகிற் புகை. (பாலா)
சுவரோரம் சாத்தியிருக்கும் தம்பூர்.

ஆனால் பூஜை செய்ய சாஸ்திரிகள் வரவில்லை. யாரும் செய்யவில்லை.

இத்தனை படங்களுக்கும் நடுநாயகமாய் உயிர் சைஸுக்கு ஒரு கலர் போட்டோ என்லார்ஜ்மெண்ட். கொசுவக் கட்டில், கொழு கொழுவெனப் பசு போன்று,

நாற்காலியில் மாமி வீற்றிருக்கிறாள். அடையாளம் விசாரிக்கத் தேவையில்லை. இப்போது கடைந்தெடுத்த பொம்மை பாலா அந்த வயதுக்கு அப்படி ஆகிவிடுவாள்.

நான் யூகிக்கும் வரை தூப தீப உபசாரங்கள் அந்தப் போட்டோவுக்குத்தான்!

பூஜை அறை அநேகமாக மூடித்தான் இருக்கும். திறந் திருக்கும் நேரங்கள் அரிது.

ஒரு சமயம் அந்தப் பக்கமாகச் செல்ல நேர்ந்தபோது பூஜை அறை திறந்திருந்தது. கைகளைக் கோர்த்த வண்ணம் மானேஜர், மாமிக்கெதிரே நிற்கிறார். அடக்கிய அழுகையில் அவர் கீழுதடு பிதுங்கி நடுங்குகிறது. கண்களில் வேதனை. அவர்களுக்குள் அந்தரங்க வேளை. சத்தம் செய்யாமல் பின் வாங்குகிறேன்.

இங்கு என்ன குறைவு?

ஆனால் இழுத்துப் பிடித்து முறுக்கேறிய தந்தி எப்போ அறுந்து போமோ?

அறுந்தால் முகத்தில் எப்படி அடிக்குமோ?

என்னுடைய சேமிப்புக் கணக்கில் தொகை கூடிக் கொண்டே, உயர்ந்துகொண்டே போகிறது. செலவுக்கு வழியில்லை.

மானேஜர் அபத்தியம் பண்ணிக்கொண்டுதானிருக் கிறார்.

"அட போடா, அம்பி!" அலுத்துக்கொள்கிறார். "நான் இனிமேல் நாக்கைக் கட்டி வயிற்றை இழுத்துப் பிடிச்சு என்ன வாழறது?" எனக்கு விழி ததும்புகிறது. ஆனால் நான் என்ன செய்யட்டும்?

"ஏலே அம்பி!" மானேஜர் என் முதுகில் அறைகிறார். அரை சூடாய்த்தான் விழுகிறது. "என்ன பரிட்சையில் வெளுத்து வாங்கிட்டயே!"

என்ன படித்தேன், எப்படிப் படித்தேன், பரிட்சைக்குப் போனேன்? இரவு பகல் தெரியாமல் 'ஏக்தம்' செஞ்சு முடிக்கணும். என்மேல் இத்தனை பிரியமாக இருப்பவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்குத் துரோகம் நேராமல் இருக்கணும். இந்தக் கவலை தெய்வத்தை வேண்டியதும் இதுதான் என்னை மீட்டிருக்கவேண்டும். என் செயல் இதில்—எனக்குக் கனவாக இருக்கிறது திகைப்பாக இருக்கிறது.

"சிவராமா, என்ன மொண மொணக்கிறாய்?"

"நான் என்ன ஸார் கேட்கப் போறேன்? அல்வா, வேர்க்கடலை—"

"அல்வா, வேர்க்கடலையா? இந்தச் சமயத்தில் அது போதுமா? நீயே பாலாஜி ஹோட்டலுக்குப் போய், இன்னி ராத்திரி பாங்க் மொட்டை மாடியில் நிலா டின்னர் ஏற்பாடு பண்ணிடு. ஐட்டங்கள் உன் இஷ்டத்துக்கு—"

சிவராமன் என்னைத் தனியாகக் கூட்டிக்கொண்டு போய், கழுத்தில் ஒரு குத்து விடுகிறான். 'இதுயார் செலவு?'

தோளைத் தூக்குகிறேன். "எனக்கென்ன தெரியும்? மானேஜர் சொன்னதைச் செய்—"

"இன்னிக் கதை எப்படி இருந்தாலும் சரி, நாளைக்கு எனக்கு நீ தனியா அல்வா, நெய்க்கடலை வாங்கிக் கொடுத்துடணும் ஆமா, சொல்லிட்டேன்."

எனக்குச் சிரிப்பு வருகிறது.

மொட்டை மாடியில் மேஜை நாற்காலிகளை ஏற்றியாகி விட்டது.

வாழை இலையில் பிஸிபேளாஹூளி அன்னாவை ஒரு கரண்டி—ஆவி பறக்க—பின்னாலேயே இன்னொரு கரண்டி—அன்னம் ஒரு தினுசான பக்குவமான இளகலில் கரண்டியி லிருந்து திரண்டு விழுகையில் ஆஹா! அதற்குப் பின்னர் வேணது பார்ட்டிகள்,—மூஞ்சியில் அடித்தாற்போல் இதற்கும் கூடுதலான ஐட்டங்களுடன் அலுத்துப்போகும் வரை சாப்பிட்டாச்சு. ஆனால் இந்த ருசி பூரா இந்த வேளை யில் ருசிக்கு ஈடாமோ?

அன்றைய சாப்பாட்டு விவரங்கள் இன்னமும் நினைவில் எப்படி தீர்க்கமாக நிலைத்து நிற்கின்றன! இது வெறும் ஒரு சாப்பாட்டு ராமனின் பசித்த வேளையின் பழங்கணக்கு அல்ல சாப்பாடு மூலை வேளை எப்படி பரிணமிக்கிறது என்று சொல்ல முயல்கிறேன்.

மானேஜர் சாம்பார் சாதத்தை ஒரு கவளம் வழித்து வாயில் போட்டுக்கொண்டு சூடு தாங்காமல் தாடைக்குத் தாடை தள்ளித் தவிக்கிறார்.

"ஓய் ராயரே, இத்தனை வித்தையை இத்தனை நாள் எங்கே ஐயா பதுக்கி வெச்சிருந்தீர்?"

"இங்கே எல்லாம் எங்கே சான்ஸ் சுவாமி? வெறும் இட்லி சாம்பார் மிளகாயைத் தீட்டி வெச்ச சட்னியோடு சரி; அப்பாசாமி அய்யரிடம் நேரே கரண்டி அடி வாங்கினவன் நான். ஆனால் வேளை இங்கேதானே எனக்குப் பிழைப்புப் போட்டிருக்கு? கத்த வித்தையை மறக்காம இருக்க, உங்களைப் போலவா அபூர்வமா இருக்கேளே? வெளியூரி லிருந்து அழைப்பு வந்தால் உண்டு. எனக்கு ஒரு குறை. பார்ட்டிக்கு ஐஸ்கிரீம் பண்ணமுடியலியேன்னு."

"ஏன் பண்றதுதானே? உம் கையை யார் பிடிச்சா?"

"மெஷின் இல்லை, இன்னும் ஒண்ணு ரெண்டு ஐட்டங் கள்கூடத் தேவை. ப்ரிஜ், க்ரைண்டர்—பாங்க் ஒத்தாசை பண்ணினால் ஹோட்டலைக் கொஞ்சம் விரிவுபண்ணுவேன்."

"அத்தானே பார்த்தேன், ராயர் நேராகவே ப்ரஸன்னம் ஆயிட்டாரேன்னு! எல்லாம் அடி மடிலே கைபோடத்தான்."

ஆனால் மானேஜர் வெறிபிடித்த மாதிரி இன்னும் சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறார், பச்சைச் குழந்தை மாதிரி வயிறு தெரியாமல்

நான் எழுந்து அவர் பின்னால் நின்று அவர் காதண்டை குனிகிறேன். அவர் முழங் கையைத் தொடுகிறேன். ஸார் கோபத்துடன் என் கையை உதறுகிறார்.

"ஏன் ராயரே எங்கேயோ போயிட்டீர்?"

"இதோ இருக்கேன் அண்ணா!" பதறி ஓடிவருகிறார்.

"அந்தப் பாதாம்கீரை இன்னொரு கப் ஊத்துமேன்.— ஒழுங்காய்ப் பரிமாற வந்திருக்கேளா இல்லே பண்டங்களை இங்கே கொலுவச்சு அப்படியே எடுத்துண்டு போயிடறதா உத்தேசமா? உமக்கு எல்லாமே பில்தானே? ஊத்தும்— ஊத்தும். இங்கே இன்னொரு கப்பும் ஊத்திவச்சிடும். அம்பி என்னைத் தொடாதே. சொல்லிட்டேன். பின்னாலிருந்து என் கழுத்தின் மேல் மூச்சுவிடாதே சொல்லிட்டேன். நான் அப்புறம் கெட்டவனாகிவிடுவேன். என்னைக் கட்டுப்படுத்த நீ யார்?"

"எல்லோரும் என்னையே பார்க்கின்றனர். சொரணை கொண்டாட எனக்குத் தகுதி ஏது? அதுவும் ஸார் உங்களிடமா? ஆனால் விழிகள் உறுத்துகின்றனவே?

ஏ, பாலாஜி ராவ், குடி கெடுக்கவே நேரில் வந்தயா? டேய் ஒருநாள் உன்னை மடக்கி வச்சு உதைக்காட்டா என் பேர் அம்பி இல்லெ, ஆமாம் என் பேர் என்ன?

நேரம் ரொம்ப ஆகிவிட்டது. பயமாயிருக்கிறது.

அந்தச் சினம் கக்கும் விழிகள்.

அற்புதமாய் இரு பக்கங்களில் அச்சுப்பிடித்தாற் போன்று வளைந்த புருவங்கள். முழுக் கறுப்பு அல்ல. லேசாக சாம்பல் கலந்த விழிகள். நீறு கலந்த அந்தக் கணகணப்புத் தழல்களை நினைக்கையிலேயே பிடரி சிலிர்க்கிறது. அவளை என்றுமே என்னால் நேர்முகமாகப் பார்க்க முடியாது. மானேஜருக்கு எப்பவுமே அவளிடம் கிலிதான். இங்கு நான் வந்திருக்கக்கூடாது. மானேஜர் என்னைக் கேடயமாகப் பயன்படுத்தித்தான் என்னைத் தன்னோடு வைத்துக்கொண்டிருக்கிறார். அவர் செய்யும் குற்றங்களுக்கு நான் கூட்டாள். ஒண்டியாக மாட்டிக்கொள்வதைவிட கூட்டாளி சேர்த்துக் கொண்டால் தெம்பு அல்லவா?

''வண்டி கொண்டு வரட்டுங்களா?'' முத்தையா பயத்துடன் வட்டமிடுகிறான்.

''வேண்டாம். நடக்கிறேன். நடந்தால்தான் உடம்பு வசப்படும். லோட் கூடத்தான் ஐ டோன்ட் கேர்.''

''அம்பி உஷார் படுத்தினான். நான் கேட்டுக்கல்லே. ஐ டோன் கேர். என் குற்றத்தை ஒப்புக்கொண்டால் அம்பி பெரிய மனிதனாகி விடுவான். இந்தப் பார்ட்டியே, அம்பியைப் பெரிய மனிதனாக்கத்தானே? அம்பி எங்கே? டேய், எங்கே போயிட்டான்?''

''வீடு வரை வரட்டுங்களா?''

''அதான் அம்பி இருக்கானே பாடி கார்டு ஏ அம்பி!'' பக்கத்திலேயே நிற்கிறேன், ஸாருக்கு என்ன? லேசாகத் தள்ளாடுகிறார். என் தோள் மேலே கையை வைத்துக்கொள்கிறார்.

பௌர்ணமி அல்லது அடுத்த நாள். ஒழுகும் நிலவொளி காய்ந்தே, காற்றாகப் படர்ந்துவிடாமல் இருக்க இரவின் மேலேயே நீலப்பொடி தூவியிருப்பதுபோலும் ஒரு விபரீத உணர்வு. நேரம் ரொம்ப ஆகிவிட்டது தலைக்குமேல் போய் விட்டது.

மானேஜர் ஏதேதோ மொண மொணத்துக்கொண்டே நடக்கிறார். ஏதேதோ உறுமல்கள், குமுறல்கள் உருப்படியாக வார்த்தைகள் ஏதும் புரியவில்லை.

பொட்டென நடுவழியில் நிற்கிறார்.

''அம்பி, அப்போதைக்கு நீ சொன்னதைக் கேட்கவில்லை. வயத்தைப் புரட்டறது.''

பாதை ஓரமாய் ஒதுங்கக்கூடக் குமட்டல் நேரம் கொடுக்கவில்லை. நடுவழியிலேயே வாந்தி அவர் தலையைப் பிடித்துக் கொள்கிறேன். சந்திரன் வானில் முழு ஆதிக்கத்தில் சிரிக்கிறான்.

இங்கே நடுவழியில், நடுநிசியில் வாய் கொப்புளிக்கக் கூடத் தண்ணீருக்கு வழியில்லை.

பாலா கோபம் நியாயமான கோபம்தான். அடிப்படைக் காரணம் நான்தானே! எனக்குப் பார்ட்டி இல்லாவிட்டால் வாழாதா? எதையோ சாக்கிட்டு ஏதோ ஒண்ணு. பாட்டி கதை ஒண்ணு ஞாபகம் வரது. கொலையுண்டவன் யாரோ சந்திரனைச் சாட்சிவைத்துவிட்டுப் போனானாம். இந்தப் பாவத்துக்கோ ப ழிக்கோ சந்திரனே சாட்சி.

''அம்பி, தலையை ரொம்பச் சுத்தறது.

பிரஷர் ஏர்றதுன்னு நினைக்கிறேன்.''

எனக்குத் தொண்டையை அடைத்தது.

''ஸார், நாம் வீட்டுக்கே வந்தாச்சு.''

மோனச் செய்கையில் கையை உயரத் தூக்குகிறார். ஆம், அது என்ன?

நெருப்புப் பிழம்புபோலும் வீட்டுள்ளிருந்து தம்பூரின் உருகோஷை புறப்பாடு. புறப்பட்டு எங்கள்மேல் இறங்குகிறது. இந்த வீட்டுக்கு வந்தது முதல் முதன் முதலாக இப்போதுதான் கேட்கிறேன். மானேஜர் முகத்தில் திகில். இது ஒரு புது திகில்.

வாசற் கதவை மெல்ல அழுத்துகிறேன். தாளிடப்பட வில்லை. நாங்கள் வந்தபோது எங்கள் செளகரியத்துக்கா? தாளிட மறந்துபோனதா? இது எங்களுக்கு நல்ல காலம். ஆனாலும் மறந்தது தவறல்ல. இந்த நேரத்தில் ஏன் இப்படி திறந்தது திறந்தபடி?

மானேஜர் வாஷ்பேஸினில் வாய் கொப்பளித்து கம்பியில் தொங்கிய துவாலையில் முகம் துடைத்துக்கொள் கிறார். முகம் சுண்ணாம்பாய் வெளுத்திருக்கிறது.

நாதக் கனல் அனலடிக்கிறது.

பூஜை அறை வாசலில் இரு கள்ளர்கள் நிற்கிறோம்.

தம்பூராவைத் தழுவியபடி பாலா ஸஹிக்க முடியாத செளந்தரிய தரிசனம், பாலா நீலம் உடுத்தியிருக்கிறாள். அகிற் புகையில் உருவாய சித்திரமாய் மிளிர்கிறாள், குத்து விளக்கொளியில் தானே ஒரு தழல் கொழுந்தாய் வெறி மீட்டலில், என்ன கொந்தளிப்பு இது?

படத்தில் மாமி முகம் மாறுகிறது. கண்ணீரின் பளபளப்பில் கன்னங்கள் ஒளிவீசுகின்றன. எச்சமயம் படத்தி னின்று மகளை அணைத்துக் கொள்வாளோ?

எனக்குக் கொடுத்திருக்கும் அறை அலமாரியில் பல துறைப்பட்ட புத்தகங்கள் அடுக்கியிருக்கின்றன. ஆங்கிலமும் தமிழும் இடறி விழுந்து எழுந்து சமாளித்து, புரிந்தும் புரியா மலும், புரியும் வரையில் நாளடைவில் நானே படித்துச் சிந்திக்குமளவுக்குத் தயாராகிவிட்டேன். மானேஜரின் அருள் என்றுதான் என் எண்ணம். ஏனெனில் அத்தனையிலும் அவர் பெயர், அவர் கையெழுத்து பக்கவாட்டில் சில குறிப்புகள்— (பிறகு ஒரு நாள் எனக்கு அவர் சொன்ன புத்திமதி: நான் பண்ணின தப்பை நீ செய்யாதே. புத்தகத்தை அவலட்சணப் படுத்துவது ஆகாது நினைவில் நிற்கமுடியாத விஷயங்களை குறிப்பெடுத்து, குறிப்பு எழுதி என்ன பயன், மண்டையில் நிறுத்திக்கொள்ளப் பழக்கிக் கொள்ளவேண்டும்.)

சமைத்துப் பார், கரும்புப் பயிர், ஷாஜஹானின் துயரங்கள், மகாபாரதம், விக்கிரமாதித்தன் கதை, சத்திய சோதனை (காந்தி) பிறகு அதுவே ஆங்கிலத்தில், ஓமார் கயாம் ராமகிருஷ்ண சரிதை உபதேச மொழிகள்.

மாடியில் ஒழுங்கையில் ஒரு கிழிந்த சோபா, அதில் சுருண்டு படுத்த வண்ணம் ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு தாஜ்மகால், நயாகரா, மானஸரோவர், கன்யாகுமரி, கங்கோத்ரி, இருந்த இடத்திலிருந்துகொண்டே போகாத இடம் இல்லை. இடம் காலம் தாண்டிக்கூட— வேளையின் ரஸாயணம், ரஸவாதம்.

எங்கோ பிறந்து, எங்கோ பாய்ந்து, ஆங்காங்கே ஒன்றுடன் ஒன்று கலந்து ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து, பெயர் மாறி பெயர் ஒன்றி, இடம் கடந்து, எவ்வளவு நீண்ட யாத்திரை! பூஜையில் விரித்த சடையில் இந்த மகா பிரளயத்தை வாங்கிக்கொள்ள இடுப்பில் கைகளுடன் பூஜையறை படத்தில் மகா ப்ரபு நிற்கிறான்!

ஹே கங்கா மாயா, கங்கா மாதா, கங்கா தேவி, ஜான்னவி, கங்கா பவானி, கங்கா ஜமுனா, ஹே கங்கா சரஸ்வதி சரணம் சரணம் உன் கோபத்தைத் தாங்க நாங்கள் யார்? கங்கா—காவிரி, கங்கா—வோல்கா அந்தி வேளையில் சிந்தனை மயக்கில் எல்லாம் ஒரே உழப்பலாய், ஒரே மகா நதியாய் அதுவே ஒரு பெரும் உண்மை—அதுவேதான் உண்மையெனப்படுகிறது.

—கங்கா பாலா.

இப்படி என் இதய விலாசத்தில் பாயும்

மகா நதியில் மூழ்கி எழுகையில் ஆடை உடலோடு ஒட்டிக்கொண்டு அங்கங்களின் விளம்பல்களில்—அவள் நிர்வாணமாக எழுந்தாலும் அவளுடைய நெருப்புக் குளியல் தீண்டமுடியாத பொற் பதுமை, கங்கா. ஜ்வாலா—பாலா ஜ்வாலா, ஜ்வாலா பாலா வியப்புறுகிறேன். இதென்ன ஸ்வரங்கள் என்ன நாமாவளிகள், இதென்ன அர்ச்சனை?

நிர்வாணி, தபஸ்வினி, அமானுஷ்யை மகா ஜ்வாலா பாலா.

கங்கையை அவன் தாங்கியதுபோல் நான்—நான்—

கன்னங்களடியில் குறுகுறுக்கிறது. ஆனால் தழலை ஏந்த நான் சிவனா? எனக்குக் காதல் பிறந்துவிட்டதா? இ...ல்...லை. அடித்தும் சொல்லிக்கொள்ள முடியவில்லை. ஆனால் ஒரு இன்பக் குழப்பம். தெளிந்து இப்போ சொல்கிறேன். இது காதல் இல்லை. ஆனால் நட்சத்திரத்தை விழுங்கிவிட்டு அது உள்ளே ஓடி ஓடி விளையாடுவது தாங்க முடியவில்லை. எண்ணம் பட்டபின்தான் அதன் துணிச்சல் தெரிந்தது. உணர்வில் தோய்ந்ததும் திகில் வந்தது. இந்த விஷயம் என்னுடைய கிரகத்தில் அடங்கியதல்ல.

மானேஜர் உடல்நிறம் ஒரு சமயம்போல் இல்லை. குளித்துவிட்டு வெந்நீருள்ளிருந்து புறப்பட்டவுடன் இடுப்பில் சிறு முண்டுடன் பிதுங்கும் இளம் தொந்தியுடன் (இல்லை, நான் வந்ததுக்கு இப்போது பெரிதாகிக்கொண்டு வருகிறது.) தக்காளிப்பழம் போல் டால் அடிக்கிறார். நேரம் ஆகஆக ஒரு மாதிரியாக தேஜஸ் மங்கி வெளுத்துக் கொள்கிறார். சில சமயங்களில் கறுப்பு காட்டுவதுபோல் கூடத் தோன்றுகிறார். உடல் வாகா? அல்ல படும் பல நோய் வாகா?

''அம்பி சொல்ல மறந்துட்டேன். அடுத்த வாரம் தஞ்சையில் காம்ப் போடறான். உன்ன இன்டர்வியூவுக்கு அனுப்பச் சொல்லி எழுதியிருக்கான்—ஐயோ!''

மானேஜர் முதுகில் 'மளுக்'கென்று முறிந்தது. ஒன்றுக்கொன்று ஆகிவிட்டதா? தலை வலி போய் திருகு வலி. எனக்கு அழுகை வருகிறது. ஐயோடக்ஸ் தடவுகிறேன். நல்ல வேளை சுளுக்குத்தான்.

''ஏன் ஸார், நான் ஏன் ஸார் போகணும்?''

"ப்ரமோஷன் பண்ணினதும் இங்கே இருக்கமுடியாது. வெளியூருக்கு—"

"நான் எங்கேயும் போகல்லே ஸார். எனக்குப் ப்ரமோஷன் வேண்டாம்.

மானேஜர் திரும்பிய வேகத்தில் சுளுக்கு திரும்பிக் கொண்டது. "என்னடா உளர்றே? ப்யூனாகவே ஆயுசுக்கும் காலம் கடத்தப் போறயா? வாழ்க்கையில் முன்னேறப் பார்—என்ன கண்ணில் துளும்பல்?" முறுவலிக்கிறார். அப்பா, இந்தச் சமயம் இவருக்கு எவ்வளவு அழகான முகம்! ஆனால் என்ன, அவர் புன்சிரிப்புக் கண்டதும் என் உதடு அதிகம் பிதுங்குகிறது. என் அறைக்கு ஓடிப்போய் கதவைத் தடால் என்று மூடிக்கொண்டதும் மேஜைமேல் முகம் கவிழ்ந்ததும் அம்மாடி—அழுகை, சத்தம் போட்ட அழுகை எவ்வளவு பெரிய விடுதலை!

"உங்களுக்குப் புரியல்லே ஸார். கருணையினாலேயே கொல்லும் இந்த வீட்டுக்கு ஏன் வந்தேன்?"

கருணையும் இரக்கமற்றதுதான்.

இதென்ன பிதற்றல்? எனக்குப் புத்தி நழுவிக்கொண்டிருக்கிறதா?

ஏனென்று தெரியவில்லை. இப்பொழுதெல்லாம் தனிமையை வெகுவாய் விரும்புகிறேன். முத்தையாவின் தென்னந்தோப்பில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தபடி, அல்லது படுத்தபடி தென்னங்கீற்றுகளிடையே குலை முடிச்சுக்களைப் பார்த்துக்கொண்டு.

தனிமையின் சுழிப்பு என்னைத் தன்னுள் இழுக்கிறது. சப்பாத்திப் புதர். ஆற்று மணல். காடென்று சொல்ல முடியாத தாவர அடர்த்தி நடுவில் ஒற்றையடிப் பாதை வெறிபிடித்து நடக்கிறேன். நடந்துகொண்டே இருக்கிறேன். தப்பிய வழி. இங்கு நான் எப்படி வந்தேன்? திகைப்பு. ஓய்ந்த நேரங்களின் நடைமுறையாகி விட்டன.

தஞ்சாவூருக்கு இன்டர்வ்யூவுக்குப் போய் வந்தாச்சு.

'உன் மானேஜர் உன்னைப் பற்றி ரொம்ப சிபாரிசு செய்திருக்கிறார் அவரைவிட நான் வடிகட்டப் போவதில்லை. இருந்தாலும்—' என்று என் வேலைக்கே சம்பந்தமில்லாத பேச்சு கேள்விகள் இல்லை—பேசிவிட்டு—இன்டர்வியூ முடிஞ்சு போச்சு.

அற்புதமான காலை. இன்று சூரியனே ஆகாச கங்கையில் குளித்துவிட்டு பளிச்சென்று பட்டணம் பார்க்கப் புறப்பட்டிருக்கிறான்.

எழுந்து பால்கனிக்கு வந்து ராஜ்யத்தை ஒரு கண்ணோட்டம் விடுகிறேன். சுவரோரம் சிலந்திக் கூடு ஒன்று பொற் கோலமாய் மின்னுகிறது.

தோட்டத்தில் பாலா செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கிறாள்.

பக்கத்தறையிலிருந்து மானேஜர், ''அம்பி வேலையா இருக்கியா?''

''என்ன ஸார் வேணும்?''

''பாலாவுக்குக் கொஞ்சம் ஹெல்ப் பண்ணேன்.''

கீழே விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறேன்.

வாசல் தாண்டுகையில் கால் அடி சறுக்கி நான் வந்த வேகமோ, சேறோ, வாழைப்பழத் தோலோ, கல் தடுக்கியோ—'ஆ!'—என் குரல் கேட்டுப் பாலா திடுக்கெனத் திரும்ப—அவள்மேல் நான் விழுந்தோ, என்மேல் அவள் விழுந்தோ—அவள் கீழே விழா வண்ணம் தாங்கிக் கொண்டேன்.

'க்...றீ...ச்—'

அந்த அமானுஷ்யமான மிருக அலறலை என்னென்று சொல்ல? அவள் திமிறித் துள்ளிய வேகமே அவனை நாலடி தள்ளிக்கொண்டுபோய் வீழ்த்திற்று. ''வீல்—வீல்—வீல்—''

உச்சமும் கட்டையுமாய் மூச்சுவிடாமல் இடைவிடா அலறல்கள். அவள் முகம் கோணிக்கொண்டு விட்டது. தாங்க முடியாமல் செவிகளைப் பொத்திக்கொண்டேன். எனக்கு நகர முடியவில்லை. உங்ளங்காலிலிருந்து தலை வரை அப்படியே ஒரு உதறல். அப்படியும் செவிகளைத் துளைத்தன. குரங்கா பட்சியா, பூனையா, கீரியா?—

அவள் உடல் பூராவும் பூமியுடன் கிடுகிடென ஆடிற்று. அந்த முகத்தில் மாறி மாறி அந்தத் திகில், கோபம், பைத்தியத்தையும் —சகிக்கவில்லை. என் முகத்தைப் பொத்திக்கொண்டேன். நான் பார்ப்பது மனிதமே அல்ல— ஏதோ ஒரு ஜந்து. ஆமாம், மிரண்ட ஜந்து.

''அம்பீ, அம்பீ!'' மானேஜர் பின்னாலேயே வந்து விட்டார். ''ஒன்றுமில்லை. பயப்படாதே. பாலா! பாலா!— அவளுக்கு வழிவிட்டு நில். பாலா! பாலா! ஏ பாலா?''

அவரைத் கண்டதும் அவள் பின்னடைந்தாள். விழிகளில் திகில் வட்டங்கள். தப்பி ஓட முகம் அப்படியும் இப்படியும் அலைந்தது. எங்கிருந்தோ ஓடிவந்தாற்போல் மூச்சு இறைத்தது.

''பாலா! பாலா!''

புயல் நுழைந்தாற்போல் பாலா வீட்டிற்குள் ஓடினாள். திடுதிடுவென மாடி ஏறி, அறைக் கதவு தடாலென்று அறைந்து மூடிக்கொண்டது. ஆனால் உள்ளிருந்து கத்தல்கள் ஓயவில்லை.

வேட்டி நுனியில் மானேஜர் முகத்தைத் துடைத்துக் கொண்டார். துடைத்த இடங்களில் பப்பாளிப் பழம்போல் சிவப்பு கண்டு உடனே வெளுப்பு விட்டுக்கொண்டது.

''இந்த அலை அடங்க மூணு நாளேனும் ஆகும். நம் வயிற்றில் மண் அவளும் சாப்பிட மாட்டாள்.''

துடைக்கத் துடைக்க அவர் முகம் கொப்புளித்த வண்ணம் இருந்தது. ''நான் அவளுக்குக் காவல் இருக்கணும். நீ இன்று அவள் கண்ணில் படக்கூடாது. அம்பி நீ காலி பண்ணியாகணும். நான் பண்ணின சோதனை தோற்று விட்டது.''

இது வந்து ரொம்ப நாள் ஆச்சேன்னு பார்த்தேன். கள்ளன் இன்னும் உள்ளே பதுங்கிக் கொண்டுதான் இருக்கிறான் நீ ஆபீஸ் போயிடு. நான் சொல்லி அனுப்பும் வரை வராதே.''

''நான் ஒண்ணுமே பண்ணலை ஸார்—எனக்கு ஒண்ணுமே தெரியாது!'' ஏதோ உளறுகிறேன்.

''இல்லை. எனக்குத் தெரியும். நான் இப்போ அவளைக் கவனிக்கணும். இன்னிக்கு நான் ஆபீசுக்கு வரமுடியாது. சாயந்திரமா வா, நீ வந்தது தெரியாமல் வா—எப்படியும் நீ அவள் கண்ணில் படக்கூடாது. உன் ஓசை அவளுக்குத் தெரியக் கூடாது.''

ஆபீஸில் என் பேயடைந்த முகம் கண்டு விசாரித்தவர்களுக்கு என்ன சாக்கு சொன்னேனோ ஞாபகம் இல்லை. எப்போது மாலை வரும்? எப்போது மானேஜரைப் பார்ப்பேன்?

அவர் வாசலில் காத்திருந்தார். ''பரவாயில்லை. முற்பகல் மூணு மணிக்கு வெறி தணிஞ்சு, தாஜா பண்ணி கதவைத் திறக்கப் பண்ணி, மாத்திரை கொடுத்து தூங்கப் பண்ணியிருக்கேன். நாளைக் காலை வரை கட்டைதான். அம்பி காப்பி போடறியா? காலையிலேருந்து கொலை பட்டினி.''

நான் காப்பி போட்டுக் கொண்டிருக்கையில் மானேஜர் கைகளை வீசிய வண்ணம் என்னவோ பேசிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக உலாவினார். எத்தனை நாள் உள்ளடக்கி வைத்திருந்த பித்தமோ?

''மரகதத்துக்குத் தாங்கலே. இதே சாக்கில் படுத்தவள் தான். மறுவருஷம் போய்விட்டாள். பாலாவுக்கு நேர்ந்த தற்கு அவளால் நாங்கள் பட்ட பாடு, ஏன் அவள் பட்ட பாட்டுக்குச் செத்துப்போயிருக்கலாம். அவள் செத்துட் போயிருந்தால் மரகதம் தக்கியிருப்பாளோ என்னவோ! ஆனால் அவள் மனுஷிதானே? எந்தத் தாயாருக்குத்தான் தாங்கும்?

—ஏதேதோ துண்டும் துணுக்குமாக தாக்கல் மோக்கல் இல்லாமல். ஆனால் இல்லை என்று சொல்ல முடியுமோ?

மானேஜர் திடீரென்று சிரிக்கிறார். புகை கக்குகிறது. ''அம்பி, பாலாவை என்னன்னு நினைக்கிறே? பாலா அழகா இல்லையா?''

இதென்ன கேலிக்கூத்தான கேள்வி!

''அம்பி, அழகாகவே பிறக்கப்படாது. அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லாமல் இருக்கணும் சரி. அதுதான் பத்திரம். பாலாவை அழகு என்று சொல்லமாட்டேன். இது ஒரு அமானுஷ்யம், விபரிதம். இந்த பெர்ஃபெக்ஷன் பாந்து மில்லை. வரம்பு மீறின கேஸ். நானும் மரகதமும் அப்படி ஒன்றும் ரதி மன்மத ஜோடி இல்லை. வம்சாவளியில் இவள் மாதிரி இருந்து இப்போ இவளில் திரும்பியிருக்கிறார்களோ? இப்போ பாலா மங்கிப் போய்விட்டாள் என்று சொல்லணும். பத்து வயசில் அப்பா! என்ன டால்! என்ன உடல் வாளிப்பு! சுருக்கச் சொல்லி முடிச்சுடறேன்—''

''அன்று தை வெள்ளிக்கிழமை. தாயும் பெண்ணும் மங்கள ஸ்நானம் செய்து நேம நிஷ்டையாக ராகு காலத்துக்கு முன்னால் மாவிளக்கு ஏற்றி, முறைப்படி மலையும் ஏறி யாச்சு. பாலா பள்ளிக்கூடம் போற வழியில்—கொஞ்சம் தள்ளிப் போகணும்—தெரிஞ்ச மாமிக்கு பிரசாதத்தைக் கொடுத்துவிட்டுப் போகச் சொல்லியிருக்காள். அவ்வளவு தான்.

மாலை பாலா திரும்பி வரவேண்டிய வேளைக்கு வரல்லை. அதுபோல் அவள் அங்கே இங்கே என்று ஆயாக் கால் போட்டு கொண்டு இஷ்டத்துக்கு வருவதில்லை. நேரமோ ஏறிக்கொண்டிருந்தது. பள்ளிக்கூடத்துக்குப் போன் பண்ணிப் பாத்திருக்காள். ''பாலா இன்னிக்குப் பள்ளிக்கூடத்துக்கே வரல்லியே!''

வயிறு பகீர்! மறுபடியும் போன்: மாவிளக்குப் பிரசாதம் மாமியிடம் போய்ச் சேரவில்லை. ''பாலா இங்கு வல்லியே!''

எப்படி இருக்கும்? பிறகு எனக்கு போன்.

மணி ஏழு. எட்டு, ஒன்பது, பத்து. போலீசில் எழுதி வச்சாச்சு. எங்களால் முடிஞ்ச வரை தேடின பிறகு, பீச் முழுக்கச் சல்லடை போட்டுச் சலிக்கிறது. இப்போ நினைச் சாக்கூட இப்போ மாதிரி இருக்கு. மரகதத்துக்குப் பைத்தியம் பிடிக்கல்லே. அவ்வளவுதான். அல்லது பிடிச்சுடுத்தா? குத்துவிளக்கு ராப்பூரா அவ்வப்போது அதை நமஸ்கரிக் கிறாள். பாலா போட்டோவை மார்போடு அணைச்சுக்கிறா. ஸ்தோத்திரம் சொல்றா! என்னிடம் வருகிறாள். ''நீங்கள் தைரியமா இருங்கோ. என்னண்ணா பண்ணுவோம்? கேட்டுக் கொண்டே உதட்டைப் பிதுக்கிக்கொண்டு அடக்கிக் கொள்ளப் பார்க்கிறாள். கறையறாள். உண்மையில் யாருக்கு யார் ஆறுதல்?

விடியுமா? ஒரு வழியா விடிஞ்சது. போலீஸ் நாய் வந்தது. ஓடித்தோ ஓடித்தோ அப்படி ஓடித்து. வாரைப் பிடிச்சுண்டிருந்தவனுக்குத் தாக்குப் பிடிக்க முடியல்லே. எங்கள் வீடு தாண்டி இரண்டு மூன்று மைல் இருக்கும்—ஒரு பாலத்தடியில் கரையோரமா ஜல விளிம்பில் ஸ்மரணை இல்லாமல்.''

மேலே பேச்சு ஓடவில்லை. அவருக்குக் குரல் கம்மிற்று. எனக்கு அழுகை வந்துவிட்டது. வெட்கம் கெட்டு முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதேன். மானேஜர் அழவில்லை.

அழுது வரண்டு போயிருப்பார். முகத்தைத் திருப்பிக் கொண்டார். எங்கிருந்தோ அவர் குரல்—பாவாடையெல் லாம்—நோ, நோ, நான் அதுபற்றிப் பேசப் போவதில்லை.

(இன்று அற்புதமான காலை. சூரியனே ஆகாச கங்கை யில் குளித்துவிட்டு பளிச்சென்ற முகத்துடன் பட்டணம் பார்க்க புறப்பட்டுவிட்டான்—ஹும்!)

"என்ன?" "எங்கே?" "எப்போ?" "எப்படி?" "ராப்பூராப் பாலத்தடியிலா?" "யார்?" "எது?" நாங்கள். போலீஸ் எல்லாம் கேள்விகளை அடுக்கிக் கொண்டே இருக்கவேண்டியதுதான். ஒரு கேள்விக்கும் ஜாடையாகக் கூடப் பதில் இல்லை. டாக்டர் வந்து பரிசோதித்துவிட்டு அவள் பேச்சை இழந்துவிட்டதாகத் தீர்ப்புச் சொல்லிவிட்டார். ஷாக். அதோடு இல்லை—

திடீர் திடீர் என்று வீல் வீல் என்று ஒரே அலறல். பக்கத்தில் யாரேனும் அண்டினாலே அப்படி ஒரு அலறல், கத்தல், இப்போ நீ கேட்டயே, அதே மாதிரி. யாரிட மிருந்தும் வாய் வார்த்தையாக ஒரு விவரமும் கிடைக்க வில்லை. போலீஸ் நாய் அப்புறம் உபயோகமில்லாமல் போய்விட்டது. ஏதோ ஒரு வீட்டுக்கு அழைத்துக்கொண்டு சென்றது. வீடு பூட்டிக் கிடந்தது. போலீஸ் உடைத்துச் சென்று 'க்ளூ'க்களுக்குத் தேடினார்கள். ஒன்றும் சுவாரஸ்ய மில்லை. நாயின் மோப்பமும் குழப்பமாகிவிட்டது. கேஸ் பிசுபிசு—

அவள் தாயார் உட்பட யாரும் அவளைத் தொட முடிய வில்லை. இப்போ பார்த்தயே இதே ரகளைதான். ஆள் அடியோடு உள்ளே பிரண்டு விட்டாள். தன்னைத் தொட வரவாளே தனக்குத் தீம்பு செய்யத்தான் என்று ஒரு தீர் மானம். மாற்றமுடியாத தீர்மானம்.

கஷ்டம், கஷ்டம். படுகிறவர்களுக்கா, படுகிறவர்களைப் பார்ப்பவர்களுக்கா?

''பார்க்காத சிகிச்சை இல்லை. இடம் மாறினால் மனம் மாறும் என்று மாற்றல் வாங்கிக்கொண்டேன். நோ யூஸ். பாலா ஒருவாறு தன் கலவரம் அடங்கி, அல்லது அடங்கினாற் போல் தோன்றி, தண்ணீர் மேலே அமைதியாக ஓடிற்று. உள்ளே சுழலை காட்டாமல். மரகதம் தன் பெண்ணுக்கு நேர்ந்ததை, நேர்ந்திருக்கக்கூடியதை எண்ணி எண்ணி வெதும்பிச் செத்தாள். அதுதான் மிச்சம். நானும் பாலாவும் மிச்சம். உற்றார் உறவினர்கள் இரண்டு பக்கங்களிலும் எங்களுக்குச் சொல்லும்படியாய் இல்லை. நாங்களும் இந்த மாதிரிச் சூழலில் அவர்களை நாடமாட்டோம். ஒண்ணே ஒண்ணு பெண்ணே பெண்ணு, கண்ணே கண்ணு, எப்படி?''—சிரித்தார். ஆயிரம் துக்கங்களின் முத்தாய்ப்பு.

வழி தானே வருகிற மாதிரி வேளையின் சமைப்பு இன்னும் புரியாத புதிர். அடுத்த நாளே என்னை கிளார்க் ஆக ப்ரமோஷன் செய்து கோயமுத்தூருக்கு உடனே மாற்ற லாக ரீஜினல் ஆபீஸிலிருந்து தந்தி வந்தது. உடனே நெய்க் கடலையும் அல்வாவும் எனக்குத்தான். அதில் நினைப்புக் கூட ஒட்டவில்லை என்று யாருக்குத் தெரியும்?

வழியனுப்ப மானேஜர் ரயிலடிக்கு வந்திருந்தது மற்ற வர்களுக்கு ஆச்சரியம். ரயில் கிளம்பும் சமயத்தில் திடீரென்று என்னை அவர் அணைத்துக்கொண்டது அதைவிட ஆச்சரியம். அவர் கண் கலங்கியதைக் கவனித்திருந்தார் களெனில்—ஹூம்—நல்லவேளை ரயில் நகர்ந்துவிட்டது. கையை உயரத் தூக்கிக் காட்டிக்கொண்டு ப்ளாட்பாரத்தில் அத்தனைபேர் நடுவிலும் தனியன்—நெஞ்சில் அழுந்திவிட்ட அழியாத புகைப்படம்.

கோயமுத்தூர். கிளை ஆபீஸ் மிகப் பெரியது. ஐம்பது அறுபது சிப்பந்திகள் வேலை செய்கின்றனர். அத்தனை பேரும் ஒழுங்காய் செய்வதாக இருந்தாலும் ஓயாத வேலை. இன்னும் இருபதுபேர் இருந்தாலும் அத்தனை பேருக்கும் வேலை. ஆகையால் யாரும் வேலை செய்யவில்லை. ஆனால் யூனியன் மீட்டிங்கு அவ்வப்போது வங்கி வாசலுக்கு வெளியே உள்ளே போகாமலே நடக்கும். ஆரவாரங்கள் உள்ளே கேட்கும். இவைகளுக்கெல்லாம் குறைச்சலே இல்லை. நான் விட்டுவிட்டு வந்த இடம்போல் நிம்மதி இல்லை. ஆனால் நிம்மதி இப்போது எனக்கு வேண்டாம். பைத்தியம் பிடித்து விடும். என்னை மறக்க வழி பிறந்தால் சரி. பைத்தியம் பிடித்தாற்போல் உழைக்கிறேன். யூனியன் காரியதரிசி என்னை வெறுப்புடன் பார்க்கிறான். 'புது ஜோர், புது துடைப்பம்' சண்டைக்கு இழுக்கிறான். நான் போகவில்லை.

''அம்பி ஸார், உங்களுக்குத் தந்தி!''

எனக்குத் தந்தியா? எனக்கு யார் உற்றார்? உறவினர் ஏது? பிரிக்கிறேன்.

''மேனேஜர் அண்ட் டாட்டர் டெட், மீட் மீ, டாக்டர் சுந்தரவதனம்.''

அழுகை வரவில்லை. துக்கம் கூட இல்லை. கொஞ்சம் செத்துப்போகும் நிலை என்ன, இன்னதென அப்படி இறந்தவர்தான் அறிவர். இந்தச் சாவு முழுச்சாவோடு போய்க் கலக்கும் வரை விண் விண்—உயிர் பெற்ற சாவு.

இங்கு வந்து இன்னும் மூன்று மாதங்கள் முழுக்க ஆகவில்லை. மூன்று நாட்கள் லீவு போட்டுவிட்டுக் கிளம்புகிறேன். எனக்கு ஏன் ஆச்சரியம் கூட இல்லை?

ரயிலடியிலிருந்து டாக்டர் கிளினிக்குக்கு நடக்கிறேன். இங்கே எவ்வளவு சந்தோஷமாக இப்போது இருந்தேன். ஆனால் இந்த ஊருக்கும் எனக்கும் தொப்புள்கொடி அறுந்து விட்டாற்போல சம்பந்தமே இல்லாததுபோல் தோன்றுகிறது. ஏன்?

"வா அம்பி. ஐ ஆம் ஸாரி" என்று சொல்வதில் அர்த்தமில்லை. உனக்கு ஷாக் ஆக இருக்கும். எனக்குத் தெரியும். இருந்தாலும் மனத்தெம்பு இல்லாவிட்டால் நாம் எல்லாரும் காலி. இந்தா இதை உன்னிடம் கொடுக்கும்படி அவருடைய உயில்."

கவரைப் பிரிக்கவில்லை. ஜேபியில் போட்டுக்கொள்கிறேன். காத்திருக்கிறேன்.

"மானேஜர் ஒரு பதினைந்து நாளைக்கு முன் வந்தார். தொண்டை வலிக்கிறதென்று பரிசோதித்துப் பார்த்தேன். என் முக மாறுதலை எப்படியோ கவனித்துவிட்டார். "டாக்டர், என்ன பாக்கி எனக்கு வர இருக்கு?"

"எக்ஸ்ரே எடுக்கணும்."

"எதுவாக இருந்தாலும், நீங்கள் என்னிடம் சொல்லலாம். என் வீட்டில் என்னைவிடப் பெரியவர்களும் இல்லை. நீங்கள் சொல்லப் போவதின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள எனக்குப் பிள்ளைகளும் இல்லை. ப்ளீஸ்...?"

"கான்ஸர்."

"ஓ!" உங்கள் மானேஜர் கடாத் தலையன்.

"புகையிலைப் போட்டுக்கொள்வதன் விளைவு."

"அப்படியா?" உடனே தன் டப்பியிலிருந்து சிவபுரி புகையிலைத் தூளை அள்ளி வாயில் போட்டுக்கொண்டார். மானேஜர் கடாத் தலையர்.

“சிகிச்சை உடனே செய்துகொள்ள வேண்டும். இங்கே வசதியில்லை. வேலூர்—அல்லது மெட்றாஸ்—”

“என்ன ஸ்டேஜ் என்று நான் கேட்கப் போவதில்லை.”

“நான் சொல்லப் போவதுமில்லை.”

“நல்ல ஜோக்! சரி டாக்டர். போயிட்டு வரேன். உங்கள் பில்லை இப்பவே செட்டில் பண்றேன். இதோ கையெழுத்தோடு செக். உங்கள் பாக்கியை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.”

“என்ன சார் அவசரம்?”

“உங்களுக்கு இல்லை, எனக்கு வந்துவிட்டது. சிகிச்சை ஆரம்பிப்பது பற்றி இன்னும் இரண்டு நாளில் சொல்கிறேன்.”

“அடுத்த நாள் பாங்கில் பதினொரு மணி ஆகியும் மானேஜர் வரவில்லை. கேஷ் எடுக்கணுமே. முத்தையா வீட்டுக்கு வந்து பார்த்திருக்கிறான். வாசற் கதவு திறந்தபடி. மானேஜர் படுக்கையில் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறார். கட்டில் அருகே மேஜைமேல்; உனக்கு ஒரு கவருடன் எனக்குக் கடிதம் பாங்குக்கு ஒரு கடிதம் தூக்க மாத்திரைகள் சீசா ஒன்று காலியாக.

டாக்டர் பெண் அவள் அறையில் தூங்குகிறாள்.

இன்னும் சொல்ல என்ன இருக்கு? போலீஸ் ஒத்துழைப்பு, ஊர் ஒத்துழைப்பு சேர்ந்து கேஸ் பதிவாகாமல், அமுக்கிட்டோம். சுருக்க தகனம் பண்ணியாச்சு. பெரிய மனுஷன் நானும் உடந்தைதான். உன்னிடம் சொல்வதற்கென்ன? டெத் சர்டிபிகெட் என் பொறுப்புதானே!”

**மா**லை முத்தையாவின் தென்னந்தோப்பில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருக்கிறேன். கவலையேற்றம் ஓடிக்

கொண்டிருக்கிறது. சால் கவிழ்ந்ததும் ஜலம் சுழித்து, நுரைத்து, ஜிலுஜிலு குளுகுளு கிளுகிளு—எனக்கு ஆறுதல் சொல்ல முயல்கிறதோ?

மானேஜர் கடிதம் என் மடியில் கிடக்கிறது.

''டியர் அம்பி,

ஐயாம் நாட் ஸாரி. எனக்கு—எங்களுக்கு வேறு வழி என்ன இருக்கிறது?

குட்லக்''

அவளிடம் சொல்லியிருப்பாரா? ''என்னோடு வந்துவிடு நான் போன பின்னர் உன்னை உலகத்தின் ஏலத்துக்கு விட எனக்குச் சம்மதமில்லை.''

இல்லை முடிவு அவளுடையதா? ''உங்களுக்குப் பின் என் நிலையில் எனக்குத் துணையில்லாமல், நம் இருவருக்கும் இங்கே என்ன வேலை?''

கொலை: அடுத்து தற்கொலையா? அல்லது தற்கொலை உடன்படிக்கையா? இருவரும் சிதையோடு கொண்டுபோய் விட்ட ரகஸ்யம்.

திடீரென்று காற்று 'விர்ர்ர்ர்' என்ற சத்தத்துடன் என் தோள்மேல் விசை கொண்டது. அந்தச் சிறகடிப்பு என் தோளைப் பிய்த்துக்கொண்டு சென்றது. அகன்று நீண்டு இருளாலாய இறக்கைகள். வாள் வீச்சுப்போல் கீழிறங்கி பூமியைத் தொட்டுக்கொண்டு மேலெழுகையில் பாதாளக் கொலுசுபோல் அதன் பாதங்களில் ஒரு சாட்டை தொங்கியது தடுமனாய், கறுப்பாய், பாலாவின் பின்னல்போல், எட்டடி நீளம்—

நெளிந்தது.

என்னிடமிருந்து "வீல் வீல் வீல்"—

"பாலா! பாலா! பாலா;"

அது வந்த திக்குக்கு எதிர் திக்கில் பறந்து சென்று விட்டது.

நான் ஒரு நாத அதிர்வு
இடிவலியின் அலையில்
கரையில் தூக்கி எறியப்பட்டேன்

அந்தரத்தில் தொங்கித்
தவித்துத் திணறித் திக்கற்றுத்
தெப்பலாடித் தத்தளிக்கிறேன்

என் அதிர்வுக்குச் சொந்த அலையில்
என்னை வளிக்கவ்வி எடுத்துச் சென்று
மூலத்தின் இருண்ட கர்ப்பத்துள்
என்னைச் சேர்த்துவிடு
அங்கு நான் என்னை
இழந்து கொள்கிறேன்

ஆமாம் இதையெல்லாம்
நான் யாரைக் கேட்கிறேன்

கதை முடிந்தது

கவிதை தன்னை முடித்துக்கொண்டு
கண்ணாடிச்சுவரும் உடைந்தது

IK Color Process, Madras-5.
Phone : 848311